www.t.me/tamilbooksworld

# இன்னொரு பட்டாம் பூச்சி

www.t.me/tamilbooksworld



பிரெஞ்சு கைதியான பிலிக்ஸ் மிலானி என்ற கைதி தனது சிறையனுபவங்களை பற்றி எழுதிய CONVICT என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

ரா.கி.ரங்கராஜன்

www.t.me/tamilbooksworld

# இன்னொரு பட்டாம்பூச்சி

ரா.கி. ரங்கராஜன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

www.t.me/tamilbooksworld

# முன்னுரை

சென்ற நூற்றாண்டின் மத்தியில் பிரான்ஸ் நாட்டில், குற்றவாளிகளுக்கான தண்டனைகள் மிகக் கொடூரமாக இருந்தன. ஆயுள் தண்டனை பெற்றவர்களுக்குத் தீவாந்தர சிட்சை தந்து, அட்லாண்டிக் சமுத்திரத்தின் கோடியில் இருந்த ஃபிரெஞ்சு கயானாவுக்கு அனுப்பி வைத்து சித்திரவதை செய்தார்கள். திருட்டுத்தனமாகப் படகுகள் தயாரித்துத் தப்ப முயன்ற அவர்கள் கொல்லப்பட்டார்கள். அல்லது இன்னல் பல பட்டு இறந்தார்கள். ஹென்றி ஷாரியர் என்ற கைதி மட்டும் பதினாறு முறை அவ்வாறு முயன்று சுதந்தர புருஷனாக ஆனான். பதின் மூன்றாண்டுக் காலம் அவன் செய்த வீரதீரச் செயல்கள், அவனுடைய சுயசரிதையாக வெளிவந்தது. ‘பட்டாம்பூச்சி’ என்ற அந்தக் காவியம் உலக இலக்கியங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஹென்றி ஷாரியரைப் போலவே தீவாந்தர சிட்சையிலிருந்து தப்ப முயற்சி செய்த பல கைதிகள், அவனைப் போலவே தங்கள் அனுபவங்களை எழுதினார்கள். ஆனால் அவை புகழ் பெறவில்லை. இருப்பினும் ஃபெலிக்ஸ் மிலானி என்ற கைதி எழுதிய CONVICT என்ற சுயசரிதம். கிட்டத்தட்டப் பட்டாம்பூச்சியின் புகழை எட்டிப் பிடித்தது. அதைச் சற்றுச் சுருக்கமாக மொழிபெயர்த்து எழுதுமாறு அமரர் எஸ்.ஏ.பி. என்னைப் பணித்தார்கள். நாற்பது வாரம் குமுதத்தில் அது வெளிவந்தது.

மிலானியின் அனுபவங்கள் உள்ளத்தைத் தொடும் உருக்கம் கொண்டவை. விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாத உண்மைக் கதை. புத்தக வடிவில் அதை அழகுபடப் பிரசுரித்துள்ள அல்லயன்ஸ் நிறுவனத்துக்கும் அதன் அதிபர் ஸ்ரீநிவாசனுக்கும் என் மனமார்ந்த பாராட்டு. நெஞ்சார்ந்த நன்றி.

அண்ணாநகர்,

சென்னை - 40. ரா. கி. ரங்கராஜன்

www.t.me/tamilbooksworld

# ரா.கி. ரங்கராஜன்

## எழுதிய பிற நாவல்கள்

திக் திக் கதைகள்

குடும்பக் கதைகள்

ஹாஸ்யக் கதைகள்

ட்விஸ்ட் கதைகள்

கன்னா பின்னா கதைகள்

காதல் கதைகள்

இன்னொருத்தி

ராத்திரி வரும்

திறக்கக் கூடாத கதவு

என்னைத் தவிர

ஒரே வழி

மறுபடியும்

சின்னக் கமலா

ஜெயித்துக் கொண்டே இருப்பேன்
(குத்துச் சண்டை வீரர் முகமது அலியின் கதை)

பேய் பெண் பாதிரி

சர்வாதிகாரி கவாகா

www.t.me/tamilbooksworld

# 1

ஆயுள்தண்டனை பெற்ற பிரெஞ்சுக் குற்றவாளிகளைத் தென் அமெரிக்கத் தீவுகளுக்கு அனுப்பி வைத்துச் சித்திரவதை செய்து வந்த காலம்.

அங்கிருந்து தப்ப முயன்ற ஒரு கைதியின் உண்மைக் கதை இது.

“ஃபிலிக்ஸ் மிலானி! மரியா ஆஞ்செலோ! நீங்கள் இருவரும் கொலைக் குற்றம் புரிந்ததாக நீதிமன்றம் தீர்மானிக்கிறது. உங்கள் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது.”

எல்லாம் முடிந்துவிட்டது. இனி சொல்வதற்கு ஒன்றுமில்லை. மரியாவும் நானும் மரண தண்டனை பெறப் போகிறோம்.

இன்று 1932, ஏப்ரல் 29 ஆம் தேதி. வசந்த காலத்தில் ஒரு கதகதப்பான தினம்.

எனக்கு இருபத்தேழு வயது.

கப்பலில் கரி தள்ளுபவனாக வேலை பார்த்த நான் போன வருஷம் ஒரு நாள் மேலதிகாரிகளுடன் சண்டை போட்டுக் கொண்டு நின்றுவிட்டேன். மார்சேல்ஸ் நகரத்தின் தெரு வழியே வந்து கொண்டிருந்தபோது மரியாவைச் சந்தித்தேன். அவள் ஒழுக்கக் குறைவானவள் போல் தோன்றினாள், மெல்லிய உடம்பும், கவர்ச்சியான தோற்றமும் கொண்டிருந்தாள். கம்மியாக உடை அணிந்திருந்தாள்.

www.t.me/tamilbooksworld



"உன்னை அடிக்கடி நான் பார்த்திருக்கிறேன். ஏதாவது சாப்பிட வருகிறாயா?" என்று கூப்பிட்டாள்

"என்னிடம் பணமில்லை" என்றேன்.

"நான் தருகிறேன்" என்றாள்

கதைகளில் வருவது போல் எங்கள் வாழ்க்கை இணைந்தது. அவள் தனியாக வசித்து வந்தாள் இனி இருவரும் சேர்ந்து இருப்பது என்று தீர்மானித்தோம்.

அவள் அறைக்குச் சென்றேன். ஓர் இரும்புக் கட்டிலும் மேஜை நாற்காலிகளும் இருந்தன. சுவரை ஒட்டி ஒரு சிறிய மரக் கட்டிலும் இருந்தது. யாருக்கு அது என்று கேட்டேன். 'அப்புறம் சொல்லுகிறேன்' என்றாள்.

ஒரு வார காலம் சொர்க்கலோகத்தில் வாழ்ந்தோம். மரியா என்மீது உயிரையே வைத்திருந்தாள். ஒரு நாள் ஒரு சிறுமியுடன் வந்தாள் "இவள் என் பெண். ஓடெட் என்று பெயர்" என்றாள்.

"உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா என்ன?"

"ஆமாம். ஆனால் நான் கணவனை விட்டுவிட்டு வந்துவிட்டேன்."

ஓடெட் என்னைக் கண்டதுமே என்னிடம் ஒட்டிக் கொண்டு விட்டாள் ஆனால் மரியா அவளிடம் நடந்து கொள்ளும் முறை எனக்குக் கலக்கம் அளித்தது. சிறுமிக்குச் சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு மரியா நாள் பூரா எங்கேயாவது சென்று விடுவாள் அடிக்கடி ஓடெட்டின் உடம்பில் சிராய்ப்பும் காயங்களும் தென்பட்டன. கேட்டால் தவறி விழுந்துவிட்டேன் என்பாள் 'அவள் அப்படித்தான். எப்பப் பார்த்தாலும் எங்கேயாவது விழுந்து காயம் பட்டுக்

www.t.me/tamilbooksworld



கொண்டிருப்பாள்' என்பாள் மரியா. ஆனால் அவள்தான் ஒடெட்டைக் கண்டபடி அடிக்கிறாள் என்று நான் ஊகித்துக் கொண்டேன்.

ஒரு நாள் இரவு நான் வீட்டை அடைகையில் உள்ளேயிருந்து மயிர்க்கூச்செறியும் அலறல்கள் கேட்டன. விம்மி விம்மி அழும் ஓசை கேட்டது. வீலென்று ஒரு கூச்சல். பிறகு எல்லாம் அடங்கிவிட்டது. நான் அறைக்குள் பாய்ந்து சென்று பார்த்தேன் வெளிறிப் போய் அந்தச் சிறுமி படுக்கையில் கிடந்தாள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது. அவளுடைய முழங்கால்கள், கைகள், சின்னஞ் சிறிய முகம் எங்கு பார்த்தாலும் ரத்தக் களரி! மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றேன். மரியாவும் வந்தாள்.

நர்ஸிடம் குழந்தையைக் கொடுத்தனுப்பிவிட்டு, "மரியா, நீ குழந்தையை அடித்தாயா?" என்று கேட்டேன். "சொல்லு, எனக்குத் தெரிந்தாக வேண்டும்."

மரியா எனக்குப் பதிலளிக்கவில்லை.

நள்ளிரவு தாண்டிவிட்டது. உள்ளே ஒடெட்டுக்குச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. நான் சிகரெட்டுக்குப்பின் சிகரெட்டாகப் புகைத்து தள்ளி கொண்டிருக்கிறேன். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போய் என்ன ஆயிற்று என்று பார்க்க வேண்டும் போல் ஆத்திரம் பொங்குகிறது.

திடீரென்று கதவு திறந்தது. இரண்டு ஆண்கள் வந்து, "என் பின்னால் வாருங்கள்" என்றார்கள். போனோம்.

வாசலில் ஒரு போலீஸ் வேன் நின்றிருந்தது. எங்களைக் கைது செய்தார்கள் எதற்கு? ஏன்? எனக்குப் புரியவில்லை.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்தபோது இரவு மணி ஒன்று.

www.t.me/tamilbooksworld



என்னுடைய பழைய கப்பல் தோழன் ஒருவன் அங்கே போலீஸ்காரனாக இருந்தான். "அந்தக் குழந்தை இறந்து விட்டது. அந்தக் காயங்கள் மாடியிலிருந்து விழுந்ததால் ஏற்பட்டவை அல்ல. அடித்துக் கொன்றிருக்கிறார்கள்," என்று தெரிவித்தான் அவன்.

சிலையாகிப் போனேன் மரியாவை வேறெங்கோ அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

இரண்டு போலீஸ் அதிகாரிகளும் மூன்று அடியாட்களும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள் விசாரணை ஆரம்பமாயிற்று.

தடியர்களில் ஒருவன் என்னைக் கீழே தள்ளி, உண்மையைச் சொல்லு என்றான். எனக்கு எதுவும் தெரியாது என்றேன்.

அவர்கள் விடவில்லை. என் விலாவில் பயங்கரமாகக் குத்தினார்கள் கடுமையான ஜுவாலையுடன் எரிந்து கொண்டிருக்கும் ஒரு விளக்கின் மீது இரும்பு முக்காலியைப் போட்டு அதில் என்னை உட்கார்த்தி வைத்து மறுபடியும் மறுபடியும் 'உண்மையைச் சொல்லு!' என்று மிரட்டினார்கள். "மிலானி, நீதான் இந்தக் குழந்தையைக் கொன்றிருக்கிறாய். உண்மையை ஒப்புக்கொள்" என்றார்கள்.

எனக்கு எதுவும் தெரியாது என்று திரும்பத் திரும்பச் சொன்னேன்.

தொடர்ந்து போலீஸ் விசாரணைகள் நடைபெற்றன. என் மார்பிலும் கால்களிலும் ஆண் குறியிலும், உடலெங்கும் பச்சை குத்திக் கொண்டிருந்தேன்.. அவைகளையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டார்கள். என் கைரேகையைப் பதிவு செய்து கொண்டார்கள்.

www.t.me/tamilbooksworld



விசாரணைக் கைதியாக, சிறையில் என் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. நான் எதிலும் எச்சரிக்கையாக இருந்தேன். குறிப்பாக, என்னுடன் கூட இருக்கும் கைதிகளிடம் உஷாராக இருந்தேன். அவர்களில் நிச்சயமாய் எவனேனும் ஓர் ஒற்றன் இருப்பான் நம்முடன் பேச்சுக் கொடுத்து, நம்மைத் தாறுமாறாகப் பேச வைத்து, பிறகு அத்தனையையும் சிறை அதிகாரிகளிடம் சொல்லிவிடுவான். ஆகவே எவனிடமும் பேசாமல் ஜாக்கிரதையாக இருந்தேன்.

என்னைத் தினம் தினம் ஒரே மாதிரி விசாரித்தார்கள்.

"மாடியிலிருந்து குழந்தை விழுந்ததை நீ பார்த்தாயா?"

"இல்லை. நான் வீடு திரும்பிய போது இருட்டிவிட்டது."

"அப்படியானால் பகலில்தான் அது நடந்திருக்கிறது. பகல் பூரா நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?"

என்மீது குற்றம் இல்லை என்று மரியா சொன்னாளாம். குழந்தை மீது நான் மிகுந்த வாஞ்சை கொண்டிருந்ததாகச் சொன்னாளாம். உண்மையும் அதுதான்.

யாரும் என்னை நம்பவில்லை. இந்த விசாரணைகள் வரவர என் ரத்தத்தை வற்ற வைத்தன.

வழக்கறிஞரைத் தவிர என்னைப் பார்க்க அனுமதிக்கப் பட்டிருந்த ஒரே நபர் என் அக்காதான் ஸெபாஸ்டியன் அற்புதமான பெண். எனக்குப் பன்னிரண்டு வயதாகும் போது என் அம்மா இறந்தாள். அதன் பின் என்னை வளர்த்தவள் அக்காதான். வாரம் ஒரு தடவை அக்கா என்னைப் பார்க்க வருவாள். பதினைந்து நிமிடம் இருப்பாள்.

"கவலைப்படாதே, மிலானி. மரியா உண்மையைச் சொல்லிவிடுவாள்" என்று எனக்குத் தேறுதல் கூறுவாள் அக்கா "குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனவன்

www.t.me/tamilbooksworld



*நீதானே? அதற்காக உனக்குப் பரிசல்லவா கொடுக்க வேண்டும்? நிச்சயம் தண்டிக்கமாட்டார்கள்.''*

ஆனால் அவள் வார்த்தைகளால் எனக்கு ஆறுதல் ஏற்படவில்லை. நிமிடத்துக்கு நிமிடம் என்னைச் சுற்றிய வலை இறுக்கப்படுவதை உணர்ந்தேன். இன்னும் எத்தனை நாள் இப்படி?

## 2

**நா**ன் மரியாவின் காதலன் பொறாமை பிடித்தவன். இன்னொருவன் மூலம் அவளுக்குப் பிறந்த குழந்தையைக் கண்டு எனக்கு ஆத்திரம். அதைப் பார்த்துக் கொள்வதால் மரியாவினால் வேலைக்குப் போய்ச் சம்பாதிக்க முடியவில்லை என்று எனக்கு வெறுப்பு. ஆகவேதான் குழந்தையைக் கொலை செய்து விட்டேன் இதுவே போலீசாரின் வாதம். ஆனால் அதற்கான ஆதாரம் எதையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு நாள் மாஜிஸ்திரேட் என்னை அவசரமாகக் கூப்பிட்டனுப்பினார் ஒரு துண்டுக் காகிதத்தை என்னிடம் நீட்டினார் "மரியாவைச் சோதனை செய்தபோது இந்தக் கடிதம் கிடைத்தது. இதை நீ எழுதிக் கையெழுத் திட்டிருக் கிறாய்'' என்றார். அதைப் படித்தும் காட்டினார்.

"அன்பே மரியா,

நான்தான் குழந்தையைக் கொன்றவன் என்பதை எக் காரணம் கொண்டும் அவர்களிடம் ஒப்புக் கொள்ளாதே. கொன்றது நானல்ல என்றே சொல்லு. உன்னை உளமாரக் காதலிக்கும்,

www.t.me/tamilbooksworld



உன்
மிலானி.

நான் குபுக்கென்று சிரித்துவிட்டேன். நீதிபதிக்கு முகம் சிவந்துவிட்டது. உடனே நான் விளக்கினேன்.

“எனக்கு எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது. என் நண்பர்களைக் கேட்டுப் பாருங்கள். கப்பல் படையில் நான் இருந்தபோது எனக்காக அவர்கள் தான் எல்லாம் எழுதித் தருவார்கள்”

“என்னை ஏமாற்றலாமென்று நினைக்காதே!” என்று சீறினார் நீதிபதி. பிறகு அருகிலிருந்த குமாஸ்தாவிடம், “இது பொய்க் காகிதம் என்று இவன் சொல்வதாகக் குறித்துக் கொண்டு இவனைச் சிறைக்குத் திருப்பு.”

மேலும் சில வாரங்கள் கழிந்தன. திடீரென்று என் வழக்கு சுறுசுறுப்படைந்தது. மறுபடியும் என்னை நீதிபதியின் முன்னே கொண்டு போய் நிறுத்தினார்கள் இம்முறை நான் அதிர்ச்சிக்கு ஆளானேன். மரியா ஒரு கடிதம் எழுதியிருந் தாள், என்னைக் குற்றம் சாட்டி. “மிலானியைப் பற்றி நான் முன்பு சொன்னதையெல்லாம் வாபஸ் பெறுகிறேன் உண்மை என்னவென்றால், மிலானி என்னை விபசாரத் தொழில் செய்யும்படி கட்டாயப் படுத்தினான். அவனுக்கு எப்போதும் பணத்திலேதான் குறி. குழந்தையை அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அதைக் கொலை செய்தான்” என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தாள்.

நான் ஒவென்று அலறி விட்டேன். என்ன அப்பட்டமான பொய் இது!

ஆனால் மறுநாள் என் வழக்கறிஞர், “மிலானி, நிலைமை மோசமாக இருக்கிறது. நீ கொலை செய்ததைக் கண்ணால் கண்ட சாட்சியம் எதுவும் இல்லை. ஆனால் அதே சமயம், உன்னை விடுவிப்பதற்கான அலிபியும் ஒன்று கூட இல்லை” என்றார்.

www.t.me/tamilbooksworld



உண்மைதான் கொலை நடந்தபோது வீட்டிலே இருந்தேனா, வெளியே சுற்றிக் கொண்டிருந்தேனா என்பதற்கு யார் முன்வந்து சாட்சியம் கொடுப்பார்கள்?

ஒவ்வொரு இரவும் பயங்கரக் கனவாகக் கழிந்தது. என்னால் தூங்க முடியவில்லை. எப்படி ஒரு சின்னக் காதல் விவகாரம் இப்படிப்போய் முடிந்தது என்று என்னை நானே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேன். மரியா இப்படிப் பட்ட பெண்ணா? தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்மீது இப்படியா ஒரு பழியைப் போடுவாள்? அவ்வளவு மட்டமானவளா!

ஏப்ரல் 29'ம் தேதி கடைசி விசாரணை நடந்தது. சிறையிலிருந்து நீதிமன்றத்துக்குச் செல்லும் முன் ஆத்திரத்தையும் சீற்றத்தையும் அவள் முன்னே கொட்டிவிட எண்ணினேன் ஆனால் சட்டென்று அவள்மீது ஒரு பரிதாபமே ஏற்பட்டது எனக்கு. ஒரு கணம் என்னை ஏறிட்டுப் பார்த்தாள் அவள் முகத்தில் அச்சமும் இன்னும் ஏதோ வொன்றும் படர்ந் திருந்தது. 'என்னை மன்னித்துவிடு' என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை. மக்களையும் பிரச்சினைகளையும் நேருக்கு நேர் சந்திக்கும்போதுதான் யதார்த்த உணர்வு ஏற்படுகிறது. கற்பனைப் பந்தலெல்லாம் உண்மையான அளவை அடைகின்றன. மரியாவின் முன்னிலையில் நான் நின்றதும் அவள் சங்கடப்பட்டுப் போனாள் என்னைக் கொலைகாரன் என்று சொல்லத் தயங்கினாள் ஆனால் அவளுடைய வழக்கறிஞர் அவள் கையைப் பற்றிக் காதோடு ஏதோ சொன்னார். அவள் பிறகு என்னைப் பார்க்கவில்லை.

பாவம், எத்தனை பரிதாபகரமாக இருக்கிறாள்! கறுப்பு உடையும் வெள்ளை பிளவுசும் அணிந்திருந்தாள் துக்கம் அனுஷ்டிப்பவள் போல முகத்துக்குத் திரையிட்டிருந்தாள். கைப் பையை இறுகப் பற்றிக் கொண்டிருந்தாள்.

www.t.me/tamilbooksworld



ஒடெட்டை நான் கொலை செய்தபோது பார்த்ததாக இரண்டொரு பெண்கள் சாட்சியம் கூறினார்கள். போலீசில் ஏன் உடனே சொல்லவில்லை என்று கேட்டதற்கு நான் பழிவாங்கி விடுவேன் என்று பயந்ததாகச் சொன்னார்கள்.

மரியாவின் முன்னாள் கணவனும் சாட்சி கூறினான். "என்னோடு இருந்தபோது மரியா அடிக்கடி குழந்தையை அடித்ததுண்டு" என்றான் அவன்.

அரசாங்க வக்கீலான கேலட் வழக்கை மீண்டும் எடுத்துரைத்து, எனக்கு மரண தண்டனை விதிக்க வேண்டு மென்று கோரினார். எனக்கு மட்டுமல்ல. மரியாவுக்கும்தான்.

என் அருகிலே வீலென்று ஒரு கூச்சல். மரியாதான். என் தொடையை அழுத்தியபடி மயக்கம்போட்டு விழுந்து விட்டாள். அந்த அழுத்தத்தில் என் உதவியைக் கோரிய மாதிரி இருந்தது. அல்லது என் மன்னிப்பைக் கோரினாளோ?

என்னைச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். பழைய சிறைக்கு அல்ல. மரண தண்டனைக் கைதிகளுக்கான வேறு சிறைக்கு.

உள்ளே நுழைந்ததும் என் இரண்டு கால்களுக்கும் விலங்கிட்டு, அதைச் சுவரிலுள்ள ஒரு வளையத்தோடு சங்கிலியால் பிணைத்துவிட்டார் வார்டன். மரப் பலகையால் செய்யப்பட்ட ஒரு படுக்கை இருக்கிறது. அதில் படுத்திருப் பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. இதுதான் என் உலகம். கண்களால் ஆராய்கிறேன்.மேஜையாக உபயோகப் படுத்துவதற்கு ஒரு பலகை இருக்கிறது. ஒரு முக்காலி - அதைக் கொண்டு காவலாளியை நான் தாக்கிவிடாதபடி சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது. அதைச் சிறிது தூரம் இழுத்து, மேஜையடியில் போட்டுக் கொள்ளலாம், சாப்பிடுவதற்கு வசதியாக மேஜைக்கு மேலே ஒரு மங்கலான பல்பு எரிகிறது. நான் கழிப்பறைக்குச் செல்ல வேண்டுமானால் காவலாளி யைக் கூப்பிட வேண்டும்.

www.t.me/tamilbooksworld



படுத்தேன். சில நிமிடங்களில் ஒரு குவளையில் விஜிடபிள் சூப் மாதிரி ஒன்று கொண்டு வந்து தந்தார்கள். தண்ணீரும் ரொட்டித் துண்டும் தந்தார்கள். அதை மறுநாள் வரை வைத்துக் கொள்ள வேண்டும். காவலர்கள் அனைவரும் என்னைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கையில் எதையும் சாப்பிட எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் சிறிதுசிறி தாக விழுங்கி வைத்தேன். குவளை முதலானவற்றைக் கவனமாகத் திருப்பி எடுத்துச் சென்றார்கள் எதையும் கைதியின் கையில் விட்டுவிட்டுப் போகக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள் கைதி தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தால் எந்தச் சாதாரணமான பொருளும் பயங்கர மான கருவியாக மாறிவிடும் என்று அவர்களுக்குத் தெரியும்.

எனக்குத் தண்டனை விதிக்கப்பட்டு முப்பது நாட்களுக்கு மேல் ஓடிவிட்டது. உலகத்தோடு எல்லாத் தொடர்புகளும் வெட்டப்பட்டு விட்டன.

என் குடும்பத்தைப் பற்றி, என் உறவினர்களைப் பற்றி, என் சொந்த ஊரைப் பற்றி நினைத்துக் கொள்கிறேன் மரியாவைப் பற்றியும்தான். பிரான்ஸில் பெண்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டாலும் பின்னர் ஆயுள் தண்டனை யாக குறைத்துவிடுவார்கள்.

என்னை மார்சேல்ஸில் உள்ள வேறு சிறைக்குக் கொண்டு செல்லப் போவதாக ஒரு நாள் அறிவித்தார்கள் அங்கேதான் மரண தண்டனையை நிறைவேற்றும் சிரச் சேதக் கத்தி இருக்கிறது. எனக்கு அரசாங்க மன்னிப்புக் கிடைக்குமா கிடைக்காதா என்பதும் அங்கே போன பிறகுதான் தெரியும். கைகளிலும் கால்களிலும் விலங்குடன் நான் புறப்பட்டேன். சிறை வாசலில் நின்றிருந்த வேனுக்குள் என்னைத் தள்ளினார்கள். உள்ளே ஒரு பெண்ணின் உருவம்

www.t.me/tamilbooksworld



*"நீயா மிலானி! உன்னைப் பார்க்க எத்தனை சந்தோஷமாயிருக்கிறது தெரியுமா!"*

*"சீ! மூடு வாயை!" என்று ஒரு காவலர் அதட்டினார்.*

*மரியாதான் அவளையும் வேறு சிறைக்கு பெண்கள் சிறைக்கு மாற்றியிருந்தார்கள் நான் அவளுக்குப் பதில் சொல்லவில்லை. என்னைப் பொறுத்தமட்டில் எல்லாம் முடிந்துவிட்டது.*

*வேனின் மேற்புறமிருந்த சிறிய துவாரத்தின் வழியே வெளிச்சம் வந்தது. எனக்குப் பழக்கமான தெருக்களின் வழியே நான் செல்வதை, ஓசைகளின் மூலம் தெரிந்து கொண்டேன். திருப்பங்களில் வேன் திரும்பும் போதெல்லாம் என் விலங்குகள் சளசளத்தன. மரியா ரகசியக் குரலில் 'மிலானி. மிலானி. பாவம் நீ. ' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள், மெய்யாகவோ, போலியாகவோ.*

*சிறைச்சாலையின் பெரிய வாசல்கள் திறந்து என் வேனுக்கு வழிவிட்டன இங்கேதான் பொதுமக்களின் பார்வைக்கெதிரே பட்டாக் கத்தி என் தலையை வெட்டும்.*

*மூன்று மாத காலம் நான் காத்திருந்தாகிவிட்டது. எத்தகைய மரண வேதனை! கால்களும் கைகளும் சங்கிலியால் பிணைக்கப்பட்டுத் தினம் தினம் காத்திருந்தேன், என் தலையை இழப்பதற்குத் தயாராக. ஒவ்வொரு நாளும் காலையில் கண் விழிக்கும் போது 'இதுதான் நம்முடைய கடைசி நாளோ?' என்று எண்ணிக் கொண்டேன்.*

## 3

***அ**ந்த மூன்று மாத காலமும் எனக்கு சித்தம் கலங்காமலிருந்தது பெரிய ஆச்சரியம்தான்.*

www.t.me/tamilbooksworld



"உனக்கு என்ன பிடிக்குமோ அதெல்லாம் சாப்பிடலாம் என்று சிறை அதிகாரி சொல்லியிருக்கிறார்," என்று காவலர் தெரிவித்தார். "வறுத்த உருளைக் கிழங்கு, ஒயின், ஜாம் எது வேண்டுமானாலும் தின்னலாம். எவ்வளவு சிகரெட் வேண்டுமானாலும் நீ புகைக்கலாம்."

சிறைச் சமையல்காரர் சாப்பாட்டைத் தானே கொண்டு வந்து தந்தார். ஆனால் சிறைக்குள் வரமாட்டார். கம்பிகள் வழியே தட்டுக்களைத் தருவார். மதுவைப் புட்டியிலிருந்து என் குவளைக்கு ஊற்றுவார் நான் விரும்பினால் ஷாம்பேய்ன்கூட அருந்தலாம். எல்லாம் அரசாங்கச் செலவு.

தனித்திருக்கும்போது என் மனத்தில் ஆயிரம் சிந்தனைகள் சுழன்றன. நான் என்னவெல்லாம் இழக்கப் போகிறேன் என்று எண்ணினேன். எளிமையான அன்றாட விஷயங்கள், நான் ஒருநாள் காதலித்த ஒரு பெண், என் இளமை, எதிர் காலம் பற்றிய என் நம்பிக்கைகள் - வேடிக்கைதான். வாழ்வே பறிபோகப் போகிறதே! அதுதானே மாபெரும் இழப்பு! என் உணர்வுகள் குத்திட்டு நின்றன. தொலைக்க முடியாத கவலைகளுக்கிடையில் சின்னச் சின்ன விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து என்னை உற்சாகப்படுத்திக் கொண்டேன் ஒரு பிரம்மாண்டமான பாய்மரக் கப்பலில் பன்னிரண்டு வயதுப் பையனாக வேலை பார்த்த நாட்களை நினைத்துக் கொண்டேன். பின்னர் ஒரு பயிற்சியாளனாகவும் மாலுமியாகவும் மீனவனாகவும் இருந்த காலத்தை எண்ணினேன் கப்பல் படையில் சேர்ந்து, கட்டுப்பாட்டை எதிர்த்ததற்காகத் தண்டனை பெற்றதை நினைத்துக் கொள்கிறேன்.

அன்று, சிறைக் கதவுகள் திறந்தன. பிரதம வார்டன் உள்ளே வந்தார். "மிலானி, உன்க்கு ஒரு வருத்தமான செய்தி. உன் மன்னிப்புக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது" என்றார்.

www.t.me/tamilbooksworld



என் உணர்வுகள் கட்டவிழ்ந்தன. வாய்விட்டு அழுது விட்டேன் சிறைக்காவலர் என்னைத் தேற்றி, "அழாதே மிலானி. இதுவொன்றும் கடைசி அல்ல. இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது," என்றார்.

அதன்பிறகு நான் கண்ணை இமைக்கவேயில்லை. இரவு பூரா சிறைக்குள் குறுக்கும் நெடுக்கும் உலாத்தினேன். கோடை வானத்தில் பொட்டுப் பொட்டாக முளைக்கும் நட்சத்திரங் களைக் கண்டேன். விலங்குகளின் ஓசையும் இருதயத்தின் படபடப்பும் என் காதில் சேர்ந்து கேட்டன விடியும் ஒவ்வொரு காலையும், 'முடிவு இன்று இருக்காது' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

மே மாதம் ஆறாம் தேதி. பிரஞ்சு ஜனாதிபதி டூமரை ஒரு பயங்கரவாதி சுட்டுக்கொன்றுவிட்டான். எனக்கு மன்னிப்பு வழங்க மறுத்த ஜனாதிபதி இறந்து விட்டார்! புதிய ஜனாதிபதியாக லெப்ரூன் பதவியேற்றார். புன்னகை நிறைந்த முகம், மீசை, அழகாக வெட்டப்பட்ட முடி - திரைப்பட நடிகர் மாதிரி இருந்தார் புதிய ஜனாதிபதி. குரூரமான குறுந் தாடியுடன் இருந்த முந்தின ஜனாதிபதியைப் போலில்லாமல் இவருக்கு இரக்க உள்ளம் இருக்கக்கூடும்.

ஆம். ஆகஸ்டு மூன்றாம் தேதி பிரதம வார்டன் என் சிறைக்குள் நுழைந்தார் 'இந்தக் கைதியின் விலங்குகளை நீக்கு!' என்று காவலரிடம் உத்தரவிட்டார். உடனே அவை நீக்கப்பட்டன. என் வாழ்நாளில் நான் கேட்ட மிக இனிமை யான வார்த்தைகளைச் சொன்னார்.

"ஃபீலிக்ஸ் மிலானி, உன்னுடைய மன்னிப்பு மனு ஏற்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உன் மரண தண்டனை கடுங்காவல் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது."

www.t.me/tamilbooksworld



நான் மகிழ்ச்சி தாங்காமல் எம்பிக் குதித்தேன். கையிலும் காலிலும் விலங்கு இல்லாததால் தாராளமாகக் குதிக்க முடிந்தது. "நிஜமாகவா! நிஜமாகவா! நம்பவே முடிய வில்லையே! இனி அவ்வளவுதான் என்று நான் நினைத் திருந்தேன்!" என்று ஆனந்தத்துடன் கூவினேன்.

பிரதம வார்டனை இறுகக் கட்டிக்கொண்டு, காவலரை முதுகில் தட்டிக் கொடுத்தேன்.

"இந்தக் காகிதங்களில் கையெழுத்திடு. ஜனாதிபதி லெப்ரூன்தான் உனக்கு மன்னிப்பு வழங்கியிருக்கிறார்," என்றார் பிரதம வார்டன்.

கையெழுத்திட்டேன் ஒன்றென்ன, ஒன்பதாயிரம் கையெழுத்து வேண்டுமானாலும் போடுவேனே!

மிலானி, நம்ப முடிகிறதா உன்னால்! எப்படிப்பட்ட அற்புதம் இது! நம்பிக்கையனைத்தும் இழந்து நின்ற சமயத்தில், உன் கழுத்தைப் பட்டாக் கத்தியின் கூர்மை ஸ்பரிசித்துக் கொண்டிருந்த வேளையில் உனக்கு வாழ்வு கிட்டிவிட்டது.

அன்று மாலை ஆறுமணிக்கு அந்தச் சிறையிலிருந்து என்னை வெளியே அழைத்துச் சென்றார்கள். பல மாதங் களாகச் சங்கிலியுடன் இருந்ததால் என் கால்கள் மரத் திருந்தன சின்ன அடிகளாக வைத்து நடந்தேன். என் கை களைக் கொஞ்சம் கொஞ்சமாக அசைத்துக் கொண்டேன்.

அன்றிரவு ஒரு சாதாரணச் சிறையில், இரண்டு சாதாரணக் கைதிகளுடன் படுத்துத் தூங்கினேன் சிறையுலகம் என்பது அழுக்கும் நாற்றமும் கொண்டது. அதிலேயும்கூடப் புதுவாழ்வு என்ற வாச மலரை நான் கண்டுகொண்டேன். இந்த வாழ்வை எப்பாடு பட்டேனும் காப்பேன்.

பிரான்ஸ் மொத்தத்திலும் என்னைப் போல மகிழ்ச்சி யான கைதி அன்று இருக்கவில்லை.

www.t.me/tamilbooksworld



மார்சேல்ஸில் உள்ள செயின்ட்பியர் சிறைச்சாலைக்கு என்னைக் கொண்டு சென்றார்கள் அங்கிருந்து மற்றக் கைதிகளுடன் என்னையும் சேர்த்து ஃபான்ட்டர் வால்ட் என்னுமிடத்துக்குக் கொண்டுபோவார்கள்.அங்கிருந்து தீவாந்தர சிட்சைக்குக் கப்பலேற்றுவார்கள்.

செயின்ட்பியர் சிறையில் காவலாட்கள் அத்தனை கடுமையாக இல்லை. சிறை விதிகளை லேசாக மீறினால் கண்டுகொள்ள மாட்டார்கள் ஒரு நாள் வெய்யிலில் உலாத்திக் கொண்டிருந்தபோது என் முதுகில் ஓர் உற்சாகமான அடி விழுந்தது. ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தேன். “காஸ்ஸி!” என்று கூவினேன்.

“மிலானி!”

நாங்கள் மகிழ்ச்சியுடன் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டோம். அன்ட்டாயின் காஸ்ஸி என்ற என் அருமைத் தோழன் அவன். என் வயதுதான். கறுத்த முடி. கறுத்த நிறம். தீர்க்கமான கண்கள் அசையாத மன உ.றுதி. என்னைப் போலவே உடை உடுத்தியிருந்தான் ஏன் இங்கே வந்து சேர்ந்தோம் என்பதை இருவரும் சொல்லிக் கொண்டோம்.

“ஓர் ஆளைப் பழிவாங்குவதற்காகக் கொன்றேன். பத்து வருடம் தண்டனை கிடைத்தது” என்றான் அன்ட்டாயின்.

நான் என் கதையைச் சொன்னேன். அவனால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. “நான் விடுதலையானதும் அத்தனைபேரையும் தோலை உரிக்காமல் விடமாட்டேன். அந்த மரியாவையும்தான்” என்றான்.

மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப் பட்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சி சிறிது சிறிதாக மறைந்தது!.

ஃபான்ட்டர் வால்ட் சிறைக்கு எங்களைக் கொண்டு செல்லும் நாள் வந்தது. இரண்டிரண்டு பேராகச் சேர்த்து

www.t.me/tamilbooksworld



விலங்கிட்டு ரயில் மூலம் அழைத்துச் சென்றார்கள் வண்டியிலிருந்து இறங்குகையில் திடீரென்று இரண்டு கைகள் என் கழுத்தை அணைத்தன. 'மிலானி! மிலானி' என்று ஒரு பெண் குரல்!

மீண்டும் மரியாதான்! பெண் கைதிகளின் கூட்டத்தில் அவளும் வந்திருந்தாள். ஒரு காவலர் வேகமாக வந்து அவளை இழுத்து அகற்றினார் அவள் கைகளில் விலங்கு இல்லை. கைதிகள் உடையில் இல்லாமல் சாதாரணமான உடையில் இருந்தாள். பெண் கைதிகளைத் தீவாந்தர சிட்சைக்கு அனுப்ப மாட்டார்கள் ரென்ஸ் என்னுமிடத்திலுள்ள பெண்கள் சிறைச்சாலைக்கு அவள் கொண்டு போகப்பட்டாள் அதுதான் நான் அவளைக் கடைசியாகப் பார்த்தது. பிறகு என் வாழ்க்கையில் ஒருபோதும் அவளைச் சந்திக்கவில்லை.

ஃபான்ட்டர் வால்ட் சிறைச் சாலையில் எதிரெதிராக இருந்த இருபது சிறிய அறைகளில் நாங்கள் அடைக்கப் பட்டோம். மொத்தம் எழுநூறு கைதிகள் இருந்தோம். கைதிகளுக்கான உடைகளை அவசர அவசரமாக அணிந்து கொள்ளச் சொன்னார்கள் கைகால் ஊனமுள்ளவர்களும் சித்த சுவாதீனமில்லாததுபோல் பாசாங்கு செய்கிறார்கள் என்று காவலர்களால் கருதப்பட்டவர்களும் விலாவில் குத்தப் பட்டார்கள் சிலருக்கு அந்த உடைகளை எப்படி அணிவது என்று தெரியவில்லை. ஒருவனுக்கு நான் உதவி செய்ய முற்பட்டேன். ஒரு காவலாள் என்னைத் தடுத்து, 'உன் வேலையைப் பார் அவனைக் கவனித்துக் கொள்ள அவனுக்குத் தெரியும்!' என்றார் பிறகு அந்த ஆளைப் பாண்ட்டினால் முகத்தில் அறைந்தார் வீலென்று அவன் அலறினான். முகத்தைக் கையால் மூடிக் கொண்டான் பாண்ட்டிலிருந்த ஒரு பொத்தான் அவன் கண்ணைக் குத்திவிட்டதே காரணம். யாருக்கும் அவர்களுக்கேற்ற உடை கிடைக்கவில்லை. குட்டையும் நீளமுமாகக் கண்டபடி உடுத்திக் கொண்டார்கள்.

www.t.me/tamilbooksworld



நாவிதர்கள் வந்து சேர்ந்தார்கள். என் அடர்ந்த கறுத்த முடி வெட்டப்பட்டு, கொத்தாக என் காலடியில் விழுந்தது. மழமழவென்று மொட்டையடித்தார்கள் பின்னர் கூண்டு போலிருந்த அறைகளுக்குள் நாங்கள் தள்ளப்பட்டோம். தானியங்கி முறையினால் இருபது சிறைக்கதவுகளும் ஒரே சமயத்தில் மூடிக் கொண்டன. வார்டனுக்கு உதவியாளனான ஒரு கைதி எல்லாப் பூட்டுக்களையும் பரிசோதித்தான் அப்போது நாங்கள் அட்டென்ஷனில் நிற்க வேண்டும். புகை பிடிப்பதோ பேசுவதோ கூடவே கூடாது. விதிகளைக் கொஞ்சம் மீறினாலும் தனிக் கொட்டடியில் அடைக்கப் படுவோம்.

'லெஃப்ட்-ரைட்! லெஃப்ட்-ரைட்! லெஃப்ட் லெஃப்ட் லெஃப்ட். '

எங்கள் கட்டைக் காலணிகள் நடைபாதையில் டொக் டொக்கென்று சப்தித்தன. ஒரு வார காலம் வரையில் தினம் பகல் வேளை பூராவும் நாங்கள் வட்டமாக நடந்து கொண்டேயிருந்தோம். பதினைந்து நிமிடம் இடைவேளை உண்டு. சிறுநீர் கழிக்கச் செல்ல வேண்டுமானால் கையைத் தூக்க வேண்டும். அனுமதிப்பது காவலர் இஷ்டத்தைப் பொறுத்தது.

## 4

தொழிற்சாலையில் வேலை செய்ய என்னை அனுப்பினார்கள். சட்டைகளில் பொத்தான்களைத் தைக்க வேண்டும். அப்படித் தினமும் முப்பது சட்டைகள். ஒரு நாள் என் அருகில் இருந்தவனிடம் 'சனியன்! இது என்ன பெண் பிள்ளைகள் செய்கிற வேலை!' என்று நான் திட்டியது மேலதிகாரிகளுக்கு எட்டிவிட்டது. ஒரு வாரம் தனிமைச்

www.t.me/tamilbooksworld



*சிறையில் இருக்கவேண்டுமென்று தண்டனை அளித்து விட்டார்கள்*

*மிக அருவருப்பான, ராட்சதன் மாதிரி இருந்த ஒரு கைதி என்னைத் தனிச்சிறைக்குத் தள்ளிக் கொண்டு சென்றான். ஒரு கிழவியைக் கொலை செய்து அவள் உடைமைகளைக் கொள்ளையடித்ததற்காகத் தண்டனை பெற்றவன் இவன். பயங்கரமாக ஓர் அடி கொடுத்து என்னைச் சிறைக்குள்ளே தள்ளினான் அந்த ஆள் சிலீரென்று குளிரும் இருட்டு மாயிருந்தது. நான் போய் விழுந்த இடத்தில் ஒரு பாய் சுருட்டி வைக்கப்பட்டிருந்ததை உணர்ந்தேன். அருகில் தகரத்தில் மலச் சட்டி. கொஞ்சம் கொஞ்சமாக என் கண்கள் இருட்டுக்குப் பழக்கப்பட்டன. அசல் கல்லறை மாதிரி இருந்தது இந்தச் சிறை.*

*இந்த இடமே இப்படி இருக்கிறதே! நான் போக வேண்டிய தீவாந்தரச் சிறை எப்படி இருக்குமோ!*

*மூச்சுக்கூட விடக்கூடாதாம் இங்கே. நிசப்தமாயிருக்க வேண்டும். பாயைப் பிரித்தேன், படுக்கலாமென்று. அந்தக் கைதி வந்து, "ஏய்! படுக்காதே! நின்று கொண்டே இரு!" என்று கத்தினான்.*

*"பன்றி" என்று நான் திருப்பிக் கத்திவிட்டேன்.*

*"பன்றி என்றா சொன்னாய்! என்ன நடக்கிறது பார்!" என்றான்.*

*ஏழு நாள் தனிமைச் சிறையில் இருக்க வேண்டியவன் முப்பது நாள் இருக்கும்படிநேரிட்டது. ஒரு மாத காலம் அந்தக் கிடங்கை விட்டு நான் வெளியே நகரவே இல்லை. கதவிலிருந்த இடுக்கு வழியே அவன் என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தான். நான் எச்சரிக்கையாக இருக்க ஆரம்பித்தேன்.*

www.t.me/tamilbooksworld



காஸ்ஸியும் சில நாளைக்கெல்லாம் இதே தனிமைச் சிறைக்கு வந்து சேர்ந்தான். மலச் சட்டியைக் காலி செய்வதற்காக அவன் எடுத்துச் சென்று கொண்டிருந்தபோது அவனைப் பார்த்தேன். காவலிருந்த ராட்சதக் கைடு என்னிடம் நடந்து கொண்ட மாதிரியே அவனிடமும் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளப் பார்த்தான். ஆனால் காஸ்ஸி அவன் அடி வயிற்றில் இரண்டு குத்து வேகமாக விட்டான். ராட்சதனால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை.

"நான் அடித்ததைப் பற்றி யாரிடமாவது மூச்சு விட்டதாக தெரிந்ததோ, உன் கழுத்தை முறித்துவிடுவேன். ஜாக்கிரதை, என்னை அதற்காக அவர்கள் கொலை செய்தாலும் சரி!" என்று எச்சரிக்கையும் செய்தான் காஸ்ஸி.

காஸ்ஸி தொண்ணூறு நாள் தனிமைச் சிறையில் இருந்தான். ராட்சதன் அவனிடம் எந்த வம்பும் வைத்துக் கொள்ளவில்லை. சிகரெட். தின்பண்டங்கள் கூடக் கொண்டு வந்து கொடுத்தான்.

இலையுதிர் கால வாக்கில் என்னைத் தனிமைச் சிறையிலிருந்து விடுவித்து, பழையபடி பொத்தான் தொழிற் சாலைக்கு அனுப்பி வைத்தார்கள் ஒரு துளைபோடும் கருவியின் துணையுடன் பொத்தான்களில் துவாரம் போட வேண்டியது என் வேலை.

பிகோஸி என்ற என் ஊர்க்காரன் ஒருவனை இப்போது சந்தித்தேன். நான், காஸ்ஸி, இவன் மூவருமாகச் சேர்ந்து ஒரு கோஷ்டியாகச் செயல்படுவது என்று தீர்மானித்தோம். நான் நட்பாய் இருந்ததில் பிகோஸிக்கு வெகு ஆச்சரியம். ஏனெனில் என் உறவுக்காரன் ஒருவனைக் கொலை செய்துவிட்டுத்தான் அவன் சிறைக்கு வந்திருந்தான்.

"இங்கே ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் நாம் மூன்று பேர்தான் ஆகையால் ஒருவரோடொருவர் சண்டை

www.t.me/tamilbooksworld



போட்டுக் கொள்வதில் அர்த்தமில்லை. ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து தப்பிப்பதற்கு ஏதாவது வழி உண்டா என்று பார்ப்போம்" என்றேன்.

ஆனால் நாங்கள் சந்தித்துக் கொள்வது எப்படி? இன்னும் கொஞ்ச நாளில் லா பாலிஸ் என்னுமிடத்துக்குப் புறப்பட்டு விடுவோம். அதுதான் பிரான்ஸில் எங்களுடைய கடைசி ஊர் அங்கிருந்து அக்கரைச் சிறைக்குக் கிளம்ப வேண்டும். அதற்கு முன் நாங்கள் தொடர்பு கொள்வ தென்றால் ஒரே வழி ஆஸ்பத்திரிதான்.

காஸ்ஸியைப் பொத்தான் தொழிற்சாலையில் பார்த்த போது, "நாளை நீ உடம்பு சரியில்லாதவன் போல் பாசாங்கு பண்ணு. நானும் பண்ணுகிறேன். பிகோஸியிடமும் சொல்லி வை," என்றேன்.

மறுநாள் நான் 152'வது பொத்தானுக்கு ஓட்டை போட்டுக் கொண்டிருந்தபோது ஒரு காவலாள் வந்து, "உடம்பு சரியில்லாதவன் எவனேனும் இருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

நான் கையை உயர்த்தினேன்.

சிறைச்சாலையில் கடைசிப் பகுதியில் டாக்டர் இருந்தார் அங்கே அழைத்துச் சென்றார்கள் என்னை.

"என்ன உனக்கு?" என்றார் டாக்டர்.

"கட்டி, ஏகப்பட்ட கட்டிகள்."

"எங்கே?"

"இங்கே" என்று என் பிட்டத்தைக் காட்டினேன். சதா சர்வகாலமும் உட்கார்ந்திருந்ததாலும் ஒரே உடையை எப்போதும் அணிந்ததாலும் ஏகப்பட்ட கொப்புளங்கள் இருந்தன.

www.t.me/tamilbooksworld



ஆனால் டாக்டர் சிகிச்சை எதுவும் தரவில்லை. "உனக்கு ஒன்றுமில்லை. ஏமாற்ற முயன்றதற்காக உன்னைத் தனிமைச் சிறைக்கு அனுப்புகிறேன்" என்றார்.

மறுபடியும் பழைய இடத்துக்கே திரும்பினேன் அங்கிருந்த கைதி வார்டன், "வா, வா இந்தத் தடவை உன்னைச் சரியானபடி கவனித்துக் கொள்கிறேன்" என்று உறுமினான் என் சிறை உடைகளைக் களையச் சொல்லி, கொஞ்சமும் போதாத கந்தல்களைக் கட்டிக் கொள்ளக் கொடுத்தான். நான் எத்தனை நாள் அங்கே தங்கவேண்டும் என்பதை ஒரு காகிதத்தில் எழுதிச் சிறைக் கதவில் ஒட்டினான். தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் வரை இங்கேதான் வாசம் என்று கண்டுகொண்டேன்.

நவம்பர் மாதம் வந்தது. கடுமையான குளிர் காலம். ஒரு நாள் காலை எங்களை வழக்கமான வேலைக்கு அனுப்பாமல், முற்றத்தில் நிறுத்தி வைத்தார்கள். அம்மை குத்தப் போகிறார் களாம்.

எனக்குச் சில அடி தூரத்தில் காஸ்ஸியையும் பிகோஸி யையும் கண்டேன். டர்லாடி, காலடி, நான்ஸ்கி என்ற இன்னும் மூன்று பழைய தோழர்களும் இருந்தார்கள். டாக்டர் லெசர் என்பவரையும் பார்த்தேன் ஒரு காலத்தில் ரொம்பப் புகழ்பெற்ற டாக்டராக இருந்தவர் இவர். குடும்பச் சொத்து முழுவதையும் தானே அடைய வேண்டும் என்பதற்காகத் தாயையும் இரண்டு சகோதரிகளையும் கொலை செய்துவிட்டுச் சிறைக்கு வந்திருந்தார் 'கிறுக்கன்' என்று இவருக்குப் பெயர் பிற்காலத்தில் கயானா தீவாந்தரச் சிறைகளில் பல பேருக்கு உதவி செய்து இரக்கம் காட்டி, தன் பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டார் இவர்.

சுருக்கென்று எனக்கு அம்மை குத்தப்பட்டது. சருமம் துவைத்த மாதிரி எரிந்தது. ஆனால் அதை நான் பொருட்

www.t.me/tamilbooksworld



படுத்தவில்லை. அம்மை குத்துகிறார்கள் என்றால் சீக்கிரமே தீவாந்தரச் சிறைக்குக் கப்பலேற்றப் போகிறார்கள் என்று அர்த்தம். நாங்கள் இனித் தப்புவதற்கு ஒரே மார்க்கம் அக்கரைச் சிறைதான். அதாவது அப்படி நான் நினைத்துக் கொண்டேன். அன்று இரவு எனக்கு கடும் காய்ச்சல் வந்தது. வியர்த்துக் கொட்டியது. உடம்பு நடுங்கியது. ஆனால் நான் சிறிதுகூட முனகவில்லை. ஏதாவது சொல்லப் போய் என்னைக் கப்பலேற்றாமல் நிறுத்திவிடப் போகிறார்களே என்று வாய்திறவாமல் பொறுத்துக் கொண்டேன்.

அக்டோபர் 17ஆம் தேதி சிறை அதிகாரி எங்களை நாடு கடத்தும் அறிவிப்பைத் தந்தார் மொத்தம் தொள்ளாயிரம் கைதிகள் புறப்படத் தயாரானார்கள் எங்களுடைய சொந்த உடைமைகளைக் காவலர்கள் கொண்டு வந்து தந்தார்கள். நான் என் சிறிய சூட்கேஸைத் திரும்பப் பெற்றேன் பயணத்தின் போது நாங்கள் சாதாரண உடையிலேயே இருக்கலாமாம்.

செயின்ட் மார்ட்டினை அடைந்து, துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டோம். லெஃப்ட்-ரைட்! துறைமுகத்தின் திறந்த வெளியில் தினம் நாலு மணி நேரம் நாங்கள் நடை போட்டபடி இருக்க வேண்டும். எவரும் எவருடன் பேசக் கூடாது. காஸ்ஸி, பிகோஸி, நான் மூவரும் சேர்ந்தே இருந்தோம். கொஞ்ச தூரத்தில் ஹென்றி ஷாரியரைப் பார்த்தேன். கழுத்தில் பட்டாம்பூச்சி பச்சை குத்திக் கொண்டிருந்ததால் அவனைப் பட்டாம்பூச்சி என்றே எல்லோரும் அழைத்தார்கள் கையில் பணம் வைத்திருந்தவர்கள் சிகரெட், புகையிலை, சாக்லேட் முதலானவற்றை வாங்கிக் கொண்டார்கள் நாங்கள் எங்களுடைய பொருளாளராக பிகோஸியை நியமித்துக் கொண்டோம்.

பால் ஃபோர்க்கா என்ற கைதி என்னிடம் ரகசியமாக வந்து ஓர் உதவி கேட்டான் இவன் பிரான்ஸுக்கும்

www.t.me/tamilbooksworld



பெல்ஜியத்துக்கும் இடையே கடத்தல் வேலைகளில் ஈடுபட்டவன் இரண்டு நாடுகளின் எல்லையிலும் உள்ள பொதுவான சாக்கடைப் பாதையை உபயோகித்துத் தன் கடத்தல்களைச் செய்து வந்தான். அந்தப் பாதையின் மேலாக ஓடும் ஒரு சிறிய ரயில் மூலம் கடத்தல்களை நடத்தினான் இதில் இவனுக்கு ஒரு துப்புரவுப் பணியாளன் துணை செய்து வந்தான். ஆனால் இதை அதிகாரிகள் கண்டுபிடித்ததால், லாரிகளின் மூலமே தன் தொழிலை நடத்தினான். ஒரு நாள் இவனுடைய வண்டியைச் சுங்க அதிகாரிகள் துரத்த ஆரம்பித்தார்கள். ஓர் அதிகாரியைச் சுட்டுக் காயப்படுத்தி னான். ஆனால் தப்ப வழியில்லை என்று தெரிந்ததும், தன் லாரி மீது பெட்ரோலை ஊற்றி அதைக் கொளுத்திப் பள்ளத் தில் தள்ளிவிட்டுத் தானும் இன்னொரு புறம் குதித்தான். மறுநாள் பலத்த காயங்களுடன் சாலையோரத்தில் கிடந்த இவனைப் போலீசார் பிடித்துவிட்டார்கள்

அவனுக்கு நாலு வயதில் ஒரு பெண் குழந்தை இருந்தது.

என்னிடம் அவன் கேட்டது இதுதான் "மிலானி, நீ மூளையுள்ளவன் எப்படிச் செய்வது என்று உனக்குத் தெரியும். என் குடும்பத்தினர் துறைமுகத்துக்கு வந்திருப் பார்கள். கப்பலில் ஏறுமுன் என் குழந்தையை ஒரு முறை நான் கட்டித் தழுவி முத்தமிட வேண்டும். அதற்கு வழி செய்வாயா?"

நான் யோசித்தேன். "கப்பலில் ஏறும் சமயம் நம்மைச் சுற்றிக் காவலர்களும் சிப்பாய்களும் சூழ்ந்து நிற்பார்களே? உன் குழந்தையை நீ தொடக்கூட முடியாதே?" என்றேன் என்ன செய்யலாம் என்று யோசித்தேன்.

## 5

அந்தக் கைதியின் ஆசை என் நெஞ்சைத் தொட்டது.

www.t.me/tamilbooksworld



தீவாந்தர சிட்சைக்காகக் கப்பலேறுவதற்குள் தன் குழந்தையை அணைத்து முத்தமிட வேண்டுமாம். அதற்கு என் உதவியை நாடினான். அதை எப்படிச் செய்வது? "சரி, கப்பலேறும் தோழர்களுடன் இருந்து கொண்டிரு," என்று சொன்னேன். காவலர்கள் எல்லாரும் வியாபாரத்தில் மும்முரமாக இருந்தார்கள். கைதிகள் தயாரித்த பொருள்களை நகரத்துக்கு கொண்டு சென்று விற்றார்கள்.

நிரந்தரமாக நாட்டை விட்டு செல்லப்போகும் கைதிகளுக்குப் பணமோ, புகைப்படமோ, செய்தியோ கொண்டு செல்வதாகக் கூறிக் கைதிகளின் மனைவிகளை அனுபவித்த காவலர்களும் உண்டு. பாவம், அந்தப் பெண்கள், தங்கள் கணவன்மார்களுக்காகத் தங்கள் மானத்தையும் விற்றார்கள் அதே காவலர்கள் பிறகு எங்களிடம் வந்து தாங்கள் பெற்ற இன்பத்தை உரக்கச் சொல்லி ஏளனமாகச் சிரிப்பார்கள்.

பிகோஸி என்னிடம் வந்து, "நாளை நாவிதர் வந்து உன் குப்பியைத் தருவார் பணக் குப்பி. கண்ணாடி போட்டுக் கொண்டு, புரொபசர் என்ற பெயருடன் ஒரு நாவிதர் இருப்பார் மொட்டையடித்துக் கொள்ள அவரிடம் போ" என்றான்.

அவன் சொன்னபடியே மறுநாள் இரண்டு நாவிதர்கள் வந்திருந்தார்கள். கண்ணாடி போட்ட நாவிதரிடம் சென்றேன். நாற்காலியில் உட்கார்த்தி வைத்து முகத்தில் சோப்புத் தடவியதும் ஒரு சிறிய உலோகக் குப்பியை ரகசியமாக என் கையில் திணித்தார் அவர் முகச் சவரம் முடிந்ததும் நேரே லெட்ரீனுக்குச் சென்று அதை என் ஆசனத்தின் வழியே உள்ளே செருகிக் கொண்டேன்.

என் குப்பியைப் பற்றிச் சந்தோஷமாயிருந்தது. ஒவ்வொரு கைதிக்கும் அந்தக் குப்பிதான் பணப்பை.

www.t.me/tamilbooksworld



பலவிதமான உலோகங்களில் செய்யப்பட்டவை அவை. சில சமயம் தந்தத்தில்கூடச் செய்திருப்பது உண்டு. அதிலுள்ள பணம் செலவழிந்தபின் அந்தத் தந்தக் குப்பியையும் விற்றுவிட முடியும். கரென்ஸி நோட்டுக்களை அந்தக் குப்பிக்குள் சுருட்டி வைத்துக் கொண்டு, குப்பியை உடலுக்குள் செருகிக் கொள்ள வேண்டும். வலிக்கும். எச்சில் தடவி வழுவழுப் பாக்கிக் கொண்டு செருகினால் குடலுக்குச் சரியாக இருந்து கொள்ளும். தேவைப்படும் பொழுது ஒரு முக்கு முக்கினால் போதும், வெளியே வந்துவிடும்.

புறப்படுவதற்கு முந்தின தினம் நானும் காஸ்ஸியும் பிகோஸியும் தனியே கூடினோம். காஸ்ஸி, தன் வலது கையை நீட்டினான். (நான் இடது கைப்பழக்கமுள்ளவன்.) பிகோஸி எங்கள் கைகள் மேல் தன் கையை வைத்தான்.

"நம் கோஷ்டிக்கு நான் விசுவாசமாக இருப்பேன். இது சத்தியம்."

"சத்தியம்."

"சத்தியம்."

நாங்கள் மூவரும் ஒற்றுமையாக இருப்பது என்று சத்தியம் செய்து கொண்டோம். எங்களுக்குக் கிடைக்கும் பணம், சிகரெட், தொடர்புகள், பெண்(கிடைத்தால்) எதுவானாலும் எங்களுக்குப் பொதுவாக வைத்துக் கொள்வதென்று உறுதி செய்து கொண்டோம். வாழ்விலும் சாவிலும் ஒன்றாயிருப்பதென்று சத்தியம் பண்ணிக் கொண்டோம். உலகிலேயே கைதியின் சத்தியம்தான் மிக உறுதியானது கண்ணியமான மற்ற மனிதர்கள் செய்து கொள்ளும் சத்தியங்களைக் காட்டிலும்.

"**கை**திகளே! உடனே புறப்படுங்கள்! எட்டு எட்டுப்பேராக நடக்க வேண்டும்! சீக்கிரம்!"- கட்டளை பிறந்தது.

www.t.me/tamilbooksworld



*1933, அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி காலை வேளை.*

*கப்பலுக்கு எங்களைக் கொண்டு செல்வதற்காகப் படகு தயாராய்க் காத்திருந்தது. துறைமுகத்தில் நடந்தோம். அருகில் பார்வையாளர்கள் கும்பலாகக் கூடியிருந்தார்கள் காஸ்ஸி தன் சகோதரி வந்திருக்கிறாளா என்று பார்த்தான். பிகோஸி தன் சகோதரனைத் தேடினான் நான் யாரையும் தேடவில்லை. எனக்காக யாரும் வந்திருக்கமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஃபோர்க்கா ஓர் இளம் பெண்ணைச் சுட்டிக் காட்டினான் பழுப்புநிற உடை அணிந்திருந்தாள். அவளுக்கு முன்னே ஒரு சிறுமி நின்றாள் தலையைச் சிறு பின்னல் போட்டுக் கொண்டிருந்தாள்.*

*ஃபோர்க்கா என்னிடம் கிசு கிசுத்தான் "அதோ இருக்கிறார்கள்! என் மனைவியும் குழந்தையும்!"*

*அவர்களுக்கும் எங்களுக்கும் ஐந்து கெஜ தூரம் இருந்தது. காலில் திடீரென்று சுளுக்கு ஏற்பட்டது போல நான் முன்னே விழுந்தேன் காஸ்ஸியின் மேல் நான் சாய்ந்ததும் அவன் திரும்பிக் கொண்டு என்னைப் பிடித்தான். அந்தச் சின்னஞ்சிறு குழப்பம் போதுமானதாக இருந்தது காவலர்களின் கவனத்தைத் திருப்ப. யாரும் ஃபோர்க்காவைக் கவனிக்க வில்லை. சட்டென்று அவன் மனைவி குழந்தையைத் தூக்கி அவனிடம் தந்தாள். "அப்பாவுக்கு முத்தம் கொடும்மா! வெளியூர் போகிறார்!" என்றாள்*

*ஃபோர்க்கா அந்தச் சிறுமியைத் தன் கைகளில் தாங்கி நெஞ்சோடு இறுக்கி அணைத்துக் கொண்டான் கண்கள் குளமாகத் திருப்பித் தந்தான், மனைவியிடம். பதினைந்தே பதினைந்து நொடிகள்தான் இருக்கும் ஆனால் ஃபோர்க்காவின் தீவாந்தர வாழ்க்கை பூராவிலும் இந்த ஒரு நினைப்பு இந்த ஒரு சுகம் - போதும்.*

*கயானாவை எப்போது அடைவோம் என்று நான்*

www.t.me/tamilbooksworld



துடித்துக் கொண்டிருந்தேன் அங்கே போன பிறகுதான் தப்புவதற்கான வழிகளைத் திட்டமிட முடியும். அந்த முயற்சியில் நான் இறக்க நேரிட்டாலும் சரி என்று தீர்மானித்திருந்தேன்.

மார்ட்டினியர் என்ற எங்கள் கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது. எழுநூறு கைதிகள். ஐம்பது காவலர்கள். கப்பலைச் செலுத்தும் குழுவினர் அறுபது பேர்.

பதினேழு நாட்கள் பயணம் செய்தபின், அதோ அடிவானத்தில் ஒரு கறுப்புக் கோடு தெரிகிறது. கொலம்பஸ் கத்திய மாதிரி, "அதோ கரை!" என்று கூவினேன்.

ஆம். கயானாவை அடைந்துவிட்டோம். அதுதான் எங்கள் தீவாந்தரச் சிறை.

"இறங்கத் தயாராய் இருங்கள்" என்ற கட்டளை பிறந்தது. கப்பலின் வேகம் குறைந்தது. மரோனி ஆறு கடலைச் சந்திக்கும் இடத்தில் வெள்ளை வெளேரென்று நுரை பொங்கிக் கொண்டிருந்தது. "ஆற்றின் வேகம் இங்கே மிகக் கடுமையானது. இதுதான் கடப்பதற்கு மிகக் கடினமான இடம். பாவம், தப்ப முயன்ற எத்தனை கைதிகள் இந்த இடத்தில் மடிந்தார்களோ!" என்றேன் பிகோஸியிடம்.

இரண்டு பக்கமும் மரங்கள் அடர்த்தியாக வளர்ந் திருந்தன. தூரத்தில் குடிசைகளையும் மனிதர்களையும் காண முடிந்தது.

இறங்கி எட்டு எட்டு பேர் கொண்ட அணிகளாக ஸெயின்ட் வாரண்ட் சிற்றூருக்குள்ளே நடந்தோம். ஒரு பிரம்மாண்டமான கதவு தெரிந்தது. அதுதான் எங்கள் சிறை. இடப்புறம் அலுவலகங்களும் வலப்புறம் மருத்துவ மனை களும் இருந்தன. எதிரே எட்டு வெள்ளைக் கட்டிடங்கள் தெரிந்தன. ஒவ்வொன்றும் இரண்டு மாடிகளும் வெராந்தா வும் கொண்டவை. கட்டிடத்தின் வெளிப்புறம் மாடிப் படிகள் இருந்தன.

www.t.me/tamilbooksworld



ஒவ்வொரு கட்டிடத்திலும் ஐம்பது கைதிகள் வைக்கப்பட்டார்கள் என் அதிர்ஷ்டம், இரண்டாவது எண்ணுள்ள கட்டிடத்தில் நான், காஸ்ஸி, பிகோஸி மூவரும் சேர்ந்தே அடைக்கப்பட்டோம். இருவரும் என்னை அணைத்தாற்போல பக்கத்திலேயே நடந்தார்கள். ஏனெனில் மூவரில் நான்தான் மிக முக்கியமானவன். கப்பலில் வேலை பார்த்தவனானபடியால் கடலைப் பற்றி எனக்குத்தான் தெரியும். இங்கிருந்து தப்பிக்க வேண்டுமானால் நான்தான் வழிகாட்ட வேண்டும்.

எங்களிடம் சிறு பிரஷ்களும் விசேடமான மசிப் புட்டியும் தந்தார்கள். எங்கள் உடைமைகள் அனைத்திலும் எங்கள் எண்களை எழுதி வைக்க வேண்டும். என் எண் : 51977 ஐந்தே ஐந்து எண்கள் கொண்டதாக என் வாழ்க்கை சுருங்கி விட்டது.

மரண தண்டனையிலிருந்து தப்பி ஆயுள் தண்டனை பெற்ற கைதி என்பதால் என்னிடம் யாரும் கருணை காட்ட மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். என் ஏற்பாடுகளை நானே தான் செய்து கொள்ளவேண்டும் என்று தீர்மானித் தேன். என் நண்பர்களிடம், "என்னைப் பற்றி என்ன முரண் பாடான செய்தி கேள்விப்பட்டாலும் கண்டு கொள்ளாத மாதிரி இருங்கள்," என்று எச்சரிக்கை செய்தேன்.

## 6

**ம**றுநாள் காலை. "யார் யாருக்கு உடல் நலமில்லையோ அவர்கள் முன்னே வாருங்கள்!" என்று காவலாளி அழைப்புக் கொடுத்ததும் நான் தள்ளாடிக் கொண்டு முன்னே சென்றேன்.

ஒரு கட்டுப் புகையிலையை மென்று விழுங்கி, குமட்டலும் வாந்தியும் இருக்கிற மாதிரி முன்பே தயார்

www.t.me/tamilbooksworld



*செய்து கொண்டிருந்தேன் டாக்டரிடம் சென்றதும் என் நிலைமையைச் சொன்னேன். "வாந்தியும் தலை சுற்றலுமாக இருக்கிறது, டாக்டர் கடல் பிரயாணம் எனக்கு ஒத்துக் கொள்ளவில்லையோ என்னவோ" என்றேன்.*

*அந்த டாக்டர் ஓரளவு இரக்க குணம் படைத்தவர் "மூன்று நாள் ஆஸ்பத்திரியில் இருக்கட்டும்" என்று உத்தரவிட்டார்.*

*சில நிமிடங்களுக்கெல்லாம் நான் மெத்தென்று படுக்கையில் இருந்தேன். சுத்தமான வெள்ளை விரிப்புக்கள்! புட்டியில் அடைக்கப்பட்ட பால் எனக்குப் பிரத்தியேகமாக வழங்கப்பட்டது. இங்கேதான் என் முதல் 'வியாபார'மும் ஆரம்பமாயிற்று.*

*பால் கொண்டு வந்து தந்த சிப்பந்தி, "உன் பெயரில் ஒரு புட்டி அதிகப்படியாக எழுதிக் கொள்கிறேன் அதை என்னிடம் கொடுத்து விடு. விற்றுத் தருகிறேன் உனக்குப் பாதி, எனக்குப் பாதி" என்றான்.*

*என் முதல் விற்பனையில் ஐம்பது காசு கிடைத்தது. அதைக் கொண்டு சாக்லேட்டோ சிகரெட்டோ வாங்கிக் கொள்ள முடியும்.*

*உடல்நிலை சரியில்லை என்பதால் பக்கத்துத் தீவுகளில் வேலைக்கு அனுப்பும் முதல் குழுவில் என்னைச் சேர்க்க வில்லை. அடுத்த குழு புறப்பட இன்னும் சில நாட்களாகும். ஆனால் அங்கேயே விவசாய வேலைகள் தந்தார்கள். இருபது தீவாந்தரக் கைதிகளை நாலு வார்டன்களின் காவலுடன் வயலுக்கு அழைத்துச் சென்றார்கள் கட்டிடங்களையும் கடந்து நாற்பது நிமிடம் நடந்தபின் வயலுக்கு வந்து சேர்ந்தோம்.*

*"இந்தக் கரும்புத் தோட்டத்துக்குப் பக்கத்திலிருக்கும் நிலத்தைக் கொத்திச் சரிப்படுத்துங்கள்" என்று கட்டளை யிட்டார் காவலர்*

www.t.me/tamilbooksworld



தரை பாறாங்கல்லை விடக் கடினமாக இருந்தது. என் மண் வெட்டியால் ஓங்கி வெட்டினேன். அரை அங்குலம் ஆழத்துக்குக் கூட மண்வெட்டி நுழையவில்லை. என் பக்கத்திலிருந்த ஒருவன் இந்த வேலைக்கு இன்னும் புதியவன். பத்து நிமிடம் வெட்டிப் பார்த்துவிட்டு, பயனில்லாததால் சும்மா நின்றான். காவலாள் வந்து அவனை மண் வெட்டி யாலேயே பின்புறத்தில் அடித்து, "ஊம், கொத்துடா!" என்று அதட்டினான். அவன் பக்கத்திலேயே நின்று கொண்டான். பதினொரு மணி இருக்கும். வேலை முடிந்ததற்காக மணி அடிக்கும் சமயம். காவலாள் அந்தக் கைதியை ஓங்கி உதைத்தான் கைதி கையில் மண் வெட்டியுடன் சட்டெனத் திரும்பினான். காவலாளிக்குப் பயம் ஏற்பட்டு விட்டது. துப்பாக்கியை எடுத்துச் சுட்டான். அந்தக் கைதி தள்ளாடிச் சுழன்று குப்புற விழுந்தான் "கோழை கொலைகாரா!" என்று இரண்டே சொற்கள்தான் அவன் வாயினின்று வெளிப் பட்டது. இறந்து விட்டான்.

யாரும் மூச்சு விடவில்லை. காவலாள் தன் துப்பாக்கி யைச் சரியாக மாட்டிக் கொண்டான் எங்களையும் பார்த்து, "பாவம், இந்த ஆள். ஆனால் நான் என்ன செய்ய? தற்காப்புக் காகத்தான் அவனைச் சுட்டேன் நீங்கள் எல்லாரும் சாட்சி!" என்றான்.

கொலைகார அயோக்கியன் வேண்டுமென்றே கொன்றுவிட்டு!

"மிலானி, இவனை வண்டியில் ஏற்றி அனுப்பு. நான் போய் ரிப்போர்ட் செய்யவேண்டும்" என்றான்.

எனக்கு உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. சிறைக்குத் திரும்பியவுடனே மேலதிகாரியிடம் நடந்ததைச் சொன்னேன்.

"இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதே. இந்த மாதிரி இன்னும் எத்தனையோ நீ பார்ப்பாய். மனித உயிர் என்பது சிறை நிர்வாகத்துக்கு ஒரு பொருட்டல்ல. வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் உனக்கு நல்லது" என்றார் அவர்

www.t.me/tamilbooksworld



என்னைப் போலவே தண்டனை அடைந்து வந்து அதிகாரியாக ஆனவர் அவர்.

தலைமை வார்டனிடம், "பிரேத பரிசோதனை நடத்தலாமா?" என்று கேட்டார்.

"எதற்காக? என்ன நடந்தது என்பதுதான் தெளிவாகத் தெரிந்துவிட்டதே!" என்றவர், காவலாளியிடம் "என்னப்பா, நடந்ததைச் சொல்லு" என்றார்.

"அவனுடைய கையைத்தான் குறி வைத்தேன். அதற்குள் அவன் மண்வெட்டியை ஓங்கினான் தோட்டா அவன் இருதயத்தில் பாய்ந்துவிட்டது" என்றான் காவலாள்

பிரேத பரிசோதனை நடைபெறவில்லை.

நானும் என் தோழனும் ஒரு கட்டை வண்டியில் சவத்தைப் போட்டுக் கொண்டு தச்சுக் கூடத்துக்குச் சென்றோம், சவப்பெட்டி தயாரிப்பதற்காக.

ஆனால் தச்சர் இந்தக் கைதிக்காக அதிகப்படி வேலை செய்வதற்குத் தயாராயில்லை. "என்னது! இன்னொரு சவமா! தொற்று வியாதி பரவின மாதிரி இருக்கிறது. அதோ அந்த மூலையில் சவப்பெட்டிகள் கிடக்கின்றன. ஒன்றை எடுத்துப் போங்கள். ஆணி, மேல் மூடி எல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

எல்லாம் எடுத்துக் கொண்டு சென்றோம்.

"சீக்கிரம் ஆகட்டும். இந்த ஆள் ஏற்கெனவே நாற்றமாய் நாறுகிறான்" என்றான் காவலாளி.

தலைக்கு மேலே பிரம்மாண்டமான கழுகுகள் தென் அமெரிக்காவுக்கே பிரத்தியேகமான பிணந் தின்னிக் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. மண் வெட்டிக்குப் பக்கத்தில் கிடக்கும் அந்தச் சவத்தைக் கொத்தித் தின்பதற்காகத் தாழப்

www.t.me/tamilbooksworld



பறந்து கொண்டிருக்கின்றன.

சவத்தைப் பெட்டியில் போட்டு மூடி புதை காட்டுக்கு எடுத்துச் சென்றோம், நானும் இன்னொரு கைதியும். ஆயிரக் கணக்கான கைதிகள் புதைக்கப்பட்ட இடம் இது. கல்லறை களின் மேல் இரண்டு மூங்கில் குச்சிகள் சிலுவையாக நடப் பட்டுள்ளன.

இடுகாட்டைப் பார்த்துக்கொள்ளும் கிழவன் வந்து, சவப்பெட்டியை நோட்டமிட்டுவிட்டு, "தம்பி, நீ குழிவெட்டு" என்றான்.

நான் பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தபோது மற்ற இருவரும் நாலு காசு சம்பாதிக்கும் வேலையில் ஈடு பட்டார்கள் என்னுடன் வந்தவன், சவப்பெட்டியின் மூடியைத் திறந்து, சவத்தின் உடைகளைக் களைந்தான். அதை எடுத்துக் கிழவனிடம் கொடுக்க, அவன் அதைத் தன் கோட்டுக்குள் மறைத்துக் கொண்டான். பிறகு தன் இடுப்பி லிருந்த பெல்ட்டிலிருந்து ஒரு கூரிய கத்தியை வெளியெடுத் தான். சவத்தின்மீது குனிந்து அதன் அடி வயிற்றில் ஒரு குத்துக் குத்திக் கிழித்தான் ரத்தம் பீறிட்டது. கிழவன் இந்த வேலையில் தேர்ச்சி பெற்றவனைப் போலக் கச்சிதமாகக் கையை விட்டு, குடலை வெட்டினான். அங்கிருந்து - ரத்தமும் மலமும் பூசிய பணக் குப்பியை வெளியிலெடுத்தான்.

"இதற்கு என்ன பாடு பட்டாலும் தகும்!" என்று சொன்னபடி குப்பிக்குள்ளிருந்து பணத்தை எடுத்தான். வேக மாக எண்ணி, மூன்று பங்காக்கி, எனக்கு ஒரு பங்கும் என் தோழனுக்கு ஒரு பங்கும் தந்துவிட்டு, தனக்கு மூன்றாவது பங்கை வைத்துக் கொண்டான் பணத்துடன் அந்தக் குப்பியையும் தன் கோட்டுப் பையில் போட்டுக் கொண்டான்.

"யாருக்காவது குப்பி வேண்டுமானால் சொல்லு. என்னிடம் ஏராளமாக இருக்கிறது" என்றான்.

www.t.me/tamilbooksworld



ஒரு மனிதனின் உணவு இன்னொருவனுக்கு விஷம். என்ன செய்ய! புதை காட்டை விட்டு வெளியே வந்ததும் எங்களுக்குள்ளிருந்து குப்பிகளை எடுத்துப் பணத்தை அதில் பத்திரப்படுத்திக் கொண்ட பின் பழையபடி குப்பியைச் செருகிக் கொண்டோம்.

வரும் வழியில் இரும்புப் பட்டறையருகில் நின்று, பணம் கொடுத்து ஒரு மடக்குக் கத்தி வாங்கிக் கொண்டேன்.

நாங்கள் புதை காடு போயிருந்தது தெரியுமாகையால், திரும்பியபோது காவலாள் என்னைச் சோதனையிடவில்லை. என் தோழன் சவப் பெட்டியில் ஆணி அடிப்பதற்காக எடுத்துச் சென்ற சுத்தியலைத் திரும்பித் தரவில்லை. தன்னுடன் வைத்துக் கொண்டான்.

இப்படிப் பல பொருள்களை விற்பதும் வாங்குவது மாயிருந்த போதிலும் நான் என் அறிவை வளர்த்துக் கொள்வதில் முனைப்பாக இருந்தேன். மற்றத் தோழர்கள் சீட்டாடிக் கொண்டிருந்த நேரத்தில் நான் ஒரு கைதியைப் பிடித்து அவனிடம் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள லானேன். கல்வி என்பது எவ்வளவு முக்கியம் என்பதை இன்று நான் உணர்கிறேன். அதற்குக் காரணமாயிருந்த அந்தக் கைதியை நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். பத்தாண்டு சிறைத் தண்டனை பெற்றவன் அவன் ஒழிவு கிடைக்கும் போதெல்லாம் என்னருகே உட்கார்ந்து கொண்டு தன் வாழ்க்கையைப் பற்றி, தன் தாபங்களைப் பற்றி என்னிடம் பேசுவான். என்னைக் கேள்விகள் கேட்பான் திருத்துவான். எழுத்துக்களை விரல்களால் தடவித் தடவிக் கற்றுக் கொண்டேன். என்ன காகிதம் கிடைத்தாலும் சரி. தினசரித் தாள், பொருள்களின் மேல் ஒட்டப்பட்டுள்ள சீட்டுக்கள், திட்டங்களைப் பற்றிய அறிவிப்புகள் இப்படி எது கிடைத்தாலும் படிப்பேன். சட்டமிட்ட அழகான சிலேட்டுப்

www.t.me/tamilbooksworld



பலகையொன்றும் எனக்காக அவன் செய்து தந்தான். எல்லாரும் என்னைப் பார்த்துப் பரிகாசம் பண்ணினார்கள் ஆனால், 'அவர்கள் கேலியை லட்சியம் பண்ணாதே! நீ முன்னேறிக் கொண்டிருக்கிறாய். அவர்கள் பின்னே போய்க் கொண்டிருக்கிறார்கள்' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

எட்டு வயதுக் குழந்தை போல எழுத்துக் கூட்டிக் கூட்டிப் படிக்கலானேன் தற்காப்புக்குக் கல்வியும் ஒரு வழி என்று புரிந்து கொண்டேன். எழுதப் படிக்க மட்டும் தெரிந்திருந்தால் மார்சேல்ஸ் வழக்கில் தண்டனை அடைந்தேயிருக்க மாட்டோம் என்று தோன்றியது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் நீட்டிய காகிதங்களி லெல்லாம் மடையன் மாதிரி கையெழுத்திட்டோமே என்று நொந்து கொண்டேன். என் அறியாமையை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது ஆனா ஆவன்னாவை எனக்குள் சொல்லிப் பார்த்துக் கொள்வேன் தரைப் புழுதியில் எழுத்துக்களை எழுதுவேன். தெருவில் ஏதேனும் அறிவிப்புத் தென்பட்டால் அதைப் படிக்க முயலாமல் அந்த இடத்தைக் கடக்க மாட்டேன். பல சுவரொட்டிகள் எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டன.

## 7

எப்படியெல்லாம் பணம் சேர்க்க முடியுமோ அப்படியெல்லாம் சேர்த்தேன். என் போர்வையை ஐந்து பிராங்குக்கு வாடகைக்கு விட்டேன். இங்கிலீஷ், அமெரிக்க சிகரெட்டுகள் வாங்கி விற்றேன். இருபது காசுக்குப் புகையிலை வாங்கி, சிகரெட்டாக்ச் சுருட்டித் தயாரித்து இரண்டு மடங்கு

www.t.me/tamilbooksworld



விலைக்கு விற்றேன். இன்னொரு சிறைக் கட்டிடத்திலிருந்து ஒரு கைதி, தேங்காய் மிட்டாய்களைத் தயாரித்து வந்தான். சிறையிலிருந்து ஒரு குழாய் வழியாகக் கியாஸ் திருடி, இந்த மிட்டாய்களை அவன் செய்தான். அதை மொத்தமாக வாங்கி விற்றேன் கைதிகளுக்கு இந்த மிட்டாய் மிகவும் பிடித்திருந்தது.

ஒரு நாள் சீட்டாடிக் கொண்டிருந்த கைதிகளிடையே சண்டை வந்துவிட்டது. உடனே வார்டன்கள் வந்து குழுமி விட்டார்கள் ஒவ்வொருவர் அறைக்குள்ளும் புகுந்து சோதனையிடும் சாக்கில் எல்லாப் பொருள்களையும் வாரியிறைத்தார்கள் என் அறையிலிருந்த சிகரெட் பாக்கெட்டுகள், மதுப்புட்டி, சீட்டுக் கட்டு - எல்லாம் காற்றில் பறந்தன. என் படுக்கையை உதறிப் பார்த்து ஒரு போர்வை குறைவதைக் கண்டுபிடித்தார்கள்.

"போர்வை எங்கே? யாருக்குக் கொடுத்தாய்? ஓகோ, நீதான் இந்தக் கோஷ்டிக்கெல்லாம் தலைவனா?" என்று என்னை மடக்கினார்கள்.

மறுநாள் காலை எனக்குத் தண்டனை கிடைத்தது. அந்தத் தண்டனை எனக்கு ஆச்சரியம் தந்தது. "மல்காஷ் முகாமுக்கு உன்னை அனுப்பப் போகிறோம்" என்றார்கள். எனக்கும் இன்னும் சில கைதிகளுக்கும் அந்தத் தண்டனை. என்னைக் கூப்பிட வந்த காவலாள், ரகசியமாக என்னிடம் ஒரு புகையிலைப் பொட்டலமும் சில காகிதங்களும் தந்தான். பொட்டலத்தின் மீது, "மல்காஷ் முகாமுக்குப் போனதும் பெர்னாண்ட் என்பவனுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள். அவனை நம்பலாம். ஜீன்" என்று எழுதியிருந்தது.

மல்காஷ் முகாம் என்பது மரோனி ஆற்றின் கரைகளில் உள்ள பல கைதி முகாம்களில் ஒன்று.

அடர்த்தியான காட்டுப் பிரதேசத்துக்குள் நாங்கள் நுழைந்தோம். அடிமைகளின் சந்ததியினரான பல கறுப்பர்கள்

www.t.me/tamilbooksworld



மரத்தின் மீது குடிசை கட்டிக் கொண்டு வாழ்வதைக் கண்டேன். எங்கு திரும்பினாலும் தென்னை மரங்கள் வளர்ந்திருந்தன. எங்கிருந்தோ பெண்களும் குழந்தைகளும் ஓடிவந்து வார்டன்களைச் சூழ்ந்து கொண்டு, 'பழங்கள் தருகிறோம். உப்புத் தருகிறீர்களா?' என்று கேட்டார்கள். ரப்பர் மரங்களின் மீது பட்டாளம் பட்டாள மாகத் தாடி வைத்த குரங்குகள் உட்கார்ந்து கொண்டு எங்களைப் பார்த்துச் சிரித்தன சில மணிநேரம் நடந்தபின் முகாம் வந்தது. குன்றுகளின் சரிவில் இருந்தது அந்த முகாம்.

கீற்றுக் குடிசைகளில் வாழும் காவலர்களைத் தவிர வேறு யாரும் அந்த முகாமில் இல்லை. குடிசைக்கு எட்டுப் பேர் வீதம் சுமார் முன்னூறு பேர் அந்த முகாமில் இருந்தோம். ஒரு மரப் பலகைதான் படுக்கை. கப்பலில் உபயோகிக்கப்படும் ஒரு விளக்கு இருந்தது.

நான் வந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் வந்து, "இங்கே மிலானி என்பது யார்?" என்று விசாரித்தான்.

நான்தான் என்றதும் என் கையைக் குலுக்கி, "நான்தான் பெர்னாண்ட். நாமெல்லாம் ஒரே ஊர்க்காரர்கள்" என்று அறிமுகம் செய்து கொண்டான் அவன் அங்கே காவலர் களுக்கு உதவியாளாக இருந்து வந்தான்.

"இங்கே வார்டன்கள் அவ்வளவு கடுமையாக நடந்து கொள்ளமாட்டார்கள் ஆனால் அவர்கள் சொல்லும் வேலையை நீ ஒழுங்காகச் செய்துவிட வேண்டும்" என்றான் பெர்னாண்ட்.

மரம் வெட்டுவது எங்கள் வேலை.

தினம் காலையில், ஆகாரம் எதுவும் சாப்பிடாமல், நானும் மூன்று பேரும் சேர்ந்து ஒரு கோஷ்டியாகப் புறப்பட வேண்டும். கனமான கோடாலியை எடுத்துக்கொண்டு,

www.t.me/tamilbooksworld



மரவட்டைகளும் பாம்புகளும் நிறைந்த புதர்களின் வழியே செல்ல வேண்டும். வெய்யில் சுட்டெரிக்கும்.

“தினம் ஒரு குறிப்பிட்ட அளவு மரம் வெட்ட வேண்டும். எங்கே வேண்டுமானாலும் வெட்டலாம். ஆனால் வேலையை முடிக்காமல் திரும்பி வரக்கூடாது. வெட்டி அடுக்கிய பிறகு ஒரு காவலாள் வந்து அளந்து பார்ப்பார் அவர் சரியாயிருப்பதாகச் சொன்னதும் நீயே ரயில்வண்டியில் ஏற்ற வேண்டும்” என்று வார்டன் கட்டளையிட்டார்.

நான் கோடாலியை ஒரு போதும் தொட்டது கிடையாது. முதல் தடவை வெட்டும்போது காலில் காயம் பட்டுக் கொண்டேன் சற்று உட்கார்ந்தால் காட்டு எறும்புகள் கடித்து, கால் புண்ணாயிற்று.

“கவலைப்படாதே. போகப் போக கற்றுக் கொண்டு விடுவாய்” என்றான் வார்டன் இவன் பெர்னாண்டுக்குச் சினேகிதன் கொஞ்சம் நல்லவனாக இருந்தான். ஆனால் விரைவிலேயே அவன் மாற்றலாகிப்போய்விட்டான். புதிதாக வந்த வார்டன் ரொம்பக் குரூரமானவன், வெட்டி அடுக்கியிருக்கும் மரத்தை அளந்து பார்த்தான். அங்குலத்தில் பத்திலொரு பங்கு குறைந்திருந்தாலும் ஒப்புக் கொள்ள மாட்டான்.

அன்று என் குடிசையில் படுத்திருந்த போது காலில் ஏதுவோ சுரீரென்று கடித்தது. கையால் படீரென்று காலில் அடிக்குமுன் அது ஓடிவிட்டது. நீளமான கம்பளிப் பூச்சி என்று ஊகித்துக் கொண்டேன். கடித்த இடத்தில் யூகலிப்டஸ் இலைகளை கசக்கித் தேய்த்தேன். ஆனால் பயன்படவில்லை.

இரவு என்னால் கொஞ்சமும் தூங்க முடியவில்லை. வலி நரம்புகளைக் குடைந்தெடுத்தது. பொழுது விடிந்து பார்த்த போது கால் மொத்தமும் வீங்கியிருந்தது. கடிபட்ட இடத்தில் பெரும் குழி விழுந்திருந்தது. என் தோழன் நைஸ் என்ற

www.t.me/tamilbooksworld



ஊரிலிருந்து வந்திருந்தவன். அவனை நைஸ் என்றே கூப்பிட்டேன். அவனுடைய காலில் அட்டைப் பூச்சி கடித்திருந்தது. நகத்துக்குள் புகுந்ததை வெளியில் எடுப்பதற்காக மூங்கில் குச்சியைக் கூராகச் சீவிக் கொண்டு குடைந்தான் கால் மொத்தத்துக்குள்ளும் குடைந்தும் அதை வெளியெடுக்க முடியவில்லை.

“மிலானி! நைஸ்! ரயிலுக்கு வாருங்கள்! ஆட்கள் தேவை!” என்று கூப்பிட்டார்கள்.

குறுகிய தண்டவாளத்தில் வரும் ரயில் எங்கள் முகாமுக்கருகே நிற்பது வழக்கம். அதில் வெட்டிய மரங்களை ஏற்ற வேண்டும். ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமுக்கு போகப் படகுகள் உண்டு. ஆனால் மரங்களை ஏற்றிச் செல்லக் காட்டுக்குள் ரயில் வரும்.

இரண்டு வார்டன்கள் காவல் இருக்க, எங்களை சார்வின் என்ற இன்னொரு முகாமுக்கு ரயிலில் ஏற்றிச் சென்றார்கள் அங்கே பல கைதிகள் மரங்களைப் பலகை களாக இழைத்து அடுக்கிக் கொண்டிருந்தார்கள் அவை களை வண்டிகளில் ஏற்றும் வேலை எங்களுக்குத் தரப்பட்டது.

இரவு முன்பின் தெரியாத மற்றக் கைதிகளுடன் நாங்களும் தங்கினோம். நானும் நைஸூம் சேர்ந்தே இருந்தோம். அவன் என்னைவிட உயரத்தில் சிறியவனாகையால் எல்லாரும் அவனை என் ‘காதலி’ என்றே எண்ணினார்கள். அதைப் பற்றி நான் துளியும் கவலைப்படவில்லை.

ஒரு வாரம் வேலை செய்தபின் நைஸூக்குக் கடும் சீதபேதி ஏற்பட்டு விட்டது. ராத்திரி ஏழெட்டு முறை வெளியே போய் வந்தான். ஓர் இரவு அவன், “சீ பன்றி!” என்று கத்துவது காதில் விழுந்தது. உடனே நான் படுக்கையிலிருந்து எழுந்தோடிச் சென்று என்ன விஷயமென்று பார்த்தேன் இருட்டில் எதுவும் தெரியவில்லை.

www.t.me/tamilbooksworld



"யாரோ என் பின்னால் வருகிறார்கள் என் பணக் குப்பியைத் திருடப் பார்க்கிறார்கள் மிலானி, இனி மேல் எப்போதும் நீ என்னுடனேயே இரு." என்றான் நைஸ்.

அதன்படியே அவனுக்குக் காவல் இருக்க ஆரம்பித்தேன்.

**நை**ஸும் நானும் தப்பியோடுவது என்று தீர்மானித்தோம். பூச்சி கடித்ததால் காலில் ஏற்பட்டிருந்த காயம் கொஞ்சம் கொஞ்சமாக ஆறிக் கொண்டிருந்தது. பன்றிச் சாணத்தைப் பூசிவந்ததால் குணம் ஏற்பட்டிருந்தது.

"இதோ பார், உனக்குச் சம்மதமானால் சொல்லு. நாம் தப்பிச் செல்லலாம். பெர்னாண்ட் நமக்கு உதவி செய்வான், தண்டனைக் காலம் முடிந்து இங்கே தங்கியிருக்கிற சில கைதிகளுடன் அவனுக்குச் சிநேகிதம் உண்டு" என்றேன்.

"தப்புவதற்குச் சாத்தியம் உண்டு என்கிறாயா?" என்றான்.

தப்பிச் செல்லக்கூடிய மார்க்கத்தைத் தரையில் வரைந்து காட்டினேன் இரவு வெகு நேரம் விவாதித்து ஒரு திட்டம் போட்டோம்.

## 8

**எ**ப்படியேனும் ஸெயிண்ட் லாரெண்ட் முகாமுக்குப் போய்விட்டால் அங்கிருந்து தப்பிச் செல்லத் திட்டமிடலாம். அதற்காக ஒரு நாடகம் படைத்து, முதல் காட்சியை அரங்கேற்றினோம்.

ஆஜர் பட்டியல் எடுப்பதற்காக வார்டன் வந்தான் அந்தச் சமயம் பார்த்து நான் நைஸின்மீது பாய்ந்து ஒரு குத்து விட்டேன்.

"இதோ பார், நீ என்னுடைய ஆள். வேறு எவனுடனும் நீ சுற்றுவதற்கு விட மாட்டேன் புரிகிறதா?" என்று கத்தினேன்

www.t.me/tamilbooksworld



"வாயை மூடுடா!" என்று அதட்டினான் வார்டன் "உங்களோட காதல் சண்டைகளைக் கேட்டாலே எனக்கு வயிற்றைக் குமட்டுகிறது."

"ஆந்த ஆட்கள் எப்பவும் இப்படித்தான்" என்றான் ஒரு காவலாள்.

மற்றக் கைதிகளுக்கு எங்கள் சண்டையில் அக்கறை இருக்கவில்லை. அவர்கள் பாட்டுக்குத் தாயக்கட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

இதன்பின் ஒவ்வொரு இரவும் நான் நைஸை வம்புக் கிழுப்பேன்; அல்லது அவன் என்னை வம்புக்கிழுப்பான். அதிகப்படியாகச் சண்டை போட்டால் அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும். ரொம்பக் கம்மியாகப் பண்ணினால் காவலர்களின் கவனத்தைக் கவராமலே போய்விடுவோம். ஆகவே நாடகத்தை எந்த அளவு வரையில் நடத்த வேண்டுமோ அந்த அளவுக்கு நடத்தினோம். ஒரு நாள் நைஸ், "இனி நாடகத்தின் கடைசிக் கட்டத்தை நடத்த வேண்டியது தான்," என்றான்.

சரி என்றேன்.

சந்தேகமும் பொறாமையும் கொண்ட காதலர்கள் போல நானும் அவனும் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டோம். அடித்துக் கொண்டோம். எல்லாம் மற்றவர் களுடைய கண்ணெதிரில்தான். அதன் பிறகு எங்களுக்குள் சமரசம் ஏற்பட்டுவிட்ட மாதரி ஒரு வார காலத்துக்குக் கம்மென்றிருந்தோம்.

விடிகாலை நாலு மணி இருக்கும். வார்டன் உள்ளே வந்து, "ஊம்! ஊம்! எழுந்திருங்கள்! வேலைக்குக் கிளம் பணும்!" என்றான்.

எல்லாரும் தயாரானார்கள். நான் மட்டும், "நான் வரப் போவதில்லை," என்றேன்.

www.t.me/tamilbooksworld



"என்னது! வர மாட்டாயா!"

"நானும் வரப் போவதில்லை," என்று அறிவித்தான் நைஸ்.

எங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன என்கிற மாதிரி வார்டன் எங்களை மாறி மாறிப் பார்த்தான். அவனால் தன் கண்களையோ செவிகளையோ நம்ப முடியவில்லை. இரண்டு கைதிகள் வேலைக்கு வர மறுக்கிறார்கள்! இதற்கு விசாரணை, தண்டனை, தனிமைச் சிறை!

"இந்த ஆள் இங்கே தங்கியிருக்கிற வரையில் நான் வேலை செய்ய மாட்டேன்!" என்று நான் கூறினேன்.

"இந்த ஆள் என்னடா இந்த ஆள்! என் பெயரைச் சொல்லக்கூட உனக்குக் கூசுதோ?" என்றான் நைஸ்.

அவ்வளவுதான், நைஸின் வயிற்றில் ஒரு குத்துவிட்டேன். சுருண்டு விழுந்தான். ஆனால் என் தொடையில் ஓர் உதை விட்டுத் தள்ளினான். வெறி பிடித்த நாய்கள் போல நாங்கள் அடித்துக்கொள்ளத் தொடங்கினோம். தரையில் உருண் டான் அவன். நான் அவன்மீது ஏறி உட்கார்ந்தேன். கைதிகள் எங்களைச் சுற்றிக் கூடி ஆரவாரம் செய்தார்கள். நைஸ் என் அடிவயிற்றில் உதைத்து, தன்னை விடுவித்துக் கொண்டு, என்னைத் தூக்கியெறிந்தான் சூழ்ந்து நின்றவர்களுக்கு ஏகப்பட்ட குஷி. "அடி! உதை! போடு! அப்படித்தான்!"

வார்டன் தொண்டை கிழியக் கத்தினான். "டேய், டேய்! நிறுத்தப் போறீங்களா இல்லையா?"

நைஸ் எங்கிருந்தோ ஒரு கோடாரியை எடுத்து வந்து என்னைக் குறி பார்த்து எறிந்தான் நான் டகாரென்று தலையைக் குனிந்து கொண்டேன்.

மூன்று காவலர்கள் ஓடி வந்தார்கள் துப்பாக்கி முனையினால் எங்களைக் குத்தி எங்கள் அறைகளுக்குள் தள்ளினார்கள் அப்போதும் நாங்கள் வேலை செய்ய

www.t.me/tamilbooksworld



முடியாது என்று கத்தினோம்.

எங்கள் திட்டம் பலித்துவிட்டது! எங்களை விசாரணைக் காக ஸெயின்ட் லாரண்ட்டுக்கு அனுப்புவதென்று தீர்மானித்தார்கள்.

"டச்சு கயானாவுக்கு நாம் தப்பி ஓடிவிட வேண்டும். லட்சம் வருஷமானாலும் இந்த மாதிரி இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காது" என்று நைஸிடம் ரகசியமாகச் சொன்னேன்.

அந்த இடம் வந்ததும், எப்படித் தண்ணீரில் குதிக்க வேண்டும் என்று பேசி வைத்துக் கொண்டோம். இரண்டு காவலர்கள் எங்களுக்குக் காவலாக வந்திருந்தார்கள். துறை முகத்திலிருந்து கப்பலுக்குச் செல்லும் பாதையில் நடந்தோம். நான் நைஸுக்குக் கண்ணடித்தேன் அவன் உடனே தண்ணீரில் குதித்து மிதவைக் கட்டைகளை அவிழ்க்க ஆரம்பித்தான். ஆபத்துச் சமயத்தில் பிடித்துக் கொள்வதற் காக ஏற்பட்ட மிதவைக் கட்டைகள் அவை. அதற்குள் முதல் காவலாள் அபாயத்தை உணர்ந்துவிட்டான். "ஏய்! அந்தக் கட்டையை விடு! இல்லையோ சுடுவேன்!" என்று கூவினான்.

அருகிலிருந்த ஒரு படகின்மீது நைஸ் தாவியேறினான். அதன் இஞ்சின் அறைக்குப் பின்னால் ஒளிய முயன்றபோது முதல் காவலாளும் அங்கே குதித்து விட்டான். இருவரும் ஒருவரையொருவர் கட்டிப் புரள்வதைக் கண்டேன்.

மறு நிமிடம் தொபேலென்று ஒரு சத்தம்!

ஆம். இருவரும் தண்ணீரில் விழுந்துவிட்டார்கள்

இப்போது இரண்டாவது வார்டன் உஷாராகி, துப்பாக்கியை உயர்த்தி நைஸைக் குறி வைத்தான். சரேலென்று அவன் கையைத் தடுத்து, "சுடாதே!" என்றேன்.

www.t.me/tamilbooksworld



ஆனால் அதற்குள் ஒரு தோட்டா பறந்துவிட்டது அவன் துப்பாக்கியிலிருந்து. நைஸுக்குக் காயம் ஏற்பட்டு ரத்தம் பெருகுவதைக் கண்டேன் வார்டனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். வார்டனோ, ஆற்றின் வேகத்தைச் சமாளிக்க முடியாமல் தொப் தொப்பென்று கையையும் காலையும் அடித்துக் கொண்டிருந்தான்.

எங்கள் எல்லாருடைய கூச்சல்களும் கலந்து கதம்பமாகின. 'எனக்குக் காயம்! காப்பாற்று!' 'என்னைக் காப்பாற்று!' 'சுடாதே'

"அவர்களை நான் காப்பாற்றுகிறேன். சுடாதே!" என்று இரண்டாவது வார்டனிடம் சொல்லிவிட்டு நான் தண்ணீரில் குதித்தேன் ஆற்றின் வேகத்தை எதிர்த்து நீந்த முயன்று கொண்டிருந்த வார்டனிடம், "தண்ணீர் ஓட்டத்துடனேயே சேர்ந்து நீந்து," என்று கத்தினேன்.

"மிலானி! என்னை விட்டு விடாதே!" என்று கெஞ்சினான் நைஸ், வார்டனைத் தொற்றிக் கொண்ட வண்ணம். வார்டன் அவனை உதறித் தள்ள முயன்றான்.

இருவரையுமே பிடித்துக்கொள்ளப் பார்த்தேன். இதோ பிடித்துவிட்ட மாதிரி இருக்கும்-அதற்குள் தண்ணீர் அவர்களைத் தள்ளிவிடும். இப்படி மூன்று முறை நழுவிப் போனபிறகு நாலாவது தடவையில் இருவரின் தோள் களையும் பற்றிவிட்டேன்.

"என் கழுத்தைக் கட்டிக்கொள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றேன் வார்டனிடம். அவனுக்கு அப்போதே பாதி உயிர் போய்விட்டது. அவன் முடியைப் பிடித்துக் கொண்டு நைஸ் என்ன ஆனான் என்று பார்த்தேன். ஐயோ! அவனுக்குப் பலமான காயம். ஆகவே முழுகிக் கொண்டிருந்தான் இவ்வளவும் கரைக்கு அருகிலேயே

www.t.me/tamilbooksworld



நிகழ்ந்ததாகையால் எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆற்றின் ஓட்டம் நைஸைக் கரைக்குக் கொண்டு வந்து தள்ளிவிடும் என்று நம்பினேன். என் முதுகின்மீது வார்டனைச் சுமந்து கொண்டு கரையை நோக்கி நீந்தியபோது நைஸ் கைகளை ஆட்டுவது தெரிந்தது.

ஏதோ ஒரு மரத்தின் அடி வேர் தெரிந்தது. ஒரு கடைசி முயற்சியுடன் அதைப் பிடித்துக் கொண்டேன். வார்டன் உடனே என்னை உதறிவிட்டுக் கரையில் கால் வைக்க முயன்றான். முட்டாள்!

"கடவுளே! இரு, இரு! கரையில் காலடி வைக்காதே! அதோ, அங்கே என் நண்பனின் கதி என்ன ஆயிற்று, பார்!" என்று சத்தம் போட்டேன்.

ஆம். ஆற்றின் ஓட்டம் நைஸைக் கரைப் பக்கம் கொண்டு வந்து விட்டது. கரையை அடைந்துவிட்டோம் என்ற நிம்மதியுடன், தண்ணீரில் துருத்திக் கொண்டிருந்த ஒரு மெல்லிய வேரைப் பிடித்துக்கொண்டு அவன் எழுந்து நிற்கப் பார்த்தான்.

அந்த இடம் மகா அபாயமான இடம். புதை மணல் பகுதி.

கிடுகிடுவென்று அவன் உள்ளே புதைபட ஆரம்பித் தான். பயங்கரமான மர்மமான கையொன்று அவன் காலைப் பிடித்துக் கீழே இழுக்கிற மாதிரி மண்ணுக்குள் புதையத் தொடங்கினான்.

நான் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, என் கண்ணெதிரேயே நைஸ் மணலுக்குள் புதையுண்டான் கடைசியில் துளியும் அடையாளம் இல்லாமல் சேற்று மணல் அவனை விழுங்கி விட்டது.

www.t.me/tamilbooksworld



# 9

என் சினேகிதன் நைஸ் ஆற்றின் செருகு மணலில் புதையுண்டு அடியோடு மறைந்து போனதைக் கண்ணெதிரே கண்டதும் வார்டன் குலை நடுங்கிப் போனான். இந்த மாதிரி எத்தனையோ கொடூரங்களைக் கண்டவன்தான் அவன். ஆனால் இது அவன் நெஞ்சில் அளவற்ற திகிலை விதைத்து விட்டது. கொஞ்சம் தவறியிருந்தால் இதே கதி நமக்கும் அல்லவா நேர்ந்திருக்கும் என்பதை உணர்ந்து வெல வெலத்துவிட்டான்.

நைஸ் இருந்த இடத்தில் சுவடு கூடத் தெரியவில்லை. அவனுடைய தொப்பி மட்டுமே தண்ணீருக்கு மேலே தத்தித் தத்தி மிதந்து ஒரு மரக் கிளையில் சிக்கிக் கொண்டு நின்று விட்டது. அதைப் பார்க்கையில் அவனுடைய கல்லறையின் மேலே அவனுக்கு நினைவுச் சின்னம் அமைத்த மாதிரி இருந்தது.

எங்கள் ஆபத்தை உணர்ந்து, மற்றக் காவலர்கள் படகுகளில் வேகமாகத் துடுப்பு வலித்து எங்களை நோக்கி விரைந்து வந்தார்கள். தத்தளித்துக் கொண்டிருந்த எங்களைப் படகுக்குள் இழுத்துப் போட்டுக் கொண்டார்கள்.

என்னால் காப்பாற்றப்பட்ட வார்டன் நன்றியுள்ளம் படைத்தவன் 'இவன்... இந்த மிலானிதான் என் உயிரைக் காப்பாற்றினான்' என்று எல்லாரிடமும் என்னை அறிமுகப் படுத்தினான்.

அவன் என்னை நன்றியுடன் பார்த்தபோது அவன் கண்களும் என் கண்களும் சந்தித்தன. நான் தப்பியோடத்

www.t.me/tamilbooksworld



திட்டமிட்டிருந்தது அவனுக்கு நன்கு தெரிந்து விட்டது. இனி அவனை ஏமாற்ற முடியாது என்று கண்டு கொண்டேன். "எனக்குப் பிரதியுபகாரம் ஏதாவது செய்ய நீ விரும்பினால் என்னை என் பழைய இடத்துக்கே அனுப்பி விடு" என்று அவனைக் கேட்டுக் கொண்டேன்.

வெப்பமான காற்றில் என் உடைகள் உலர்ந்துவிட்டன. என்னை நேரே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான் வார்டன். அங்கிருந்தவர்களிடம், "இவனை மிகவும் ஸ்பெஷலாகக் கவனிக்க வேண்டும். ரொம்ப நல்லவன்" என்று சொன்னான். பல வாரங்களுக்குப் பிற்பாடுதான் அந்த வார்டனைப் பற்றி எனக்குத் தெரிய வந்தது. அவன் பிரான்ஸுக்குத் திரும்பி, மனைவி குழந்தைகளுடன் குடும்பம் நடத்தவிருந்தானாம். அப்படிப்பட்ட சமயத்தில் அவன் உயிரைக் காப்பாற்றியதில் ஏன் சந்தோஷப்படமாட்டான்?

ஆகக் கூடி, நான் பழைய இடத்துக்குத் திரும்பி விட்டேன். தப்பியோடுவதற்கு நான் செய்த முதல் முயற்சி தோற்று விட்டது. இதை இனிமேல் பாடமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆஸ்பத்திரியில் இருந்தபோது எனக்குப் பல்வலி ஏற்பட்டது. கசாப்புக் கடைக்காரனாக இருந்து பல் வைத்தியனாக மாறிய ஒருவன் என் பல்லைப் பிடுங்கினான். 'இந்த ஆளுக்குப் பால் இன்னொரு புட்டி கொடு' என்று கட்டளையிட்டான்.

இது சிறைக் கைதிக்ளிடையே பிரபலமான விஷயம். ஒரு பல் எடுக்கப்பட்டால் பால் ஒரு புட்டி கிடைக்கும். இதற்காகவே தங்கள் பற்களைப் பிடுங்கிக் கொண்ட பல கைதிகளை எனக்குத் தெரியும். சில பேர் இன்னும் கூட ஒரு வேலை செய்வதுண்டு. பிரேத பரிசோதனைச் செய்ய

*வேண்டிய சவங்களிடமிருந்து, அந்த வேலைக்குப் பொறுப் பாயுள்ள காவலாளிகள், பல்லைப் பிடுங்கி வைத்துக் கொண்டு கைதிகளுக்கு விற்பார்கள். அந்தப் பல்லைக் கைதிகளின் வாயிலிருந்து எடுத்ததாக மருத்துவமனை ஊழியர்கள் கணக்குக் காட்டுவார்கள். புதை காட்டில் சவக் குழி வெட்டுபவனும் இதே போல் பிணங்களின் பற்களைப் பிடுங்கி வைத்துக் கொண்டு விற்பதுண்டு. எல்லாம் ஒரே ஒரு புட்டிப் பாலுக்காக!*

*என் நண்பர்கள் காஸ்ஸியும் பிகோஸியும் என்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தார்கள். "நமது முகாம் மொத்தமும் இன்னும் இரண்டொரு நாட்களில் மல்காஷ் என்னுமிடத்துக்குப் போகப் போகிறது. மிலானி, நாம் தப்பியோடுவதற்கு அது சரியான சந்தர்ப்பம்" என்றார்கள்.*

*தன் ஒன்றுவிட்ட அண்ணனொருவன் மல்காஷில் எங்கேயோ இருப்பதாகவும், அவனைக் கண்டு பிடித்தால் உதவிகள் செய்வான் என்றும் பிகோஸி சொன்னான். ஆனால் அவன் எங்கே இருக்கிறானென்பது தெரியவில்லை.*

*அன்று என்னை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள். என்னைப் பார்த்துக் கொண்ட டாக்டர் எனக்கு மிகவும் சிநேகிதமாகி விட்டார். ஆஸ்பத்திரியி லிருந்து வெளியேறிய அன்று பாக்ஸி என்ற ஒருவன் என்னைத் தேடிக் கொண்டு வந்தான்.*

*"மிலானி, உனக்குப் பல டிரிக்குகள் தெரியுமென்று சொன்னார்கள். அதுதான் வந்தேன். நான் ஆஸ்பத்திரியில் கொஞ்ச நாள் படுத்திருக்க வேண்டும். நல்ல காய்ச்சல் வருவதற்கு ஏதாவதொரு வழி சொல்லேன்" என்றான்.*

*நான் என் ரகசியப் பொக்கிஷங்களை ஆராய்ந்து மூன்று மாத்திரைகளை எடுத்துத் தந்தேன். "இதை ஒரு கிண்ணத்தில்*

www.t.me/tamilbooksworld



போட்டு நன்றாய் இடித்து, ரொம்பச் சன்னமான பொடியாகச் செய்து கொள். ஒரு காகிதத்தில் கொஞ்சம் புகையிலையை வைத்து இந்தப் பொடியையும் சேர்த்து, சுருட்டாகத் தயார் செய். பிறகு சுருட்டு மொத்தத்தையும் உறிஞ்சிப் புகை" என்றேன்.

"ரொம்ப நன்றி மிலானி. உனக்கு நான் என்ன பீஸ் தர வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"இது ஒரு பரிசோதனை, இதன் மூலம் காய்ச்சல் வருகிறதா இல்லையா என்று நான் அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொண்டால் எனக்கே பிற்பாடு ஒரு காலத்தில் உதவியாக இருக்கும். நீ என் பரிசோதனைக்குத் துணை செய்வதே போதும். பணம் ஒன்றும் தர வேண்டாம்" என்று கூறி அனுப்பினேன்.

என் பரிசோதனை வெற்றி பெற்றது. நட்ட நடு ராத்திரி பாக்ஸி என்னை எழுப்பி, "உடம்பு பூரா கொதிக்கிறது. தலை சுற்றுகிறது. ரொம்ப நன்றி மிலானி" என்றான்.

"பலே! நாளைக்குப் பார். தெர்மாமீட்டரே உடைந்து விடும் அளவுக்குக் காய்ச்சல் ஏறிவிடும்" என்று அவனைத் தட்டிக் கொடுத்து அனுப்பினேன்.

எல்லாரும் மல்காஷுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

பிகோஸி தன் ஒன்றுவிட்ட அண்ணனைக் கண்டுபிடிக்க முடியுமென்று நம்பிக்கையாக இருந்தான். அவன் கைதியாக இருந்து பிறகு விடுதலை பெற்றவன். ஆனால் தாய் நாட்டுக்குத் திரும்பாமல் சிறை நிர்வாகத்தின் ஊழியர்களில் ஒருவனாக வேலை பார்த்து வந்தானாம்.

காலில் எனக்குக் காயம் இருந்ததால் மற்றக் கைதிகளைப் போல என்னை மரம் வெட்ட அனுப்பவில்லை. அவர்கள்

www.t.me/tamilbooksworld



காட்டுக்குப் போகும்போது சிறைக் கூடத்துக்குக் காவலாக என்னை விட்டுச் சென்றார்கள்.

பிகோஸி என்னிடம் வந்து, "என் அண்ணன் வந்தாலும் வருவான். அவனைச் சினேகம் பிடித்துக் கொள். முறைத்து வைக்காதே. அவன் பெயரும் பிகோஸிதான்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

நான் சிறைக் கூடத்தைக் கூட்டிப் பெருக்கிவிட்டு, சமையல்காரனுக்கு என்ன வேலை என்பதைத் தெரிவித்து விட்டு, காலை எட்டு மணி சுமாருக்குக் காவல்கூடத்தை விட்டு வெளியே வந்து பார்த்தேன்.

சிறை நிர்வாகத்திடம் ஏதாவது வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்துப் பல மாஜி கைதிகள் உட்கார்ந்திருந் தார்கள். இவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கைதிகளுக்கு என்ன மாதிரி வேலையோ, என்ன மாதிரி கூலியோ அதேதான் இவர்களுக்கு. கைதிகளுக்கு உணவும் உறைவிடமும் கிடைக்கும். இவர்களுக்குக் கிடையாது.

நான் அவர்களை நெருங்கி, "பிகோஸி என்பது யார்?" என்றேன்.

ஒல்லியான ஓர் ஆள், "ஏன், நான்தான் என்ன வேண்டும்?" என்றான். பழைய பாண்ட்டும் ஒரு கிழிசல் சட்டையும் அணிந்திருந்தான் அவன். காலில் செருப்பு இல்லை.

"உன் ஒன்றுவிட்ட தம்பி இங்கே வந்திருக்கிறான். உன்னை விசாரித்ததாகச் சொல்லச் சொன்னான். நீ விரும்பினால் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றேன்.

"இன்று ராத்திரி அவனைச் சந்திக்கிறேன். அதோ தெருக்

www.t.me/tamilbooksworld



கோடியில் ஒரு பெரிய மரம் இருக்கிறதே, அங்கே" என்றான்.

இரவு 9 மணிக்கு ஆஜர் பட்டியல் எடுத்து முடித்தானதும், பிகோஸி தன் அண்ணனைச் சந்திக்கத் திருட்டுத் தனமாகப் புறப்பட்டான். கிளம்புவதற்கு முன்பு தன் பணக் குப்பியை என்னிடம் கொடுத்து வைத்துக் கொள்ளச் சொன்னான். அதையும் வழக்கம்போல் ஆசனத்தின் வழியே வயிற்றில் செருகி வைத்துக் கொண்டேன். ஏற்கெனவே என்னுடைய பணக் குப்பியும் அங்கே இருந்தது. இது இரண்டாவது. "நீ ஒரு நடமாடும் பாங்க் மாதிரி ஆகி விட்டாய்!" என்று காஸ்ஸி என்னைப் பரிகாசம் செய்தான்.

பிகோஸி திரும்பி வந்தான். அவன் அண்ணன் நாங்கள் தப்பியோட உதவி செய்வதற்குத் தயாராயிருக்கிறானாம். ஆனால் தப்பியோடும் கும்பலின் தலைவன் யார் என்று கேட்டானாம். என் பெயரைப் பிகோஸி சொன்னதும், "அவனுடன் நான் பேச வேண்டும், வரச் சொல்" என்றானாம்.

அடுத்த நாள் மாலை நான் பிகோஸியின் அண்ணனைப் பார்த்துப் பேசினேன்.

"அடுத்த வாரம் உங்களுக்காக ஒரு படகும் கொஞ்சம் உணவும் நான் தயார் செய்து வைக்கிறேன்," என்று உறுதியளித்தான் அவன். "ஆனால்..."

"ஆனால் என்ன? என்று கேட்டேன்.

## 10

**நா**ங்கள் தப்பிச் செல்வதற்குப் படகு கிடைக்கப் போகிறது! தேவைப்படக் கூடிய உணவு கிடைக்கப் போகிறது. ஆனால் பிகோஸியின் அண்ணன் அதற்கு ஏதோ நிபந்தனை விதிக்கிறானே?

www.t.me/tamilbooksworld



"என்ன வேண்டும், சொல்லு" என்றேன்.

"எனக்குத் தெரிந்த ஒரு நீக்ரோ இருக்கிறான். தினமும் மீன் பிடிக்கச் செல்கிறவன் அவன். அவனிடம் படகு வாங்கித் தருகிறேன். அவனை நம்பலாம். உணவுக்கு இன்னொரு சிநேகிதன் உதவி செய்வான். விடுதலையடைந்த கைதி அவன். படகுக்கு வேண்டிய பாய்மரமும் வாங்கித் தருகிறேன் ஆனால் இதற்கெல்லாம் பணம் தேவை. மொத்தம் இரண்டாயிரத்து நானூறு பிராங்க் ஆகும். அதில் பாதியை முன்பணமாகத் தந்தால் போதும். என் சிநேகிதன் உணவு வகைகளை ஏற்பாடு செய்த பிறகு மிச்சத்தைத் தரலாம்" என்றான் பிகோஸியின் அண்ணன்.

சரி என்றேன் சில நாட்கள் கழித்து என்னைச் சந்திப்பதாகச் சொல்லிச் சென்றான்.

ஒரு நாள் இரவு ஒன்பது மணி இருக்கும் மெல்லிய சீட்டி சத்தம் என்னை அழைத்தது. பிகோஸியின் அண்ணன் கூப்பிடுகிறான் என்று புரிந்து கொண்டு காட்டுப் பகுதிக்குள் சென்றேன். அந்தப் பகுதிக்குள் காவலாள் எவனும் நடமாடுவது கிடையாது. அடர்ந்த காட்டுக்குள் எந்தக் கைதியும் போக மாட்டான் என்பது காவலர்களின் நம்பிக்கை.

"நாளைக்குப் புறப்படத் தயாராயிருங்கள் எல்லா ஏற்பாடும் செய்துவிட்டேன். மறக்காமல் பணம் எடுத்துக் கொண்டு மூங்கில் தோப்புக்கு வந்து விடுங்கள்" என்றான் பிகோஸியின் அண்ணன்.

எங்கள் இதயம் படபடவென்று துடித்துக் கொண்டது. சுதந்திரம்! நாங்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விடுதலை! இது உண்மையா அல்லது கனவா?

அன்று இரவு நாங்கள் யாருமே தூங்கவில்லை. கவலை,

www.t.me/tamilbooksworld



பரபரப்பு, காத்திருக்கும் படபடப்பு-எல்லாமாகச் சேர்ந்து எங்களை விழித்திருக்க வைத்தன. அடிமைத் தளையில் உழன்று கொண்டிருக்கும் மற்றக் கைதிகளைப் பார்த்து மானசீகமாக விடை பெற்றோம். இந்தச் சகோதரர்களை நாங்கள் மறுபடி பார்க்கப் போவதில்லையே!

பொழுது விடிந்தது. விடிகாலை நேரம். மாமூலான காரியங்கள் நடைபெற்றன. ஆஜர் பட்டியல் எடுத்த பின்னர் காவலாட்கள் எங்களைத் தனியே விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். சிறை முகாமைச் சுற்றிச் சும்மா உலாவச் செல் கிறவர்கள் மாதிரி நானும் என் நண்பர்களும் ஸெயின்ட் லாரண்ட் செல்லும் பாதையில் புறப்பட்டோம். அதிகம் உபயோகித்திராத குறுக்குச் சாலையொன்றில் நடந்தோம். இன்னும் ஊரில் எல்லாரும் விழித்துக் கொள்ளவில்லை. விடிகாலைப் பொழுதின் மங்கலான வெளிச்சத்துடன் சில விளக்குகளின் வெளிச்சமும் கலந்து வீசியது. தூரத்தில் வார்டனின் இருப்பிடமும் அலுவலகக் கட்டிடங்களும் தெரிந்தன. மூங்கில் தோப்பிலிருந்த கல்லறையை அடைந்ததும் நான் நின்று மெல்ல 'ஸ்... என்ற சத்தம் கொடுத்தேன்-பாம்பின் சீறலைப் போல.

இருட்டுக்குள்ளிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது.

"பிகோஸியின் அண்ணனா?" என்றேன்.

"ஆம். எல்லோரும் வந்து விட்டீர்களா?"

"வந்துவிட்டோம். நான், காஸ்ஸி, உன் தம்பி பிகோஸி."

"பணம் கொண்டு வந்திருக்கிறாயா?"

"கொண்டு வந்திருக்கிறேன்."

"இப்படிக் கொடு."

www.t.me/tamilbooksworld



"இல்லை, பிகோஸி. உன்னை நம்பவில்லை என்று தப்பாக நினைக்க வேண்டாம். படகைப் பார்த்த பிறகு பணம் தருகிறேன்" என்றேன்.

"சரி, என்னுடன் வா."

மூங்கில் தோப்புக்குள்ளிருந்து ஒருவர்பின் ஒருவராக நடந்தோம். மரோனி ஆற்றின் கரையில், படகுத் துறைக்கு வெகு தூரம் தள்ளி, ஓர் இடுக்குக்குள் படகு இருந்தது. மிகவும் இருட்டாக இருந்ததால் இன்னும் அருகில் சென்று பார்த்தேன். பாய் மரமும் இல்லை; உணவுகளும் இல்லை. அதெல்லாம் எங்கே என்று கேட்டேன்.

"விடுதலையான கைதி என்று ஒருவனைப் பற்றிச் சொன்னேனே, அவன் லேஹாட் என்னுமிடத்தில் நமக்காகக் காத்திருக்கிறான் எல்லாம் அவன் வைத்திருக்கிறான்" என்றான் பிகோஸியின் அண்ணன்.

காஸ்ஸி படகை அசையாமல் பிடித்துக் கொண்டான். ஆற்றங்கரையில், துருத்திக் கொண்டிருந்த ஒரு வேரில் நங்கூரம் போட்டிருந்தார்கள். அந்த இடத்தில் சேறு அதிகம் இருக்கவில்லை. முதலில் நான் ஏறி மறு கோடியில் போய் உட்கார்ந்து கொண்டேன். ஒவ்வொருவராக எல்லாரும் உட்கார்ந்து கொண்டார்கள். நீரின் ஓட்டத்தை ஒட்டினாற் போலச் செல்லலானோம். படகு வேகமாகச் செல்லும் என எண்ணியிருந்தேன். ஆனால் என்னவோ ஈயத்தில் செய்த மாதிரி ஏகப்பட்ட கனமாக இருந்ததால் படகு மெல்லவே சென்றது.

பிகோஸியின் அண்ணனிடம், "இந்தப் படகு ரொம்பப் பழசு போலிருக்கிறதே? ஆமையைக் காட்டிலும் மெதுவாகப் போகிறதே?" என்றேன்.

www.t.me/tamilbooksworld



அவன் பதிலளிக்கவில்லை. அடர்ந்த மரங்களின் இருட்டு, நாங்கள் தப்பியோடுவது யார் கண்ணிலும் படாத படி செய்தது. என் நண்பர்கள் வாய் திறவாமல் இருந்தார்கள். உள்ளுக்குள் படபடப்பாக அவர்கள் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்தது.

“சிறை முகாமில் நாம் இல்லாததை இந்நேரம் கண்டுகொண்டிருப்பார்கள்” என்றேன்.

“இருக்காது. நாளைக் காலை ஆஜர் பட்டியல் எடுக்கும் போதுதான் கவனிப்பார்கள். இந்த நேரத்தில் சில கைதிகள் வேட்டையாடச் செல்வது உண்டு என்று அவர்களுக்குத் தெரியுமே?” என்றான் பிகோஸி.

லேஹாட் என்னுமிடத்தை இறுதியாக அடைந்தோம். மரோனி ஆறு கடலோடு சங்கமிக்கும் இடத்தருகே இருந்தது அது. மணற்பாங்கான கரையில் ஆமைகள் நிறைந்திருந்தன. கரையில் இறங்கிச் சுற்றுச் சூழ்நிலையை ஆராய்ந்தோம். பிகோஸியின் அண்ணன் சொன்னது போல அவன் தோழன் எவனும் காணப்படவில்லை. உணவு வகைகளும் தென்படக் காணோம். அதற்கு மேலே எங்கேயும் போக முடியாது. பகல் முழுவதும் பயணம் செய்து, இப்போது இருட்டிவிட்டது.

“எங்கே உன் ஆள்?” என்று பிகோஸியின் அண்ணனிடம் கேட்டேன்.

“தெரியவில்லையே? வரும்போது ஏதாவது தாமதமாகி விட்டதோ என்னவோ? உணவு வகைகளை இங்கேதான் எங்கேயாவது ஒளித்து வைத்திருப்பான். யாரும் திருடிக் கொண்டு போகாமலிருக்க வேண்டுமே என்று கவலையாக இருக்கிறது” என்றான் அவன்.

படகை மறுபடியும் நோட்டமிட்டேன். படகுக்குள் தண்ணீர் புகுந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமாய் இருந்தது. மேலும் ஆராய்ந்தேன். கடலில் பிரயாணம் செய்வதற்கு

www.t.me/tamilbooksworld



ஏற்றதாகத் தோன்றவில்லை. பக்கவாட்டுப் பலகைகள் கெட்டிப் படுத்தப்படாமல் இருந்தன.

"இதோ பார்" என்று பிகோஸியின் அண்ணனை அழைத்துச் சொன்னேன். "நாங்கள் பத்திரமாகப் பயணம் செய்ய வேண்டுமென்ற அக்கறை உனக்குக் கிடையாதா? படகா இது! சவப்பெட்டி மாதிரி இருக்கிறதே! " என்றேன்.

காஸ்ஸியும் பிகோஸியும் என்னை அச்சத்துடன் பார்த்தார்கள். இனிமேல் என்ன செய்வது என்று அவர்கள் பயப்படுவதை உணர்ந்தேன்.

திடீரென்று ஒரு சத்தம்!

துடுப்புகள் வலிக்கப்படும் சத்தம்! மரக் கிளைகள் சலசலக்கும் சத்தம்!

முன்பின் தெரியாத சில ஆட்கள் ஆற்றங்கரையில் வந்து நின்றார்கள்!

பிகோஸி திகைப்புடன், "யார் அவர்கள்? நமக்குச் சாப்பாடு எடுத்து வருவதற்கு இத்தனை ஆளா?" என்றான்.

"யாரப்பா நீங்கள்? எங்களுக்குச் சாப்பாடு எடுத்து வந்திருக்கிறீர்களா?" என்று நான் கூவினேன்.

சாப்பாடுதான்! நாலு பேர் எங்களைத் திடுதிப்பென்று சூழ்ந்து கொண்டார்கள். பிகோஸியின் அண்ணன், இரண்டு அராபியர்கள், இன்னோர் ஆள்!

"என்ன இதெல்லாம்! என்னது?" என்று நான் கத்தினேன்.

முன்னாள் கைதியான அந்த நாலாவது ஆள், "உங்களைச் சிறைப்பிடித்திருக்கிறோம், முரண்டு கிரண்டு பண்ணாதே!" என்றான்.

www.t.me/tamilbooksworld



பிகோஸிக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. "டேய் பன்றி! என் அண்ணனாடா நீ?" என்று தன் அண்ணன் மீது பாய்ந்தான். ஆனால் பிகோஸியின் அண்ணன் உஷாராகத் தப்பிவிட்டான். பிகோஸி சரேலென ஒரு கத்தியை உருவி எடுத்து நீட்டினான்.

"உன் ரத்தத்தின் ரத்தம் நான். என்னுடனா சண்டை போடப் போகிறாய்?" என்றான் பிகோஸியின் அண்ணன்.

அவனுக்குப் பயம் வந்துவிட்டது போலிருக்கிறது அல்லது பிகோஸி தன் வசம் இழந்து விட்டானோ என்னமோ அவன் கையிலிருந்த கத்தி அவன் அண்ணனின் அடி வயிற்றில் பாய்ந்து விட்டது.

கொஞ்ச நேரத்தில் கைகலப்பு, அடிதடி. இரண்டு அராபியர்களும் கோதாவில் குதித்தார்கள். ஆனால் அந்த முன்னாள் கைதி ஓட்டம் பிடித்துவிட்டான்.

## 11

எங்களைச் சிறைப்பிடிப்பதில்தான் அவர்கள் குறியாய் இருந்தார்கள் இரண்டு அராபியர்களும் தலைவேட்டை ஆடுபவர்கள் சிறை நிர்வாகம் அவர்களைக் கூலிக்கு அமர்த்தியிருந்தது. அவர்களைக் காட்டிலும் கொடுமைக் கண்களைப் பார்க்க முடியாது. ஒரு காலத்தில் இவர்களே தீவாந்தர சிட்சை பெற்ற கைதிகளாக இருந்தவர்கள்தான். விடுதலையானதும் தங்களைக் கொடுமைப்படுத்தியவர்களிடமே தங்களை விற்றுக் கொண்டு விட்டார்கள்.

இப்போது இவர்களிடம் நாங்கள் மாட்டிக் கொண்டோம். பொறி வைத்து எங்களைப் பிடித்து விட்டார்கள். கொள்ளை

www.t.me/tamilbooksworld



லாபம் கிடைக்கப் போகிறது. முதலாவது, நாங்கள் ஏற்கெனவே கொடுத்திருந்த பணம். இரண்டாவது, இப்போது நாங்கள் வயிற்றில் செருகிக் கொண்டிருக்கும் குப்பிகளில் உள்ள பணம். கடைசியாக, சிறை நிர்வாகம் அவர்களுக்குத் தரப் போகிற பரிசுப் பணம். இதெல்லாம் போக, இப்போது எங்களுக்குக் காட்டிய இதே படகை, எங்களைப் போலத் தப்பியோட நினைக்கும் இன்னோர் அப்பாவிக்கு மீண்டும் விற்பனை செய்வார்கள்.

பிகோஸிக்குப் பலமான காயம், ஒரு அராபியன் அவன் தலையில் குறுந்தடியால் அடித்ததால் மணலில் விழுந்து கிடந்தான். மயக்கமா அல்லது செத்துவிட்டானா தெரிய வில்லை. காஸ்ஸி சரியான காட்டெருமை, ஒரு அராபி யனைப் பிடித்து, ஆம்லெட்டுக்கு முட்டையை அடிக்கிற மாதிரி தூக்கிப் போட்டான். வலுவான இரண்டு கையாலும் அந்த அராபியனின் தலையைப் பிடித்துப் படகின் முனையில் தேங்காய் உடைக்கிற மாதிரி மோதினான்.

அராபியர்கள் எப்போதுமே கத்தியைப் பயன் படுத்துவதில் சமர்த்தர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே எசகு பிசகாக ஏதாவது செய்துவிட்டு இவர்களிடம் காயம் பட்டுக் கொள்ள நான் தயாராயில்லை. படகை நோக்கி ஓடினேன். இரண்டாவது அராபியன் என்னைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தான். அவனிடம் எதிர்த்து நின்று சண்டை போடுவதில் பயனில்லை. என்னைவிடப் பலசாலி அவன். ஆகவே படகைக் கட்டியிருந்த நங்கூரத்தை எடுத்து அவன் தலைமீது ஓங்கி • ஒரு போடு போட்டேன். டொம்மென்று ஒரு சத்தம். மூளை தெறித்து ரத்தம் என் மீது பீரிட்டது. ஒரு வினாடிகூடத் தாமதிக்கவில்லை அப்படியும் அவன் ஒரு கத்தியால் என் கையில் குத்திக் காயப்படுத்தி

www.t.me/tamilbooksworld



விட்டான். நான் கொஞ்சம் அசந்திருந்தால் என் கழுத்தில் அந்த வெட்டுப் பட்டு உயிர் போயிருக்கும்.

எனக்கு மனம் சலித்துவிட்டது. இப்படி ஒரு கொலை செய்து விட்டோமே (கொலை கொலைதான்- இல்லையென்று சொல்வானேன்?) என்றா? அல்லது, தப்பியோடும் முயற்சி தோல்வி அடைந்து விட்டதே என்றா? எனக்கே தெரிய வில்லை. பெரிய யுத்த களம்போல் இருந்தது அந்த இடம். பிகோஸியின் அண்ணன் மல்லாந்து கிடந்தான். அவன் கைகள் மார்பின் குறுக்காக இருந்தன. கண்கள் வானத்தை நோக்கி வெறித்துக் கொண்டிருந்தன. காஸ்ஸியால் வீழ்த்தப் பட்ட அராபியனும் என்னால் தாக்கப்பட்ட அராபியனும் செத்துக் கிடந்தார்கள்.

நல்ல காலம். நாங்கள் மூன்று பேர் உயிரோடு இருந்தோம்.

குடிகாரன் போல தள்ளாடிக் கொண்டு ஒருவழியாய் பிகோஸி எழுந்தான். எனக்கு ஏராளமாய் ரத்தம் சேதமாகிக் கொண்டிருந்தது. காஸ்ஸி ஒரு துணி எடுத்துவந்து ரத்தத்தை நிறுத்திக் கட்டுப் போட்டான். அடுத்த வேலையைக் கவனிக்க வேண்டியிருந்தது.

"இந்த ஆட்களை என்ன செய்வது?"

"ஆற்றில் தூக்கியெறி."

"வேண்டாம்; தண்ணீர் அடித்து வந்து கரையில் ஒதுக்கிவிடும். புதை மணலுக்குள் புதைப்பதுதான் நல்லது."

"படகை விற்ற ஆள்? அவன் உயிரோடு இருப்பானே?"

"இருந்தால் பார்த்துக் கொள்ளலாம். நம்மைத் தேட ஆரம்பிப்பதற்கு முன்னால் நாம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும்" என்றேன்.

புதைமணலின் சேற்றில் வேகமாய்க் கல்லறைகள் தோண்டினோம். இறந்தவர்களின் பாண்ட்களை உருவினான்

www.t.me/tamilbooksworld



காஸ்ஸி. பிறகு அவர்கள் வயிற்றில் ஏறி அமுக்கினான்- பணக் குப்பிகள் ஏதாவது இருந்தால் வெளிக் கொண்டுவருவதற்காக.

எதுவும் இல்லை. காஸ்ஸி ஆத்திரத்துடன், "சாவுக் கிராக்கிகள்! எத்தனை கெட்டிக்காரத்தனம் பாரேன்-தங்கள் பணக் குப்பிகளை வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருக் கிறார்கள்!" என்றான்.

என்னால் அவனுடைய ஏமாற்றத்தைப் பொறுக்க முடிய வில்லை. முன்பு கல்லறைக் காவலாள் எனக்குச் சொல்லித் தந்திருந்த வழியைக் கையாண்டு, வயிற்றைக் கிழித்துப் பார்த்தேன்.

உண்மையாகவே அவர்கள் வயிற்றில் பணக் குப்பி இருக்கவில்லை. வறுமை காரணமாகத்தான் எங்களைப் பிடித்துக் கொடுப்பதில் அத்தனை ஆர்வம் காட்டியிருக் கிறார்கள் என்று புரிந்தது. ஆனால் அவர்களைப் பற்றிப் பரிதாபப்பட்டுக் கொண்டிருக்க அவகாசம் இல்லை.

இப்போது எங்கள் முதுகைக் காப்பாற்றிக் கொண்டாக வேண்டும். பொழுது விடிவதற்குள் எங்கள் முகாமுக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும்.

எப்படிச் செய்யப் போகிறோம்? என்னைக் கவலை பிடித்துக் கொண்டது.

"விடிகாலைக்குள் திரும்பிப் போய்ச் சேராவிட்டால், நாம் தப்பியோடினது அவர்களுக்குத் தெரிந்துவிடும். கடும் தண்டனை கொடுத்துவிடுவார்கள்" என்றேன் தோழர் களிடம்.

இறந்துபோன ஆட்களைப் புதை மணலுக்குள் அழுத்தி னோம். அந்த உடல்களைச் சேறு தன்னுள் கெட்டியாக மூடிக் கொண்டது. ஒரு சின்னஞ்சிறு அடையாளம்கூடத் தெரியவில்லை. கரையில் கொஞ்சம் ரத்தக் கறை இருந்தது.

www.t.me/tamilbooksworld



அதுவும் கூட எங்கள் காலடித் தடம் பட்டு அழிந்துவிடும். அப்படியும் மிச்சமிருந்தால் மழை நாலு தூறல் போட்டதும் கரைந்துவிடும்.

இனி அவகாசமில்லை! கடியாரத்துக்கும் எங்களுக்கும் ஓட்டப் போட்டி! மரோனி ஆற்றைக் கடந்து மல்காஷை அடைய வேண்டும். அங்கிருந்து சாலை வழியே எங்கள் சிறை முகாமுக்குப் போய் விடலாம். பொழுது விடிந்துவிட்டால் மீன் பிடிப்பவர்களும் வேட்டைக்காரர்களும் வியாபாரிகளும் வார்டன்களும் ஆற்றிலும் ஆற்றங்கரையிலும் கூட்டம் கூட்டமாய் வந்துவிடுவார்கள் அதற்கு முன்னே போய்விட வேண்டுமென்று பறந்தோம்.

போகும் வழியில், ஒரு புதர் இடுக்கில் படகை ஒளித்து விட்டு, மூங்கில் தோப்பு வழியே மல்காஷை நோக்கி ஓடினோம். என் புஜங்கள் வலியுடன் விண்விண்ணென்று தெறித்தன எலும்பு எதுவும் முறிந்திராமல் இருக்க வேண்டுமே என்று வேண்டிக் கொண்டேன். காஸ்ஸியும் பிகோஸியும் ஓட்டத்தில் முதல் நம்பர் சாம்பியன்கள்! காஸ்ஸி வேடிக்கையாக, “ஓட்டமென்றால் இதுவல்லவா ஓட்டம்! சிறையிலிருந்து தப்பிச் செல்ல ஓடியதைக் காட்டிலும் சிறைக்குத் திரும்ப ஓடுகிறோமே, இதுதான் பிரமாதம். வார்டன்கள் இப்போது நம்மைப் பார்த்தால் நிச்சயமாய் ஒரு மெடல் கொடுப்பார்கள்!”என்றான்.

தூரத்தில் எங்கள் சிறை தெரிந்தது. ஆனால் அதை அடைய இன்னும் வெகு தொலைவு ஓடியாக வேண்டும். கடைசிக் கொஞ்ச தூரத்தையும் ஓடுவதற்காக எங்கள் பலம் முழுவதையும் திரட்டிக் கொண்டோம். ஜன்னல்களில் சில வார்டன்களின் முகங்கள் தென்பட்டன. இன்னும் சில காவலர்கள் சிறையின் நடு முற்றத்தை நோக்கி நடை

www.t.me/tamilbooksworld



போட்டார்கள். எங்கள் அறைகள் சிறையின் வாசலுக் கருகேயே இருந்தன. அப்பாடா! கேட் இல்லை. யாரும் சோதனை போடவில்லை. எவ்விதமான கெடுபிடியும் இல்லை. எங்கள் இடத்தை அடைந்துவிட்டோம். தொபே லென்று எங்கள் படுக்கைகளில் விழுந்து போர்வையை முகத்துக்கு மேலே இழுத்துப் போர்த்திக் கொண்டோம். நிம்மதியாக மூச்சுவிட்ட சமயம் சிறை மணி அடித்தது.

"ஊம் ஊம்! எழுந்திருங்கள்!" என்று ட்யூட்டியிலிருந்த காவலர் சீறினார்.

## 12

**த**ரையைக் கூட்டிப் பெருக்கலானேன். நாம் ஒரு மனிதனைக் கொலை செய்து விட்டோம், நாம் ஒரு கொலை காரன் என்ற எண்ணம் அடிக்கடி என் மனத்தில் எழுந்தது. ஆனால் அதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. சாதாரண மான ஒரு நிகழ்ச்சியாகவே எடுத்துக் கொண்டேன். 'தற் காப்புக்காகத்தான் அந்தக் கொலையைச் செய்ய வேண்டி யிருந்தது. அப்படி மட்டும் செய்திராவிட்டால் இந்நேரம் அந்தப் புதை மணலில் அவனுக்குப் பதிலாக நான்தான் அழுந்திக் கொண்டிருப்பேன்!' என்று சொல்லிக் கொண் டேன். இனி அடுத்த வேலையைப் பற்றி யோசிக்க வேண்டும். எப்படி இங்கிருந்து வெளியேறி ஸெயின்ட் லாரண்டை அடைவது என்று யோசிக்கலானேன். ஆம். தப்பிச் செல்லத் தான் வேண்டும். உண்ணும் போதும் குடிக்கும் போதும் உறங்கும் போதும் தப்பியோடுவதே என் எண்ணமாக இருந்தது. என் நண்பர்களையும் சேர்த்துக் கொண்டுதான் ஓடப் போகிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம்

www.t.me/tamilbooksworld



அடுத்த முயற்சியை ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். ஒரு முயற்சி பரிதாபகரமாகத் தோல்வியடைந்துவிட்டது என்பதற்காக நான் மனம் தளரப் போவதில்லை.

சில மாதங்கள் கழித்து ஒரு நாள், மானா என்ற கப்பல் கேயன் என்னுமிடத்துக்குப் புறப்பட்டது. அங்கு அனுப்பப்படும் ஆட்களில் நானும் ஒருவன். என்னைத் தவிர இருபதுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள் ஆனால் அவர்களைச் சங்கிலியால் கட்டியிருந்த மாதிரி என்னைக் கட்டவில்லை. இந்தக் கைதிகள் பல்வேறு முகாம்களுக்கு-சிலர் தனிமைச் சிறைக்கு-அனுப்பப்பட இருந்தார்கள் போகும் வழியில் இறக்குவதற்காகப் பலவிதமான சரக்குகள் எங்கள் கப்பலில் இருந்தன. ஆயுதம் தாங்கிய காவலர்களும் அதிகாரிகளும் கப்பல் ஊழியர்களும் கூட்டம் கூட்டமாய்க் காணப்பட்டனர்.

அன்றொரு நாள் தோற்றுப் போய்த் திரும்பி வந்த அதே மரோனி ஆற்றை மறுபடியும் இன்று கடக்கிறேன்! என் மனத்தில் துயரம் பொங்கியது. இதுதான் சுதந்திரத்துக்கான பாதை - விடுதலைக்கு வழி!

வெகு தூரத்தில் உள்ள கடலின் மணத்தை என் நாசி மோப்பம் பிடித்தது. கயானாவில் எல்லா இடத்தையும் வெய்யில் கொளுத்துகிற மாதிரி கப்பலின் மேல் தளத்தையும் சூரியன் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தான் என் உடைகளுக்குள் வியர்வை வெள்ளமாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. நாங்கள் புறப்பட்ட போது மாலை நாலு மணி இருக்கும். மறுநாள் பகல் வாக்கில் கேயனை அடைய விருந்தோம்.

என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று நான் யோசித்தவாறிருந்தேன்.

www.t.me/tamilbooksworld



நான்கு நான்கு பேராகக் கப்பலிலிருந்து இறங்கி கேயன் மண்ணில் காலடி வைத்து நடை போட்டோம். என்னை இந்த முகாமிற்கு மாற்றப்போவதாக அறிவித்தபோது 'நீ அதிர்ஷ்டக் காரனப்பா!' என்று சில பேர் சொன்னது எனக்கு ஞாபகம் வந்தது. அவர்கள் ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பது இப்போதுதான் புரிந்தது.

சாந்தம் ததும்பி வழியும் ஊர் அது. தெருக்களும் கடைகளும் சுத்தமாக இருந்தன. ஒரு மாடி இரண்டு மாடி வீடுகள், வெள்ளை வர்ணம் அல்லது சிவப்பு வர்ணம் அடிக்கப்பட்டிருந்தன. வண்ண வண்ணமான உடையணிந்த கயானா பெண்கள் எங்கெங்கு பார்த்தாலும் நடமாடிக் கொண்டிருந்தார்கள் மிளகு, வாழைக்காய் வறுவல், தேங்காய் மிட்டாய், பழரசம் முதலானவற்றைத் தெருக்களில் கூவி விற்றுக் கொண்டிருந்தார்கள்.

சுமார் அரை மணி நேரத்துக்கு நாங்கள் கையிலோ காலிலோ விலங்கு இல்லாமல் நடந்தோம். தெற்கு திசையில் சிறிது தூரத்தில் மூன்று கட்டிடங்கள் தெரிந்தன. தீவாந்தர சிட்சை பெற்ற கைதிகளை அங்கேதான் அடைக்கிறார்கள் என்று தெரிந்தது. கேயன் நகரத்தையும் எங்களையும் பிரிப்பது ஒரு சிறிய வேலிதான் என்பதைக் கண்டு எனக்கு ஆச்சரிய மாயிருந்தது. கேயன் நகரத்திலும் சுற்று வட்டாரத்திலும் சுமார் பத்தாயிரம் மக்கள் வசித்து வந்தார்கள்.

அன்று இரவு நன்கு தூங்கினேன். காலையில் தலைமை வார்டன் வந்து என்னை எழுப்பி, "மிலானி, உனக்கு மலத் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது. நாளையிலிருந்து எருமை வண்டியை ஓட்டிக் கொண்டு செல்லவேண்டும்" என்று அறிவித்தார்.

மலத் தொட்டி அள்ளும் வேலை! என்ன அருமையான

www.t.me/tamilbooksworld



உத்தியோகம்! எருமை பூட்டிய வண்டியை ஓட்டிச் செல்ல வேண்டுமாம். சின்ன வயசில் ஓர் ஆட்டைத் திருடி வந்து பால் கறந்திருக்கிறேன். பசு மாட்டைக் கூட ஓட்டியது கிடையாது. இப்போது எருமையை ஓட்ட வேண்டும். பரவாயில்லை, இதிலும் ஒரு வசதி இருக்கிறது. மலம் அள்ளப் போவதென்றால் தனியே கொஞ்ச நேரம் கிடைக்கும். அது ஒரு வகையில் சுதந்திரம்தானே!

மறுநாள் காலை பாஸ்டைட் என்ற ஆளைத் தேடிக் கொண்டு புறப்பட்டேன். அவன்தான் எனக்கு முன்னால் மலம் அள்ளும் வேலையைப் பார்த்தவன். அவனிடமிருந்து தான் நான் என் வேலையைச் 'சார்ஜ்' ஏற்க வேண்டும்.

முகாமில் பலரையும் விசாரித்தேன் இங்கேயுள்ள காவலர்கள் ஓரளவு நல்ல இயல்புள்ளவர்களாக இருந்தார்கள்.

"பாஸ்டைட் என்ற மலம் அள்ளும் ஆளை எங்காவது பார்த்தீர்களா?" என்று நான் கேட்டதற்கு, "யார் பிணந்தூக்கியையா கேட்கிறாய்? பார்க்கவில்லையே?" என்றார்கள்.

'பிணந்தூக்கி!' வேடிக்கையான பெயர்தான்.

கடைசியில் ஒரு குடிசையில் பாஸ்டைடைக் கண்டு பிடித்தேன். இருட்டான மூலையில் உட்கார்ந்திருந்தான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். தன் ஊஞ்சல் படுக்கையினருகே, உட்காரச் சொன்னான் படுக்கைக்கு மேலே, பழுத்துச் சுருண்ட ஒரு புகைப்படம் கவரில் ஒட்டப் பட்டிருந்தது.

நான் உட்கார்ந்ததும், "மிலானி, உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். டாக்டரும் தலைமை வார்டனும் சொல்லியிருக்கிறார்கள் ஒரு பெண்ணினால் நீ மாட்டிக் கொண்டாயாமே! என் சமாசாரமும் அப்படித்தான். அதோ

www.t.me/tamilbooksworld



போட்டோவில் இருக்கிறாள் பார்த்தாயா? அந்தப் பெண் செய்த ஒரு சின்னக் காரியத்தால் நான் இந்தத் தீவாந்தரத்தில் நாற்பது வருடமாகச் சீரழிந்து கொண்டிருக்கிறேன். இங்கே ஒரு புது வாழ்க்கை ஆரம்பிக்கலாமென்று முயற்சி பண்ணிப் பார்த்தேன். முடியவில்லை. கடைசியில் இந்தத் தீவாந்தரத் திலேயே சாகப்போகிறேன். மலம் தான் என் வாழ்க்கை என்றாகிவிட்டது. மலத்துடனேயே என் வாழ்க்கை முடியப் போகிறது. நான் சீக்காளி; என் குடல்கள் அடியோடு கெட்டு விட்டன. என்னை ஓய்வு விடுதிக்கு அனுப்பி வைக்கப் போகிறார்களாம். அதனால்தான் என் வேலையை உனக்குக் கொடுத்திருக்கிறார்கள்'' என்றான் பாஸ்டைட்.

“உன்னைப் பற்றிய கதையெல்லாம் சொல்லு, பாஸ்டைட்'' என்றேன். “முதலில் உன்னை ஏன் பிணந்தூக்கி என்று குறிப்பிடுகிறார்கள் என்பதைச் சொல்லு.''

“அது ஏனென்றால், இங்கே இறந்து போகும் கைதிகளையும் காவலர்களையும் தூக்கிச் செல்லத் தனி வண்டி கிடையாது. மலத் தொட்டிகளும் குப்பைக் கூடை களும் கொண்ட வண்டியிலேதான் அவர்களுடைய பிணங் களையும் எடுத்துப் போக வேண்டும்.''

அவன் தன் தலையணைக்குக் கீழேயிருந்து ஒரு புட்டியை எடுத்தான். டாஃபியா என்ற மதுபானம். இருவரும் குடிக் கலானோம்.

பாஸ்டைட் சொன்னான். “இரும்புக் குண்டும் சங்கிலியும் மாட்டிக் கொண்ட அனுபவம் உனக்கு உண்டா? எனக்கு உண்டு. காலில் சங்கிலி கட்டி, இரும்புக் குண்டு பிணைத் திருப்பார்கள். எங்காவது போக வேண்டுமென்றால் கனமான அந்த இரும்புக் குண்டையும் கையில் தூக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நகர முடியாது.

www.t.me/tamilbooksworld



அத்துடனில்லை. அடியென்றால் செம்மையடி. இதோ இங்கே பார்.''

அவன் தன் சட்டையைக் கழற்றி முதுகைக் காட்டினான். குறுக்கும் நெடுக்குமாய் ஏராளமான தழும்புகள் தென்பட்டன. அந்தத் தழும்புகளை இணைத்து ஒரு பெண்ணின் படம், ஒரு போப்பாண்டவர் படம், ஒரு திருடன் படம் ஆகியவற்றைப் பச்சை குத்திக் கொண்டிருந்தான்.

"தார் பூசிய சாட்டையால்தான் அடிப்பார்கள் சாட்டை நுனியில் தேங்காய் அளவுக்கு ஈயக் குண்டுகள் இருக்கும். வண்டியை நான் வேகமாகத் தள்ளாவிட்டால் அந்தச் சாட்டையினால் அடிப்பார்கள் இன்னொரு சித்திரவதையைப் பற்றிச் சொல்கிறேன். கேள்..''

அவன் சொல்லச் சொல்ல எனக்கு உடம்பு நடுங்கியது.

## 13

கேட்கக் கேட்க எனக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. மலம் அள்ளும் பாஸ்டைட் - பிணந்தூக்கி என்ற பெயரையும் பெற்றவன்-தான் பட்ட நரக வேதனையைப் பற்றித் தொடர்ந்து சொன்னான்.

"ஒரு முறை நான் எதிர்த்துப் பேசிவிட்டேன் என்பதற்காக என் இரண்டு கைகளையும் உயர்த்தி சங்கிலியால் கட்டித் தொங்கவிட்டார்கள். இரண்டு கால்களையும் கட்டி விட்டார்கள். நாள் கணக்கில் அப்படித் தொங்கிக் கொண்டிருந்தேன். ஒரு சினேகிதன் சும்மா நிற்கிற மாதிரி என் அருகே வந்து நின்று கொண்டான் அவன் முதுகின் மீது கொஞ்சம் நடுநடுவே சாய்ந்து கொள்வேன்...''

அவன் பேசிக் கொண்டிருந்த போது ஒரு காவலாள் உள்ளே வந்தான். "ஏய்! என்ன பேச்சு இங்கே?'' என்று கத்தி

www.t.me/tamilbooksworld



னான். உடனே பாஸ்டைட், "மலம் அள்ளும் வேலைக்குப் புதிதாக வந்திருப்பவன் இந்த ஆள். எப்படி வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"ஓகோ, என்னப்பா, நீதான் மிலானி என்கிற ஆளா? தண்ணீரிலே குதித்து வார்டனைக் காப்பாற்றினாயாமே?" என்றான் அந்தக் காவலாள்.

நான் வார்டனைக் காப்பாற்றிய விஷயம் சிறை முகாம் பூராவும் பரவியிருந்தது. பிற்பாடு அது எனக்குப் பல விதங்களிலும் உதவியாய் இருந்தது.

பாஸ்டைடிடம் விடை பெற்றுக் கொண்டு புறப் பட்டேன். மறு நாள் முதல் எருமை வண்டியை ஓட்டிக் கொண்டு மலம் அள்ளும் வேலையை மேற்கொண்டேன். வேலை முடிந்ததும், சிறையில் கால்நடைகளுக்குப் பொறுப்பான ஆளிடம் எருமையை ஒப்படைத்துவிட வேண்டும்.

விடிகாலை இரண்டு மணிக்கெல்லாம் காவலாள் கூவுவான்-' "மிலானி! எழுந்திரு. மலம் அள்ளப் போக வேண்டும்!"

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வீடுவீடாகப் போவது என் வேலை. ஒவ்வொரு வீட்டிலும் பின்புறம் சிறிய கழிப்பறை கட்டப்பட்டிருக்கும். மிகப் பட்டிக்காட்டுத்தனமாக, ஓட்டை போட்ட ஒரு பலகையும் அதன் கீழே மலத் தொட்டியும் இருக்கும். கழிப்பறையின் பின்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று, தொட்டியை எடுத்துவந்து வண்டியில் கொட்டிக் கொண்டு தொட்டியைத் திரும்ப அதன் இடத்தில் வைத்துவிட்டுச் செல்லவேண்டும்.

www.t.me/tamilbooksworld



இந்த வேலையில் பெருமைப்பட எதுவுமில்லை என்று சொல்லத் தேவையில்லை. சில சமயம் அந்த அசிங்கம் என் மேலே தெறித்து என் உடைகளும் அசிங்கமாகிவிடும். ஆனால் கடலுக்குப் போய் ஆசைதீரக் குளித்துச் சுத்தம் செய்து கொள்வேன்.

நாங்கள் இருந்த கேயன் நகரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து, மூன்று பேரிடம் மலம் அள்ளும் வேலையை ஒப்படைத்திருந்தார்கள் வண்டி நிரம்பியதும் ஊருக்கு வெளியே போய்; வண்டியைக் காலி செய்வேன். அங்கே சில பிரம்மாண்டமான பண்ணைகள் இருந்தன. அங்கே சிறந்த உரமாக இது பயன்படுத்தப்படும்.

அப்படி ஒரு நாள் அங்கே போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது ஒரு சீனாக்காரனைச் சந்தித்தேன். அவனை நான் முன்னே பின்னே பார்த்தது கிடையாது. இருந்தாலும் அவன் என்னைத் தடுத்து நிறுத்தி, "பிணந் தூக்கியின் வேலையை இப்போது நீயா பார்க்கிறாய்? ஏன்? அவனுக்கு என்ன ஆயிற்று? செத்து விட்டானா?" என்று விசாரித்தான்.

"சாகவில்லை. ஆனால் சாகும் நிலையில்தான் இருக்கிறான்" என்றேன்.

அந்தச் சீனாக்காரன் என்னை நெருங்கி ரகசியமாக, "இரண்டு நாளைக்கு ஒரு தடவை உனக்கு டாஃபியா மது கிடைப்பதற்கு ஒரு வழி சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

"ஓ! எப்படி?" என்றேன்.

அவனைப் பற்றிய விவரம் தெரிந்தது. ஊர் பூரா நிறைந்திருக்கும் வெளிநாட்டுக்காரர்களில் அவனும் ஒருவன். கறிகாய் பயிரிடும் பண்ணை வைத்திருக்கிறான். விளையும்

www.t.me/tamilbooksworld



காய்கறிகளை நகரத்தில் உள்ள சந்தையில் விற்றுவிடுவான். குள்ளமான ஆள். நல்ல கட்டம் போட்ட சட்டையும் செருப்பும் அணிந்திருந்தான். தலையிலிருந்த தொப்பி எங்கள் சிறையில் தயாரிக்கப்பட்டது என்று கண்டு கொண்டேன்.

"ஒன்றும் செய்ய வேண்டாம். தினம் போகிற வழியில் என் வீட்டில் கொஞ்ச நேரம் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். ராத்திரி இரண்டு மணிக்கே எழுந்து விடுவதால் களைப்பாய் இருப்பாயே? அதற்காகத் தான் ஓய்வு. புரிகிறதா?" என்று கண்ணைச் சிமிட்டினான். "மற்ற இரண்டு பகுதியில் வேலை செய்யும் உன் தோழர்கள் கூட அப்படித்தான் செய்கிறார்கள் அதில் அவர்களுக்கு வருத்தம் கிடையாது. என்ன?"

எனக்குப் புரிந்தது. அவனிடமிருந்தும் அவன் வீட்டி லிருந்தும் வந்த துர்நாற்றமே எனக்குப் புரியவைத்துவிட்டது.

மல வண்டியை ஓட்டிக் கொண்டு அவன் வீட்டிற்குச் சென்றேன். வண்டியைப் பின்பக்கம் நிறுத்திவிட்டு, சமைய லறைக்குப் போனேன். மேஜை மீது இரண்டு புட்டி டாஃபியா மது தயாராய்க் காத்திருந்தது. ஒன்றைத் திறந்து எனக்குக் கொடுத்தான். "பாவம், ரொம்பக் களைப்பா யிருக்கிறாய், குடியப்பா" என்றான்.

நான் குடித்துக் கொண்டிருக்கையில் அவன் பின்பக்கம் போனான். சில நிமிடங்கள் கழித்துத் திரும்பிவந்து, "வேலை முடிந்துவிட்டது, மிலானி. நீயும் போதுமான அளவு ஓய்வு எடுத்துக் கொண்டாகிவிட்டது என்று நினைக்கிறேன்," என்றான்.

நான் மகிழ்ச்சியுடன் புறப்பட்டேன் என் எருமை மாட்டுக்கும் ரொம்ப சந்தோஷம். அது இழுக்க வேண்டிய பளுவில் பாதி குறைந்து விட்டதே! மிச்சப் பாதியைக் கொண்டு

www.t.me/tamilbooksworld



போய் வழக்கமான சிறைப் பண்ணையில் காலி செய்தேன்.

'அன்பளிப்பாகக்' கிடைத்த இரண்டு மது புட்டிகளில் ஒன்று மிச்சமிருந்தது கையில். அதைப் பற்றித்தான் கவலை ஏற்பட்டது. காவலாட்கள் சோதனை போடுவார்கள். அவர்களுக்குத் தெரியாமல் கொண்டுபோக முடியாது. ஒவ்வொரு முறையும் அவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதென்றால் என் வருமானம் அதற்கே சரியாகிவிடுமே? என்ன செய்யலாம்?

சரேலென ஒரு யோசனை!

கைதிகள் பணக் குப்பியைச் செருகிக் கொள்கிற மாதிரி..

வழியெங்கும் ஆமணக்குச் செடிகள் இருந்தன. கை நீட்டி ஒரு செடியிலிருந்து ஆமணக்குக் கொட்டையைப் பறித்தேன். கசக்கியதும் கொழகொழவென்று விளக்கெண்ணெய் கிடைத்தது. அதை மதுப் புட்டியின் மீது நன்றாகப் பூசினேன்.

என் எருமை மாட்டை அணுகினேன் அதன் பெயர் டம்புரோ.

"என் கண்ணே டம்புரோ, இதோ பார், நீ என் ஆருயிர் நண்பனில்லையா? இன்று முதல் நீயும் நானும் கூட்டாளிகளாக இருப்போம். இந்த ஒரு புட்டி டாஃபியாவில் பத்து பிராங்க் கிடைக்கும் நமக்கு. இதைச் சிறைக்குள்ளே எடுத்துப் போக நீ உதவி செய்ய வேண்டும். உள்ளே போனதும் உனக்கு இரண்டு மடங்கு வைக்கோல் கிடைக்கிற மாதிரி நான் ஏற்பாடு செய்கிறேன்."

டம்புரோ பதிலொன்றும் சொல்லவில்லை. புட்டியின் கழுத்தில் ஒரு சிறு நூலைக் கட்டினேன். எருமை மாட்டின் வாலைத் தூக்கி, புட்டியைச் செருகினேன். புட்டி மழமழவென்றாகியிருந்ததால், புற்றுக்குள் பாம்பு செல்கிற மாதிரி வெகு சுளுவாகச் சென்றுவிட்டது. டம்புரோ கொஞ்சம்கூட ஆட்சேபிக்கவில்லை. சற்று முனகியது. அதுகூட இன்ப

www.t.me/tamilbooksworld



முனகல்தான்.

. சிறை வாசலை அடைந்தபோது என்னைக் காவலாட்கள் சோதனை போட்டார்கள்.

"என்னிடம் ஒன்றும் கிடையாது ஐயா, ஒன்றுமே கிடையாது ஆனால் இந்த எருமை மாடு ஏதாவது ஒளித்து வைத்திருக்குமோ என்னவோ" என்றேன் கிண்டலாக.

காவலாட்கள் எரிச்சலுடன் சிரித்துவிட்டு என்னை உள்ளே அனுப்பிவிட்டார்கள். மாட்டுக் கொட்டிலுக்குப் போனதும் எருமையின் வாலைத் தூக்கி, நூலைப் பிடித்து இழுத்தேன். புட்டி அப்படியே வெளியே வந்துவிட்டது. கொஞ்சம் கதகதப்பாக இருந்ததுதான் ஒரே வித்தியாசம்.

## 14

டாஃபியா மதுவுக்குச் சிறைக்குள் நல்ல கிராக்கி உண்டு. ஆகவே சீக்கிரமே விற்று விட்டேன். கிடைத்த பணத்தைச் சிறைத் தையல்காரரிடம் கொடுத்து அழகிய இரண்டு ரப்பர் கையுறைகள் செய்து கொண்டேன்.

தப்பிச் செல்ல நான் செய்த இரண்டு முயற்சிகள் தோற்று விட்ட போதிலும் அடுத்த முயற்சியில் குறியாக இருந்தேன். மல வண்டி ஓட்டியாகவே என் காலத்தை முடித்துக்கொள்ள நான் தயாராயில்லை.

காஸ்ஸிக்குத் தெரிந்த ஒரு குமாஸ்தா ஸெயின்ட் லாரண்ட் தீவில் எனக்கு ஒரு வேலை வாங்கித் தந்து அனுப்பிவிட்டார். சும்மா செய்யவில்லை. லஞ்சம் வாங்கிக் கொண்டுதான் டாஃபியா மதுவை விற்றுக் கிடைத்த பணத்தைச் சேர்த்து வைத்திருந்தேன். அதுதான் கைகொடுத்தது.

www.t.me/tamilbooksworld



தப்பியோட வேண்டும் என்பதே எப்போதும் என் ஜபமாக இருந்தது. இங்கே அதைப் பற்றிச் சிந்தனை செய்யவும் திட்டமிடவும் நிறைய நேரம் கிடைத்தது. என் வேலை, தினம் ஒவ்வொரு கைதிக்கும் காலையில் காப்பி கொண்டு போய்க் கொடுக்க வேண்டியது. பிறகு ஒன்பது மணிக்கு அனைவருக்கும் ரொட்டித் துண்டுகள் விநியோகம் செய்ய வேண்டும். வாரத்துக்கு ஒரு முறை மது பானமும் உண்டு.

ஒரு நாள் எல்லாக் கைதிகளும் விளையாட்டு வேடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் நானும் காஸ்ஸியும் தப்பியோடுவதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். "இதோ பார் காஸ்ஸி, வெளியே போகவும் வரவும் உனக்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நம்பகமான முன்னாள் கைதியொருவனைச் சிநேகம் பிடித்து, நமக்காக ஒரு படகு ஏற்பாடு பண்ணு. எங்காவது அதை ஒளித்து வை. போன தடவை மாதிரி ஓட்டைப் படகாக இல்லாமல் உறுதியாக நன்றாக இருக்கிறதா என்பதை நான் பரிசோதித்துப் பார்க்கிறேன் புறப்படுகிற வரையிலும் நாம் பெட்டிப் பாம்பாக நடந்து கொள்ள வேண்டும். யார் என்ன சொன்னாலும் எதிர்ப் பேச்சு இல்லாமல் செய்துவிட வேண்டும். நாம் படுகிற துன்பத்துக்கெல்லாம் பலன் நாம் விடுதலையானதும் கிடைத்துவிடும்" என்றேன்.

ஒவ்வொரு நாளும் பிகோஸி தச்சுப் பட்டறைக்குப் போய்க் கொண்டிருந்தான். அங்கே மேஜைகள், கதவுகள், பெஞ்சுகள், முதலியன செய்வதற்காக மரப் பலகைகள் குவித்து வைத்திருப்பார்கள் இரவு புறப்படும்போது பிகோஸி ஒரு பலகையை எடுத்துக் கொள்வான். ஒரு நாள் வெளியேறிய வழியே இன்னொரு நாள் வெளியேறாமல் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு வாசல் வழியே கிளம்புவான். காவலில்

www.t.me/tamilbooksworld



இருக்கிற ஆளிடம், "சிறை முகாமில் ஒரு பிளவு இருக்கிறது. அதை அடைத்தாக வேண்டும். ரொம்ப அர்ஜண்ட்," என்று ஒரே பொய்யைச் சலிக்காமல் சொல்வான். காவலாள் சற்று நல்லவனாயிருக்கும் வரையில் தொல்லையில்லை. சந்தேகப் படுகிற மாதிரி தோன்றினால் "சரி, சரி, நாளைக்குப் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிப் பலகையைக் கீழே போட்டுவிட்டு நழுவி விடுவான்.

இந்தப் பலகைகளை ஒளித்து வைக்கக் காஸ்ஸி ஓர் இடம் பிடித்திருந்தான் முன்பு பெண்கள் சிறையாக இருந்த கட்டிடத்துக்குப் பக்கத்தில் ஒரு கொட்டகைதான் அது. தினந்தோறும் கைதிகளுக்கு ரொட்டிகள் வழங்கியானதும் நான் அங்கே சென்று பலகைகளை இணைக்கலானேன். ஆனால் பலகைகளின் அளவு நாளுக்கு நாள் சிறியதாகிக் கொண்டு வந்தது. "ஏன் அப்படி" என்று காஸ்ஸியைக் கேட்டேன்.

'என் கதையை இனிமேல் எவனும் நம்ப மாட்டானென்று தோன்றுகிறது. ஆகையால் சின்னப் பலகைகளை என் சட்டைக்குள்ளே முதுகுப் பக்கம் ஒளித்து வைத்துக்கொண்டு பெல்ட்டால் இறுக்கிக் கட்டி எடுத்து வருகிறேன். இந்தச் சின்னப் ப்லகைகளை வைத்தே எப்படி யாவது சமாளி" என்றான் காஸ்ஸி.

நானும் சமாளித்தேன். சிறிய பலகைகளை ஆணி அடித்து இணைத்தேன். கொஞ்சம் கூடச் சத்தம் இல்லாமல் வேலை செய்ய வேண்டியிருந்தது. அந்தக் கொட்டகையில் சிறிய சத்தம் போட்டாலும் பயங்கரமாய் எதிரொலித்தது.

"வேகம்-திறமை! இதுவே என் மந்திரம்" என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

www.t.me/tamilbooksworld



அக்டோபர் மாத நடுவில் ஒரு நாள் காஸ்ஸி உற்சாகமாய்த் தெரிவித்தான்: "நண்பர்களே, உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி! நமக்காகப் படகு தயாரித்துத் தர ஒரு முன்னாள் கைதி சம்மதித்திருக்கிறான். இரண்டாயிரம் பிராங்க் கொடுத்தால் நமக்காக எல்லா வசதியும் பண்ணித் தருகிறேன் என்கிறான்."

காஸ்ஸி குறிப்பிட்ட ஆளின் அசல் பெயர் வெட் ரோட்டி என்பது. ஆனால் அவனைப் பைத்தியம் என்றுதான் எல்லாரும் கூப்பிட்டார்கள். அவனும் அவனுடைய நண்பனு மாக ஒரு கார் மெக்கானிக்கைக் கொலை செய்து விட்டார் கள். பிடிபட்டு வழக்கு நடைபெற்றபோது அவனுக்குச் சித்த சுவாதீனம் இல்லையென்று அவனுடைய வழக்கறிஞர் வாதாடினார் அவனும் பைத்தியம் மாதிரி நடித்தான். அதனால்தான் அந்தப் பெயர். பத்து வருட தண்டனை கொடுத்துத் தீவாந்தரத்துக்கு அனுப்பி விட்டார்கள் தண்டனைக் காலம் முடிவடைந்துவிட்ட பின்னரும் அவன் இங்கேதான் வசிக்கவேண்டும்.

எங்களுக்காகப் பிரமாதமான படகு தயாரித்துத் தருவதாகச் சொன்னான் பைத்தியம். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தான். எங்களோடு அவனையும் அழைத்துச் செல்ல வேண்டுமாம்.

"அதனாலென்ன, அவனையும் சேர்த்துக் கொள் வோம்," என்று தோழர்களிடம் கூறினேன். "பாய் மரப் படகில் நாலு பேர் செல்வது சுலபம்தான். கூடவே அவன் இருப்பதால் நமக்கு ஆபத்து இருக்காது; வசதிகளும் சொன்னபடி கிடைக்கும்."

எல்லாரும் பைத்தியத்தின் நிபந்தனைக்குச் சம்மதித் தோம்.

ஒரு நாள் இரவு ரகசியமாகச் சென்று படகைப் பார்த் தேன். அருமையான நிலைமையில் இருந்தது. பாய் மரமும் வலைகளும் நான் திரட்டி வைத்திருந்த மரப் பலகைகளும் கச்சிதமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தண்ணீரில் காலை தொங்கப்

www.t.me/tamilbooksworld



போட்டபடி பைத்தியம் புகைப் பிடித்துக்கொண்டு உல்லாசமாய் உட்கார்ந்திருந்தான். இந்த முறை ஏமாறமாட்டோம் என்ற திருப்தியுடன் திரும்பினேன்.

சில நாளைக்கெல்லாம் காஸ்ஸி என்னை அணுகிக் கிசு கிசுத்தான். "இன்று இரவு நாம் தப்பப் போகிறோம். ஒன்பது மணிக்கெல்லாம் ஆஜர் பட்டியல் எடுத்து முடிந்தானதும் ஓசைப்படாமல் புறப்பட்டுவிடு. மூங்கில் தோப்பில் பைத்தியம் காத்திருப்பான். அங்கிருந்து ராத்திரியே கிளம்பி விடுவோம். வழியில் பைத்தியத்தின் நண்பன் நமக்கு உணவு கொடுப்பான்."

அன்று பகல் பூரா என் உள்ளம் படபடத்துக் கொண்டிருந்தது. ஆஜர் பட்டியல் எடுத்தானதும் நான், பிகோஸி, காஸ்ஸி மூவரும் நழுவ வேண்டும்.

மரோனி ஆற்றின் வழியாக, பிரிட்டிஷ் கயானாவில் உள்ள ஜார்ஜ் டவுனுக்குப் போய்விட வேண்டும் என்பது என் திட்டம். அங்கே தஞ்சமடையும் கைதிகளை அவர்கள் நாடு கடத்துவது கிடையாது. அதனால்தான் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன்.

மாலை மணி நான்காயிற்று. இருப்புக் கொள்ளாமல் தவித்தேன். இந்த முயற்சி தோற்று விடுமோ? நினைத்துப் பார்க்கக் கூட மனம் நடுங்கியது. முயற்சி தோற்றுப் போய் நாங்கள் பிடிபடுவோமானால் விளைவு இரண்டு அல்லது மூன்று வருடத் தனிமைச் சிறை! அது மிகக் கொடுமை. தனிமைச் சிறையிலிருந்து தண்டனை முடிந்து வெளியே வருகிறவர்களை நான் பார்த்திருக்கிறேன். கண்கள் பஞ்சடைந்து எலும்பும் தோலுமாய் நடைப் பிணமாய்க் காட்சியளிப்பார்கள்.

www.t.me/tamilbooksworld



# 15

அன்று இரவு தப்பியோடுவதாகத் திட்டம்.

அச்சம் நெஞ்சுக் குழியை அடைக்க நானும் என் தோழர்களும் சாப்பாட்டை முடித்துக் கொண்டோம். காத்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் வயிற்றைப் பிசைந் தெடுத்தது. வெளி வாசல் பூட்டைக் காஸ்ஸிதான் சத்தம் போடாமல் கழற்ற வேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்திருந்தோம். அவனும் அதற்கு ஆயத்தமாக இருந்தான். அவன் மாட்டிக் கொண்டால் மூன்று பேரும் சேர்ந்து குற்றத்தை ஒப்புக் கொள்வது என்று தீர்மானித்திருந்தோம்.

இரவு நெருங்கியது. கும்பல் கும்பலாகச் சீட்டாட உட்கார்ந்தார்கள். சிலர் எருமைக் கொம்புகளைத் தண்ணீரில் ஊறப் போட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு அதிலே சிற்பம் செதுக்கி விலைக்கு விற்பார்கள்.

சீட்டாட்டம் மும்முரமாய் நடந்து கொண்டிருந்த சமயம் திடீரென்று ஒரு கூச்சல்: "வார்டன்! வார்டன்!"

இளம் வயதுக் கைதியொருவன்தான் கூச்சலிட்டான். ஒரு நிஜார் மட்டுமே அணிந்திருந்த அவன் தள்ளாடித் தடுமாறிக் கதவை நெருங்கினான் உயிர் போகும் அவஸ்தையுடன் வயிற்றைக் கையால் பிடித்துக் கொண்டான். முகம் பூராவிலும் ரத்தம் வடிந்து வெளிறிவிட்டது. மகத்தான மன உறுதியுடன் எழுந்து நின்றுவிட்டு வாசல் படியில் விழுந்தான். "மூச்சுத் திணறத் திணற நானே செத்துக் கொண்டிருக்கிறேன்..." விம்மினான்.

அவன் கையிடுக்குகள் வழியே செக்கச் செவேலென்ற நிறத்தில் எதுவோ தெரிந்தது.

www.t.me/tamilbooksworld



அவனுடைய குடல்!

ஆம்! குடல் சரிந்து வெளியே விழும் அளவுக்கு அவனை யாரோ குத்திவிட்டார்கள்!

காவலாள் ஓடிச் சென்று கதவைத் திறந்து அவன் நிலைமையைப் பார்த்தவன், உடனே, "யாரங்கே! ஒரு சவப் பெட்டி தயார் செய்யுங்கள்!" என்று உத்தரவிட்டான். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எடுக்கும் மாமூலான நடவடிக்கை ஒன்று உண்டு. அதன்படி, "கைதிகளையெல்லாம் சோதனை போடு!" என்று கட்டளையிட்டான்.

குத்தப்பட்ட கைதி நரக வேதனையில் துடித்துக் கொண்டிருந்தான் டாக்டர் விரைந்து வந்து அவனை அப்புறப்படுத்தினார். அதற்குள் கைதிகள் முகாம் அமளி துமளிப்பட்டது. சோதனை போட்டால் என்னென்ன கண்டு பிடித்துவிடுவார்களோ என்று ஒவ்வொரு கைதியும் தன் பொக்கிஷங்களை ஒளிக்க ஆரம்பித்தான். சீட்டுக் கட்டுகள், கத்திகள், சாக்லேட், பணம்.

ஈசல் புற்றைக் கலைத்த மாதிரி அந்த முகாம் நிலை குலைந்து சிதறியது. தப்பியோடுவதற்கு இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டால் என்ன?

"பிகோஸி! காஸ்ஸி! சீக்கிரம்! இதுதான் சந்தர்ப்பம்!" என்றேன் தோழர்களிடம்.

சிறையின் ஒரு கோடியில் சிறிய கொட்டகையொன்று இருந்தது. மரண தண்டனை பெற்றவர்களைத் தலையை வெட்டுவதற்காக முன்பு ஏற்பட்டிருந்தது. அதன் மீது சிறைச் சுவரைத் தாண்டிக் குதிப்பதென்று முடிவு செய்து நம் தோழர்களிடம் அந்த இடத்தைச் சுட்டிக் காடினேன் "வாருங்கள், யாரும் நம்மைக் கவனிக்கவில்லை!" என்றேன்.

www.t.me/tamilbooksworld



கைதிகளும் காவலர்களும் ஓர் இடத்தில் கூடி அணி வகுத்தபடி இருந்தார்கள் ஒரு வினாடிகூடத் தாமதிக்க வில்லை.

தோழர்களுக்கு சைகை காட்டியவுடன் புரிந்து கொண்டார்கள். கிடங்குக் கொட்டகையை நோக்கி ஓட்டம் பிடித்தேன். நான்தான் உருவத்தில் சின்னவன். கறுப்பும் அதிகம். ஆகவே என்னைப் பின்பற்றி காஸ்ஸியும் குண்ட னான பிகோஸியும் ஏணி மாதிரி நின்று கொண்டு, என்னைக் கூரையின் மீது ஏற்றி விட்டார்கள். நான் சிறைச் சுவரை ஒரு கையால் பிடித்துக் கொண்டு அவர்களுக்குக் கை கொடுத்து மேலே இழுத்தேன் கிட்டத்தட்ட என் கழுத்தே முறிந்து விடும் போலாகிவிட்டது. அத்தனை வலி, காஸ்ஸி முதலில் ஏறிவிட்டான். பிறகு அவன் பிகோஸியைத் தூக்கிவிட்டான். அங்கிருந்து அதே ஏணி முறையைக் கையாண்டு சிறைச் சுவர் மீதும் ஏறிவிட்டோம்.

இனி மறுபக்கம் குதிக்க வேண்டும். நான் காஸ்ஸியின் ஒரு கையைப் பற்றிக்கொண்டு குரங்கு மாதிரி தொற்றிக் கொண்டிருந்தேன்.

"குதி! குதி!" என்றான் காஸ்ஸி.

குப்புற விழாமல் நன்கு நேராகவே குதித்தேன். ஆனால் சரியான உயரம். என் முழங்கால்கள் விலாவுக்குள் புகுந்து கொண்டுவிட்ட மாதிரி இருந்தது. தோழர்களும் என்னைப் பின்பற்றிக் குதித்தார்கள். காஸ்ஸிக்குப் பாதத்தில் சுளுக்கிக் கொண்டது. ஆனால் பலமான அடி இல்லை.

"வேடிக்கை பார்! மரண தண்டனைக் கருவிதான் இன்றைக்கு என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது!" என்று நண்பர்களிடம் சொன்னேன்.

www.t.me/tamilbooksworld



இருளும் இரவும் கவிழ்ந்து போர்த்திக் கொண்டு எங்களை பாதுகாத்தது. மூங்கில் தோப்பில் படகுக்காரனைச் சந்திக்க வேண்டும் என்று கண் மண் தெரியாமல் இருட்டில் ஓடினோம். வானத்தில் கருமேகங்கள் திரண்டு எந்த வினாடியும் பொத்துக் கொள்ளப் போவது போல் இருந்தன. பொழுது விடிய வேண்டியதுதான்-நிச்சயமாய், வாரக் கணக் காகச் சேர்ந்திருக்கும் மழை கொட்டோ கொட்டென்று கொட்டப் போகிறது.

வேட்டைக்காரன் போல மெல்ல இரண்டு முறை விசிலடித்தேன். பைத்தியம் பதிலுக்கு விசிலடித்தான். கல்ல றையை நோக்கி அவன் உருவம் எச்சரிக்கையுடன் நடந்து வருவது தெரிந்தது.

"நான்தான், வெட்ரோட்டி.

அவனுடைய குரலை அடையாளம் கண்டுகொண் டேன். அவன் முன்னே வந்தான். நாங்கள் உணர்ச்சி வசப் பட்டவர்களாய்க் கைகுலுக்கிக் கொண்டோம். நாங்கள் காத்திருந்த நேரம் இதோ வந்தாகிவிட்டது!

"ஆற்றிலே இருக்கிறது படகு" என்றான்.

"நம் அதிர்ஷ்டம் நீரோட்டம் நமக்குச் சாதகமாக இருக்கிறது. சீக்கிரம் வாருங்கள்" என்றேன்.

படகில் ஏறி உட்கார்ந்து சுக்கானைப் பிடித்தேன். என் மூன்று தோழர்களுக்கும் படகைப் பற்றி ஆனா ஆவன்னா கூடத் தெரியாது. தொப் தொப்பென்று குதித்தார்கள் கவிழ்ந்துவிடும் போல் ஆடியது படகு.

"மெதுவாய், பிகோஸி! உன் யானை உடம்பைப் படகின் மத்தியில் வைத்துக்கொள்!" என்றேன்.

இனி என்ன நேரிட்டாலும் சரி, பின்வாங்குவதில்லை..

www.t.me/tamilbooksworld



நங்கூரம் போட்டுக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தேன். படகு நடுங்கியது. நீரோட்டம் எங்களை இழுத்துச் சென்றது. கரையோரமாகவே படகை விவேகத்துடன் செலுத்தினேன். நடுநடுவே ஏதாவதொரு மரத்தின் அடிப் பகுதி படகை இடிக்கும். அல்லது சுழலில் படகு சிக்கி, எதிர்க் கரையிலுள்ள டச்சுப் பகுதியை நோக்கித் திருப்பி விட்டுவிடும். அதன் கரை இருட்டில் புலப்பட்டதுமே படகை மறுபடி திருப்புவேன். மாமரங்களின் பெரும் கிளைகள் எங்களுக்கு ஆசி கூறி வழியனுப்புவது போலத் தண்ணீரைத் தாழ்ந்து தொட்டன.

திடீரென்று பிகோஸி தன் இடத்திலிருந்து தாவி என் இடத்திற்குப் பாய்ந்தான். படகு பயங்கரமாகக் குலுங்கியது.

"பிகோஸி! உனக்குப் பைத்தியமா என்ன? நீ செய்த காரியத்தில் படகே கவிழ்ந்திருக்கும்!" என்றேன்

"ஒரு தேங்காய் மேலேயிருந்து விழுவதைப் பார்த்தேன். அதுதான் இந்தப் பக்கம் நகர்ந்தேன். உன் தலையில் விழுந்திருந்தால் தெரியும்!" என்று பிகோஸி முணுமுணுத்தான்.

மனிதன் காலடி வைத்திராத காட்டுப் பகுதிக்குள் நாங்கள் சென்று கொண்டிருப்பதை உணர்ந்தேன். அதன் ஸ்பரிசங்கள் என்னைப் புல்லரிக்க வைத்தன.

தூரத்தில் கரையின் ஓர் இடுக்கில் ஒரு மீனவனின் உருவம் தென்பட்டது.

## 16

"**த**ரையோடு ஒளிந்து கொள்! சத்தம் போடாமல் துடுப்புப் போடு," என்றான் பிகோஸி.

www.t.me/tamilbooksworld



படுத்துக் கொண்டு கையால் மெல்லத் தள்ளினேன். மரப் பலகைகள் எங்கள் உடலைக் குத்தின. கொஞ்சம் தள்ளி இன்னொரு மீனவனும் எங்களைக் கண்டான். ஒரு நிமிடம் பார்த்துவிட்டு எங்கோ போய்விட்டான்.

விடிகாலை நாலு மணி.

சிறையில் எங்களைத் தேடிக் கொண்டிருப்பார்களோ என்று நினைத்தேன். ஒரு கைதியை இருபத்து நாலு மணி நேரம் வரை காணோமென்றால்தான் அவன் தப்பியோடி விட்டதாக அறிவிப்பார்கள் என்று ஞாபகம் வந்தது.

வானத்தில் சிவப்பும் நீலமுமான கீற்றுக்கள் தென் படலாயின. லே ஹட்டே என்ற இடத்தை அடைந்து விட்டோம். எவ்வளவோ கொலைகார சம்பவங்கள் நிகழ்ந்த இடம் இது.

இங்கேதான் எங்களுக்குச் சாப்பாடு வருமென்று பைத்தியம் சொல்லியிருந்தான். பட்டாளம் பட்டாளமாகக் கொசுக்கள் எங்களைக் கொத்திப் பிடுங்கிக் கொண்டிருந்தன. அடர்ந்த மேகம் போல, நகருகின்ற சுவர் போல அடை அடையாய் வந்தன அவை. அங்கிருந்து அம்புகள் போல எங்கள் மீது பாய்ந்து தாக்கின. அந்தக் கொசுக்களை அடித்துப் பயனில்லை. ஒரு கொசுவை அடித்தால் அந்த இடத்தில் முப்பது கொசுக்கள் தோன்றும்.

“இனிமேல் கஷ்டமான வேளைதான். கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்போம். நல்ல வேளை வசதியான மணல் திட்டுக்கள் இருக்கின்றன” என்றேன்.

நண்டு மாதிரி மண்ணைத் தோண்டிப் பொந்துகள் செய்து அதற்குள் ஒளிந்து கொண்டோம். எங்கள் தலை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அதையும்கூடக் கைக்

www.t.me/tamilbooksworld



குட்டையால் மூடிக் கொண்டிருந்தோம்- கொசு வலை மாதிரி. அந்த நிலையிலேயே பொழுது விடிகிற வரையில் தூங்க முயன்றோம்.

எல்லாம் திட்டப்படி நடைபெற்றால் நாளை மாலை நாலு மணிக்கு இங்கிருந்து புறப்பட்டுவிடலாம். நீரோட்டமும் நமக்குச் சாதகமாகவே இருக்கும். ஆனால் உணவுகள் வர ஏன் இத்தனை தாமதமாகிறது?

முந்தின முறை மாதிரியே இப்போதும் எவனாவது மோசடி செய்து விடுவானோ? எனக்கு உள்ளுக்குள் உதைப்பு ஏற்பட்ட சமயம்-

எங்கோ இருட்டிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"சுட்டு விடாதீர்கள்! நான் உங்கள் தோழன்!" என்றபடி ஒரு கிழவன் வந்தான் அவன் கண்கள் எங்களைச் சந்தேகத்துடன் பார்த்தன.

"புரிகிறது. புரிகிறது. நீங்கள் சிறையிலிருந்து ஓடி வந்தவர்கள்தானே?" என்றான்.

"சே, சே! நாங்கள் உல்லாச யாத்திரிகர்கள்!" என்று கிண்டலாகப் பதிலளித்தேன். பிறகு நாங்கள் பாய்மரத்துக் காகவும் உணவுக்காகவும் காத்திருப்பதைச் சொன்னேன். பைத்தியம், "மௌர்ஸியர் என்கிற ஆள் உங்கள் கண்ணில் பட்டால் சீக்கிரம் வரச் சொல்லுங்கள்," என்றான்.

"மௌர்ஸியர் வரவே மாட்டான்" என்ற கிழவன் என்னைப் பார்த்து, "உன் பெயர் என்ன?" என்றான்.

"மிலானி" என்றேன்.

"ஓகோ! நீதான் அந்த எருமை மாட்டின் வயிற்றில் மதுப் புட்டியைச் செருகிய ஆளா!" என்று சிரித்தான் கிழவன். "அது எல்லோருக்கும் தெரிந்து போய் இப்போது ஊரில்

www.t.me/tamilbooksworld



இருக்கிற ஆடுமாடுகளையெல்லாம் சோதனை போட்டுக் கொண் டிருக்கிறார்கள்! அது போகட்டும். நான் உங்களுக்கு உதவி செய்யத் தயாராயிருக்கிறேன். எனக்குப் பணம் அவ்சர மாகத் தேவைப்படுகிறது. உங்களுக்கு என்ன வேண்டும், சொல்லுங்கள். மெர்ஸியர் வரமாட்டான். உங்களைப் போல வேறொரு கும்பலுக்கு உதவி செய்யப் போய் அவன் மாட்டிக்கொண்டு விட்டான். இப்போது ஜெயிலில் இருக்கிறானோ அல்லது கல்லறையில் இருக்கிறானோ!"

"தற்சமயம் நாங்கள் பிரெஞ்சு நியூகினியை விட்டு வெளியேறியாக வேண்டும்" என்றேன்.

"என்னுடன் வாருங்கள் பயப்பட வேண்டாம். என் பெயர் துபாய். நான் கடல் ஆமைகளை வேட்டையாடு கிறவன். சமயங்களில் கைதிகள் தப்பியோடுவதற்கும் உதவி செய்வேன். சரி, கொஞ்ச நேரம் என்னுடன் சேர்ந்து மீன் பிடியுங்களேன் நீங்கள் பிடிப்பதை நீங்களே வைத்துக் கொள்ளலாம். இப்போதைக்கு என் கையில் ஒரு பைசாகூட இல்லை. ஆகவே உங்களுக்கு உணவு வகைகள் கொண்டு வந்து தர என்னால் முடியாது. நாளை மறு நாள் சிலருக்கு முட்டைகளும் சுறா மீனும் கொண்டு வந்து தருவதாகச் சொல்லியிருக்கிறேன் அப்போது வேண்டுமானால் என் கையில் கொஞ்சம் பணம் இருக்கும். எதுவானாலும் ராத்திரி வேளையில் உங்களுக்கு ஆபத்து எதுவும் நேராது. பகல் வேளையில் நான் உங்களை ஒளித்து வைக்கிறேன். மூன்று நாள் காத்திருந்தால் தேவையான பொருள்களுடன் நீங்கள் புறப்பட்டு விடலாம்," என்று கூறி முடித்தான் கிழவன்.

நாங்கள் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி அவன் பின்னால் நடந்தோம். காட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதி வந்ததும் திடீரென்று அவன் மறைந்துவிட்டான். எங்கேயோ

www.t.me/tamilbooksworld



பாதாளத்திலிருந்து கேட்கிற மாதிரி அவன் குரல் கேட்டது. "இப்படி வாருங்கள்!"

குரல் வந்த திசையை நோக்கிச் சென்றோம். மறைவானதோர் இடத்தில் ஒரு பாதை தொடங்குவது தெரிந்தது. அதன் வழியே சென்ற போது ஒரு கொட்டகை காணப்பட்டது. முதலாம் உலகப் போரின் போது போடப்பட்ட பாதுகாப்புப் பொந்து மாதிரி இருந்தது.

"நான் போரில் கலந்துகொண்டு அனுபவம் பெற்றவன். அதனால்தான் இதைக் கட்ட முடிந்தது. சுவர்கள் விழுந்து விடாமல் இருக்க மரப் பலகைகளால் முட்டுக் கொடுத்திருக்கிறேன். ஒளிந்து கொள்வதற்கு அருமையான இடம். இரண்டு அடி தள்ளிப் போனால் புதை மணலில் மாட்டிக் கொள்வீர்கள்" என்றான் துபாய்.

உள்ளே புகுந்து கொண்டோம். ஒரே வெப்பமாய் இருந்தது. இதைக் காட்டிலும் வெளியே காட்டிலேயே இருக்கலாம் என்று தோன்றியது. இந்த மாதிரி இடங்களில் இருக்கக் கூடிய புழுக்கள், நண்டுகள், பாம்புகள்- இவற்றோடுதான் வசிக்க வேண்டியிருக்கும் என்று தோன்றியது. ஆனால் இங்கே எங்களை யாரும் கண்டுபிடிக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

நாங்கள் ஊர்க் கதைகள் பேசியபடி, மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பற்றித் திட்டமிட்டபடி பொழுதைக் கழித்தோம். இரவு வந்தது. துபாய் எங்களிடம் ஆளுக்கொரு கூடை தந்தான் தன்னுடன் கரையோரமாக வரும்படி சொன்னான். போனோம்.

www.t.me/tamilbooksworld



## 17

அந்தக் கடலாமை எங்கே வசிக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, கரையோரத்தில் அதன் காலடியைத் தொடர்ந்து சென்றோம். கடைசியில் ஓரிடத்தில் அதன் பொந்தைக் கண்டு பிடித்தோம். அங்கிருந்த முட்டைகளைத் திரட்டி எடுத்துக் கொண்டோம். ஒரு முட்டையை நான் உடைத்து உள்ளிருப்பதைக் குடிக்கப் போனேன். துபாய் சட்டென்று தடுத்தான். "வெள்ளைக் கருவைத் தின்னக் கூடாது. மஞ்சள் கரு மட்டும்தான் உணவுக்கு ஏற்றது. அதையும் கூட பச்சையாய் சாப்பிடக் கூடாது. வாந்தி வரும்" என்றான்.

தன் வேட்டையைக் கணக்கெடுக்க ஆரம்பித்தான் துபாய். ஆறு அங்குலம் அல்லது அதற்கு மேல் விட்டமுள்ள முட்டைகள் தான் விற்பனையாகும். ஆகவே அந்த அளவுள்ள முட்டைகள் இன்னும் கொஞ்சம் சேகரித்தால் தான் ஸெயின்ட் லாரண்ட்டுக்குப் போய்வரக் கட்டுப்படியாகும். ஆகவே இன்னொரு கடலாமையைக் கண்டுபிடித்து அதன் பின்னே சென்றோம். கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பிராந்தியம் பூரா கடலாமைகள் நிரம்பலாயின.

"அதோ பார்!" என்று கூவினான் துபாய்.

இரண்டு கடலாமைகள் ஆணும் பெண்ணுமாகத் தண்ணீரில் குலவிக் கொண்டிருந்தன.

"அவைகளை எப்படியாவது பிடித்துப் படகில் தூக்கிப் போடுங்கள். உங்களுக்குத் தேவையான பாய்மரங்களையும் உணவு வகைகளையும் இனாமாக நான் தருகிறேன்" என்றான் துபாய்.

ஓசைப்படாமல் அந்த இளம் தம்பதியை நெருங்கினோம்.

www.t.me/tamilbooksworld



தங்கள் கொஞ்சலிலேயே ஈடுபட்டிருந்ததால் எங்களை அவை கவனிக்கவில்லை. சுலபமாய்ப் பிடித்துவிட்டோம். ஆனால் தண்ணீரில் இருந்தவரையில் லேசாக இருந்த இரண்டும், வெளியே தூக்கியபோது வெகு கடுமையாய் கனத்தன. எல்லோருமாகச் சேர்ந்து படகில் ஏற்றினோம்.

துபாய் எல்லாக் கடலாமைகளையும் சந்தைக்கு எடுத்து சென்று விற்றுவிட்டு வந்தான். நல்ல விலை கிடைத்த திருப்தி யுடன் எங்களுக்கு உணவுகளும், பாய் மரங்களும், படகுக்குத் தேவைப்பட்ட வேறு சில கருவிகளும் வாங்கி வந்து கொடுத் தான். சாப்பாட்டுப் பொருள்களையும் குடி தண்ணீர் புட்டி களையும் படகின் அடிப்புறத்தில் பத்திரப் படுத்தினோம்.

விடிகாலை நாலு மணிக்குப் புறப்படுவதற்குத் திட்டமிட்டிருந்தோம். அப்போதுதான் எங்களைக் கடலில் கொண்டு செல்வதற்குச் சாதகமாக நீரோட்டம் இருக்கும்-

படகில் ஏறிக் கொண்டோம். ஒரு பிரம்மாண்டமான ஆமையோட்டை துபாய் எங்களுக்குப் பரிசளித்தான். வழியில் ஏதாவது தேவைப்பட்டால் அந்த ஓட்டைப் பண்டமாற்றாக விற்றுக் கொள்ளலாம் என்றான் ஒவ்வொருவர் பையிலும் ஒரு பாக்கெட் சிகரெட்டைத் திணித்து, “போய் வாருங்கள்! வழியில் எத்தனை ஆபத்து இருக்குமோ தெரியாது” என்று விடை கொடுத்தான்.

“போய் வருகிறோம்!” என்று கையசைத்தோம்.

மரோனி ஆறு கடலோடு கலக்கும் இடம் அது. இயற்கையாகவே வேகமாயிருந்தது. நாங்களும் துடுப்புப் போட்டு வேகத்தை அதிகப்படுத்தினோம். நடுநடுவே துருத்திக் கொண்டிருந்த பாறைகளினால் பயங்கரமான சுழல்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் வேலியை லாகவமாகத் தாண்டும்

www.t.me/tamilbooksworld



குதிரை மாதிரி எங்கள் படகு அபாயமான அலைகளைத் தாண்டியது.

பாய்மரத்துக்குச் சாதகமாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. நாங்கள் மெல்ல மெல்லக் கடலுக்குள் புகுந்து விட்டோம். லேசாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது கடல். எனினும் வசதியாகப் பயணம் செய்துவிடமுடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டது. லே ஹாட்டே என்னுமிடத்தை அடைந்தபோது, தூரத்தில் ஒரு வினோதமான சப்தம் வருவதை என் செவிகள் உணர்ந்தன. ஆனால் என் தோழர்களுக்கு அது கேட்கவில்லை.

சற்றைக்கொல்லாம் அந்த ஓசை இன்னும் தெளிவாகக் கேட்கலாயிற்று. டபடபடப... டபடபடப்.. தண்டவாளத்தில் நீராவி இஞ்சின் போகிற மாதிரி! சந்தேகமேயில்லை.! அது எனக்கு மிக நன்றாய்த் தெரிந்த சத்தம்...

திரும்பிப் பார்க்கிறேன்.

அதோ-ஒரு விசைப் படகின் உருவம் தெரிந்தது. எங்களுக்கும் அதற்கும் அதிக தூரம் இல்லை.

"அது டேனன்!" என்று கூவினேன். என் முகத்திலிருந்து மொத்த ரத்தமும் வடிந்து விட்டாற்போல் உணர்ந்தேன்.

'டேனன்' என்றால் சிறைக்குச் சொந்தமான படகு என்று அர்த்தம். இந்தப் பகுதிகளில் விசைப் படகுகள் விற்பதற்கு ஏகபோக உரிமை பெற்றுள்ள நிறுவனத்தின் பெயர் 'டேனன்.'

பிகோஸி மூச்சுத் திணறலுடன், "அவர்கள் நம்மைப் பார்த்து விட்டால் அதோ கதிதான்!" என்றான்.

"படகை நிறுத்து! படகை நிறுத்து!" என்று பைத்தியம் எங்களிடம் கூவினான். "நான் அவர்களிடம் சரணடைந்து

www.t.me/tamilbooksworld



விடுகிறேன். அசாதாரணச் சூழ்நிலையில் நான் உங்களுடன் சேர்ந்ததாகச் சொல்லி என்னை மன்னித்து விடுவார்கள்."

பைத்தியம் எழுந்து நின்றான் படகில். தண்ணீரில் குதித்து, நீந்திச் சென்று விசைப்படகை அடைந்து சிறைக் காவலர்களிடம் சரணடையலாமென்பது அவன் திட்டம். ஆனால் அவன் இங்குமங்கும் ஓடியதில் எங்கள் படகே கவிழ்ந்து விடும்போல் ஆடியது.

அவனுக்கு அருகில் இருந்த காஸ்ஸியிடம், "அவனைச் கொஞ்சம் அடக்கு. பயத்தில் புத்தி கெட்டு உளறுகிறான்." என்றேன்.

அவ்வளவுதான். பைத்தியத்தின் தாடையில் காஸ்ஸி ஓங்கி ஒரு குத்து விட்டான் பைத்தியத்தின் பற்கள் நொறுங்கும் சத்தம் கேட்டது எங்களுக்கு. அவன் படகின் தரையில் சுருண்டு விழுந்தான்.

அதற்குள் 'டேனன்' எங்களைக் கண்டுவிட்டது முழு வேகத்துடன் எங்களை நோக்கி விரையத் தொடங்கியது. அதன் புகைக் கூண்டிலிருந்து கடும் புகை வளையங்கள் கொட்டின.

"ஓட்டம் பிடிப்போம்!" என்று நண்பர்களிடம் சொன்னேன். "டச்சு கயானாவை அடைவது ஒன்றுதான் நாம் தப்பிப்பதற்கு வழி. சட்டப்படி டச்சுக் கரையில் அவர்கள் நம்மைப் பின் தொடர முடியாது!"

எங்கள் பலம் கொண்ட மட்டும் துடுப்பை வலித்தோம்.

ஒன்று-இரண்டு-மூன்று, ஒன்று இரண்டு-மூன்று.. துடுப்பை முன்னுக்கு நீட்டு; தண்ணீருக்குள் சுழற்று; தண்ணீரை விட்டு மேலே தூக்கு; மறுபடி முதலிலிருந்து ஆரம்பி-

www.t.me/tamilbooksworld



விசைப்படகு எங்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. பெரும் சுறா மீன்களின் செதில்கள் தண்ணீரைத் துளைத்துக் கொண்டு தென்பட்டன.

இம்முறை அவர்கள் எங்களைப் பிடிக்க இடம் தரப் போவதில்லை. ஆகட்டும், தோழர்களே, ஆகட்டும்! சீக்கிரம்! மேலும் வேகமாக! இதோ இன்னும் ஐந்நூறு கெஜ தூரம்தான்... நானூறு. இன்னும் வேகமாய்..

பைத்தியத்துக்கு மயக்கம் தெளிந்துவிட்டது. "என்னை மன்னியுங்கள் நண்பர்களே... என்னமோ முட்டாள்தனமாய்ப் பேசிவிட்டேன்..." என்றான்.

மழைத் துளிகள் விழுகிற மாதிரி சடசடவென்று ஒரு சத்தம்.

தோட்டா மழை!

ஆனால் நாங்கள் அவர்களுக்குப் பிடிபடும் தூரத்தைத் தாண்டிவிட்டோம். இன்னும் முன்னூறு கெஜ தூரம்... இருநூறு கெஜம்.. ஐம்பது..

என்னால் மூச்சு விட முடியவில்லை. என் கண்கள் ரத்தச் சிவப்பாக ஆகிவிட்டன. தலை வெடித்துவிடும் போலாகி விட்டது. ஆனாலும் விடாமல் துடுப்புப் போட்டேன். எல்லோருமே வலித்தோம்.

## 18

இருண்ட கரை தெரிந்தது. என்ன துரதிர்ஷ்டம்! இந்தப் பகுதியெல்லாம் ஒரே புதை மணல்தான் ஓரடி மேலே

www.t.me/tamilbooksworld

சென்றிருந்தால் நாங்கள் புதையுண்டு போயிருப்போம். சட்டென்று இடப்புறம் திருப்பினேன் படகை. குறுகலான கால்வாய் கண்ணில் பட்டது. இங்கே சற்றுத் தெளிவாகவும் தெரிந்தது. இதோ கரையை அடைந்து விட்டோம்!

“பேசாமல் சரணடையுங்கள்! நீங்கள் தப்பவே முடியாது!” என்று சிறைக் காவலர்கள் கூவினார்கள்.

“சரிதான் போடா!” என்றேன்.

இன்னொரு நாட்டுக் கரையோரத்துக்கு அவர்கள் சட்ட விரோதமாகப் புகுந்துவிட்டார்கள். தப்பியோடும் கைதியைப் பிடிப்பதற்காக வேற்று அரசாங்கத்தின் பிரதேசத்தில் நுழையலாமென்று சட்டத்தில் இடம் இருக்கிறதோ ஒரு வேளை? இருக்காது. சட்டம் எங்கள் பக்கம்தான் இருக்கிற தென்ற நம்பிக்கையுடன் நாங்கள் ஓட்டம் பிடித்தோம்.

பின்னால் ஐந்து முறை சுடப்படும் சத்தம் கேட்டது. பிற்பாடு சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தைக் குலைத்துக்கொண்டு ஒரு காவலாள் கத்தினான்: “டேய், மரியாதையாகத் திரும்பி விடுங்கள். பிடிபட்டீர்களோ நூறு மடங்கு அதிக தண்டனை கிடைக்கும்!”

மறுபடி நிசப்தம்.

துரத்தி வந்த விசைப் படகு திரும்பிப் போய்விட்டதா என்ன? இந்த ஆட்கள் பயங்கரமானவர்களாயிற்றே? அவ்வளவு சுலபமாகக் கைதிகளை விட்டுவிட மாட்டார்களே! தப்பியோடும் கைதிகளைப் பிடித்துத் தரும் வேலை ஒரு பிரத்தியேகமான கும்பலிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நீக்ரோக்கள், அராபியர்கள், இந்தியர்கள், வ்யர்டன்கள், இன்னும் தண்டனை முடியாத கைதிகள்-இப்படிப் பலபேர் கொண்ட கும்பல் அது. கைதி வேட்டையில் சரியான கழுகுகள்.

www.t.me/tamilbooksworld



எங்கள் படகை விட்டு இருபது முப்பது கெஜதூரம் கரைக்குள்ளே ஓடி, அடர்த்தியான புதர்களின் பின்னே ஒளிந்தோம் நாங்கள்.

“அதோ விசைப் படகு அங்கேயே நின்று கொண்டிருக்கிறது. ஏன்?” என்றான் பிகோஸி கவலையுடன். ஆம், அசையாமல் இருந்தது விசைப் படகு.

“எனக்கு தெரியவில்லையே?” என்றான் காஸ்ஸி. பிறகு, “ஆம், அதோ இருக்கிறது. ஆனால் இதெல்லாம் டச்சுக் கரை இல்லையோ? எப்படி அவர்கள் இதுவரை வரலாம்?”

“எனக்கும் புரியவில்லை. கொஞ்ச நேரம் அமைதியாயிரு” என்றேன்.

ஒண்டி முடங்கி ஒளிந்திருந்தோம். மெல்லிய கடல் அலைகள் கரையின் ஓரங்களைத் தொட்டுக் கொண்டிருந்தன.

தாழ்ந்த குரலில் பைத்தியம் தன் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான் எங்களிடம். வாய்விட்டுப் பேசுவது அவனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது போலும். அவனுக்குக் காடுகளைப் பற்றி நிறைய அனுபவம் இருந்தது. காட்டின் மர்மங்களைப் பற்றி எங்களுக்குப் பல விஷயங்கள் சொன்னான். பிற்காலத்தில் அவை எவ்வளவு உபயோகமாயிருந்தன! பசியில் உயிர் போகும் சமயங்களில் காட்டின் தாவரங்களும் பிராணிகளும் தானே எங்களைக் காப்பாற்றி இருக்கின்றன. கனிகளின் சாற்றைக் குடித்து எப்படியெல்லாம் எங்கள் தாகத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறோம்! சீதபேதியானாலும் சரி, காயங்கள் ஏற்பட்டிருந்தாலும் சரி, எந்த மூலிகையை எப்படி மருந்தாக உபயோகப்படுத்த வேண்டுமென்று பைத்தியம்தான் சொல்லித் தந்தான்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென்று நான் பயந்தபடியே நடந்தது. ஒரு கட்டுமரம்

www.t.me/tamilbooksworld



கரையை நோக்கி வரத் தொடங்கியது. ஐந்து பேர் அதில் இருந்தார்கள் மூன்று வார்டன்கள், இரண்டு முன்னாள் கைதிகள் என்று கண்டு கொண்டேன். நாங்கள் கரையேறி யிருக்கும் இடத்தை நோக்கி ஓசைப்படாமல் வந்தது. கரைக்குச் சில கெஜ தூரம் இருக்கும்போது எச்சரிக்கையுடன் நின்றது. தண்ணீரில் துடுப்புப் போடும் சத்தம் ரொம்ப மெது வாகக் கேட்டது.

வார்டன்கள் எழுந்து நின்றார்கள் மற்ற இருவரும் கட்டுமரத்திலிருந்து இறங்கிக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். சுற்றுப்புறங்களை ஆராய்ந்தார்கள். கொஞ்சம் தவறியிருந் தால் எங்களையே மிதித்திருப்பார்கள். அத்தனை அருகாக வந்து, துப்பாக்கியால் செடிகொடிகளையும் புதர்களையும் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டே சென்றார்கள்.

"ஊஹூம். இங்கே யாரும் காணோம். ஓடிவிட்டார்கள் போலிருக்கிறது!" என்றான் ஒருவன்.

அதற்குள் நாங்கள் மறைவாய் நிறுத்தியிருந்த எங்களுடைய படகு அவர்கள் கண்களில் பட்டுவிட்டது. துப்பாக்கியால் படபடவென்று சுட ஆரம்பித்தார்கள் நாங்கள் அரும்பாடு பட்டுக் கட்டியிருந்த படகு, சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டது. வெறும் விறகுக் குவியல் மாதிரி அதைச் சேதப்படுத்திய பிறகுதான் அவர்கள் துப்பாக்கி ஓய்ந்தது.

ஒருவன் சொல்வது எனக்குத் தெளிவாய்க் கேட்டது: "அந்தப் பசங்கள் இனி எங்கும் போக முடியாது. காட்டுக் குள்ளே மாட்டிக்கொண்டு மண்டையைப் போட்டிருப் பாங்க!"

அப்படிச் சொன்னவன் ஒரு கைதிதான்-இந்த மாதிரி

www.t.me/tamilbooksworld



வேலைக்காகச் சிறை நிர்வாகத்தால் அமர்த்தப்பட்டவன். அவனுடைய வெறி பிடித்த முகம் அப்படியே என் மனத்தில் ஆழப் பதிந்திருக்கிறது. எங்கள் படகைத் துளைத்தது போதாதென்று கத்தியால் வெட்டியும் போட வேண்டு மென்று ஆர்வத்துடன் துடித்தான். ஆனால் ஒரு வார்டன் உடனே அவனைத் தடுத்து நிறுத்தினான்; "உஷ்! ரொம்பக் கலாட்டா பண்ணாதே. நாம் அத்து மீறி டச்சு மண்ணில் நுழைந்திருக்கிறோம்" என்று எச்சரித்தான்.

அவர்கள் கட்டுமரத்தில் தாவி ஏறிக்கொண்டார்கள் கொஞ்சம் கொஞ்சமாய் எங்கள் பார்வையிலிருந்து மறைய ஆரம்பித்தார்கள். முழுவதும் மறையட்டும் என்று தரை யோடு தரையாகப் பதுங்கிக்கொண்டு காத்திருந்தோம். எங்கள் இதயங்கள் தட்தட்டென்று அடித்துக் கொண் டிருந்தன. விசைப் படகின் இஞ்சின் சத்தம் கொஞ்சம் தூரத்தில் கேட்டது. இறுதியில் அது வெகு அமைதியாக மரோனி ஆற்றின் முகத்துவாரத்தை நோக்கிச் சென்று விட்டது.

"பன்றிகள்!" என்று காறி உமிழ்ந்தான் காஸ்ஸி. "எவ்வளவு தூரம் நம்மைத் துரத்தி வந்திருக்கிறார்கள் பாரேன்!"

"தப்பியோடிய வேறு சில கைதிகளை வெனிசுவேலா வரைகூடத் துரத்திச் சென்றிருக்கிறார்களாக்கும்!" என்றேன் நான். "கைதிகள் தங்கள் வயிற்றுக்குள்ளே செருகி வைத் திருக்கும் பணக் குப்பிகளின்மீது அவர்களுக்கு வெகு ஆசை!"

புதரிலிருந்து குபுக்கென்று வெளியே தாவியவன் உடனே என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு திரும்பினேன். இன்னும் சிறிது நேரம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. எவனாவது ஒளிந்து கொண்டிருந்து எங்களை வேவு பார்த்துக் கொண்டிருக்கக் கூடும்.

www.t.me/tamilbooksworld



அடுத்து என்ன செய்யவேண்டும்? ஜார்ஜ் டவுனை நோக்கிச் செல்லலாமா? இனிமேல் அது முடியாது. எங்கு பார்த்தாலும் எங்களைத் தேடிக் கொண்டிருப்பார்கள். ஒரே ஓர் ஆள் என்றால் சரி-நாலு பேர் கொண்ட கோஷ்டி யார் கண்ணிலும் படாமல் தப்புவது கஷ்டம். அதில் ஒருவன் ஆயுள் தண்டனை பெற்றவன்...

எப்படி இவ்வளவு சீக்கிரம் நாங்கள் தப்பிவிட்டதை அறிந்து பின் தொடர்ந்து வந்தார்கள்?

இதையெல்லாம் யோசித்தபடியே புதரை விட்டு வெளியே மெதுவாய் வந்தேன் என் தோழர்களும் வெளிப்பட்டார்கள் எல்லாரும் அவசரமாகக் கூடி ஆலோசனை செய்தோம்.

நம்மை யாரேனும் காட்டிக் கொடுத்து விட்டார்களா? அது யாராயிருக்கும்? துபாயா? அல்லது வழியில் சந்தித்தோமே ஒரு மர்மமான மீனவன், அவனா? அதைப் பற்றிப் பிறகு கவலைப்படலாம். இப்போது எந்தப் பக்கம் செல்வது? இடது பக்கம் மரோனி ஆறு, லே ஹாட்டே, அப்படியே போனால் குரு, கேயன் முதலிய இடங்கள். வலது பக்கம் போனால் எஃப்ராட்டோ, சோமல்ஸ்டிஜிக், நியூ ஆம்ஸ்டர்டாம், பரமாரிபோ என்ற பெயருள்ள ஊர்கள் இப்படியே காட்டு வழியே உள் நாட்டிலேயே போனால் மோயங்கோ என்ற இடம் வரும். ஆனால் அது ஆபத்து. ஒரு ராணுவப் பாசறை அங்கே இருக்கிறது.

ஒரு முடிவும் செய்ய முடியவில்லை. நல்ல பசி எங்கள் எல்லாருக்கும். ஏதாவது சமையல் செய்யலாம். ஆனால் நெருப்பு மூட்டவே அச்சமாயிருந்தது.

திரும்பப் புதரையே அடைந்தோம். விசைப்படகு போய்விட்டதென்றாலும், எங்கள் மார்பு இன்னும் அடித்துக்

www.t.me/tamilbooksworld



கொண்டுதான் இருந்தது. மூச்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். மேலும் காட்டுக்குள் நுழைவது அபாயம் என்று தெரிந்துதான் விசைப்படகுக்காரர்கள் திரும்பிச் சென்றிருக்கிறார்கள் என்று புரிந்தது. காட்டுக்குள் எத்தனையோ ஆபத்து என்று அவர்களுக்குத் தெரியும். அந்த ஆபத்தில் சிக்கிக்கொண்டு நாங்கள் இறந்துவிடுவோம் என்று எண்ணித்தான் போயிருக்கிறார்கள்.

இருட்டில் நாங்கள் காத்திருந்தோம்.

பாவம், பைத்தியம்தான் ரொம்ப ஆடிப் போய் விட்டான். இப்படியே போனால் அவன் எங்களுக்கு ஒரு சுமையாகி விடுவான் என்று தோன்றியது. அதைக் காட்டிலும் அவனைக் கூப்பிட்டு, 'நீ பாட்டுக்கு ஆல்பினா நகரத்துக்குப் போய் டச்சு அதிகாரிகளிடம் சரணடைந்து விடு. அவர்கள் பிரெஞ்சு அரசிடம் உன்னை ஒப்படைத்து விடுவார்கள். பழைய இடத்தில் நீ பாட்டுக்குச் சௌக்கியமாக இருக்கலாம்' என்று சொல்லி விடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் அந்தத் தோழனிடம் உற்சாகமாகப் பேசி தைரிய மூட்டுவதே மேல் என்று தீர்மானித்தேன்.

## 19

**பை**த்தியத்துக்கு உற்சாக மூட்டும்படி ஏதாவது பேச வேண்டுமென்று தீர்மானித்தேன். "இதோ பார் காஸ்ஸி, என்னோடு வா. உடைந்து நாசமாகிவிட்ட படகிலிருந்து ஏதாவது தேற்ற முடியுமா என்று பார்ப்போம். உணவு ஏதாவது உருப்படியாக இருந்தால் எடுத்துக் கொள்வோம், பிறகு டம்போர்க் என்னுமிடத்தை நோக்கி நடப்போம்" என்று சொல்லிவிட்டுப் பைத்தியத்தின் பக்கம் திரும்பினேன் "வெட்ரோட்டி, ஏன் சோர்வாக இருக்கிறாய்? உற்சாகமாயிரு.

www.t.me/tamilbooksworld



எப்படியும் நமக்கு வெற்றிதான். ஆனால் நீதான் எங்களுக்குக் கைகொடுக்க வேண்டும். மனிதன் கால்பட்டிராத இந்தக் காட்டைப் பற்றி உனக்குத்தான் தெரியும். ஆகையால் தப்பியோடும் முயற்சி வெற்றியடைய வேண்டுமானால் நீதான் உற்சாகமாய் வழி காட்ட வேண்டும். நாம் நாலு பேர்-வாழ்ந்தாலும் சரி, வீழ்ந்தாலும் சரி!'' என்றேன்.

அந்தக் கடற்கரையில், நிர்மலமான நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தின் கீழ் நான் பேசிய இந்தப் பேச்சு, பைத்தியத்துக்குத் தேவையான நம்பிக்கையை அளித்தது. வாழ்க்கையில் முதல் தடவையாக மற்றவர்களுக்குத் தான் தான் பொறுப்பாளி என்ற உணர்வு அவனுக்கு ஆனந்த மளித்தது. முகத்தில் ரத்தம் ஏற, வார்த்தைகள் தொண்டை யில் சிக்கின.

"நல்லது தோழர்களே, நல்லது!'' என்றான். "படகிலிருந்து குதித்து உயிரை விடுவதற்கிருந்த என்னை நீங்கள்தான் காப்பாற்றினீர்கள். ஆகவே உங்களை நான் காப்பாற்றுவேன். இது கடினமான காடுதான். ஆனால் கொஞ்சம் பழகிவிட்டால் பிறகு கஷ்டமாயிருக்காது. இருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே நமக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே!''

அவன் குறிப்பிட்டது உணவைத்தான். எங்கள் உணவு அடியோடு, அல்லது அனேகமாக, நாசமாகிவிட்டது. படகை அழித்து விட்டார்களாகையால், மது பானப் புட்டியும், இறைச்சிகள் அடைத்த சில சிறு டப்பாக்களும்தான் மிஞ்சியிருந்தன. குடி தண்ணீர் வைத்திருந்த கேன்களில் ஒன்றே ஒன்றைத் தவிர மற்ற எல்லாம் பாழாகி விட்டன. தண்ணீரில் ஊறிக் கொண்டிருந்த இன்னும் இரண்டொரு பொருள்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டோம். வெய்யிலில் உலர்த்தினால் மறுபடி உபயோகிக்க முடியும். அதிர்ஷ்டவசமாக புகையிலை பத்திரமாக இருந்தது. காரணம் அதை எங்களுடனேயே வைத்திருந்ததுதான்.

www.t.me/tamilbooksworld



"டம்போர்க்குக்கு எத்தனை மைல் இருக்கும்?" என்று நண்பர்கள் கேட்டார்கள்.

"எனக்குத் தெரியாது. உத்தேசமாக அறுபத்தைந்து மைல் இருக்கலாம். சாதாரணமான சாலையானால் மூன்று நாளில் அங்கே போய்விடலாம். ஆனால் காட்டு வழியில் எப்படிச் செல்ல முடியும்? எப்படி இருந்தாலும் நமக்கு வெற்றிதான். இருட்டப் போகிறது. புறப்படலாம்," என்றேன்.

மாலுமி மாதிரி நட்சத்திரங்களை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு நடந்தேன் என்னுடைய அதிர்ஷ்ட நட்சத்திரத்தையும் நம்பினேன் என் உள்ளுணர்வுதான் எங்களை வழி நடத்தியது. போய்ச் சேர வேண்டிய இடத்தையும் நாங்கள் இருந்த இடத்தையும் கணக்கெடுத்துக் கொண்டு, கிழக்குத் திசையில் நடக்கலானோம்.

இரவு ஏழு மணி. இருந்த சொற்ப உணவை எங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டோம். வேட்டைக்கு உபயோகப்படும் ஒரு கத்தி தான் எங்களுடைய ஒரே ஆயுதம். எங்களுடைய அபாயப் பயணத்தைத் தொடங்கினோம்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பிரம்மாண்டமான மரங்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டன. ஒவ்வொன்றும் தொண்ணூறு அடி உயரம் இருக்கும். அதே உயரமுள்ள சில பட்டுப் போன மரங்கள் அவற்றின் மீது சாய்ந்திருந்தன. கண்ணுக்குத் தெரியாத எத்தனை அபாயங்கள் மறைந்திருக் கின்றனவோ என்று மிக எச்சரிக்கையாகவே நடந்தோம். அப்படியும்கூட ஓரிடத்தில் ஒரு சேற்றுக் குழியிலே நான் விழுந்துவிட்டேன். முழங்கால் வரை புதைந்துவிட்ட என்னைத் தூக்கியெடுத்தார்கள். அதிலிருந்து வெளிப் பட்டதுமே காட்டுக் கொடிகள் உருக்கில் செய்த கம்பி போல அத்தனை கூர்மையானவை-என் முழங்கால்களில் சுற்றிக் கொண்டன. சுருக்கு மாதிரி காலைக் கவ்விக் கொண்டன. அவைகளி

www.t.me/tamilbooksworld



லிருந்தும் என்னை விடுவித்துக் கொண்டு நடந்தேன்.

உறங்கிக் கொண்டிருந்த காட்டெலிகள் கூட்டமொன்றை நாங்கள் உசுப்பிவிட்டு விட்டோம். எலியா அது! பன்றி அளவு இருக்கும். எங்கு பார்த்தாலும் குறுக்கும் நெடுக்குமாகத் துள்ளிக் கொண்டு பாய்ந்தன ஏராளமான மின்மினிப் பூச்சிகள் இருண்ட வானத்தில் பளிச்பளிச்சென்று பறந்தன. மரங்களின் கீழ்ப்புறத்துக் கிளைகளில் உட்கார்ந் திருந்த கொசுக்கள் எங்கள் மீது படையெடுத்தன. அவற்றின் கடியைத் தாங்கிக்கொண்டு நடப்பது பெரும்பாடாக இருந்தது.

கணிசமான தூரம் நடந்துவிட்டோம் என்று தோன்றியது. முதல் முகாமைத் தற்காலிகமாக அமைத்துக் கொள்ளத் தீர்மானித்தோம்.

சற்று மேடாக ஏதாவது இடம் கிடைக்குமா என்று ஆராய்ந்தோம். கிடைத்தால் மரக் கிளைகளைக் கொண்டு ஒரு கூடாரம் அமைத்துக் கொள்ளலாம். காட்டுக் கொடிகளைக் கொண்டு தொட்டில் கட்டிக் கொள்ளலாம். பிறகு கற்களை அடுக்கி அடுப்பு மூட்டலாம். காட்டு வாசிகள்-காட்டு முகாமுக்கு அனுப்பப்படும் கைதிகள் கூட-அப்படித்தான் செய்து கொள்வது வழக்கம்.

பெரிய பெரிய தேரைகளின் கத்தல் இரவின் நிசப்தத்தைக் குலைத்தது. இடம் காடாகையால் அந்த ஒலி இன்னும் பெரிதாகக் கேட்டது. நடுநடுவே கண்ணுக்குத் தெரி யாத ஒரு பறவையின் சீட்டியொலி. தாள முடியாத வெப்பம் வேறே. ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து, எண்ணியபடியே முகாம் அமைத்துக் கொண்டோம்.

சுற்றியிருந்த சகதியின் ஈரம் என்னைத் தூங்க விட வில்லை. தொட்டிலாகக் கட்டியிருந்த காட்டுக் கொடிகள் என் பிட்டத்தையும் கால்களையும் கத்தியாய் அறுத்தன. கொசுக்கள் என் உடைகளையும் துளைத்துக்கொண்டு சதையை ருசி

www.t.me/tamilbooksworld



பார்த்தன.

"தூங்குவோம் தோழர்களே, குட் நைட்!" என்றேன்..

நாங்கள் யாரும் பேசவில்லை.

நாளை என்னென்ன கஷ்டங்கள் காத்திருக்குமோ! அவைகளைத் தாங்கிக் கொள்வதற்கான வலிமையைப் பெற வேண்டுமானால் இப்போது பரிபூரண ஓய்வு தேவை என்பதை உணர்ந்திருந்தோம். உணவில் ரொம்பக் கொஞ்ச மாகவே சாப்பிட்டோம். தண்ணீர் இரண்டு வாய்தான் உறிஞ்சினோம். உணவை எவ்வளவு ரேஷன் செய்துகொள்ள முடியுமோ அவ்வளவு செய்வது என்று முடிவு செய்திருந் தோம். இது தீர்ந்துவிட்டால், காட்டுவாசிகளைப் போலக் கனி கிழங்குகளைத் தின்று உயிர் வாழ வேண்டியதுதான்.

பொழுது புலர்ந்தபோது கறுத்த மேகங்கள் வானில் திரண்டு குவிந்திருந்தன. திடீரென்று வெள்ளமாய் மழை கொட்ட ஆரம்பித்தது. புயல் மழை வீசியது. மரக் கிளைகளின் மீது விழுந்த மழைத் துளிகள், தண்ணீர்க் குழாய் உடைத்துக் கொண்டதுபோல, தாரையாய் வர்ஷித்தது.

"காஸ்ஸி! நில்!" என்று பைத்தியம் திடுப்பெனக் கூவினான். "நகராதே!"

நாங்கள் உறைந்து போனோம்.

கன்னங் கரிய பெரிய பாம்பொன்று சுருட்டிக் கொண்டு வழியில் கிடந்தது. அந்த வகைப் பாம்பைக் 'காட்டு ராணி' என்றழைப்பது வழக்கம். மழை பெய்ததால் தன் புற்றை விட்டு வெளி வந்திருக்கிறது.

ஓர் அடி எடுத்து வைத்திருந்தால் காஸ்ஸி அதை மிதித்திருப்பான்.

"பிரேஸில் பகுதிகளில் இந்த வகைப் பாம்பு நிறைய

www.t.me/tamilbooksworld



உண்டு" என்று பைத்தியம் விளக்கினான். "சில சமயங்களில் அங்கிருந்து இவ்வளவு தூரம் கூட வந்து விடுகின்றன. நகராதே. அது படமெடுத்து உன் காலில் ஒரு போடு போடுவதற்காகத் தான் காத்திருக்கிறது. மறு வினாடியே மரணம்தான்."

எங்கள் தேகம் நடுங்கியது.

## 20

அந்தப் பாம்பையே நடுக்கத்துடன் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றோம். நல்ல காலம், திடீரென்று சுருட்டி வைத்திருந்த உடலை பின்னல் போல் பிரித்துக் கொண்டது. சரசரவென்று ஓடி மறைந்தது.

தப்பியோட ஆரம்பித்தாலும் ஆரம்பித்தோம்-பற்பல விஷயங்களைப் பற்றி அறிந்து கொண்டே பயணம் செய்ய முடிந்தது. சில அடி மரங்கள் பார்ப்பதற்குக் கெட்டியாக, திடமாகத் தெரியும். ஏறி உட்கார்ந்து கொள்வோம். அவ்வளவு தான்! உள்ளூர உளுத்துப் போயிருக்கும் அவை! பொத்தென்று பொந்துக்குள் விழுந்துவிடுவோம். மற்றவர்கள் கைகொடுத்து வெளியே இழுத்துக் காப்பாற்றுவார்கள்.

நடந்து நடந்து கால்கள் களைத்தன. காலின் கீழே தரை நழுவுகிற மாதிரி இருந்தது. இடறி விழுந்தால் என்ன ஆகுமோ என்று எச்சரிக்கையுடன் நடந்தோம். விலங்குகள் எதுவும் கண்ணில் படவில்லை. குரங்குகளும் பறவைகளும் எழுப்பும் கிறீச் கிறீச் ஒலி மட்டும் அவ்வப்போது கேட்டது.

இதுதான் முதல் நாள். இன்றைத் தினத்தைச் சமாளிப் போமா என்றே எனக்குச் சந்தேகமாகிவிட்டது. நடுநடுவே ஏதாவது குன்று தென்பட்டால் அதன் உச்சிக்குச் சென்று,

www.t.me/tamilbooksworld



சூரியன் எங்கிருக்கிறான் என்பதை வைத்து, நாங்கள் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைக் கணக்கிட்டுக் கொண்டேன். வெய்யில் என் இடது தோளில் விழுமானால் சரியாகத் தான் போய்க் கொண்டிருக்கிறோம் என்று அறிந்து கொண்டேன். பச்சைப் பசேலென்ற தாவரங்கள் மெல்ல அசைந்து கொண்டிருந்தன. சின்னச் சின்னதான ஆயிரக் கணக்கான காடுகள் அடுத்தடுத்து வந்து கொண்டேயிருக்கிற மாதிரி தோன்றியது. மனிதனின் கண்ணுக்கே படாத நதி மரங்களின் மறைவில் ஓடிக் கொண்டிருக்கும். கொஞ்சம் திறந்தவெளி தெரியும். சிறிது இடைவெளிக்குப் பிறகு மறுபடி காடுகள் ஆரம்பமாகும்.

"ஐயோ! என்னை எதுவோ கடித்துவிட்டது!" என்று திடீரென யாராவது ஒருவர் கூச்சலிடுவார்.

அவரருகே ஓடிச் சென்று பார்ப்போம். அவருடைய கையிலோ அல்லது காலிலோ ஊசி குத்தினாற் போல் ஏராளமாய்க் கடி தெரியும். முள் கொடிதான். சதையில் ஆழமாய்க் குத்திக் கொண்டு நிற்கும் முட்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கி அகற்றுவோம். ஆனால், முள்ளை எடுத்ததும் பொட்டுப் பொட்டாய் ரத்தம் வருமாகையால் பூச்சிகள் பறந்தோடி வரும். அவைகளின் கடி தாளவே முடியாது.

குடிப்பதற்காக வைத்திருந்த தண்ணீர் தீர்ந்துவிட்டது. ஆனால் தாகத்தைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. காரணம்-

"அதோ பாருங்கள் ஒரு மலைப் பாம்பு!" என்று பைத்தியம் சுட்டிக் காட்டினான் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை. இந்தப் பச்சைப் பிரதேசத்தில் எதைப் பார்த்தாலும் பச்சையாகத்தான் இருக்கிறது. மரங்கள், மரங்க்ள், மரங்கள்.

www.t.me/tamilbooksworld



"அதோ!" என்று பைத்தியம் மறுபடி காட்டினான்.

ஆ! அதோ! ஒரு கிளையோடு கிளையாகச் சுற்றிக் கொண்டிருந்தது ஒரு மலைப்பாம்பு.

பைத்தியம் அதன் அருகே சென்றான். "மலைப் பாம்பே, மலைப் பாம்பே! எங்களுக்குத் தண்ணீர் வேண்டும். தயவு பண்ணிக் கொடேன்" என்றான்.

கையில் வைத்திருந்த கத்தியினால் அதை ஒரு வெட்டு வெட்டினான். ஊற்று பொத்துக் கொண்டது போல் சுத்த மான, புத்தம் புதிய தண்ணீர் அதிலிருந்து பீய்ச்சியது!

பின்புதான் எங்களுக்குப் புரிந்தது.

இது மலைப் பாம்பல்ல. ஒரு காட்டுக் கொடி. தண்ணீர் நிறைந்த கொடி, மலைப் பாம்பைப் போலவே அதன் பருமனும் நிறமும் இருந்தன!

"இதே போலத் தோற்றமளிக்கும் பல கொடிகள் உண்டு. ஆனால் குடிநீர் கிடைக்கும் கொடி எது என்று ஜாக்கிரதை யாகக் கண்டுபிடிக்கவேண்டும். சில கொடிகளின் தண்ணீர் ரொம்ப விஷம். அதைக் குடித்தால் உடனே மரணம்தான். இந்தக் கொடியைப் பாருங்கள் வளையம் வளையமாக இருக்கிறது. இதுதான் அடையாளம்," என்று விளக்கினான் பைத்தியம்.

தண்ணீரைக் குடித்தோம். ஓரளவு தாகம் தணிந்தது. ஆனால் பசி பிடித்துக் கொண்டது.

ஏதாவது சாப்பிட வேண்டுமே! உண்ணக் கூடிய கிழங் காக ஏதேனும் அகப்படுகிறதா என்று தேடிக்கொண்டே சென்றோம். தண்ணீருள்ள கொடியைக் கண்டுபிடிப்பதைக் காட்டிலும் இது கடினமாக இருந்தது. கடைசியில் ஏதோ அகப்பட்டது. பசியைத் தீர்த்துக் கொண்டோம்.

www.t.me/tamilbooksworld



இரண்டாம் நாள் பயணம் தொடங்கியது. குறிப்பிடத் தக்கதாக எதுவும் நேரவில்லை. ஆனால் இடைவிடாமல் கொசுக்களுடன் போராட வேண்டியிருந்தது. அத்துடன், எங்கே பாம்பு கடித்துவிடுமோ என்று குலை நடுங்கிக் கொண்டேயிருந்தோம். வெய்யில் இன்னொரு பக்கம் வறுத்தெடுத்தது.

பிகோஸி.சட்டென்று நின்றான். "மிலானி, உனக்கு அந்த ஓசை கேட்கிறதா?" என்று கேட்டான்.

"என்ன ஓசை?"

"யாரோ நடமாடுகிற மாதிரி."

## 21

அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்பதைச் சொல்ல முடியவில்லை. எங்களோடு அந்தச் சத்தம் கண்ணாமூச்சி விளையாடுகிற மாதிரி இருக்கிறது. நாங்கள் இடது பக்கம் தலையைச் சாய்த்து உற்றுக் கேட்டால் அது வலது பக்கம் போகிறது. வலது பக்கம் தலையைச் சாய்த்தால் இடது பக்கம் போகிறது. இதோ எங்களுக்கு முன்னால் போகிறது. இல்லையில்லை, பின்னால்.

"பைத்தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது!" என்றேன்.

துள்ளிக் கொண்டு சென்றது அந்தக் காலடியோசை. பிறகு நின்றது. "யாரது?" என்று உரக்கக் கூவ வேண்டும்போல் இருந்தது. அடக்கிக் கொண்டோம். எங்கள் குரலே எங்களை அச்சுறுத்துவதாக இருந்தது.

"பொறுத்தது போதும்" என்றான் காஸ்ஸி. "நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் நேராகப் போவோம்.

www.t.me/tamilbooksworld



கொஞ்ச தூரம் சென்று ஆராய்ந்தபின் இதே இடத்துக்குத் திரும்பி வருவோம். நம்மைப் பின்பற்றி ஏதாவது சிறுத்தை வருகிறதோ என்னவோ."

"சிறுத்தையாயிருந்தால் பரவாயில்லை. எவனாவது ஆளாக இருந்தால் தான் ஆபத்து."

காஸ்ஸியின் யோசனையை ஏற்றுக் கொண்டு வெவ் வேறு திசைகளில் நடந்தோம். நல்ல வேளையாக, இந்தப் பகுதிகளில் காடு அத்தனை அடர்த்தியாக இல்லை. ஆனால் செடி கொடிகள் எங்கள் தலை உயரத்துக்கு இருந்தன. முப்பது வினாடிகளுக்கு ஒரு முறை ஒருவருக்கொருவர் குரல் கொடுத்துக்கொள்வது என்று தீர்மானித்தோம். யாருக்காவது வழி தெரியாமல் போனால் அந்த இடத்தி லேயே நின்றுவிட வேண்டுமே தவிர மேற்கொண்டு வழியைத் தேடிக்கொண்டு அலையக் கூடாது என்று முடிவு செய்தோம். அப்போதுதானே மற்றவர்கள் அவரைக் கண்டுபிடிக்க முடியும்?

நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட திசையில் நடக் கலானேன். என்னைக் கண்டு பயந்து போன பிரம்மாண்ட மான பட்டாம்பூச்சிகள் படபடவென்று பறப்பதைக் காண வினோதமாக இருந்தாலும் அதைப் பார்த்துக் கொண்டிரா மல் மேலே நடந்தேன் இடது புறத்தில் மரக் கிளைகள் சலசலப்பது கேட்டது. இதுதான் அந்த மர்ம எதிரியோ? தவழ்ந்தபடியே என் தோழர்களின் குரல்களுக்குப் பதில் குரல் கொடுத்தேன். சில சமயம் அந்தக் குரல்கள் வெகு கிட்டத்தில் கேட்டன. சில சமயம் எட்டத்தில் கேட்டன. அவர்கள் இருக்கும் தூரத்தையும் புதர்களின் அடர்த்தியையும் பொறுத்துச் சத்தம் அமுங்கிக் கேட்டது. ஆனால் யாரும் கண்ணில் படவில்லை. ஒரு சிறிய ஜந்து-பளபளப்பான உடலும், கறுப்புக் கண்களும் கொண்ட எறும்புதின்னி-

www.t.me/tamilbooksworld



குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருந்தது. சாட்டை போல நீண்ட நாக்கு. மகா வேகத்துடன் அந்த நாக்கை நீட்டுவதும் உள்ளுக்கிழுப்பதுமாக ஓடியது. உளுத்துப் போன மரங்களுக்குள் படை படையாக வசிக்கும் எறும்புகளையும் கறையான்களையும் ஆனந்தமாக வேட்டையாடிக் கொண்டிருந்த அந்த ஜந்து, என்னைக் கண்டதும் நின்றது. தலையை உயர்த்தி என்னை ஆச்சரியத்துடன் பார்த்தது. உடனே பக்கத்திலிருந்த மரத்தில் கிடுகிடுவென ஏறிக் கொண்டது. தன் வாலையே காலாகக் கொண்டு மரக் கிளைகளைப் பிடித்துக் கொண்டு அது தொங்குவதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

பிகோஸி! காஸ்ஸி! பைத்தியம்!

மாறி மாறிக் குரல் கொடுத்தபடியே நடந்தோம். என் பகுதியில் எதுவும் தென்படவில்லை. திரும்பி நடந்தேன் ஆனால் என்னுள் எதுவோ உறுத்திக் கொண்டுதான் இருந்தது. என் அருகில் எங்கோ எவனோ ஓர் அன்னியன் இருப்பதை என்னால் உணர முடிந்தது. ஆனால் எங்கே? கைதிகளுக்கு ஆறாவது புலனொன்று இருப்பதுண்டு-அவன் தூங்கிக் கொண்டிருந்தாலும் சரி வேலை செய்து கொண்டிருந்தாலும் சரி, சீட்டாடிக் கொண்டிருந்தாலும் சரி, எச்சரிக்கையுடனேயே இருக்கிறான். என்னையும் அறியாமல் கத்தியை எடுத்துக் கொண்டது என் கை. சுற்றிலும் கவனமாக ஆராய்ந்தேன்.

ஆ! அதோ அந்த முட்புதருக்குப் பின்னால் பளபள வென்று ஏதோ ஒன்று-அசையாமல் இருக்கிறது.

"நண்பா!" என்று கத்தினேன். "நண்பா!"

அவன் ஒரு சிவப்பிந்தியன். வயனா என்ற பிரிவைச் சேர்ந்தவன் என்று கண்டு கொண்டேன். தோள் வரை முடி புரண்டு கொண்டிருந்தது. அரை ஞாண் கயிற்றில் கட்டப்

www.t.me/tamilbooksworld



பட்ட வண்ணக் கோவணம். சிப்பிகளும் முத்துக்களும் கோத்த பல நெக்லஸ்கள் அவன் கழுத்தில் காணப்பட்டன. முப்பது வயதிருக்கும் என்று தோன்றியது. குங்கும நிறத்தில் ஏராள மான சுருக்கங்கள் அவன் முகத்தில் தென்பட்டன. கையில் நீண்ட ஈட்டி வைத்திருந்தான்.

அவனைப் பயப்படுத்திவிடக்கூடாது என்று என் நண்பர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டேன். ஒவ்வொரு வராக வந்து சேர்ந்தார்கள். எல்லாருமாய் அவனைச் சூழ்ந்து கொண்டோம். ஆனால் எப்படிப் பேசினால் அவனுக்குப் புரியும் என்று தெரியவில்லை.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டேன்.

அவன் !பதிலளிக்கவில்லை. நாங்கள் எங்கே இருக்கி றோம் என்று கேட்டு, ஆகாயத்தில் ஒரு கேள்விக் குறியை வரைந்து காட்டினேன். பயனில்லை. ஆனால் நாங்கள் எந்த விஷயமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது அவனுக்குப் புரிந்தது போலும். தன் பின்னால் வரும்படி சைகை காட்டிவிட்டு நடந்தான்.

பாதை எதுவும் இருப்பதாகவே தெரியவில்லை. இருந்தாலும் அவன் போய்க் கொண்டிருந்தான். நாங்களும் போனோம். சில இடங்களில் குனிந்து போக வேண்டி யிருந்தது. சில இடங்களில் தவழ்ந்தோம். மரங்களின் அடிப்புறப் பொந்துகளைக் கடந்தோம். ஓர் ஓடையில் இறங்கி, சேற்றில் அமிழ்ந்துவிட்டு, வெளிப்பட்டோம். நடக்க நடக்க வியர்வை வெள்ளமாய்ப் பெருகியது. கடைசியில், ஒரு மணி நேரம் நடந்தபின், மந்திரம் போட்ட மாதிரி திடீரென்று அந்தத் திறந்த வெளியை அடைந்தோம். கடலின் வளை குடாப் பகுதி அது. எங்கு பார்த்தாலும் பச்சை -கரும் பச்சை. இரண்டு கொட்டகைகளும், மரக் கிளைகளாலான ஒரு பந்தலும்

www.t.me/tamilbooksworld



அங்கே இருப்பதைக் கண்டோம்.

மனித நடமாட்டம் எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை. எங்களைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அந்தப் பந்தலுக்குள் திடீரென் நுழைந்து, காட்டுக்குள் சென்றான் சிவப்பிந்தியன். உள்ளே புக முடியாத அளவுக்குக் காடு அடர்த்தியாக இருந்தது அந்த இடத்தில்.

ஒரு நிமிடம் கழித்து மறுபடி வெளிப்பட்டான் பந்தலுக்குள் வரும்படி எங்களுக்குச் சாடை காட்டினான். உள்ளே சென்றோம்.

புதர்களின் மறைவில் ஒரு படகு இருந்தது! துடுப்புகளும் இருந்தன.

சிவப்பிந்தியன் புன்னகை செய்தான்.

"இதுதான் நமக்குத் தேவை!" என்று கூவினேன். கச்சித மாகச் செதுக்கித் தயாரிக்கப்பட்ட படகு அது. மரத்தின் தன்மையைக் கொண்டு, சமீபத்தில்தான் தயாரிக்கப்பட்டது என்று கண்டுகொண்டேன்.

"இதை நமக்கு விற்க எண்ணுகிறான் என்று தோன்றுகிறது" என்றேன் என் தோழர்களிடம்.

நாங்கள் ரொக்கம் தரத் தயாராயிருக்கிறோம் என்பதை அவனுக்குப் புரிய வைத்தேன். அவன் மறுபடி புன்னகை செய்தான். சில இலைகளைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு, பணத்தை ஒருவன் கொடுக்கிற மாதிரியும் ஒருவன் பெற்றுக் கொள்கிற மாதிரியும் அபிநயம் பிடித்துக் காட்டினான்.

"எவ்வளவு பணம்?" என்று கேட்டேன்.

www.t.me/tamilbooksworld



## 22

இரண்டு சிறிய இலைகளையும் இரண்டு பெரிய இலைகளையும் சுட்டிக் காட்டினான் அந்தச் சிவப்பிந்தியன். சிறிய இலைகளைச் சுட்டிக் காட்டி, 'ஆமாம், ஆமாம்,' என்கிற மாதிரி தலையை ஆட்டினான். அப்படித் தலை யாட்டினால் 'இல்லை, இல்லை' என்று அதற்கு அர்த்தம் என்று எனக்குத் தெரியும். தன் படகுக்கு நூறு ஃப்ளாரின்-டச்சு நாணயம்-வேண்டும் என்று அவன் கேட்பதைப் புரிந்து கொண்டோம்.

"என் பணக் குப்பியில் பணம் இருக்கிறது. என்னுடன் வா, மிலானி" என்று அழைத்தான் காஸ்ஸி.

ஆனால் பிகோஸி வேறொரு திட்டம் சொன்னான்.

பிகோஸியின் யோசனை என்னவென்றால்:

இந்தச் சிவப்பிந்தியனுக்கு எதற்காகப் பணம் தருவது? நாலு உதை கொடுத்து அனுப்பிவிட்டுப் படகைக் கைப்பற்ற வேண்டியதுதானே?

ஆனால் அது நியாயமானதாக எனக்குப் படவில்லை. பொதுவாகவே சிவப்பிந்தியர்கள் எங்களைக் காட்டிலும் மோசமான நிலைமையில் இருந்தார்கள். அதுவும் இந்தக் குறிப்பிட்ட ஆளை ஒரு முறை பார்த்தாலே போதும்-காச நோய் பிடித்தவன் மாதிரி இருந்தான். கண்களில் காய்ச்சல் தெரிந்தது. கன்னம் ஒட்டி, உடம்பு எலும்புக் கூடாக-இவனையா மோசம் செய்வது? பாவம்.

காஸ்ஸியைத் தனியே அழைத்துச் சென்றேன். அவன் தன் குடலுக்குள்ளிருந்து பணக் குப்பியை வெளியே எடுத்து என்னிடம் தந்தான். கரென்ஸி நோட்டுக்களை அந்தக்

www.t.me/tamilbooksworld



குப்பியிலிருந்து வெளியெடுப்பதே சிரமமாக இருந்தது. அப்படிக் கெட்டியாக மடித்து, சிறிய சிறிய சுருள்களாக வைத்திருந்தான் நோட்டுக்களை அதிலே டச்சு நோட்டொன்றைக் கண்டுபிடித்தேன். சிவப்பிந்தியனிடம் திரும்பினோம். என் தோழர்கள் அவனுடன் சைகையில் பேசி எல்லா ஏற்பாடுகளும் முடித்துவிட்டார்கள் வலது கையால் நோட்டைச் சிவப்பிந்தியனிடம் கொடுத்து, ஒப்பந்தம் ஏற்பட்டதற்கு அறிகுறியாக இடது கையால் நான் கையை குலுக்கினேன்.

பின்னர் படகை எடுத்துக்கொள்வதற்காகத் தண்ணீர்க் கரையை அடைந்தோம். திடீரென்று எங்கள் எதிரே இரண்டு பேர் முளைத்தார்கள் ஒருவன் கையில் நீண்ட ஈட்டி வைத்திருந்தான். மற்றவன் ஒரு பழைய ராணுவத் துப்பாக்கி பிடித்திருந்தான்.

“ஐயையோ! நம்மைப் பிடிக்க வந்துவிட்டார்களே!” என்று காஸ்ஸி கூச்சலிட்டான்.

“ஆமாம். நாம் சிறையிலிருந்து தப்பியோடி வந்திருப்பவர்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, கொஞ்ச நேரமாகப் பின்னாலேயே வந்திருப்பார்கள் போலிருக்கிறது,” என்றான் பைத்தியம்.

“இப்ப என்ன செய்யலாம்?”

“முதலில் அவர்கள் நோக்கம் என்னவென்று பார்ப்போம்.”

படகை அடைந்து அதில் ஏற முயன்றோம். சிவப்பிந்தியனும் சேரவே மூன்று பேருமாக எங்களைத் தடுக்கிற மாதிரி குறுக்கே நின்றார்கள்

எங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடும்படி கேட்டேன். மறுத்தார்கள்.

www.t.me/tamilbooksworld



"ஏய் மோசடிக்காரர்களே! என்னிடமா விளையாடு கிறீர்கள்?" என்றேன்.

அவர்கள் நோக்கம் என்னவென்று கடைசியில் புரிந்தது.

படகைத் தூக்கி கொண்டு தண்ணீர்க் கரைக்கு வரும்படி சொன்னார்கள். அதைச் செய்யவிருந்த சமயம் நாலாவதாக ஒரு சிவப்பிந்தியன் வந்து சேர்ந்தான். இவன் வெள்ளைக் காரனைப் போலக் கால் சராய் மட்டும் அணிந்திருந்தான். வெற்று மார்பு. கையில் புகைக் குழாய் வைத்திருந்தான் இடுப்பிலிருந்த பெல்ட்டில் சில சிறிய அம்புகள் தொங்கின.

"மாட்டிக்கொண்டோம்" என்று பைத்தியம் முணு முணுத்தான்.

"சந்தேகமில்லாமல்" என்றேன் நான் "நம்மைப் பிடித்துக்கொடுத்துப் பரிசு வாங்குவதற்காகவே வந்திருக் கிறார்கள்"

இதிலொன்றும் ஆச்சரியமில்லை. சிறையிலிருந்து யாராவது தப்பியோடினால் சுற்று வட்டாரமெங்கும் அந்தச் செய்தி அறிவிக்கப்படுவது வழக்கம். ஜார்ஜ் டவுன் முதல் பரமாரிபோ அல்லது ஆல்பினா வரை எல்லா ஊர்களுக்கும் தகவல் போய்விடும். முதலில் இந்தக் கங்காணிகளுக்குத்தான் செய்தி எட்டும். காட்டுக்குள் செய்தி பரவுகிற வேகமே அலாதி.

தோழர்களிடம் தாழ்ந்த குரலில் சொன்னேன். "அவர்கள் நாலு பேர் இருக்கிறார்கள் புகைக் குழாய் வைத்திருக்கிற ஆள்தான் ரொம்ப அபாயமானவன். படகில் ஏறிக்கொண்டு ஓடிவிட முடியாது. நிச்சயம் நம்மை மடக்கிப் பிடித்து விடுவார்கள் தண்ணீர்தான் அவர்களுக்குத் தாய் வீடு. மீன்மாதிரி நீந்தி வந்துவிடுவார்கள் சீக்கிரமாய் ஏதாவது செய்யவேண்டும். தாமதித்தால் நம்மைப் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்து விடுவார்கள்."

www.t.me/tamilbooksworld



அந்த நாலு பேரும் எங்களையே கூர்ந்து பார்த்தபடி நின்றிருந்தார்கள். எங்களிடம் ரொக்கப் பணம் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும்.

"நான் ஒரு யோசனை சொல்கிறேன்" என்றேன் தோழர்களிடம். "இவர்கள் சொல்வதுபோலவே படகை நாம் தண்ணீர்க் கரைக்குத் தூக்கிச் செல்வோம். பிகோஸி, நீ எனக்கு ஒரு புறத்தில் நின்றுகொள். காஸ்ஸி, நீயும் பைத்தியமும் எனக்கு மறுபுறத்தில் இருந்து கொள்ளுங்கள். அவர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டு கூடவே வருவார்கள். தண்ணீரை அடைந்ததும் நம்மைப் படகில் ஏறிக் கொள்ளச் சொல்வார்கள் அவர்கள் விரும்பும் இடத்துக்கு போவதற்காக. நான் ஏற முடியாது என்கிறேன். நம்மைப் பயமுறுத்துவார்கள். என்னதான் நடக்கிறதென்று பார்ப்போம். நம் கத்தியினால் இரண்டு பேரை வீழ்த்தினால் போதும். மற்றவர்கள் ஓட்டம் பிடித்துவிடுவார்கள். புரிகிறதா? வாருங்கள், போகலாம்!"

படகைத் தூக்கிக் கொண்டோம். எங்களுடைய ஒவ்வோர் அசைவையும் அந்த நால்வரும் கவனித்த வண்ணம் இருந்தார்கள். ரொம்பப் பொல்லாதவனாகத் தோன்றியவன் கையில் நீண்ட ஈட்டி வைத்திருந்த ஆள்தான். துப்பாக்கி வைத்திருந்த ஆசாமி அதைப் பிகோஸியின் மீது குறி வைத்தபடியே நடந்தான். தண்ணீர்க் கரைக்கு வந்து சேர்ந்தோம்.

எங்களைப் படகில் ஏறும்படி சைகை காட்டிக் கட்டளையிட்டார்கள்.

நான் மறுத்தேன். புகைப் குழாய் பிடித்திருந்தவன் தன் இடுப்பிலிருந்து ஓர் அம்பை எடுத்தான். ஆனால் மின்னல் வேகத்தில் நான் அதைத் தட்டிவிட்டு அவன் கையில் என் கத்தியால் ஆழமாகக் குத்தினேன் வலி தாள முடியாமல் அலறிக் கொண்டு அவன் ஓடி மறைந்தான். துப்பாக்கிக் காரனும் ஓட்டம் பிடித்தான்.

www.t.me/tamilbooksworld



தோழர்கள் என்ன செய்கிறார்கள் என்று திரும்பிப் பார்த்தேன்.

ஈட்டி வைத்திருந்த ஆளைக் காஸ்ஸியும் பைத்தியமும் மடக்கிக் கீழே தள்ளி, அவனுடைய ஈட்டியையே அவன் கழுத்தின் மீது வைத்து இரண்டு புறமும் இரண்டு முனைகளை அழுத்திக் கொண்டிருந்தார்கள். கழுத்து நெரிக்கப்பட்டதால் அவன் விழிகள் கால்ஃப் பந்துகள் போலப் பிதுங்கித் தெறித்துக் கொண்டிருந்தன.

"விட்டுத் தொலை!" என்றேன். சுபாவத்தில் நாங்கள் கொலைகாரர்களல்லவே?

அவனை விட்டார்கள். எழுந்து ஓடினான்.

ஆனால், துரதிருஷ்ட வசமாக அவர்கள் ஓடும்போது படகையும் தூக்கிக் கொண்டு, அதற்காகக் கொடுத்த பணத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். பெரும் பேராசைக்காரர்கள் இந்த ஆட்கள், எங்களிடமிருக்கும் பணத்தையும் பறித்துக்கொண்டு சிறை அதிகாரிகளிடம் எங்களை ஒப்படைத்து அதற்கான பரிசுப் பணத்தையும் பெறத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்த அத்தியாயம் முடிந்தது என்று எண்ணிக்கொண்டு, பழைய பாதைக்குத் திரும்பி நடக்கலானோம். வெய்யில் கொளுத்திக்கொண்டிருந்தது. எங்காவது கொஞ்சம் மது கிடைக்காதா என்று காஸ்ஸி ஏங்கிக் கொண்டிருந்தான்.

என்ன அது!

தொலைவில், மெல்லிய புகைச் சுருள் ஆகாயத்தில் படர்ந்து உயருவதைக் கண்டோம்.

போராடியதன் விளைவாக, களைப்பின் காரணமாக, கானல் நீர் எங்கள் கண்களுக்குத் தோன்றுகிறதா?

www.t.me/tamilbooksworld



ஆம்.

சில நூறு கெஜ தூரத்தில் இரண்டு முனைகளில் மெல்லிய வலைகள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டோம். வெய்யிலில் உலர்த்தியிருந்தார்கள்.

"இவர்கள் நாகரிகமான மனிதர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த வலைகள் ரொம்ப நேர்த்தியாக இருக்கின்றன. இது கையால் தயாரிக்கப்பட்டிருந்தால் இப்படி இருக்காது" என்றேன்.

எனினும் எச்சரிக்கையாகவே இருந்தோம். இருட்டின பிறகு மெதுவாகவே எல்லாவற்றையும் ஆராயலாம் என்று முடிவு செய்தோம்.

## 23

மேலும் ஓர் இரவு காட்டில் விழிப்புடன் கழித்தோம். முந்தின இரவு தங்கியிருந்த இடத்தைக் காட்டிலும் இங்கே வெப்பமும் புழுக்கமும் அதிகமாயிருந்தன. ஆனால் செடி கொடிகள் அதிகச் செழிப்பாக இருந்தன.

"இதோ பார், இந்தத் திசையில் செல்வோம். அங்கிருந்து தான் கிளிகளும், அன்னங்களும் வருகின்றன. அங்கே போய்ப் பார்த்தால் இங்கு வசிப்பவர்களைப் பற்றி இன்னும் விவரமாகத் தெரியும்" என்றேன்.

புறப்பட்டோம்.

நாகரிக மனிதர்களின் இருப்பிடம் போல் தோன்றிய இடத்தை அடைவதற்கு முட்புதர்களின் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. முள்ளம்பன்றி குத்துவது போல் செடியின் முட்கள் தேகத்தைக் குத்தின. தவழ்ந்த வண்ணம் முன்னேறி

www.t.me/tamilbooksworld



னோம். எங்கள் உடைகள் கிழிந்தன. மஞ்சள் சிறகுகளும் காவி நிற மூக்கும் சிவப்பு நகங்களும் கொண்ட ஒரு பெரிய பறவை எங்கள் தலைக்கு மேலே அம்புபோல் விர்ரென்று பாய்ந்து சென்றது. மரங்களின் அடிப் பாகங்களைப் பாசி மூடி யிருந்தது. ஓர் ஆறு ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டோம். டால்பினுக்கும் சீலுக்கும் பிறந்தது போன்ற ஒரு பிராணி ஆசை தீரத் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அதன் நிறம் தண்ணீர் சேற்றைப் போல் இருந்ததால் இரண்டையும் இனம் பிரிக்க முடியவில்லை.

என்ன ஆறு இது? தெரியவில்லை. இருந்தாலும் சரியான திசையில்தான் போய்க் கொண்டிருக்கிறோம் என்று ஊகித்தேன். சூரியன் திடீரென்று அஸ்தமிக்கத் தொடங்கி னான். அதன் வெள்ளியும் ஊதாவுமான கிரணங்கள் துருவின் நிறத்திலிருந்த தண்ணீரில் பிரதிபலித்தன அதே சமயம் பூசணிக்காய் போலப் பெரிய சந்திரன் கிடுகிடுவென்று மேலெழும்பியது. உருண்டு எங்கள் தலைமேலே விழுந்து விடும் போலிருந்தது.

நாங்கள் ஒளிந்தபடி சென்றபோது, உள்ளூர்வாசிகளின் இருப்பிடத்தைக் காண முடிந்தது. பயிரிடுவதற்காகப் பூமியைச் சமனப்படுத்தியிருந்தார்கள். மூங்கில் கம்பங்களை நட்டு அதன் மீது இரண்டு சிறு வீடுகள் கட்டியிருந்தார்கள். இரண்டும் மரத்தில் செய்யப்பட்டவை. வேறு என்னென்ன தெரிகின்றன என்று பார்த்தபோது-

ஒரு வீட்டின் வாசலில் இளம் பெண் ஒருத்தியும் கிழவி ஒருத்தியூம் உட்கார்ந்து இருந்தார்கள் இளம் பெண் ஓர் அகலமான எனாமல் பூசிய பாத்திரத்தில் ஏதோ அரைத்துக் கொண்டிருந்தாள். கழுத்தில் தூளி கட்டிக் கொண்டிருந்தாள். அதில் படுத்திருந்த குழந்தையை அடிக்கடி தூக்கிப் பால்

www.t.me/tamilbooksworld



கொடுத்துக் கொண்டிருந்தாள். முட்டி முட்டிப் பால் குடித்துக் கொண்டிருந்தது குழந்தை. கிழவி சப்பணமிட்டு உட்கார்ந்து நாட்டுப் பிஸ்கெட்டுகள் தயாரித்துக் கொண் டிருந்தாள் உடம்பில் ஒரு துண்டு துணி கூட இல்லாத இரண்டு குழந்தைகள் குட்டிக்கரணம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தன. இரண்டு நாய்கள் அவர்களைக் கடிக்க முயலுகிற மாதிரி அவர்கள் விளையாட்டில் கலந்து கொண்டு சுற்றிச் சுற்றித் துள்ளிக் கொண்டிருந்தன. கிழவி நடுநடுவே ஒரு கல்லையோ கட்டையையோ எடுத்து வீசி அந்த நாய்களை விரட்டிக் கொண்டிருந்தாள்.

இரண்டாவது வீட்டில் அடுப்புக்கள் தென்பட்டன பாறாங்கல்லில் கட்டப்பட்டவை. பழைய எண்ணெய் பீப்பாய்களின் மீதும் உணவுப் புட்டிகள் மீதும் சமையல் பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன. மறுபடியும் அந்தப் பெண்களின் முகங்களைப் பார்த்தேன். கன்னங்கரேலென்று இருந்தன. நீக்ரோக்கள். முகச் சாடையிலிருந்து அவர்கள் தாயும் மகளுமாக இருக்கலாம் என்று தோன்றியது. ஆண்கள் யாரையுமே காணவில்லையே? ஏன்? வேட்டையாடச் சென்றிருக்கிறார்களோ?

எதுவானாலும் இந்த ஆற்றங்கரையை அடைந்தது பற்றி மகிழ்ச்சியே அடைந்தோம். கன்னி கழியாத காட்டின் வழியே ஊர்ந்து ஊர்ந்து இங்கே வந்துவிட்டோம். இனி அதிக தூரம் நடக்க எங்களால் முடியாது. இன்னும் கொஞ்ச தூரத்தில் ஒரு படகுத் துறை இருப்பது நிச்சயம். அங்கே கடைகளும் மதுபான விடுதிகளும் இருக்கக் கூடும்.

"என்ன செய்யலாம் நண்பர்களே?" என்று கேட்டேன்.

"நான் இங்கே தங்கியிருக்க விரும்புகிறேன். நேற்று ராத்திரி முதல் எனக்கு உடம்பு சரியாயில்லை. ரொம்பக் களைப்பாக

www.t.me/tamilbooksworld



இருக்கிறேன்" என்றான் பைத்தியம்.

"உடம்பு சரியில்லை என்று முன்பே சொல்லுவதற்கென்ன?"

"கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும் என்று நினைத்தேன்."

"உனக்குத்தான் காட்டின் ரகசியங்களெல்லாம் தெரியுமே? ஏதாவது மூலிகை, பச்சிலை பறிப்பதுதானே?"

"சிவப்பிந்தியர்களுக்குத்தான் எல்லா நோய்களுக்கும் மருந்து தெரியும்" என்றான் பைத்தியம்.

ஆகவே நீக்ரோக்களுடன் தொடர்பு கொள்வது என்று தீர்மானித்தோம். செருப்புக் கடித்துக் கடித்து என் பாதங்கள் புண்ணாகியிருந்தன. வலி தாள முடியவில்லை. காஸ்ஸியும் பிகோஸியும் கூட மிகவும் களைப்புற்றிருந்தார்கள்.

இரண்டு பெண்களையும் கூர்ந்து கவனித்தேன். சமயம் பார்த்து, புதர் இடுக்கிலிருந்து வெளிப்பட்டு அவர்கள் முன்னே சென்றோம். நாலு வெள்ளைக்கார ஆண்களைத் திடீரென்று கண்டதும் அவர்கள் அலறிப் பாய்ந்து ஓடுவார்கள் என்று நினைத்தோம். இல்லை. எங்களைப் பிரமிப்புடன் பார்த்ததோடு சரி. இரண்டு நாய்களும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு எங்கள் அருகில் வந்தன. ஏதோ கிராமத்துப் பண்ணையாரின் தோட்டத்தில் அத்து மீறி நுழைந்துவிட்ட மாதிரி எங்களை முறைத்தன.

"சூ! போங்க! போங்க!" என்று நாய்களை விரட்டினாள் கிழவி.

இரண்டு சிறுவர்களும் எங்களை நோக்கி வந்தார்கள். மூக்கைக் குடைந்தபடி எங்களை அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றார்கள் ஒரு பையன் எங்கள் சட்டையின் பளபளப்பான பொத்தான்களில் மனம் பறி கொடுத்தான்.

www.t.me/tamilbooksworld



இன்னொருத்தன் எங்கள் செருப்பைக் கண்டு சொக்கிப் போய் நின்றான்.

"இந்தாம்மா, எங்களைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். இது எந்த ஊர் என்பது தெரியவேண்டும். என் சினேகிதன் உடம்பு சரியில்லாமல் இருக்கிறான். அவனுக்கு உதவி செய்ய வேண்டும். அவ்வளவுதான்" என்றேன்.

அவர்களுக்குப் புரிந்ததோ இல்லையோ என்று யோசித்துக் கொண்டிருந்த போது, வயதில் இளையவள் செயலில் இறங்கினாள். இரண்டாவது குடிசையைச் சுட்டிக் காட்டி அங்கே போகும்படி சைகை காட்டினாள் கிழவி எங்களை நெருங்கி வந்தாள். சிறுவர்கள் எங்களுக்கு நடுவே சிரித்துக் கொண்டு புகுந்து ஓடினார்கள்.

"உடம்பு சரியில்லையா அந்த ஆளுக்கு? சீக்கிரம் குணமாகிவிடும். நல்லா சாப்பிடுவான்" என்றாள் கிழவி பிரெஞ்சு மொழியில். "நீங்கள் பிரெஞ்சுக்காரர்களா?"

"ஆமாம். நாங்கள் பிரெஞ்சுக்காரர்கள் வழி தவறி விட்டது." என்றேன்.

நாங்கள் மறைக்க நினைத்தாலும் கிழவி கண்டுபிடித்து விட்டாள் கையை மீனின் வால் மாதிரி காட்டி, சிறையிலிருந்து தப்பி வந்தவர்களா என்று சாடையில் கேட்டாள்.

## 24

**நா**ங்கள் எந்த ஊரில் இருக்கிறோம்? தெரிய வில்லையே? இந்த ஜனங்கள் பிரெஞ்சு மொழி பேசு கிறார்களே? தெரியாத்தனமாய்ப் பழையபடி பிரெஞ்சுப் பகுதிக்கே வந்து

www.t.me/tamilbooksworld



மாட்டிக் கொண்டு விட்டோமோ? ஒரே குழப்பமாக இருந்தது.

"ஸெயின்ட் லாரெண்ட் எங்கே இருக்கிறது? மரோனி எந்தப் பக்கம்?" என்று கேட்டேன்.

அந்த இளம் பெண் கிழக்குத் திசை நோக்கிக் கையைக் காட்டினாள் அப்பாடா! மேற்குத் திசையிலோ வேறு பக்கமோ கையைக் காட்டியிருந்தால் எங்களுக்கு உடம்பு நடுங்க ஆரம்பித்திருக்கும். அவளிடம் மேற்கொண்டும் கேள்விகள் கேட்க ஆரம்பித்தேன்.

"ஆல்பினா எந்தப் பக்கம்?

அவள் சிரித்தாள்-தன்னை நான் ஏதோ கிண்டல் செய்கிறேன் என்று நினைத்த மாதிரி இருந்தது அந்தச் சிரிப்பு. ஆற்றைச் சுட்டிக் காட்டினாள் அதில் படகில் செல்ல வேண்டுமென்று கூறினாள் 'ரொம்பத் தூரமா? ஆல் பினாவை அடைய எத்தனை நாளாகும்?' என்று கேட்டேன். படகின் மூலமாக இரண்டு அல்லது மூன்று நாள் பயணம் என்றாள்.

நாங்கள் எங்கே இருக்கிறோம் என்பது எனக்குப் புரியத் தொடங்கியது. முதலில் ஸெயின்ட் லாரண்ட் கடலுடன் கலக்கும் இடத்தில் நாங்கள் இருந்திருக்கிறோம். போலீஸ் படகு துரத்தியபோது காட்டுக்குள் ஒளிந்து வளைந்து சென்றதில் ஆல்பினாவைத் தாண்டி இங்கே வந்திருக்கிறோம்.

ஆல்பினாவுக்குப் போகாமல், ஆற்றங்கரை ஓரமாகவே வடகிழக்குத் திசையில் சென்றோமானால், சூரிநாம் நாட்டின் தலைநகரான பரமாரிபோவை அடையலாம் என்று கணக்குப் போட்டேன். எல்லாம் மனக் கணக்குத்தான். எங்களிடம் 'மேப்' பும் இல்லை, காம்பஸூம் இல்லை.

எங்களைக் குடிசைக்குள் அழைத்துச் சென்றாள். சமையல் கூடம், சாப்பாட்டுக் கூடம், தொழுகை அறை- எல்லாம் அந்தக்

www.t.me/tamilbooksworld



குடிசைதான். குடிசையின் மறுகோடிக்குச் சென்று சில காலி டப்பாக்களுடன் வந்தாள் அந்த இளம் பெண். இன்னொரு பாத்திரத்திலிருந்து ஏதோ பொடிகளை எடுத்து டப்பாவில் போட்டாள் குடிசையின் முன்புறம் இருந்த கரியடுப்பில் அதைக் கொதிக்க வைத்தாள் அதை எடுத்துப் பங்கிட்டு எங்களுக்கு வழங்கினாள் மாவு, மீன், பீன்ஸ்-இப்படிப் பலவற்றின் கலப்படமான மணம் வீசியது. வாயில் வைக்கச் சகிக்கவில்லை. வெறும் தண்ணீர் குடிக்கலா மென்றால் வீட்டுக்கெதிரில் உள்ள ஆற்று நீரைப் போலவே வீட்டுத் தண்ணீரும் கலங்கல் நிறமாக இருந்தது. அங்கிருந்து தான் மொண்டு வந்து வைத்திருக்கிறாள் என்று புரிந்தது. ஒரு கோப்பையில் ஊற்றி, "ஊம், ஊம். குடியுங்கள்" என்றாள்.

கிழவி எங்களையே புன்சிரிப்புடன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள் குழந்தைகள் எங்கள் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டு எங்கள் சட்டைப் பித்தான்களைப் பிய்க்கத் தொடங்கின.

பைத்தியத்துக்கு உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. முகத்தில் முத்து முத்தாய் வியர்வைகள் துளித்திருந்தன.

"எனக்குத் தாங்கவில்லை... உடம்பு ரொம்ப மோசமாயிருக்கிறது.." என்று முனகிக் கொண்டிருந்தான்.

இளம் பெண்ணைக் கூப்பிட்டு, அவனைக் கவனிக்கும் படி சொன்னேன். அவள் புரிந்துகொண்டாள். பைத்தியத்தின் கையைப் பிடித்து எழுப்பி, பூசை மேடையினருகே அழைத்துச்சென்றாள். அவனைத் தரையில் படுக்க வைத்தாள். "கடவுள் இந்தப் பிரெஞ்சுக்காரனைக் காப்பாற்றுவார்.. நானும் காப்பாற்றுவேன்...." என்றாள்.

பூசை மேடை என்பது ஒரு மேசைதான். அதன்மீது ஒரு

www.t.me/tamilbooksworld



விரிப்புப் பரப்பப்பட்டிருந்தது. அதன்மீது பலவகையான பொருள்கள்; எருமைக் கொம்பு; ஒரு கை சிற்பம்; எண்ணெய் விளக்கு; கன்னி மேரியின் பிளாஸ்டிக் பொம்மை; கோழிக் குஞ்சின் கறுத்த இறகுகள்; ஓரத்தில் மணிகள் கோத்த சிவப்புத் துணியின்மேல் ஒரு நீண்ட கத்தி; சிலுவை காணப் பட வில்லை. பதிலாக, ஒரு மரப்பலகையில் பலவிதமான கைகள் வரையப்பட்டிருந்தன.

"ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறோம்" என்று காஸ்ஸி ரகசியமாகக் கூறினான்.

"இல்லை. இவர்கள் நீக்ரோக்கள் பேய் பிசாசுகளிடம் இவர்களுக்கு மிகவும் நம்பிக்கை. பார்த்துக் கொண்டேயிரு. பைத்தியத்தைப் பிடித்திருக்கும் பேயை இவள் விரட்டுவாள் ஆனால் எனக்கென்னவோ பைத்தியத்துக்கு மஞ்சள் காமாலை நோய் கண்டிருக்கிறது என்று தோன்றுகிறது!" என்றேன்.

அது மாஜிக் நிகழ்ச்சியா-பாலே நடனமா என்று தெரியவில்லை. இரண்டும் கலந்த மாதிரி அவள் ஓடினாள் அடுப்பிலிருந்து ஒரு கொள்ளிக் குச்சியை எடுத்துக் கொண்டாள். பிறகு ஒரு பத்திரிகையை எடுத்து வந்தாள். 'தி பில்கிரிம்' என்று பெயருள்ள அந்தப் பத்திரிகை கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களால் நடத்தப்படுகிறது. பத்திரிகையின் மேலே ஒரு கிறிஸ்தவ மகானின் படம் அச்சிடப்பட்டிருந்தது. அதைப் பைத்தியத்தின் வயிற்றின்மீது வைத்தாள் கொள்ளிக் குச்சியினால் அந்தப் படத்தின் மீது சிலுவை போலக் கோடு இழுத்தாள்.

பாவம், மதப் பிரசாரகர்கள் தாங்கள் சொல்லித் தந்திருந்த தத்துவங்களுக்கு என்ன கதி என்பதை அறிந்தால் அதிர்ச்சியடைவார்கள்

www.t.me/tamilbooksworld



கிழவி பைத்தியத்தின் அருகே வந்தாள். அவனை எழுந்து நிற்கச் சொன்னாள். மேஜையின்மீது கைகளை வைத்துக் கொள்ளும்படி கூறினாள்.

"என்னவோ காட்டுமிராண்டி வைத்தியம். பைத்தியம் தொலைந்தான் பாவம்" என்றான் பிகோஸி.

கிழவி திரும்பத் திரும்ப "கெட்ட பிசாசே, போ... கெட்ட பிசாசே போ..." என்று இடைவிடாமல் ஜபம் செய்தாள்.

பல கைகள் வரையப்பட்டிருந்த பலகையின்மீது பைத்தியத்தையும் கைகளை வைக்கச் சொல்லி, இதைச் சுற்றிக் கோடு வரைந்தாள். பழையபடி அவனைத் தரையில் படுத்துக் கொள்ளச் சொன்னாள் பிறகு வெளியே சென்று ஒரு பாத்திரத்துடன் திரும்பினாள் அதில் புல் ஒரு கொத்து துருத்திக் கொண்டிருந்தது. மூங்கில் குச்சியால் வாய் அடைக்கப்பட்டிருந்தது. அந்தப் பாத்திரத்திலிருந்து சில துளிகளைப் பைத்தியத்தின் நெற்றியில் சொட்டவிட்டாள். மீதியைக் குடிக்கும்படிச் சொன்னாள். பைத்தியம் வேண்டா வெறுப்பாய்க் குடித்தான்.

நாய்கள் அங்குமிங்கும் ஓடியதால் ஈக்கள் வீடெங்கும் பரவி எங்களையும் மொய்த்துக் கொள்ளவே மெல்லப் பின்புறம் நழுவினோம்.

அன்று மாலை எங்களை இரண்டாவது குடிசைக்கு வரும்படி அழைத்தார்கள். போனோம்.

திடீரென்று காட்டுக்குள்ளிருந்து பத்து ஆண்கள்- நீக்ரோக்கள் - வெளிப்பட்டார்கள்.

www.t.me/tamilbooksworld



# 25

இனிமேல் மேற்கொண்டு எங்கேயும் செல்வதென்பது முடியாத காரியம். இந்த நீக்ரோக்களுக்கு வெள்ளைக்காரர்கள் மீது பிரியம் எதுவும் கிடையாது.. வெறுப்புத்தான் அந்த அளவுக்கு வெள்ளைக்காரர்கள் இவர்களை நடத்தி வந்திருக்கிறார்கள். வெள்ளையர் என்றாலே ஆதிக்கக்காரர்கள் என்ற எண்ணம் இவர்கள் மனத்தில் வேரூன்றியிருக்கிறது.

இந்தக் குறிப்பிட்ட கறுப்பர்கள் எங்களை அன்போடு நடத்திய போதிலும் எச்சரிக்கையாக இருப்பதே மேல் என்று தீர்மானித்தோம்.

பைத்தியம் ஜன்னியில் உளற ஆரம்பித்துவிட்டான் வார்டன்கள் தன்னைச் சூழ்ந்து கொண்டிருப்பது போலவும் வயிற்றின் மீது பாம்புகள் ஊர்வது போலவும் கற்பனை செய்து கொண்டு அலறினான். சுருண்டு விழுந்தான். கிழவி கஷாயம் தயாரித்துக் கொடுத்தாள். ஆனால் அதற்குப் பலன் ஏற்பட வில்லை. தன் மருந்து குணம் செய்ய வேண்டுமென்றால் பத்து சூரியோதயம், பத்து சூரியாஸ்தமனம் போக வேண்டும் என்றாள். அதுவரை பைத்தியம் தாங்குவானா?

கொஞ்சம் கொஞ்சமாக வீட்டின் எதிரேயிருந்த திறந்த வெளியில் எங்களைச் சுற்றி ஆட்கள் கூட ஆரம்பித்தார்கள் ஏறத்தாழ இருபது பேர் இருக்கும். இது வரை நாங்கள் பார்த்திராத ஓர் ஆள் இரண்டு குடிசைகளுக்கும் நடுவிலிருந்து வெளிப்பட்டான். எங்களைப் பார்த்துப் பேசலானான் அவனுடைய பிரெஞ்சு மொழி ஓரளவு புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

“நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும். கேயன் சிறையிலிருந்து தப்பி வந்திருக்கிறீர்கள் நான்தான் இங்கே

www.t.me/tamilbooksworld



தலைவன். உங்கள் நண்பன் உடல் நலமில்லாமல் இருக்கிறான். ஆகவே நீங்கள் இங்கே தங்கலாம். ஆனால் இன்று ராத்திரி நீங்கள் எல்லாரும் அந்தப் பெரிய குடிசையில் ஒளிந்து கொள்ளவேண்டும். உங்கள் சினேகிதனும் உங்களுடன் இருக்கவேண்டும். நீங்கள் எங்களைப் பார்க்கவே கூடாது. பார்த்தால் பேய் உங்கள் எல்லாரையும் பிடித்துக் கொள்ளும். கொஞ்ச நாள் கழித்து நீங்கள் போய்விடலாம்."

கிழவனுக்கு வயது அறுபதுக்கு மேலிருக்கும். தலை நரைத்திருந்தது. முகம் முழுக்க அம்மைத் தழும்புகள் உயரமாகவும் அகன்ற தோள்களுடனும் இருந்தான். அவன் அணிந்திருந்த வெள்ளைச் சட்டையும் வெள்ளை நிஜாரும் அவனுடைய கறுப்பு மேனியில் பளீரென்று பிரகாசித்தன.

"நாங்கள் யாரென்று உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டேன்.

"யாரைப் பார்த்தாலும் உங்களைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருக்கிறார்கள்! உங்களைக் கைது செய்யும்படி ஆல்பினாவில் அரெஸ்ட் வாரண்ட் இருக்கிறது."

அப்பாடா! வெளி உலகத்தில் என்ன நடந்து கொண் டிருக்கிறது என்பதைப் பற்றி இந்தச் செய்தியாவது கிடைத்ததே!

"ஆல்பினாவிலிருந்து நாங்கள் ரொம்பத் தூரத்தில் இருக்கிறோமா?"

"அதிக தூரமில்லை. அவர்கள் உங்களைத் துரத்திக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள்."

பைத்தியத்தைத் தூக்கிக் கொண்டு பெரிய குடிசைக்குள் சென்றோம். பின்னாலேயே வேறு சில காலடியோசைகளும் கேட்டன. மென்மையான ஓசை. கூட்டத்துக்கு வந்து மறைவாய் உட்கார்ந்திருந்த பெண்கள்தான் கலைந்து சென்று

www.t.me/tamilbooksworld



கொண்டிருக்கிறார்கள் என்று ஊகித்தோம். வெளியே வர முடியாதபடி ஒரு பிரம்மாண்டமான மேஜையை நகர்த்தி வாசலை அடைத்துவிட்டார்கள் குடிசையைச் சுற்றிலும் குத்தீட்டிகள் செருகப்பட்டிருந்தன விவாதங்கள் நடை பெறும் பேச்சுக் குரல்கள் கேட்டன. எங்களைப் பற்றிய விவாதங்கள் என்று புரிந்தது.

சுவரிலிருந்த ஓர் இடுக்கு வழியாகப் பார்த்தபோது எங்களுக்கு மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

வட்டமாகச் சுமார் நாற்பது பேர் குழுமியிருந்தார்கள். நடுவே கிழவன் நின்றிருந்தான். அவன் ஏதோ உத்தரவிட்டதும் ஒரு பத்து வயதுச் சிறுமி ஓர் ஆட்டைக் கயிறு கட்டி இழுத்து வந்தாள். உடனே நடனம் ஆரம்பமாயிற்று. கூடவே மேளம் மெதுவாகத் தொடங்கி வேகமாக, மேலும் மேலும் வேகமாக ஒலிக்கத் தொடங்கியது. ஆண்களும் பெண்களும் ஒருவர் தோளை ஒருவர் பிடித்துக் கொண்டு '8' போன்ற வடிவத்தில் அமைந்து நின்று ஆடினார்கள்.

பெண்கள் முழுக்க முழுக்க நிர்வாணமாக இருந்தார்கள். வயதானவர்களைப் பார்க்கக் கோரமாய் இருந்தது. இளம் பெண்கள் தங்க ஆப்பிள் போன்ற மார்புகளுடன் திகழ்ந் தார்கள் அவர்களுடைய எண்ணெய் பூசின மேனி, தீப்பிழம்பில் ஜொலித்தது.

பைத்தியம் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். கஷாயத்தின் பலனாக இருக்கக் கூடும். திடீரென்று மேளச் சத்தங்கள் நின்றன. பெண்கள் ஒரு பக்கமாயும் ஆண்கள் இன்னொரு பக்கமாயும் உட்கார்ந்து கை தட்ட ஆரம்பித்தார்கள். 'லீ பே! லீ பே!' என்று கோஷமிட்டார்கள். லீ பே என்றால் தந்தை. அதாவது தலைவனான கிழவன்.

www.t.me/tamilbooksworld



கிழவன் அவர்களை விட்டு வெளிப்பட்டு, பக்கத்துக் குடிசைக்குள் சென்று கன்னி மேரியின் பதுமை போட்ட பிளாஸ்டிக் விளக்கை எடுத்து வந்தான். அதைக் கூட்டத் தினருக்குத் தூக்கிக் காட்டினான் பிறகு கண்ணாடிப் புட்டிகள், நகங்கள், எலும்புகள், மரப்பாச்சிகள், கை மாதிரி புல்லால் செய்யப்பட்ட உறைகள், ஆண் குறியும் மார்புகளும் பொருத்தமில்லாமல் வெகு பெரிதாய்ச் செய்யப்பட்ட பொம்மைகள், தலை முடிகள்- இப்படிப் பல வகையான 'புனிதப்' பொருள்களை எடுத்துவந்து கூட்டத்தினருக்குக் காட்டினான் கிழவன். நடுநடுவே கன்னி மேரியின் பதுமையை எடுத்து மற்றப் பொருள்களின் மீது சிலுவைக் குறியிட்டான். இந்தச் சடங்குகளை நான் பார்த்ததில்லையே தவிரக் கேள்விப் பட்டிருந்தேன். மலடிகளுக்குக் குழந்தை பிறக்க, வழுக்கைத் தலையர்களுக்கு முடி வளர, பேய்களை விரட்ட, எதிரிகளை மடியச் செய்ய, ரகசியமான காதல்கள் நிறைவேற-இப்படிப் பல நோக்கங்கள் இந்தச் சடங்குகளுக்கு உண்டு.

இப்போது எல்லோரும் பிரிந்து உட்கார்ந்தார்கள் நடுவே எரியும் தீயில் ஒரு கிழவி பெரிய பாத்திரத்தை வைத்து ஏதோ கொதிக்க வைத்தாள் அதை எல்லோருக்கும் பரி மாறினாள். மீண்டும் மேளம் ஒலித்தது. ஒரு வினோதமான மணம் நாலு திசையிலும் பரவியது.

மூலையில் படுத்திருந்த பைத்தியம் என்னைக் கூப்பிட்டான். சென்றேன்.

"மிலானி... உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்.. கேள். மிலானி, நான் சாகப் போகிறேன் என்று தோன்றுகிறது..." என்றான்.

நான் அவனைத் தைரியப்படுத்த முயன்றேன். ஆனால் பலனிருக்கவில்லை. "மிலானி... என்னுடைய பணக் குப்பியை

www.t.me/tamilbooksworld



உன்னிடம் தர வேண்டுமென்று பார்க்கிறேன்... ஏனென்றால் நான் இறந்த பிறகு என் வயிற்றைக் கிழித்து அதை எடுத்துக் கொள்ளும்படி இருக்கக் கூடாது."

'அது எதற்கும் அவசியமிருக்காது. பேசாமலிரு. அவசரமில்லை. உனக்குக் குணமாகிவிடும்" என்றேன்.

ஆனால் அவன் பிடிவாதமாயிருந்தான். பணக் குப்பியை என்னிடம் கொடுத்தே ஆக வேண்டுமென்று உறுதியாக இருந்தான். அவன் கைகள் கொதித்தன. கண்கள் காய்ச்சலின் வேகத்தில் ஜொலித்தன. எனக்கு அழுகை வந்தது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து தப்பியோடிச் சுதந்திரமாக இருக்கத் திட்டம் போட்டதென்ன.. இப்போது இவன்...

தன்னைத் தூக்கி நிறுத்தி வைக்கும்படி பைத்தியம் சொன்னான். பிகோஸியையும் காஸ்ஸியையும் கூப்பிட்டேன். "தோளைப் பிடித்துக் கொள்ளுங்கள் தன்னுடைய பணக் குப்பியை என்னிடம் கொடுக்க வேண்டுமாம்" என்றேன்.

## 26

வெளியே நடைபெற்றுக் கொண்டிருந்த நடனங்கள் முடிவடைந்துவிட்டன. இனிமேல் எங்கள் பயணத்தைத் தொடரலாம்.

பைத்தியம் குந்திக்கொண்டு உட்கார்ந்தான்-பணக் குப்பியை வெளியே எடுப்பதற்காக, முக்கி முனகினான். பாவம், மிகப் பலவீனமாக இருந்ததால் பணக் குப்பியை வெளியே கொண்டுவர முடியவில்லை. நேரமாக ஆக அவன் பொறுமை இழந்தவனாக ஏதேதோ முணுமுணுக்கத் தொடங்கினான். அவனைச் சமாதானப்படுத்தியும் கேட்க வில்லை.

www.t.me/tamilbooksworld



"பாழாய்ப் போக! குடலில் அடைத்துக் கொண்டிருக் கிறது!"

"பரவாயில்லை, விடு. அதிலென்ன பிரமாதமாய் இருந்துவிடப் போகிறது!" என்றேன்.

"ஒரு லட்சம் பிராங்க்" என்றான் பைத்தியம். "இல்லை யில்லை. அதை உங்களிடம் கொடுக்கத்தான் வேண்டும். இதோ பார், என் வயிற்றின்மேல் உட்கார்ந்து, அழுத்து. குப்பி வெளியே வந்துவிடும்."

ஒருவழியாய்ப் பணக் குப்பி வெளியே வந்தது.

"மிலானி, இதை நீ வைத்துக்கொள் நான் இறந்து போனால் இது உனக்கே சொந்தம். தப்பிச் செல்லும்போது வழிச் செலவிற்கு உபயோகப்படும். என்னை மெதுவாகப் படுக்கைக்குத் தூக்கிப் போய்ப் படுக்க வை. ஒரே களைப் பாயிருக்கிறது," என்றான் பைத்தியம்.

வெளியே பார்த்தேன். கிழவி வழங்கிய மதுபானத்தை அனைவரும் குடித்துக் கொண்டிருந்தார்கள் மேளம் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் யாரும் நடனமாட வில்லை. மேளத்தின் ஒலி வேகமடைந்ததும் நாலைந்து பேராகச் சேர்ந்து அந்த ஆட்டை வட்டத்தின் நடுவே இழுத்து வந்து நிறுத்தினார்கள். மேளத்தின் வேகம் ஏறியது. தலை வனான கிழவன் பூசை மேடையிலிருந்து கத்தியை எடுத்தான். ஆட்டைத் தலையைப் பிடித்துத் தூக்கித் தொண்டையின் மத்தியில் ஒரு கிழிப்புக் கிழித்தான். துளிகூடச் சத்தமில்லாமல் ஆடு துவண்டு அவன் காலடியில் விழுந்தது. உடனே கிழவன் தன் கைகளை அந்த ரத்தத்தில் நனைத்தான். கூட்டத்தினர் அவனைச் சூழ்ந்து கொண் டார்கள் ரத்தம் குடிப்பதற்காக வாயை ஆவென்று திறந்து கொண்டார்கள்.

அந்த வினாடியில் வேறொரு சம்பவம் நிகழ்ந்தது.

www.t.me/tamilbooksworld



ஆட்டின் பக்கத்தில் ஒரு பத்து வயதுச் சிறுவன் நின்றிருந்தான். இந்தச் சடங்குகள் எதிலும் சிறிதும் சம்பந்த மில்லாதவனாக, சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தான் அவன். தலையில் சிவப்புப் பூக்கள் சூடியிருந்ததைத் தவிர, முழு நிர்வாணம். கிழவன் தன்னிடம் மெல்ல அழைத்தான் அவனை.

"தம்பி, உனக்கு என்னிடம் பிரியம்தானே?" என்று கேட்டான்.

"ஆமாம்," என்றான் சிறுவன் "நீங்கள் எங்கள் தலைவன்."

"உனக்கு என்னிடம் நிஜமாகவே பிரியம்தானே?"

"ஆமாம். நீங்கள் என் தகப்பன்."

கிழவன் மூன்றாம் முறையும் அதே கேள்வியைப் கேட்க விருந்தபோது கூட்டத்திலிருந்து ஒரு பெண் ஆவேசமாக ஓடி வந்து சிறுவனை அணைத்துக் கொண்டாள். கிழவனிடம், "தலைவரே, வேண்டாம். வேண்டாம். அவனைக் கேட்கா தீர்கள். அவனை விட்டுவிடுங்கள்!" என்று மன்றாடினாள்.

எங்களுக்குப் புரிந்தது.

கிழவன் மூன்றாம் தடவையும் அதே கேள்வியைப் கேட்டு, மூன்றாம் முறையும் சிறுவன் பதிலளித்தால், ஆட்டின் தொண்டையைக் கீறிய மாதிரி இவனையும் கிழவன் கீறிக் கொன்று விடுவான். அந்த ரத்தமும் கூட்டத்தினருக்கு ஆட்டின் ரத்தத்தோடு சேர்ந்து வழங்கப்படும். ஆனால் அப்படிச் செய்வதற்கு முன் சிறுவனின் சம்மதத்தைப் பெற வேண்டும். அப்போதுதான் அவனுடைய ரத்தத்துக்கு மாய மந்திர சக்தி இருக்கும். சிறுவன் மது அருந்தி மயக்க நிலையில் இருப்பதால், 'உன்னைப் பலி கொடுக்கலாமா?' என்று கேட்டால் சரியென்றுதான் சொல்வான்.

www.t.me/tamilbooksworld



இதெல்லாம் தெரிந்துதான் அவனுடைய தாய் ஓடி வந்து தடுக்கிறாள்.

எங்களுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. இந்த அநியாயத்தைக் கண்டு, கதவை ஓங்கி ஓங்கித் தட்டி, காச்சு மூச்சென்று கத்தினோம். ஆனால் எங்கள் கூச்சல் அவர்கள் காதில் விழவில்லை. எங்களைப் பயம் பிடித்துக்கொண்டது. இதே போல் பலி கொடுப்பதற்காகத்தான் கிழவன் எங்களைப் பிடித்து வைத்திருக்கிறானோ என்னவோ. வெறி பிடித்த, நிதான புத்தியில்லாத கும்பல் இது. இவர்களை எதிர்த்து எப்படி எங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறோம்?

தலைவனைச் சுற்றிக் கும்பல் சூழ்ந்துகொண்டிருந்தது. கையை ஆட்டி, தலையை ஆட்டி, என்னென்னவோ சளாபுளா வென்று கூச்சல் போட்டு, கிழவனைச் சமாதானம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தச் சிறுவனின் தாய்க்கு இவர்கள் உறவினர்களாயும் நண்பர்களாயும் இருந்திருக்க வேண்டும். அந்த இடம் ஒரு கூத்து மேடை போல் காட்சி யளித்தது. எல்லாரும் பீப்பாயிலிருந்து மொண்டு மொண்டு குடித்துவிட்டுத் தரையில் விழுந்து உருண்டு கொண்டிருந் தார்கள் சிரித்துக் கொண்டு நிர்வாணமாகப் புரளும் பெண்களை ஆண்கள் தங்களுடன் இழுத்துக் கொண்டு உருண்டார்கள். வானத்தில் நிலா இறங்கிக் கொண்டிருந்தது. வினோதமான மணத்துடன் புகை பரவியது. அந்த வெறி பிடித்த சூழ்நிலையில் நாங்கள் இருந்து, அவர்கள் குடித்த மதுவகையைக் குடித்திருந்தால் நாங்களும் அவர்களைப் போலத்தான் நடந்து கொண்டிருப்போம் என்று எண்ணிக் கொண்டேன்.

அந்த நிர்வாணமான தொடைகளையும் மார்புகளையும் பிட்டங்களையும் பார்க்கையில் எங்கள் தேகம் நடுங்கியது.

www.t.me/tamilbooksworld



கிழவன் தன் கையிலிருந்த இறகுகளை ரத்தத்தில் தோய்த்து எல்லாருக்கும் வழங்கினான். அதைப் பெறுவதற்காகக் கூட்டத்தினர் முட்டி மோதிக்கொண்டு முன்வந்தார்கள். பிறகு கிழவி ஒரு தட்டை அவர்களிடம் நீட்டிக் கொண்டே சென்றாள். அதில் காசு, முத்து, மணி, ஏன், கரென்ஸி நோட்டுக் கூடப் போட்டார்கள்.

எனக்கும் சரி, என் தோழர்களுக்கும் சரி, இருப்புக் கொள்ளவில்லை. குடிசைக்குள் காற்றே இல்லை. வெப்பத்தில் புழுங்கிக் கொண்டிருந்தான் பைத்தியம். மூட்டைப் பூச்சிகளும் பேன்களும் படை படையாக வந்து எங்களை மொய்த்தன. குடிப்பதற்கு ஒரு வாய் தண்ணீர்கூட இல்லாமல் குடிசைக்குள் எங்களை அடைத்து வைத்திருந்தார்கள்.

சிறுவனைப் பலி கொடுப்பதா கூடாதா என்று தொடர்ந்து விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கும்பலிலிருந்த வெறியர்கள் சிலர் சிறுவனைப் பலி மேடைக்கு இழுத்துச் செல்வதில் தீவிரமாயிருந்தார்கள். சிறுவனின் தாய் அதைத் தடுப்பதற்குப் படாத பாடு பட்டுக்கொண்டிருந்தாள். ஆடு வெட்டப்பட்டு வெகு நேரமாகிவிட்டது. இந்தச் சிறுவனின் தொண்டையையும் கீறத்தான் போகிறார்களா?

அதிக நேரம் நாங்கள் சிந்திக்கத் தேவையிருக்கவில்லை. திடீரென்று காட்டுக்குள்ளிருந்து சில உருவங்கள் வெளிப்பட்டன. காக்கி அணிந்து, கையில் துப்பாக்கி ஏந்தியிருந்த அவர்கள் அந்தக் கும்பலைச் சூழ்ந்து கொண்டார்கள்.

“போலீஸ்! போலீஸ்!” என்று பெண்கள் கூச்சலிட்டார்கள்.

“ஓடு! நம்மைப் பிடித்துக் கொள்வார்கள்! ஓடு!” என்று ஒருவருக்கொருவர் பீதியுடன் கத்திக்கொண்டு ஆளுக்கொரு திசையில் சிதறிப் பறந்தார்கள்.

www.t.me/tamilbooksworld



ஆம், போலீஸ்தான். எல்லாப் பக்கங்களிலும் வளைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள்.

## 27

எல்லாப் புறங்களிலும் போலீஸ் படை சூழ்ந்து கொள்வதைக் கண்டேன். ஆனால் அதற்குள் ஏராளமான ஆண்களும் பெண்களும் எப்படியோ தப்பி ஓடிவிட்டார்கள்.

டச்சு மொழியில் போலீஸ் ஆணையிடுவது கேட்டது.

"நில்லுங்கள்! தூக்குங்கள் கையை! தரையோடு தரையாகப் படுங்கள்!"

கறுப்பர்கள் அனைவரும் நெடுஞ்சாண் கிடையாகக் கீழே விழுந்து படுத்துக் கொண்டார்கள். அவர்களைப் போலீசார் சோதனையிட்டார்கள் அவர்கள் கைகளில் வைத்திருந்த பொருள்கள் அனைத்தும்- புகையிலை, புட்டிகள், சிகரெட், பணம் எல்லாம்-பறிமுதலாயின. பெண்களின் நிலைமைதான் பரிதாபமானது. 'பூசை' மேடையில் வைக்கப்பட்டிருந்த 'புனித'ப் பொருள்களைக் காப்பாற்ற வேண்டி, அவைகளை அள்ளியெடுத்து முத்தமிட்டார்கள்.

போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டவர்கள் பத்து அப்பாவிகள்தான். அவர்களை ஐந்து ஐந்து பேராக நிறுத்தி, சேர்த்துச் சங்கிலி விலங்கைப் பிணைத்தார்கள் ஒரு போலீஸ்காரர் பெண்களை நெருங்கி அவர்கள் வைத்துள்ள வளையல்களையும் பிளாஸ்குகளையும் மிரட்டிப் பறித்துக் கொண்டார். இஷ்டமில்லாமல் அந்தப் பெண்களும் கொடுத்தார்கள். காவலர்கள் திரும்ப அணி வகுத்ததும் அவர்களுடைய தலைவன், அந்தப் பெண்களை நோக்கி, "ஊம்! ஓடுங்கள் இங்கிருந்து!" என்றான்.

www.t.me/tamilbooksworld



இடைவேளையில் அவிழ்த்து விடப்பட்ட பள்ளிச் சிறுமிகளைப் போல அந்தப் பெண்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தார்கள் போகும்போது என்னென்னவோ கத்திக் கொண்டே சென்றார்கள் காவலர்களைத் திட்டு கிறார்கள் என்று ஊகித்தேன். அவர்கள் காட்டுக்குள்ளே மறைந்து போனார்கள் சில வினாடிகளில் அந்த இடம் காலியாகி விட்டது.

மோட்டார்ப் படகு வரும் சத்தம் கேட்டது. காவலர் களுடைய படகுகள்தான் முன்னமேயே வந்தால் சத்தம் இவர்களுக்குக் கேட்டுவிடும் என்று வேறெங்கோ இறங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை எச்சரிக்கை யாக இருந்தும் பல பேர் தப்பிவிட்டார்களே!

"நம்மைப் பிடித்துக் கையில் விலங்கு மாட்டி விடுவார்கள்" என்றான் காஸ்ஸி. "இவர்கள் டச்சு கயானா அதிகாரிகள். நாம் பிடிபட்டால் பழைய சிறைக்கே நம்மைத் திருப்பியனுப்பி விடுவது இவர்கள் வழக்கம்."

நாலு காவலர்கள் ஒரு குடிசையின் வாசலில் நின்று கொண்டார்கள் மற்றவர்கள் ஒவ்வோர் இடமாகச் சோதனை செய்தார்கள். இரண்டு பேர் நாங்கள் ஒளிந்திருந்த குடிசையின் வாசலுக்கு வந்து நின்றார்கள்.

"காஸ்ஸி, பிகோஸி! நீங்கள் இரண்டு பேரும் அந்தக் காவலரைத் தாக்குங்கள் பைத்தியத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று ரகசியமாகக் கூறினேன்.

பைத்தியத்திடம் மெதுவே நிலைமையை எடுத்துச் சொன்னேன். தள்ளாடி எழுந்தவன் என்னைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து நின்றான்.

ஒரு காவலன் தன் கனத்த பூட்ஸினால் எட்டி

www.t.me/tamilbooksworld



உதைத்ததுதான் தாமதம்-குடிசை வாயிலை அடைத்தாற் போல் நாங்கள் வைத்திருந்த மரக் கட்டைகள் எகிறிப் பறந்தன. அவனைத் தொடர்ந்து இரண்டாவது காவலனும் உள்ளே வந்தான். பிகோஸியும் காஸ்ஸியும் அவர்கள் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கீழே தள்ளினார்கள். ஒரே அமளி, அடிதடி, அந்தச் சந்தடியைப் பயன்படுத்திக் கொண்டு நான் பைத்தியத்துடன் நழுவினேன். பைத்தியத்துக்கு உடலில் திராணியே இல்லை. இருந்த வலுவெல்லாம் திரட்டிக் கொண்டு என்னுடன் வந்தான்.

பெண்கள் ஓடி மறைந்த திசையில் நாங்கள் சென்றோம். திடீரென்று ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. எங்கள் பின்னே காலடியோசைகள் கேட்டன.

திரும்பிப் பார்த்தேன்; இரண்டு காவலர்கள் எங்களைத் துரத்திக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள் எப்படித் தப்புவது? எதிரே பார்த்தேன். இருண்டு அடர்ந்த கானகம் தன் கைகளை விரித்துக் கொண்டு எங்களுக்கு தஞ்சம் கொடுப்பது போல அழைத்தது.

"நில்லுங்கள்!" என்று அவர்கள் கத்தினார்கள் தோட்டாக்கள் எங்கள் செவியைத் துளைக்கிற மாதிரி பறந்தன. தொலைவில் இன்னொரு வேட்டுச் சத்தம் கேட்டது. ஒரு தோட்டா என் தலையை உரசிக் கொண்டு பறந்தது. காஸ்ஸியும் பிகோஸியும் என்ன செய்கிறார்கள்? ஏன் ஓட்டம் பிடித்து எங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளவில்லை?

மேலும் இருபது கெஜ தூரம் ஓடினால் போதும். கன்னி கழியாத காடு-அடர்த்தியான மாந் தோப்புக்கள்-நெருங்கி வளர்ந்துள்ள புதர்கள்-யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி எண்ணற்ற மறைவிடங்கள் அங்கே உண்டு. ஆனால் பைத்தியம்

www.t.me/tamilbooksworld



*தாக்குப்பிடிப்பானா? இருபது கெஜ தூரத்தை ஓடிச் சமாளிப்பானா....?*

*"நில்லுங்கள்! இதுதான் கடைசி எச்சரிக்கை!"*

*நிற்கலாமென்று நினைத்தேன். அதே சமயம் பைத்தியம் என் பிடியிலிருந்து நழுவிச் சுருண்டு விழுந்தான். சொதசொத வென்று அவன் உடம்பிலிருந்து ரத்தம் பெருகுவதை என் கைகள் ஸ்பரிசித்தன. என் அன்புத் தோழன் தரையில் மயங்கிக் கிடப்பதைக் கண்டேன். இதுதான் தன் கடைசிக் காலம் என்று அவன் நினைத்துவிட்ட மாதிரி இருந்தது.*

*திணறிக் கொண்டே, "மிலானி, இனி நான்... அவ்வளவு தான். ஓடி விடு. பணக் குப்பியை நீயே வைத்துக்கொள்... முன்பே நான் சொன்னேனே... உங்களுடன் தப்பிச் செல்ல எனக்கு.. கொடுத்து வைக்கவில்லை... என்னை முத்தமிடு, மிலானி. போய் வா.... உனக்கு நல்ல காலம் கிடைக்கட்டும்..." என்றான்.*

*இரண்டு காவலர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுடைய துப்பாக்கிகளின் முனைகள் என் மார்பை நோக்கி நீண்டன. எழுந்து கொண்டேன். ஒரே வெறுப்பாக இருந்தது. சே! அழுகிப் போன வாழ்க்கை! என் மனத்தில் கசப்பு நிறைந்தது. தப்பி ஓடுகையில் இது போல எத்தனை பேரை இழந்துவிட்டோம்!*

*துப்பாக்கிகள் என்னை நோக்கி நீண்டிருந்தன. அவைகளை எதிர்த்து என்னால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. என் கசப்பு கடும் சினமாக மாறியது. கத்தினேன்.*

*"பன்றிகளே! ஒரு நோயாளியைப் போய்ச் சுட்டு வீழ்த்தியிருக்கிறீர்களே! சீ!"*

www.t.me/tamilbooksworld



அவர்கள் சிரித்தார்கள் 'அதனால் என்ன?' என்று கேட்கிற மாதிரி தலையை ஆட்டினார்கள் ஒருவன் பைத்தியத்தைப் பூட்ஸ் காலினால் புரட்டித் தள்ளி, அவன் பணக் குப்பி வைத்திருக்கிறானா என்று சோதனை போட்டான்.

பைத்தியத்தைப் பார்த்தேன். மார்பின் குறுக்காகக் கைகளை மடக்கி மல்லாந்து கிடந்தான் வானத்து நட்சத்திரங்களை நோக்கியபடி கயானாவில் அவனுடைய கடைசி ராத்திரி கழிந்துவிட்டது. தன் பின்னால் வரும்படி ஒரு காவலன் என்னைக் குத்தினான்.

அவன் பின்னே சென்றேன். பிகோஸியும் காஸ்ஸியும் என்ன ஆகியிருப்பார்கள்? காவலர்கள் அவர்களைச் சுட்டுக் கொன்றிருப்பார்களோ? துப்பாக்கிகளின் வேட்டுச் சத்தம் கேட்டதே, யாரைச் சுட்டிருப்பார்கள்?

எதுவும் தெரியாமல் நான் நடந்து கொண்டிருந்தேன்.

## 28

அந்தக் காவலர்கள் என்னைக் குடிசைக்குள் பிடித்துத் தள்ளினார்கள் ஒருவன் என்னை அடித்து உட்கார்த்தி வைத்தான். மூன்று மங்கலான விளக்குகளின் வெளிச்சத்தில் என் சூழ்நிலை கொஞ்சம் கொஞ்சமாக விளங்கத் தொடங் கியது. ஒரு குரல் கேட்டது. அது காஸ்ஸியினுடையது என்று கண்டு கொண்டேன்.

"மிலானி, நாம் சரியானபடி மாட்டிக்கொண்டு விட்டோம். பைத்தியம் எங்கே?" என்றான்.

"அவன் இறந்துவிட்டான்" என்றேன்.

www.t.me/tamilbooksworld



"கொன்றுவிட்டார்களா?"

"ஆமாம்."

"பன்றிகள்! பன்றிகள்!"

"உஷ்! சத்தம் போடாதீர்கள்!" என்று இன்னொரு குரல் கேட்டது. சொன்னவன் புதிய ஆளாக இருந்தான். இவனை இதுவரை நான் பார்த்ததில்லை. மற்றவர்களைக் காட்டிலும் இவன் சின்னவனாக இருந்தான். அமெரிக்கப் போலீஸ் தொப்பியும் யூனிபாரமும் அணிந்திருந்தான். பைத்தியத்தை நாங்கள் படுக்க வைத்திருந்த அதே மூலையில்தான் இவன் இப்போது கிடந்தான். அவன் பக்கத்தில் அந்தக் கிழவியும் இளம் பெண்ணும் இருந்தார்கள். புரியாத மொழியில் என்னென்னவோ புலம்பிக் கொண்டு அவனுடைய கையிலும் கன்னத்திலும் நெற்றியிலும் முத்தமிட்டுக்கொண்டிருந் தார்கள். பிறகு அழ ஆரம்பித்தார்கள்.

எனக்குப் புரிந்தது. இந்த ஆளைத் தேடித்தான் காவலர்கள் வந்திருக்கிறார்கள். சற்று முன்பு நான் கேட்ட துப்பாக்கி வேட்டு இந்த ஆளைக் குறி வைத்துத்தான்.

"ஏய்! வாயை மூடுங்க!" என்று காவலர்களின் தலைவன் கத்தினான்.

"என்ன நடந்தது இங்கே?" என்று தைரியத்தை வர வழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்தவர்களைக் கேட்டேன்.

"நீ புறப்பட்டுப் போனவுடன் நாங்கள் அந்த இரண்டு காவலர்களைத் தாக்கினோமில்லையா? அவர்கள் ஆகாயத் தில் துப்பாக்கியால் சுட்டு அபாய அறிவிப்பு செய்தார்கள். உடனே மற்ற இடங்களில் இருந்த மற்றக் காவலர்களும் ஓடிவந்து ரணகளப்படுத்தி விட்டார்கள். அப்பப்பா! என்ன

www.t.me/tamilbooksworld



அமர்க்களம்!"

ஆம். சரியான அமளிதான். பிகோஸியின் கணுக்காலில் தோட்டா துளைத்திருந்தது. காஸ்ஸியின் காலிலும் பலமான துப்பாக்கிக் காயம். மூன்று பேர்களைக் கைகளைத் தலைக்குப் பின்னால் மடித்துவைத்து விலங்கிட்டிருந்தார்கள். கறுப்பர் களின் தலைவனான அந்தச் சூனியக்காரக் கிழவன் குற்று யிரும் குலையுயிருமாகக் கிடக்கிறான். அவனைச் சுற்றிப் பெண்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். இரண்டு காவலர் கள் கையில் துப்பாக்கியுடன் மொத்தப் பேரையும் கண் காணித்துக் கொண்டிருக்கிறார்கள்

என்ன கோரமான சூழ்நிலை!

"இப்படியே ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டு நாள் பூரா உட்கார்ந்திருக்கப் போகிறோமா?" என்று காவலர்களைப் பார்த்துக் கேட்டேன் "என் தோழர்கள் காயம் பட்டிருக்கிறார்கள். இந்த ஆள் செத்துக் கொண்டிருக் கிறான். நீங்கள் சுட்டுக் கொன்ற என் சிநேகிதன் வெளியே கிடக்கிறான். அவனைப் புதைத்தாக வேண்டும். இல்லா விட்டால் கழுகுகளும் நரிகளும் கொத்தித் தின்றுவிடும்!"

காவலர்களின் தலைவன் தன் ஆட்களில் ஒருவனுக்கு முகக் குறிப்பினால் ஏதோ உணர்த்திவிட்டு, "சரி, நீ மட்டும் போவதானால் போ, மற்றவர்கள் இங்கேயே இருக்கட்டும்" என்றான்.

மண் வெட்டி கிடைக்குமா என்று சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒரு துருப்பிடித்த கலப்பைதான் கிடைத்தது. எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். காவலர்களில் ஒருவன் என்னுடன் வந்தான். அவன் மண்டையைப் பிளந்தாலென்ன என்று கை துறுதுறுத்தது. அடக்கிக் கொண்டேன். நான்

www.t.me/tamilbooksworld



வேண்டுமானால் தப்பித்து ஓடிவிடலாம். காஸ்ஸியும் பிகோஸியும் என்ன கதி ஆவார்கள்?

பைத்தியத்தைச் சுட்டு வீழ்த்திய இடத்தை அடைந்தேன். அரவம் கேட்டது. ஒரு பிராணியின் நிழலுருவம் தூரத்தில் ஓடி மறைவது போல இருந்தது. ஒரு குரங்கு கிறீக் கிறீச்சென்று கத்தியது.

பைத்தியம் அங்கேதான் கிடந்தான். ஆனால் முன்பிருந்த இடத்தில் அல்ல. சற்றுத் தள்ளி தரையில் சில கெஜ தூரம் அவன் இழுத்துச் செல்லப்பட்டிருக்கும் சுவடுகளைக் கண்டேன். நரியின் காலடித் தடம் தெரிந்தது.

நெருங்கிச் சென்று பார்த்தேன். என் இருதயமே நின்று விட்டது. பைத்தியத்தின் கன்னங்களை நரி கிழித்திருந்தது. கண்களைத் தோண்டியிருந்தது. விழி இருக்கவேண்டிய இடத்தில் இரண்டு பொந்துகள்தான் தெரிந்தன. நல்ல வேளை, சரியான நேரத்தில் வந்து சேர்ந்தேன்.

என்ன வேதனையான வேலை! ஒரு தோழனுக்காகக் கல்லறை தோண்ட வேண்டும்! விடுதலைப் பயணத்தில் தோளோடு தோள் நின்ற தோழன் இதோ தன்னந்தனியாக வானத்து நட்சத்திரங்களின் கீழே படுத்துக் கிடக்கிறான். என் பின்னே ஒரு காவலன்-என் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்தபடி நிற்கிறான்.

ஒரு மணி நேரத்தில் என் வேலையை முடித்தேன். குழி தோண்டியாயிற்று. பைத்தியத்தின் உடலை அதில் புரட்டித் தள்ளினேன். ஒரு பரங்கிக் காயைப் பிழிந்து தண்ணீர் எடுத்து, அவன் முகத்தைச் சிறிது கழுவினேன். சில வாழை இலை களைப் பறித்து வந்து சவ ஆடை போல அவன் மீது போர்த்தினேன். காவலன் என் காரியங்களை ஆடாமல் அசையாமல் பார்த்துக் கொண்டு நின்றான். நிழல் போல

www.t.me/tamilbooksworld



என்னுடனேயே இருந்தான்.

சில மரக் கிளைகளை ஒடித்துவந்து சிலுவை செய்தேன். கற்களைக் கொண்டு முட்டுக் கொடுத்து நிற்க வைத்தேன்.

"தோழனே! நீ எங்களைப் போல் சிக்கிக் கொள்ள வில்லை. சுதந்திர புருஷனாக இறக்கிறாய். உன் மீது சிலுவைக் குறி இருக்கிறது. கைதியைப் போலக் கேவலமாக, அடை யாளம் தெரியாமல் நீ மரிக்கவில்லை" என்று தாழ்ந்த குரலில் சொன்னேன்.

இனி, பைத்தியத்தைப் பற்றி நினைக்க எதுவுமில்லை. அவனுடைய பணக்குப்பிதான் இருக்கிறது. குடிசையில் அவனுடைய இரண்டோர் உடைமைகள் இருக்கலாம்.

கண்ணை நகர்த்தாமல் காவலன் என்னையே பார்த்துக் கொண்டிருக்க, நான் இங்குமங்கும் தேடி, பைத்தியத்தின் வைக்கோல் தொப்பியைக் கண்டெடுத்தேன். அதைச் சிலுவையின் மீது மாட்டினேன்.

"போய் வருகிறேன், நண்பனே! இப்போது நாங்கள் உள்ள நிலைமையைக் காட்டிலும் நல்ல நிலைமையிலேயே நீ இருக்கிறாய். ஆனால் ஒன்று சொல்கிறேன் உன்னைக் கொன்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவேன். இது சத்தியம்," என்று கூறி விட்டுத் திரும்பினேன்.

நான் குடிசைக்குள் நுழைந்த அதே கணம், காவலர்களின் தலைவன், வெளியே நின்றிருந்த ஒருவனை உள்ளே கூப்பிட்டு, டச்சு மொழியில் என்னவோ சொன்னான். உடனே அந்த ஆள் தன் பையிலிருந்து ஒரு சங்கிலி எடுத்து என் நண்பர்களை விலங்கு பூட்டினான். எனக்கும் தன் கைக்குமாகச் சேர்த்து இன்னொரு விலங்கு மாட்டினான். குடிசைக்குள் இருந்த

www.t.me/tamilbooksworld



கிழவியையும் இளம் பெண்ணையும் பிடித்துத் தள்ளினான். இரண்டு சிப்பாய்கள் உள்ளே வந்தார்கள் மரோனி ஆற்றங்கரையை ஒட்டிய ராணுவ முகாமில் இருப்பவர்கள் என்று தோன்றியது. அவர்கள் கிழவனைக் காலிலும் தோளிலும் பிடித்துத் தூக்கிச் சென்றார்கள் என்ன வினோதமான ஊர்வலம்! அந்த இரண்டு கறுப்புப் பெண்களும் எங்களுக்கு முன்னே அழுது கொண்டும் புலம்பிக் கொண்டும் சென்றார்கள். அவர் களுக்குப் பின்னே நான், பிகோஸி, காஸ்ஸி- குருடன் குருடனைப் பிடித்துக் கொண்டு செல்வதுபோல ஒருவரின் பின்னே ஒருவர் சென்றோம். அந்தக் கிழவனின் தொற்றல் உடம்பைத் தூக்கிக் கொண்டு இரண்டு சிப்பாய்கள்! எல்லாருக்கும் பின்னே ஒருவன் அந்தப் 'பூசை' மேஜையைத் தூக்கிக் கொண்டு வந்தான்-ஏதோ மத ஊர்வலம் போல!

ஆற்றை அடைந்தோம். விசைப்படகு காத்திருந்தது.

## 29

**வி**சைப் படகில் எங்களை ஏற்றினார்கள். கறுப்பர் களையும் சில முன்னாள் சிப்பாய்களையும் மூன்று காவலர்கள் கண்காணித்துக் கொண்டார்கள்.

வழியில் குறிப்பிடத்தக்க சம்பவம் எதுவும் நடைபெற வில்லை. ஆல்பினா என்ற ஊரை அடைந்தோம். இது கரையோரமாக இருக்கும் சின்ன ஊர் நாங்கள் இருந்த செயின்ட் லாரண்ட்டுக்கு நேர் எதிரே அமைந்திருந்ததால் சுலபமாக ஊரை அடையாளம் கண்டு கொண்டோம். இங்கே சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தவர்கள் நாங்கள் மட்டும்தான்.

www.t.me/tamilbooksworld



ஆற்றங்கரையில் சலவைத் தொழில் செய்யும் பெண்கள் தங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் அவர்களுடைய குழந்தைகள் அவர்களுடைய ஸ்கர்ட் முனையைப் பிடித்துக் கொண்டுநின்றன. கட்டுமரங்களும் படகுகளும் ஆற்றில் மெல்ல மிதந்து கொண்டிருந்தன.

தப்பியோட முயன்று பிடிபட்டால் எப்படி இருக்கும் என்பது இப்போதுதான் எங்களுக்குப் புரியத் தொடங்கியது. கசப்பு, எங்கள் விடுதியைப் பற்றி வெறுப்பு, மிருகத்தனமான அடக்குமுறை, அடுத்தாற்போல் என்ன நேரப் போகிறது என்று தெரியாமல் காலங்காலத்துக்குக் 'காத்திருக்கும் வேதனை இதெல்லாவற்றையும் காட்டிலும் துன்பம், முன் பின் பழக்கமில்லாத புதிய சிறையில் அடைபடுவது வெகு கஷ்டமாக இருக்கப்போகிறது.

வழியெல்லாம் மக்கள் எங்களைப் பார்த்துப் பேசும் பேச்சுக்கள் காதில் விழுந்தன.

"பாவம், இந்தப் பிரெஞ்சுக்காரர்களைப் பாரேன்."

"நாலு பேர் என்று சொன்னார்களே? நாலாவது ஆள் என்ன ஆனான்?"

"அதோ அந்த நாலாவது ஆள்-ரொம்ப உடம்பு சரியில்லாமல் இருக்கிறானே... இல்லை, இவன் நீக்ரோ, காயம்பட்டிருக்கிறதா என்ன?"

"அந்த நீக்ரோப் பெண்கள் யார்? ஏன் அழுது கொண்டிருக்கிறார்கள்?"

"எல்லோருக்குமே காயம்பட்டிருக்கிறது, பாவம் -

படகை விட்டு இறங்கும்போதே, எங்களைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. நாங்கள் சிறையிலிருந்து தப்பியோடிய

www.t.me/tamilbooksworld



முயற்சி பிரபலமாகிவிட்டது. அதற்குப் பல காரணங்கள்: முதலாவது, இவ்வளவு அதிகமான கைதிகள் ஒரே சமயத்தில் தப்பியது கிடையாது. இத்துடன் இத்தனை நீண்ட காலம் பிடிபடாமல் இருந்ததும் இல்லை. நாங்கள் தப்பியோடிய இருபத்து நாலு மணி நேரத்துக்கெல்லாம் வாரண்ட் பிறப்பித்துவிட்டார்களாம். எல்லாமாகச் சேர்த்து நாங்கள் பிரபலமாகிவிட்டோம்.

சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, நொண்டிக் கொண்டே நகரத்தின் பிரதான வீதி வழியே நாங்கள் அழைத்துச் செல்லப் பட்டோம். தெரு சுத்தமாய், சுச்சிதமாய் இருந்தது, சீனாக்காரர்களும் ஜாவாக்காரர்களும் கடைகள் வைத்திருந் தார்கள். காவலர்கள் புடைசூழ ஊரின் நடுமத்தியிலிருந்த சதுக்கத்தை அடைந்தோம். அங்கே ஒரு கார் காத்திருந்தது. அதில் ஏற்றி நேரே சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றார் கள். அது ஒரு சிறிய வெள்ளை நிறக் கட்டிடம். பண்ணை வீடு மாதிரி இருந்தது. சுற்றிலும் உயரமான மதில் சுவர்கள் இருந்தன.

சிறைக்குள் சென்றதும் பெரிய வார்டனும் அவருடைய உதவியாளர்களும் எங்களைச் சிறைத் தாழ்வாரத்தில் வந்து பார்த்தார்கள். அங்கே எங்களைக் கேள்விகள் கேட்டார்கள். எங்களைக் கவனிப்பதற்காக வந்த டாக்டர் எங்களிடையே மொழி பெயர்ப்பாளராக இருந்தார் நல்ல சுபாவமுள்ள டச்சுக்காரர் அவர். வயதில் சின்னவர். பிரெஞ்சு மொழியை நன்றாகப் பேசினார்.

“கைதிகளே, இது ஒரு சிறிய சிறை. உங்களைப் போன்ற ஆட்களுக்குத் தகுதியானது அல்ல. உண்மையைச் சொல் கிறோம். நீங்கள் இங்கே வர நேரிட்டதைப் பற்றி நாங்கள் வருத்தப்படுகிறோம்” என்றார் பெரிய வார்டன்.

www.t.me/tamilbooksworld



"நாங்களும் வருத்தப்படுகிறோம்" என்றான் பிகோஸி.

மொழிபெயர்ப்பாளர் இதை கேட்டுப் புன்னகை செய்தார். ஆனால் அதை மொழிபெயர்த்துச் சொல்ல வில்லை.

"நீங்கள் கடைந்தெடுத்த கிரிமினல்கள் என்பதும், கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். பிரசினைகள் ஏற்படுவதை நான் விரும்ப வில்லை. இங்கே நீங்கள் அதிக நாள் தங்கப் போவதில்லை. வழக்கமான விசாரணைகள் நடந்து முடிந்த பிறகு உங்களைப் பிரெஞ்சுப் பிரதேசத்துக்குத் திருப்பி அனுப்பி விடுவோம். உங்களுக்காக எனக்கு இன்னும் காவலர்கள் தேவையென்று கேட்டிருக்கிறேன். அவர்கள் என் நேரடிப் பொறுப்பின் கீழ் இருப்பார்கள். நீங்கள் தப்புவதற்கு முயற்சி செய்தால், எவ்வித எச்சரிக்கையும் இல்லாமல் சுடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். நீங்கள் மூன்று பேரும் ஒரே அறையில் அடைத்து வைக்கப்படுவீர்கள் புகை பிடிக்க உங்களுக்கு அனுமதி கிடையாது. டாக்டர், இனிமேல் இவர்களை உங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொள்ளலாம்."

காஸ்ஸியின் குதிகால் வீங்கியிருந்தது. பிகோஸியின் கணுக்காலில் புண் ஏற்பட்டிருந்தது. அசுரப் பசி கொண்டிருந்ததைத் தவிர மற்றபடி என்னைப் பொறுத்த வரையில் நன்றாகவே இருந்தேன்.

"வார்டன் அவர்களே, உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?"

மொழிபெயர்ப்பாளர் மொழி பெயர்த்துச் சொன்னதும் வார்டன் தலையை அசைத்து "சொல்லு," என்றார்.

"எங்களுடன் வந்தார்களே இரண்டு நீக்ரோ பெண்கள், அவர்களுக்கு என்ன நேர்ந்தது?"

www.t.me/tamilbooksworld



வார்டன் பதில் சொல்லவில்லை. ஆனால் அவர்களைப் பரமாரிபோ என்ற மத்திய சிறைக்கு அனுப்பி விட்டார்களென்று டாக்டர் மூலம் அறிந்து கொண்டோம். பாவம். அங்கே அவர்களுக்கு வாழ்க்கை நரகமாக இருக்கும்.

நாங்கள் நினைத்திருந்ததற்கும் மேலாகவே 'புகழ்' பெற்றவர்களாக இருந்தோம் என்று தெரியவந்தது. ஏனெனில் கொலைத் தண்டனை அடையவிருந்தவன் நான் என்பது டாக்டருக்குத் தெரிந்திருந்தது. நாங்கள் தன்மானம் மிக்க பரம்பரையில் வந்தவர்கள் என்பதும் சுதந்திர வேட்கையுள்ளவர்கள் என்றும் எல்லோரும் அறிந்து வைத்திருந்தார்கள்

கயிற்றுப் படுக்கையில் என் தோழர்கள் பொத்தென்று விழுந்தார்கள் களைப்புடன். நான் உடைகளைக் கழற்றினேன். நாட்கணக்கான என் உடம்பில் சேர்ந்திருந்த அழுக்கையும் பேன்களையும் கழுவிச் சுத்தம் செய்து கொண்டேன்.

"இங்கே நம்மை ரொம்ப நாள் வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறாயா?" என்று பிகோஸி கேட்டான்.

"தெரியவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம். இங்கேயிருந்து நாம் தப்பிச் செல்வதானால் தொலையட்டும் என்றுதான் இவர்கள் நினைக்கிறார்கள் இல்லாவிட்டால் நம்மை இப்படித் தனியாக விட்டிருக்க மாட்டார்கள் அதிருக்கட்டும். செயின்ட் லாரெண்ட்டுக்கு நம்மை அனுப்புவதற்கு முன், அங்கே போய் என்ன சாக்கு சொல்வதென்பதைப் பற்றி யோசித்து வைப்போம்," என்றேன்.

"காட்டிலே வழி தவறி விட்டதென்று சொல்லுவோம்" என்றான் காஸ்ஸி.

ஆமாம்! பூப் பறிக்கப் போனோம். வழி தவறி

www.t.me/tamilbooksworld



விட்டதென்று சொல்லு!" என்று பிகோஸி கேலி செய்தான்.

பல வகையாக யோசனை செய்தோம். ஆனால் நம்பக் கூடிய கதையாக எதுவும் தோன்றவில்லை. மூன்று பேர் இவ்வளவு நாட்கள் காணாமற் போனதைப் பற்றி என்னதான் சமாதானம் சொல்ல முடியம்?

பைத்தியம் எங்களுடன் வந்தது அவர்களுக்கு தெரிந் திருக்கும். அவன் எதற்காக வந்தான் என்று கேட்பார்கள். அவன் இப்போது எங்கே என்று விசாரிப்பார்கள். அவனை நாங்கள் கொலை செய்து விட்டோமென்று கூடக் குற்றம் சுமத்துவார்களே, என்ன செய்வது?

## 30

எங்களில் யாருக்கும் தூக்கம் வரவில்லை. இறந்து போன எங்கள் தோழன் பைத்தியத்தைப் பற்றியே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டோம். எங்களைக் கூண்டில் நிறுத்தி விசாரணை செய்யும்போது என்ன சொல்லலா மென்று மூளையைக் கசக்கிக் கொண்டேன். அனேகமாய் டச்சு நீதி மன்றம்தான் எங்களை முதலில் விசாரணை செய்யும். பிறகு எங்களைப் பிரெஞ்சு அதிகாரிகளிடம் ஒப்படைத்து விடுவார்கள். எல்லோரும் ஒரே மாதிரியான கதையே சொல்லவேண்டும் என்று தீர்மானித்தோம்.

"நண்பர்களே! நாம் என்ன சமாதானம் சொன்னாலும் பலன் எதுவும் இருக்கப் போவதில்லை" என்றேன். "இருந் தாலும் சொல்லப் போகும் விவரங்களை முன்கூட்டியே முடிவு செய்து வைத்துக் கொள்வோம். எல்லாப் பழியையும் என் தலைமீதே நீங்கள் போடலாம். நான் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆயுள் தண்டனைக்கு மேலாக வேறொரு

www.t.me/tamilbooksworld



தண்டனை அவர்கள் தரமுடியாது. சிறையிலிருந்து தப்பியோடியதற்காக மரண தண்டனை கொடுக்க மாட்டார்கள். வார்டனோ போலீஸ்காரனோ அல்லது வேறு யாரோ கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிந்தால்தான் மரண தண்டனை. நம்முடைய மிகப்பெரிய பிரசினை பைத்தியம்தான். அந்த விஷயத்தில் நம்மை மடக்கி விடுவார்கள் பைத்தியத்தை டச்சுக்காரர்கள் கொன்று விட்டார்கள் என்று நாம் உண்மையைச் சொன்னாலும் அவர்கள் தங்கள் மீது குற்றம் வரக் கூடாதென்று நம்மீதே திருப்பினால் என்ன செய்ய முடியும்? அவர்கள் வந்த போதே பைத்தியம் இறந்திருந்தான் என்று அவர்கள் சொல்லக்கூடும். நாம்தான் ஏதேதோ காரணங்களுக்காக அவனைக் கொலை செய்திருந்தோம் என்று சொல்லுவார்கள் எப்படியோ நம்பும்படியாகக் கதை கட்டிவிடுவார்கள் அவன் வைத்திருந்த பணக்குப்பியை அபகரிப்பதற்காகவே கொலை செய்தோ மென்று சொல்லுவார்கள். பைத்தியம் கடினமாக உழைத்து சிக்கனமாகச் சேமித்திருந்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நிச்சயமாய் நாம் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோம்."

கவலையினால் இருவரும் மௌனமானார்கள் காஸ்ஸிக்குக் குதிகாலில் ஒரே குத்தல் வலி. சுத்தமாக இருந்த வெறும் தரையில் படுத்துக்கொண்டு காலை அந்தரத்தில் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான். கடைசியில் ஒரு முடிவும் செய்ய இயலாமல் சோர்வுடன் கண்ணை மூடினோம்.

காலையில் டாக்டர் வந்து பரிசோதித்தார். ஓர் இளம் வார்டன் கூடவே வந்தான். இடுப்பில் இருந்த கைத் துப்பாக்கியின் மீது கையை வைத்தபடி இருந்தான். முதலில் பிகோஸியைப் பார்த்தார். பாவம், நேற்றைக் காட்டிலும் இன்று அதிக வேதனையுடன் துடித்துக் கொண்டிருந்தான் அவன். காயத்தைப் பரிசோதித்த டாக்டர், "குண்டு சதைக்குள்ளே

www.t.me/tamilbooksworld



புதைந்த மாதிரி இருக்கிறது. அதை வெளியே எடுத்தாக வேண்டும். என்னிடம் மயக்க மருந்து கிடையாது. வலியைப் பொறுத்துக் கொள்வாயா?'' என்று கேட்டார்.

"பொறுத்துக் கொள்கிறேன்'' என்றான் அவன்.

காஸ்ஸியும் நானும் அவனுக்கு இரு புறத்திலும் நின்று கொண்டு அவன் தோளை அழுத்திக் கொண்டோம். அவனும் தன் தேகத்திலிருந்த சக்தி மொத்தத்தையும் பிரயோகித்து காலை அமுக்கிக் கொண்டான். டாக்டர் சிறிய முள் வாங்கிக் கருவியை எடுத்து, அதன் கூரிய முனையினால் சதைக்குள் ஆழமாகக் குத்தினார் பிகோஸியின் உடம் பெல்லாம் பச்சையாக மாறி, பிறகு வெளேரென்று வெளுத்தது. "எனக்கு.... மயக்கம் வரும் போலிருக்கிறது. '' என்று முனகினான்.

"அழகான பெண்ணொருத்தியைக் கற்பனை செய்து கொள். வலி தெரியாது'' என்றார் டாக்டர்.

மூன்று நிமிடங்கள்தான் வெற்றியுடன் கூவினார் டாக்டர். "இதோ வந்துவிட்டது! எடுத்துவிட்டேன்!''

ரத்தத்தில் தோய்ந்தெடுத்த தோட்டா அவருடைய கருவியின் முனையில் காட்சி தந்தது. பிகோஸியிடம் அதைக் காட்டினார். அவனுக்கு வெள்ளமாய் வியர்வை கொட்டிக் கொண்டிருந்தது.

"டாஂபியா மது இருந்தால் கொண்டு வா'' என்று கூட வந்திருந்த வார்டனிடம் சொன்னார் டாக்டர்.

"இருக்கும். ஆனால் இந்த இடத்தைவிட்டு நான் நகரக் கூடாதென்று கட்டளை'' என்றான் அவன்.

"போய் எடுத்து வாப்பா!'' என்று டாக்டர் சத்தம் போட்டவர், "இவர்கள் எங்கேயும் போக மாட்டோம் என்று

www.t.me/tamilbooksworld



வாக்குக் கொடுப்பார்கள்” என்று கூறி எங்களைப் பார்த்தார்.

“போக மாட்டோம்” என்று நாங்கள் உறுதி கூறினோம்.

பானம் எடுத்து வருவதற்காக அந்த இளம் வார்டன் சென்றான். டாக்டர் காயத்துக்கு மருந்து போட்டுக் கட்டுக் கட்டினார். பிறகு காஸ்ஸியை அழைத்தார்.

“இப்போது என்னைக் கசாப்புப் போட போகிறார்” என்று காஸ்ஸி முணுமுணுத்தபடி தன் காலைக் காட்டினான்.

அவர் பரிசோதித்துவிட்டு, “நீ அதிர்ஷ்டக்காரன். தோட்டா உன் காலைத் துளைத்துக் கொண்டு வெளியேறி விட்டது. ஆனால் ஓரிடத்தில் எலும்பு முறிந்திருக்கிறது. தற்காலிகமாக ஒரு கட்டுப் போட்டு வைக்கிறேன். செயின்ட் லாரெண்ட்டுக்குப் போனதும் உனக்கு முறையாக கட்டுப் போடுவார்கள்” என்றார்.

‘செயின்ட் லாரண்ட்டுக்குப் போனதும்!’ நினைக்கும் போதே கசப்பாக இருந்தது. ஏன் எங்கள் முகம் சுருங்கி விட்டது என்று டாக்டரும் புரிந்து கொண்டார்.

வார்டன் மதுபானப் புட்டியுடன் திரும்பினான். மெதுவாக உறிஞ்சிக் குடித்தோம். காஸ்ஸியின் காலுக்கு மருந்து தடவிக் கட்டினார் டாக்டர். தூசி அழுக்குப் புகாமல் இருப்பதற்காக ஒரு துணியும் அதன் மேலே சுற்றினார். அதன் பிறகு சும்மா உட்கார்ந்திருப்பதைத் தவிர வேறு வேலை இருக்கவில்லை.

டாக்டருக்கு எங்களிடம் மிகுந்த அக்கறை ஏற்பட்டது. எங்கள் கதைகளை விவரமாகத் தெரிந்து கொள்ள விரும்பினார். என்ன குற்றத்துக்காக எங்களுக்குத் தண்டனை தரப்பட்டது, பிரெஞ்சு சிறைச்சாலையில் எங்கள் வாழ்க்கை முறை எப்படி இருக்கும்-இது போன்ற விவரங்களைக் கேட்டார்

www.t.me/tamilbooksworld



சொன்னோம். பிரெஞ்சு சிறைச்சாலைகள் அவ்வளவு மோசமாக இருக்குமென்று அவர் நினைத்தே யிருக்கவில்லை. எருமை மாட்டின் குடலில் மதுபான புட்டி செருகிக் கடத்திய நிகழ்ச்சியைச் சொன்னேன். விழுந்து விழுந்து சிரித்தார்.

சிகரெட் கொடுத்தார் "சரி, மதுபானத்துக்கும் சிகரெட்டுக்கும் நீங்கள் காசு தர வேண்டாம், என் செலவு. இரவுச் சாப்பாட்டுக்குப் பின் வந்து பார்க்கிறேன்" என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

அன்றிரவு அவர் வந்த போது மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில ளித்து, மனச் சுமையை வெகுவாகக் குறைத்தார். மறுநாள் சிறைச் சாலையைச் சேர்ந்த விசைப் படகு வந்து எங்களை அழைத்துச் செல்லும் என்று அறிந்து கொண்டோம்.

"டாக்டர், எப்படி அத்தனை கச்சிதமாகக் காவலர்கள் எங்களைப் பிடிக்க வந்தார்கள்?" என்று கேட்டேன்.

"உங்களைப் பிடிப்பதற்காக வரவில்லை. அந்தக் கிழ வனைப் பிடிக்கத்தான் வந்தார்கள். அவன் ஒரு மோசடிக் காரன். பில்லி சூனியம், பேய் பிசாசு என்று சொல்லி அப்பாவி மக்களை ஏமாற்றி வந்தான். தன் சடங்குக்காக நர பலி கொடுப்பது அவன் வழக்கம். திருவிழாவன்று அந்தச் சிறுவனைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தது அவனுடைய பெற்றோர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்கள் தான் போலீசுக்குத் தகவல் தெரிவித்து விட்டார்கள். போலீசார் கொஞ்சம் தாமதித்திருந்தால் விழாவின் முடிவில் உங்களையும் பலி கொடுத்திருப்பார்கள்" என்றார் டாக்டர்.

www.t.me/tamilbooksworld



# 31

எங்களிடம் அன்பு கொண்டிருந்த டாக்டர் மேலும் சில விவரங்களைக் கூறினார்: "போலீசார் வந்து உங்களைத் தக்க தருணத்தில் மீட்டார்கள் இல்லாவிட்டால் உங்களையும் பலி கொடுத்திருப்பார்கள் ஒரு ஜாடி அங்கே இருந்தது பார்த்தீர்களா? அது 'புனிதமான' ஜாடி. அதை உடைத்ததும் பலி கொடுப்பார்கள். அந்த ஜாடியில் இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் இருப்பதாக ஐதீகம். அதை உடைத்ததும் இந்த ஆன்மாக்கள் நதியில் நீராடப் போகின்றன என்பார்கள். எதுவானால் என்ன, இந்தச் சூனியக்காரக் கிழவர்களுக்குப் பல வகையான மருந்துகளும் கொடிய விஷங்களும் தெரியும். ஒரு ஆளைச் செத்தவன் போலவே செய்துவிடுவார்கள் அவனை உயிரோடு புதைத்துவிடுவார்கள் என்னைக் கேட்டால், நீங்கள் அவர்களிடம் சிக்கிக் கொள்ளாமல் இங்கே வந்தது உங்கள் நல்ல காலம் என்பேன்."

டாக்டர் புறப்பட்டுச் சென்ற பிறகு நாங்கள் எங்களுக்குள் முடிவு செய்து கொண்டோம் டச்சுக்காரர்களின் விசாரணையின் போது என்ன சொல்ல வேண்டும் என்பதைப் பற்றி.

மறுநாள் காலை ஆறு மணிக்கு எங்களை எழுப்பி, முகச்சவரம் செய்வித்து, டீயும் முரட்டு ரொட்டியும் தந்தார்கள். பிறகு ஒரு பருத்த போலீஸ் அதிகாரி எங்கள் அறைக்கு வந்தார் சகிக்க முடியாத பிரெஞ்சு மொழியில் பேசினார்.

"நான் தலைமைப் போலீஸ் அதிகாரி. உங்களைப் பிரெஞ்சு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் போகிறோம்" என்று கூறிவிட்டு நாங்கள் யார், எப்படி வந்தோம் என்ற

www.t.me/tamilbooksworld



விவரங்களைக் கேட்டார். நடந்ததைச் சொன்னேன். ஆனால் அந்த நீக்ரோ பெண்கள் எங்களுக்கு உதவி செய்ததைப் பற்றி வற்புறுத்திக் கூறினேன். "உங்கள் ஆட்கள் அந்த இரண்டு நீக்ரோ பெண்களைக் கைது செய்தது தவறு. அவர்களை எக்காரணம் கொண்டும் தண்டிக்கக் கூடாது" என்றேன்.

"பிரெஞ்சுக்காரர்களுக்கே பெண்கள் என்றால் மனம் இளகி விடும்" என்று எங்களை ஏளனம் செய்துவிட்டு, சில காகிதங்களை நீட்டினார் அவைகளில் கையெழுத்திட்டோம். எங்கள் புகைப்படங்களையும் பைத்தியத்தின் புகைப் படத்தையும் காட்டினார்கள். அடையாளம் சொன்னோம். "உங்கள் சிப்பாய்கள் பைத்தியத்தை வேண்டுமென்றே சுட்டுக் கொன்றார்கள். அது தெரியுமா உங்களுக்கு?" என்றேன்.

"தெரியும். ஆனால் அந்த ஆள்தான் சாகப் போகிற மாதிரி நோயாளியாக இருந்தானே?" என்றார்.

எங்களுடைய உடைமைகளைத் திருப்பித் தந்தார்கள் என் குடலில் இரண்டு பணக் குப்பிகளும் சட்டைப் பையில் கத்தியும் பத்திரமாக இருந்தன.

காவலர்கள் வந்து எங்களை மரோனி ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றார்கள். எங்கள் மூன்று பேரையும் ஒருவர் கையோடு மற்றவர் கையைச் சேர்த்து விலங்கிட்டிருந்ததால் நடப்பதே பெரும்பாடாக இருந்தது. காஸ்ஸிக்கும் பிகோஸிக்கும் நடுவிலே நான் இருந்தேன். ஒருவன் இடது காலை விந்தி விந்தி நடந்தான். இன்னொருவன் வலது காலை இழுத்து இழுத்து நடந்தான் இருவருக்கும் ஏற்றபடி சமாளித்துக் கொண்டு நடந்தேன் நான். டச்சுக்காரர்களின் விசைப் படகில் ஏற்றினார்கள் எங்களை.

நேர் எதிரே, அக்கரையில் பிரெஞ்சுப் பகுதி. மரோனி ஆறு இந்த இடத்தில் அதிக ஆழமில்லாதிருந்தது. விரைவாகவே ஆற்றைக் கடந்துவிட்டோம்.

www.t.me/tamilbooksworld



*சில கைதிகள், படகுக்காரர்கள், வேட்டைக்காரர்கள் அங்கே கூட்டமாக நின்று எங்களை வேடிக்கை பார்த்தார்கள். "பாவம்" என்றான் ஒருவன். "எங்கேயிருந்து வருகிறார்கள்?"*

*"காட்டிலிருந்து" என்றான் இன்னொருவன்.*

*பத்து வார்டர்கள் கொண்ட குழுவிடம் எங்களை ஒப்படைத்தார்கள் டச்சுக்காரர்கள். இரண்டொரு வார்த்தை பேசினார்கள். ஒருவருக்கொருவர் சல்யூட் அடித்தார்கள். அத்துடன் எல்லாம் முடிந்துவிட்டது.*

*எங்களுடைய விடுதலை முயற்சி முறிந்தது. நம்பிக்கை யான எதிர்காலம் இல்லாமற் போனதோடு மட்டுமல்ல. ஒரு நாணயமான, இனிய நண்பனையும் பறிகொடுத்து விட்டோம்.*

*ஃபிலிக்ஸ் மிலானி என்ற நான், கைதி எண் 51977 என்று மீண்டும் ஆக்கப்பட்டேன் ஒரு புதிய அத்தியாயம் என் வாழ்வில் ஆரம்பமாயிற்று.*

*அன்று ஆகாயம் நிர்மலமாக இருந்தது. அருமையான தினம். என்னுடைய தப்பியோடும் முயற்சி முறியடிக்கப்பட்டு, சிறைக்குத் திரும்பிய தினத்துக்கு மறுநாள் அது.*

*உடனேயே எங்களை ஸெயின்ட் லாரெண்ட் முகாமுக்குக் கொண்டு போய்விட்டார்கள். பிரதான வாசலைக் கடந்து, இடது புறம் திரும்பி, அலுவலகங்களையும் சிறைக் காவலர்களின் இருப்பிடங்களையும் தாண்டி நடந்தோம். எங்கள் எதிரே ஒரு சிமெட்டிச் சுவர். அதிலே ஒரு குறுகிய வாசல். கனமான கதவு.*

*இது தனிமைச் சிறை. ரொம்ப மோசமான கைதிகளையும் மரண தண்டனைக்காகக் காத்திருக்கும் நபர்களையும் இங்கே அடைத்து வைப்பார்கள். நாங்கள் உள்ளே நுழைந்தபோது மாலை ஆறு மணியாகிவிட்டது. ஆகவே இருட்டாக இருந்தது.*

www.t.me/tamilbooksworld



குறுகலான அலுவலகத்தில் இரண்டு காவலர்கள் இருந்தார்கள்.

"ஓகோ! தப்பி ஓடிய ஆட்களா!" என்று கத்திவிட்டு, எங்களுடைய உடைகளைக் கழற்றச் சொன்னார்கள்.

நான் கழற்றிவிட்டேன் ஆனால் என் தோழர்கள் இருவரும், காலிலிருந்த கட்டுக் காரணமாக உடைகளைக் கழற்றச் சிரமப்பட்டார்கள்.

"ஊம்! ஆகட்டும் சீக்கிரம்!" என்று ஒருவன் உறுமினான்.

மற்றவன் அவர்களைச் சுவர் ஓரம் தள்ளி உட்கார்த்தி வைத்தான். முரட்டுத்தனமாக அவர்களுடைய கால் சட்டைகளை உருவி இழுத்தான். கால் சட்டையுடன் அவர்களுடைய காயங்களுக்குப் போட்டிருந்த கட்டும் கழன்று வந்து விட்டது.

வலி தாங்க முடியாமல் அவர்கள் கண்ணில் நீர் வந்து விட்டது. ஆனால் வாய்விட்டுக் கூச்சல் போடாமல் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொண்டார்கள்.

நான் அவர்களுக்குத் திரும்பக் கட்டுப் போட முயன்றேன். "இந்தாப்பா! நீ இந்தக் கூட்டத்துக்கு தலைவன். நர்ஸ் இல்லை!" என்று சொல்லி ஒருவன் என்னைத் தடுத்து விட்டான்.

"தொலைந்து போகிறார்கள்!" என்று காவலர்களில் ஒருவன் எனக்காக மற்றவனிடம் பரிந்து பேசினான்.

"தொலைந்து போகட்டுமா! இவர்களால் எனக்குப் பதவி உயர்வே போய்விட்டது தெரியுமா?" என்றான் மற்றவன் கோபமாக.

அப்போதுதான் அவன் முகத்தைக் கவனித்தேன். டச்சுப் பகுதியில் இருந்தபோது விசைப் படகில் எங்களைத் துரத்தி வந்தவர்களில் இவனும் ஒருவன் என்று ஞாபகம் வந்தது.

www.t.me/tamilbooksworld



## 32

ஒரு காவலர் வந்து என் இரண்டு கால்களுக்கும் சேர்த்து ஒரு வளையத்தை மாட்டினார். அதிலிருந்து ஓர் இரும்புத் தடி சுவருடன் இணைக்கப்பட்டிருந்தது. மலத் தொட்டி வரையில் நான் போகலாம். திரும்பலாம். அவ்வளவுதான் நீளம் அந்தத் தடிக்கு. மூச்சு விடக் கூடாது. அத்தனை நிசப்தமாக இருக்க வேண்டும். என் இருதயம் துடிப்பதையும் நெற்றிப் பொட்டு விண்விண்ணென்று தெறிப்பதையும் மட்டுமே நான் கேட்க முடிந்தது. வேறு எந்தச் சத்தமும் கிடையாது.

ஒரு மணி நேரம். இரண்டு மணி நேரம். பிறகு சாவிகளின் ஓசை. வெளியிலிருந்து ஒரு விளக்கின் வெளிச்சம். குவளையில் சாப்பாட்டை ஒரு கையிலும் கோரைப் பாய்ப் படுக்கையை இன்னொரு கையிலும் எடுத்துக் கொண்டு ஒரு காவலன் வருகிறான். பாயை என் காலடியில் விட்டெறி கிறான். அதன் மீது குவளையை வைக்கிறான்.

“இதோ பார் துணி எதையும் அணிந்துகொண்டு இங்கே தூங்கக் கூடாது. துணியில்லாமல் தான் தூங்க வேண்டும். ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்டு என் நேரத்தை வீணடிக்காதே” என்றான்.

என் காலிலிருந்த வளையங்களின் பூட்டைத் திறந்து விட்டான். அதன் பின்னர்தான் நான் என் பாண்ட்டைக் கழற்ற முடிந்தது. எல்லாவற்றையும் களைந்து அறையின் வாசலில் குப்பலாக வைத்தேன். பீன்ஸ் காய் போட்ட கஞ்சிதான் உணவு. குடித்தேன். லேசாய் இறைச்சியின் வாசனை வந்தது. காவலன் என் முன்னால் நின்று கொண்டேயிருந்ததால் சீக்கிரமாக உணவை முடித்தேன். மறுபடியும் சங்கிலிகளை

www.t.me/tamilbooksworld



மாட்டிப் பூட்டிவிட்டு அவன் போய்விட்டான். அந்த விலங்குகளுடன் எப்படிப் படுக்க முடியுமோ அப்படிப் படுத்தேன். நள்ளிரவில் காவலன் வந்து கதவைத் தட்டினான். "இருக்கிறேன்" என்று குரல் கொடுத்தேன்.

நேரமும் பொழுதும் தெரியவில்லை. நான் இங்கே வந்து எத்தனை நாளாகியிருக்கும் என்று ஒரு தினம் யோசனை செய்து பார்த்தேன். கணக்கெடுக்க ஒரு வழி இருந்தது. அன்று வரையில் நாலு ரொட்டித் துண்டு கொடுத்திருக் கிறார்கள். அப்படியானால் நாலு பகல் ஆகியிருக்கிற தென்று அர்த்தம். உடைகளைக் களைந்துவிட்டு, காலில் விலங்குடன் நிர்வாணமாகப் படுத்திருந்தது மூன்று இரவுகள். மலத் தொட்டிக்குச் செல்ல வேண்டுமானால் பக்கவாட்டில் ஊர்ந்துதான் செல்ல வேண்டும். தொட்டி ரொம்ப உயரம். அதன் நுனியைத் தான் தொட முடியும். வசதியாக உட்காரக் கூடாதென்று ரொம்பக் கவனமாக எல்லாம் செய்திருக் கிறார்கள்.

ஆறு ரொட்டி, ஏழு ரொட்டி என்று கணக்கிட்டுக் கொண்டிருந்தேன்.

நீக்ரோ பெண்களைப் பற்றிச் சிறை அதிகாரிகள் வந்து என்னை விசாரித்த வண்ணமிருந்தார்கள். "அவர்களுடன் ஜாலியாய் இருந்தாயா?" என்று சிலர் அருவருப்பான கேள்விகளைக் கேட்டார்கள்.

பைத்தியம் இறந்து போனது இவர்களுடைய கொடுமை யால்தான் என்று திரும்பத் திரும்ப நான் சொன்னேன். என் தோழர்கள் தாங்களாகத் தப்பியோட விரும்பவில்லை யென்றும் நான் தான் அவர்களைக் கட்டாயப்படுத்தி என்னுடன் வரும்படி சொன்னதால்தான் வந்தார்கள் என்றும் கூறினேன். கறுப்பர்களின் பில்லி சூனிய சமாசாரங்களைப்

www.t.me/tamilbooksworld



பற்றி அறிவதில் அவர்கள் மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

"சரி, அந்தப் பைத்தியத்திடம் பணக் குப்பி இருந்ததாமே, எங்கே?" என்று கேட்டார்கள்.

"டச்சு சிப்பாய்கள் அவனிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டார்கள். இறக்கும்போது பாப்பராகத்தான் இறந்தான்" என்று தெரிவித்தேன்.

கடைசியில் ஒரு நாள் எங்கள் மூவரையும் விசாரிக்க அழைத்துச் சென்றார்கள். பிகோஸி குதி காலிலும் காஸ்ஸி நுனிக் காலிலும் கட்டுப் போட்டுக் கொண்டு நொண்டி நொண்டி நடந்து வந்தார்கள் எங்களை விசாரிக்க வந்த நீதிபதிக்கு அறுபது வயதிருக்கும். சிறை அதிகாரியாக இருப்பவர்.

காஸ்ஸியால், பாவம், நிற்க முடியவில்லை. "நீதிபதிய வர்களே, நான் கொஞ்சம் உட்கார்ந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

நீதிபதி அவனைக் கடுமையாக முறைத்து, "என்னப்பா விளையாடுகிறாயா?" என்றார். பிறகு எங்களை நோக்கிக் கூறினார்.

"குற்றவாளிகளே, உங்கள் மீதுள்ள வழக்குக் கடுமையானது. சிறையிலிருந்து தப்பிச் சென்றதாக உங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அக்டோபர் 14'ம் தேதி மாலை திடீரென்று ஆஜர் பட்டியல் எடுத்தபோது நீங்கள் காணப்படவில்லை."

திடீரென்று ஆஜர் பட்டியல் எடுத்தார்களா! எங்களுக்குத் தெரியாதே! ஏன் அந்தத் திடீர் நடவடிக்கை? யாரோ நாங்கள் ஓடி விட்டதைப் பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள் பிற்பாடு அதைப் பற்றிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைத்துக்

www.t.me/tamilbooksworld


கொண்டேன்.

"நீங்கள் தப்பிச் சென்றது அக்டோபர் 14'ம் தேதி. பிடிபட்டது அக்டோபர் 27'ம் தேதி. ஆக, பதினாலு நாட்கள் நீங்கள் காணாமல் போயிருக்கிறீர்கள். அது மிக அதிகமான காலம். கணக்கு எப்படியிருந்தாலும், தப்பியோடிய குற்றத்துக் காகவே உங்களைத் தண்டிக்க முடியும். ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?" என்று நீதிபதி கேட்டார்.

"நீதிபதியவர்களே, நாங்கள் எந்தச் சமாதானமும் சொல்ல முடியாது. ஒன்றே ஒன்றுதான் சொல்லலாம். அதாவது, ஒரு கைதி அவன் குற்றவாளியாக இருந்தாலும் சரி, நிரபராதியாக இருந்தாலும் சரி-மானமுள்ள மனிதனாக இருந்தால் நிச்சயம் இங்கிருந்து தப்பியோட முயலத்தான் செய்வான். ஏனெனில் இங்கே எங்களை விலங்குக்கும் கீழாக நடத்துகிறார்கள். சமூகத்தின் தர்ம நியாயங்கள் நாகரிகங்கள் எல்லாவற்றையும் புறக்கணித்து எங்களை இழிவு படுத்து கிறார்கள் அதனால்தான் நாங்கள் தப்பியோட முயலு கிறோம். இதைத் தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை" என்று நான் பதிலளித்தேன்.

நீதிபதிகளுக்கும் அதிகாரிகளுக்குமிடையே பலவகை வாதங்கள் நடைபெற்றன. பின்னர் ஒரு தனியறைக்குச் சென்று ஆலோசித்தார்கள். ஐந்தே நிமிஷம்தான்.

தீர்ப்பை வழங்கினார் நீதிபதி.

"ஃபிலிக்ஸ் மிலானி, உனக்கு அதிக பட்ச தண்டனை வழங்குகிறேன். தனிமைச் சிறையில் நீ நான்காண்டுகள் இருக்க வேண்டியது. காஸ்ஸி, பிகோஸி! உங்கள் இருவருக்கும் இரண்டு ஆண்டு தனிமைச் சிறை. இத்துடன் கோர்ட் கலைகிறது."

www.t.me/tamilbooksworld



அவ்வளவுதான் - எல்லாம் முடிந்துவிட்டது. படகுகளுக்காகக் காத்துக்கொண்டு சிறையில் அடைந்து கிடந்தேன்.

எங்களைப் போல இன்னும் பல கைதிகள் தனிமைச் சிறைவாசத் தண்டனை பெற்றவர்கள் இருக்கிறார்கள் எல்லாரையும் ஏற்றிச் செல்லப் படகுகள் வரும். செயிண்ட் ஜோசப் ராயல், பேய்த் தீவு-முதலான இடங்களிலுள்ள சிறைகளுக்கு ஏற்றிச் செல்லும்.

நினைக்கையிலேயே சோர்வு ஏற்பட்டது. ஆனால் என்னை நானே அதட்டிக் கொண்டேன்.

ஃபிலிக்ஸ் மிலானி! மனம் தளராதே. தளர்ந்தால் உன் கதி அதோ கதிதான். மனத்தை இரும்பாக்கிக் கொள்ள வேண்டிய சமயம் இது. தனிமைச் சிறை என்பது என்ன? சிறைக்குள்ளே சிறை, அவ்வளவுதானே!

## 33

படகுத் துறைக்கு அருகிலிருந்த முகாமில் எங்களை விலங்கும் சங்கிலியும் போட்டு மாட்டி இருக்க வைத்தார்கள். 'ஊமை' என்று பெயர் பெற்ற ஒருவனைச் சிநேகிதம் செய்து கொண்டேன் இந்தோ சீனாவில் குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்த கேட்டில் என்பவரைக் கொலை செய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை பெற்றவன் அவன்.

இங்கெல்லாம் சீக்கிரமாகவே இருட்டி விடுகிறது. கடலின் கொந்தளிப்பு அடங்கியிருந்தது. திறந்த வெளியில் கை கால்களில் விலங்குடன் படுத்துத் தூங்கினோம். கார் லோட்டி என்ற இன்னொரு கைதியும் எனக்குச் சிநேகிதனா னான். அடுத்த முகாமுக்காக எங்களைக் கப்பலேற்றிவிட்டால் பிறகு மூன்று

www.t.me/tamilbooksworld



மாத காலத்துக்கு நான் யாரையும் பார்க்கவோ பேசவோ முடியாது. ஆகவே அடுத்த தப்பியோடும் முயற்சி பற்றி ரகசியமாக அவனுடன் விவாதித்தேன்.

அவன் சிரித்தான்.

"நாலு வருட காலம் தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடக்கப் போகிறாய். தப்புவதைப் பற்றிப் பேசுகிறாயே!" என்றான்.

"அந்த மாதிரி ஏதாவது யோசனை செய்து கொண்டிருந்தால்தான் எனக்குப் பைத்தியம் பிடிக்காமலிருக்கும்" என்று பதிலளித்தேன் "என்னையும் காஸ்ஸியையும் பிகோஸியையும் காப்பாற்ற நீ ஒரு வழி சொல்லத்தான் வேண்டும். முக்கியமாக, பிகோஸியைப் பார் ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கிறானா இல்லையா?"

"ஆமாம். தலையில் அடி விழுந்த மாதிரி ஆள் ரொம்பத்தான் ஆடிப் போய்விட்டான். நினைவு இழந்து கொண்டிருக்கிறான் மனைவியையும் குழந்தைகளையும் எண்ணி ரொம்ப ஏங்குகிறான் போலிருக்கிறது" என்றான் கார்லோட்டி.

அவனுக்கும் பல பிரசினைகள் இருந்தன. என்னிடம் மனம் விட்டுப் பேசினான். ஆக மொத்தம் எங்களுக்குள் நெருக்கமான நட்பு ஏற்பட்டு விட்டது.

ஆற்றின் கரையோரமாக எங்களுடைய சிறு கப்பல் மெல்ல மிதந்து செல்லத் தொடங்கியது. அன்று மிக வெப்பமான தினம். வார்டன்கள் உள்படப் பல பேர் தங்கள். அறைகளுக்குள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள் திடீரென்று யாரோ அவசரமாக ஓடும் சத்தம் கேட்டது. தொபேலென்று தண்ணீரில் விழும் ஓசை அதைத் தொடர்ந்தது.

www.t.me/tamilbooksworld



எல்லாரும் எழுந்து விட்டார்கள். படகின் தளத்துக்கு ஓடினோம், என்னவென்று பார்க்க. இரண்டு கைதிகள் கரையை நோக்கிப் படுவேகமாக நீந்திப் போய்க் கொண்டிருந் தார்கள் தப்பியோடும் எண்ணத்துடன்.

“பைத்தியம்தான் பிடித்திருக்கிறது அவர்களுக்கு! அப்படியே எவ்வளவு தூரம் போய்விட முடியும்!” என்று நாங்கள் பேசிக் கொண்டோம்.

“நேரே குரு என்கிற இடம் இருக்கிறது. அங்கே ஓநாய்களிடம் சிக்கி உயிரிழக்கப் போகிறார்கள்” என்றான் ஒருவன்.

“இல்லை. சான்ஸ் இருக்கிறது. கரையை அடைந்து விட்டால் காட்டுக்குள் எங்காவது ஒளிந்துகொள்ள முடியும்” என்றான் இன்னொருவன்.

இதற்குள் காவலர்கள் வந்து ஆணை பிறப்பித்தார்கள் “ஏய்! நில்லு! நில்லு!”

மூன்று முறை சத்தம் போட்டும் பயனில்லை. கடைசியில் ஒரு காவலன், “மரியாதையோடு திரும்பி வாருங்கள் இல்லாவிட்டால் சுடுவோம்” என்று எச்சரித்தான்.

இரண்டு கைதிகளும் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக நீந்தினார்கள். தண்ணீருக்கடியில் மூழ்கி வெகுதூரம் செல்வதும் பிறகு மூச்சு விடுவதற்காகத் தலையை வெளியே நீட்டுவதும் மறுபடியும் முழுகுவதுமாக இருந்தார்கள். ஒருவன் மட்டும் என்ன நடக்கிறதென்று அறிவதற்காகத் தலையைத் திருப்பி நோக்கினான்.

காவலர்கள் சுடத் தொடங்கினார்கள் முதலில் ஆகாயத் தை நோக்கிச் சுட்டார்கள் கைதிகளைக் கொன்றுவிட அவர்கள் தயாராயில்லை. பயமுறுத்தத்தான் விரும்

www.t.me/tamilbooksworld



பினார்கள். கைதிகள் தண்ணீருக்குள் மூழ்கித் தலை மறைவானார்கள்.

மானா என்பது எங்கள் கப்பலின் பெயர். கேப்டனுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டுவிட்டதால், கப்பல் தன் திசையை மாற்றிக்கொண்டு கைதிகளை நோக்கி விரைந்தது.

ஒரு காவலன் மற்றவர்களிடம், "அவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன். நான் மீனவனாக இருந்தவன் அனுபவம் உண்டு" என்றான்.

துப்பாக்கியை உயர்த்தி, சுடுவதற்குக் குறி பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றான் அவன். கைதிகளில் ஒருவன் மூச்சு விடுவதற்காகத் தண்ணீருக்கு மேலே தலையை நீட்டினானோ இல்லையோ-

இவன் சுட்டான் ஸ்பிரிங் பொம்மையின் ஸ்பிரிங் திடீரென்று அறுந்து போனால் அது எப்படித் தத்துப் பித்தென்று தலை சுற்றி விழுமோ அதே போல அந்தக் கைதி அடிபட்டுத் தள்ளாடித் தத்தளித்தான். அவனுடைய தோழனுக்கோ நடந்தது எதுவும் தெரியவில்லை. நீருக்குள் நீந்திப் போய்க் கொண்டிருந்தான். காவலன் இப்போது அவனும் தலை நீட்டட்டும் என்று முன் போலவே குறி வைத்துக் காத்திருந்தான்.

"வேண்டாம், சுடாதே!" என்று இன்னொரு காவலன் அவனைத் தடுத்தான். "அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போம்."

முதலில் சுடப்பட்டுக் காயம் அடைந்தவனை எங்கள் கப்பல் விரைந்து நெருங்கியது. ஆனால் இந்தப் பகுதியில் சுறா மீன்கள் ஏராளம். அடிபட்டவனுடைய ரத்தம் அவைகளைக் கவர்ந்து விட்டது. தண்ணீரில் ஏகப்பட்ட குமிழ்கள்

www.t.me/tamilbooksworld



*திடீரென்று முளைத்தன. அப்பப்பா! என்ன புயல் வேகத்தில் சுறா மீன்கள் அந்தக் கைதியை நோக்கிப் பாய்ந்து வந்தன!*

*இரண்டு கைதிகளையுமே சுறா மீன்கள் கவ்விப் பிடித்தன. ஆகாயத்தில் தூக்கியடித்துப் பந்தாடின. வாயைப் பிளந்து கோரப்பற்களால் அழுத்தி இழுத்தன. இரண்டு கைதிகளின் கைகளையும் கால்களையும் தலைகளையும் நார் நாராய்க் கிழித்தன. புத்தம் புதிய மாமிசம் - காயங்களிலிருந்து பீரிட்டடித்துத் தண்ணீரைச் சிவக்க அடிக்கும் ரத்த வெள்ளம் இவைகளைக் கண்டதும் அந்தச் சுறா மீன்களுக்கு வெறி பிடித்துவிட்டது. அவை தங்களுக்குள்ளேயே அடித்துச் சண்டை போட்டுக் கொண்டன.*

*சில துணித் துண்டுகள் தண்ணீரில் மெல்ல மிதந்து வந்து எங்கள் கப்பலின் நுனியைத் தொட்டன. அத்தோடு சரி.*

*கப்பலிலிருந்த நாங்கள் அத்தனை பேரும் இந்தக் கோர நாடகத்தைக் கண்டு அதிர்ந்துபோய் ஊமையாகி விட்டோம்.*

*ஆனால் இத்தனை அமர்க்களங்களையும் வேறொரு திடீர் ஆரவாரம் அமுக்கிவிட்டது.*

*“தீவு! தீவு வந்து விட்டது! அதோ!”*

*எதிரே நோக்கினோம். நீல அடி வானத்தில் பழுப்பாக ஒரு திட்டு தெரிந்தது. ராயல் தீவு, பேய் தீவு, ஸெயின்ட் ஜோஸப் தீவு முதலியன அடங்கிய ஸல்யூட் தீவுக் கூட்டம் அது என்று அறிந்து கொண்டோம்.*

*அங்கேதான் நாங்கள் அடைபட வேண்டிய தனிமைச் சிறை இருக்கிறது.*

www.t.me/tamilbooksworld



## 34

கப்பலில் இருந்தபடி கரையைக் கவனித்தேன். இடப்புறம் ஒரு சிறிய மேடு தெரிந்தது. அதைத் தொடர்ந்து சிறிய சமவெளியும் பிறகு மறுபடியும் மேடும் தென்பட்டன. அந்த மூன்றாவது மேடு சமுத்திரக் கரையைத் தொட்டாற் போல் இருந்தன. சாத்தான் தீவு என்று இந்த இடத்துக்குப் பெயர் வந்ததற்குக் காரணமே, இங்குள்ள பயங்கரச் சுழல்கள்தான். இங்கே கடலில் கொந்தளிப்பு மிக அதிகம் என்பதோடு சுறா மீன்களும் எக்கச்சக்கமாக இருந்தன.

ராயல் தீவுக்கு நல்ல துறைமுகம் இருந்தது. அதை நெருங்கியதும் கப்பல் நின்றது. எங்களை அழைத்துச் செல்லச் சிறிய கட்டுமரங்கள் வந்தன. 'தனிமைச் சிறைத் தண்டனை பெற்றவர்கள், அனைவரும் இப்படி வந்து வரிசையாக நில்லுங்கள்' என்று கட்டளையிட்டார்கள்.

கரையை அடைந்ததும் எங்களை நிறுத்தி வைத்துவிட்டு வார்டன்கள் நிர்வாகக் கட்டிடத்துக்குள் சென்றார்கள் அந்தத் தீவில் வார்டன்களாகப் பணியாற்றும் சில கைதிகளுடன் பேசிக் கொண்டிருந்தோம்.

"மிலானி! ஃபிலிக்ஸ் மிலானி!" என்ற நட்புரிமையான குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் பர்லாட்டி என்ற என் பழைய நண்பன் பல வருடங்களுக்கு முன்பு என்னுடன் கப்பற் படையில் வேலை பார்த்த தோழன். அவனும் இங்கே தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தான் முன்னைக் காட்டிலும் மெலிந்து இளைத்திருந்தாலும் அவனுடைய குரூரமான தோற்றம் அவனைவிட்டு அகலவில்லை.

www.t.me/tamilbooksworld



"நீ தப்பிச் சென்றதையும் பில்லி சூனியக்காரர்களிடம் மாட்டிக் கொண்டதைப் பற்றியும் இங்கே எல்லோருக்கும் தெரியும், மிலானி. பாவம், நீயும் உன் தோழர்களும் பிடிபட்டு விட்டீர்களே?" என்றவன், "இங்கே எத்தனை வருடத் தண்டனை?" என்று கேட்டான்.

"நாலு வருடம்.... ஆனால் எப்படியாவது அதைக் குறைத்துவிட வேண்டுமென்று நினைத்திருக்கிறேன்" என்றேன்.

எனக்கு இரண்டாவது கட்டிடத்தில் 34'வது அறை தரப்பட்டது. என் கைதி எண் 123.. என் தோழர்கள் கார்லோட்டியும் பிகோஸியும் காஸ்ஸியும் முதலாவது கட்டிடத்தில் அடைக்கப்பட்டிருந்தார்கள்

சிறை மேலதிகாரி எங்கள் எல்லோரையும் கூட்டி வைத்துப் பிரசங்கம் செய்தார்.

"இது மகா கடுமையான இடம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். புல்டாக் நாய்கள்கூட ஓடும். இந்தத் தீவுக்குப் பெயரே நிசப்தத் தீவு. தனிமைச் சிறையில் இருக்கிறவர்கள் பேசக்கூடாது. புகை பிடிக்கக் கூடாது. எக்காரணம் கொண்டும் யாருடனும் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. இன்னொன்றும் இப்போதே சொல்லிவிடுகிறேன் இந்தச் சிறைகளிலிருந்து எவருமே தப்பியோடியதாகச் சரித்திரம் கிடையாது. எச்சரிக்கை தராமலே சுடுவதற்குக் காவலர்களுக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. இனி உங்கள் அறைகளுக்குச் செல்லலாம்."

நான் என் அறைக்குச் சென்ற போது மாலை மணி ஆறு. என் வாழ்க்கையில் மற்றுமொரு திருப்பம் ஏற்படுத்திய நாளாகையால் அந்தத் தினத்தை மனத்தில் ஆழமாகப் பதித்துக் கொண்டேன். இந்த நரகக் குழியிலே இன்னும் நாலு வருட

www.t.me/tamilbooksworld



காலம்-நாற்பத்தெட்டு மாதங்கள்-நான் அடைந்து கிடந்தாக வேண்டும். ஒரு பயனும் இல்லாமல், ஒரு பயனும் இல்லாமல், ஒரு பயனும் இல்லாமல்....

என் தலையைச் சீவும்படி தண்டனை அளித்தார்களே, அந்தத் தினத்துக்குப் பிறகு இன்றுதான் கொடிய வேதனையை அனுபவித்தேன். பயங்கரமான நிசப்தம் என்னைச் சூழ்ந்து கொள்வதை உணர்ந்தேன். என் அறைக்கு மேலிருந்த தளத்திலிருந்து மெல்லிய காலடியோசை மட்டும் எப்போதேனும் கேட்கும். ஏதாவதொரு மங்கலான உருவம் அரையிருட்டில் தென்படும். இரண்டு கால்கள்.... ஒரு துப்பாக்கியின் நுனி..... கம்பிகளுக்கு நடுவே ஒரு முகம்...

என்னால் தூங்க முடியவில்லை. அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டேன். பிறகு படுத்தேன். மறுபடி எழுந்தேன். நடந்தேன்.

தோழர்களை இப்போது சந்திப்பதென்பது நினைக்கவும் முடியாத காரியம். தனிமைச் சிறையில் முதல் மூன்று மாத காலம், சிறைக்குள்ளேயே தன்னந் தனியாய் முடங்கிக்கிடக்க வேண்டும். பிறகு வாரத்துக்கு இரண்டு முறை குளிப்பதற்காக வெளியே அழைத்துச் செல்வார்கள். இருபது நிமிட நேரம் குளியலுக்கு அவகாசம் தருவார்கள் அப்போதுதான் நண்பர்களுடன் ஏதாவது தொடர்புகொள்ள முடியும்.

முதல் தொண்ணூறு நாட்களை அறைக்குள் நடந்து நடந்தே கழித்தேன். எதுவும் நடக்கவில்லை. எனக்குப் பொறுப்பான வார்டன் ஒரு நாள் வந்தான் ஈர்க் குச்சி மாதிரியான மனிதன் - ஆனால் ரொம்பக் கொடுமை யானவன்.

“மிலானி, உன் அறையை மாற்றியிருக்கிறது. 18’வது அறைக்குப் போ” என்றான்.

மூன்றே நிமிடத்தில் நான் வேறு அறைக்கு மாற்றப்

www.t.me/tamilbooksworld



பட்டேன். பழைய அறை மாதிரியேதான். இதுவும் இருந்தது. 12 ஆனால் என்ன, 18 ஆனால் என்ன, 34 ஆனால் என்ன- எல்லாம் ஒரே மாதிரியான அறைதான். ஆனால், ஒரே இடத்தில் இருந்தால் நாங்கள் ஏதாவது 'விஷமம்' செய்து அல்லது முன்னால் இருந்த ஓட்டையை பெரிதாக்கப் பார்க்கலாம். அப்படிப்பட்ட முயற்சியை முறியடிக்க வேண்டும் என்பது அதிகாரிகளின் திட்டம்.

காவலர்கள் நடமாடும் ஓசை நின்றவுடனேயே, நான் சுவர்களைத் தடவுவேன்-ஏதாவது ஓட்டை தென்படுகிறதா என்று சுவர்களின் நீள அகலங்களைக் கணக்கெடுத்தேன். தரையில் தட்டித் தட்டிப் பார்த்தேன்-ஏதாவது பொந்து மாதிரி சத்தம் கேட்கிறதா என்று.

பத்து நாள் ஆராய்ச்சி செய்ததில் ஒரு சிறு வெற்றி கிடைத்தது.

சுவரில் ஓரிடத்தில் கடினமாக இல்லாமல் மெத்தென்று இருக்கிற மாதிரி தோன்றியது. காவலர்கள் வந்துவிடப் போகிறார்களே என்று ஒரு பக்கம் காதைத் தீட்டி வைத்துக் கொண்டே அந்தக் குறிப்பிட்ட இடத்தைச் சுரண்டினேன்.

என்ன ஆச்சரியம்!

அங்கே என் விரல்கள் நுழைய முடிந்தது.

ஆம்!

எனக்கு முன்னே இங்கே இருந்தவன் கெட்டிக்காரன்.

ஏதோ ஒரு கூரிய பொருளைக் கொண்டு-அல்லது வெறும் நகத்தாலேயே கூட இருக்கலாம்-சுவரில் ஓர் இடத்தைச் சுரண்டி வந்திருக்கிறான். பிறகு அந்த ஓட்டையை மெத்து மெத்தென்ற ரொட்டித் துண்டுகளால் திணித்து, சுவரிலிருந்து பெயர்ந்த காரைத் துண்டுகளை வைத்து அங்கே அடைத்திருக்கிறான்.

www.t.me/tamilbooksworld



அங்கே ஒரு பொந்து இருப்பதைக் கண்டு நான் அடைந்த ஆனந்தம்! பொந்துக்குள் இரண்டு காகிதத் துண்டுகள் இருந்தன. கொஞ்சம் புகையிலை இருந்தது.

நாலு மாதம் தனிமைச் சிறையில் அடைந்து கிடந்த பிறகு எப்பேர்ப்பட்ட பாக்கியம் கிடைத்திருக்கிறது எனக்கு! இந்தப் புகையிலை தூளைக் காகிதத்தில் சுருட்டி தினம் கொஞ்சம் புகைப்பேன். இந்தக் கிடைத்தற்கரிய பரிசை எப்போது அனுபவிக்கப் போகிறோம் என்பதைக் கணக்கிட்டுக் காத்திருப்பேன் நாள் பூரா!

## 35

இனி என் தோழர்களைச் சந்திக்கும் வரை உற்சாகத்துடன் என் உயிரைக் காப்பாற்றி வைத்துக் கொள்ள இது ஒன்றே போதும்!

குளிப்பதற்கு வெளியே அழைத்துச் செல்ல ஆரம்பித்தார்கள் வெளிச்சத்தையும் உயிர்களையும் பார்ப்பதற்கான ஒரே சந்தர்ப்பம் அது. இருபது நிமிடம் வெளியே இருக்கலாம். பத்து நிமிடம் தண்ணீருக்குள் இருக்கலாம். மாலுமியாக இருந்த எனக்கு இது எப்படிப்பட்ட மகிழ்ச்சி என்று சொல்லத் தேவையில்லை. வயிற்றுப் பட்டினியுடன் தேய்ந்து கொண்டிருக்கும் உடம்புக்குப் புத்துயிர் அளித்தவை இந்தச் சில நிமிடங்கள்தான்.

தனிமைச் சிறையில் கிடப்பவனுக்கு மிக அபாயமான நேரம் ஒன்று உண்டு. தூக்கம் வருவதற்காகக் காத்திருந்து படுத்திருக்கும் நேரம்தான் அது.

தூக்கம் பிடிக்காத அந்த வேளைகளில் மனம் விரக்தியின்

www.t.me/tamilbooksworld



உச்சத்தை அடைகிறது. நாடி நரம்புகள் தொய்கின்றன. இனம் தெரியாத கலவரங்கள் உள்ளத்தைப் பிடித்து ஆட்டு கின்றன. 'மறந்தே போய்விட்டதே! நாம் தனிமைச் சிறையில் அல்லவா அடைபட்டுக் கிடக்கிறோம்!' என்று திடீரென்று ஞாபகம் வந்து நரக வேதனை அடைகிறேன். அந்தக் கணம் அறிவின் கடைசி ரேகைகளும் விடை பெறுகின்றன.

இந்தக் கோரமான சூழ்நிலையில் பலருக்குப் பைத்தியம் பிடிக்கிறது. சுவரில் ஓங்கி ஓங்கி முட்டிக் கொள்கிறார்கள் வெறி பிடித்தவர்களாகக் கூச்சல் போடுகிறார்கள் சிறிது நேரம் அமைதி நிலவும். திடீரென ஒரு குரல் விம்மலும் விசும்பலுமாகத் தீனமாய் அலறும். "என்னை வெளியே விடுங்கள்! ஐயோ! என்னை வெளியே விடுங்கள்! ஐயோ! வார்டன்! வார்டன்! எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே!" என்ற கூச்சல் நம் இதயத்தைக் கிழிக்கும்.

அவனை வெளியே அழைத்துச் செல்வார்கள் எங்கே? மூன்றாம் எண்ணுள்ள கட்டிடத்துக்கு. அது, பைத்தியங் களுக்காகவே ஏற்பட்ட கட்டிடம்.

ஒரு வார காலமாக, இரவும் பகலும் இந்த மாதிரியான கூச்சல்களைக் கேட்பது எனக்கு வழக்கமாகிவிட்டது. எங்கிருந்து வருகிறது அலறல்? என் பக்கத்து அறை யிலிருந்து வந்திருக்க முடியாது. ஏனெனில் இரண்டு பக்கத்து அறைகளும் காலியாக இருந்தன. பின்பக்கத்திலிருந்த ஏதோ ஓர் அறையிலிருந்துதான் வருகின்றன திடுதிப்பென்று. ஆனால் அந்தப் பின்பகுதியுடன் என்னால் எவ்விதத் தொடர்பும் கொள்ள முடியவில்லை.

சில சமயங்களில் அது ஒரு பெருமூச்சாக இருக்கும். சில சமயம் தொண்டையை அடைக்கும் வீரிட்ட அலறலாக ஆரம்பித்து, விம்மல்களாக அடங்கி ஓயும். என் ரத்தம்

www.t.me/tamilbooksworld



உறைந்து போகும். ஒவ்வொரு முறையும் அந்த அலறல் வந்ததும் மற்றவர்கள் கத்துவார்கள்.

“எவன்டா அவன்? வாயை மூடுடா!”

“அந்த ஆளைப் பைத்தியக்கார விடுதிக்குத் தூக்கிப் போகச் சொல்லுங்கள்!

காவலன் அதட்டுவது நடுநடுவே கேட்கும். “இதோ பார், வாயை மூடிக் கொண்டு கம்மென்றிருக்கிறாயா, இல்லை, யாருமே உன் குரலைக் கேட்க முடியாத இடத்துக்கு அழைத்துச் செல்லட்டுமா?”

கத்துகிறவன் எவனோ தெரியாது-ஆனால் அவன் இடைவிடாமல் கத்திக் கொண்டுதான் இருந்தான். பிறகு ஒரு நாள் இரவு திடீரென்று கூச்சல் அடங்கிவிட்டது. வெராந்தாக்கள், கூடங்கள் அனைத்து இடங்களும் மர்மமான வகையில் நிசப்தமாகிவிட்டன.

அதற்கு மறுநாள் குளிப்பதற்காக என்னை வெளியே அழைத்துச் சென்றார்கள். அப்போதுதான் ஒரு கைதியின் மூலம் விவரம் தெரிந்துகொண்டேன்.

கூச்சல் போட்டுக் கொண்டிருந்த கைதியின் பெயர் ஜீன் ட்ரேஸியர். யாரையோ விஷம் வைத்துக் கொன்றதற்காகத் தண்டனை அடைந்தவன்.

குளித்துவிட்டுத் திரும்புகையில் ஏன் அவனுடைய கூச்சல் நின்றது என்பதைக் கண்டுகொண்டேன். ஸ்ட்ரெச் சரில் ஒரு சவத்தை வைத்து இரண்டு காவலர்கள் சுமந்து சென்று கொண்டிருந்தார்கள்.

அந்தக் கைதி, முந்தின இரவு, தன் பாண்ட்டைக் கிழித்து, சுறுக்குக் கயிறாகத் தயார் செய்து கொண்டான். படுக்கைக் கான மரப் பலகை சுவரின் உயரத்தில் இருக்கிறது. அந்தப்

www.t.me/tamilbooksworld



பலகையைத் தாங்கும் இரும்புக் கூண்டில் கயிற்றை மாட்டி, தரையிலிருந்து ஓரடி உயரம் எழும்பித் தூக்குப் போட்டுக் கொண்டு விட்டானாம். கைகளை விறைத்து நீட்டிக் கொண்டு, மண்டியிட்ட மாதிரி தொங்கிக் கொண்டிருந்த நிலையில் அவனைக் கண்டார்கள். பிண நாற்றம் மூக்கைத் துளைத்தது.

என் சிறைத் தோழனான கார்லோட்டி விடுதலையாகி விட்டான் என்ற ஒரு செய்தி கிடைத்தது. அன்று எனக்கு உணவு கொண்டுவந்து தந்த காவல்காரன் எனக்கு சினேகிதன். கதவின் இடுக்குக் கதவைத் திறந்தவன் ரகசியமாக, "இந்தா உனக்கு" என்று சொல்லி ஒரு சிறிய பொட்டலத்தைத் தந்தான்.

வார்டன் ரோந்து வந்து சென்ற பின் பிரித்துப் பார்த்தேன். கொஞ்சம் புகையிலை, காகிதம், தீக்குச்சிகள், ஒரு சிறிய கூழாங்கல் ஆகியவை இருந்தன.

கார்லோட்டி அவைகளை அனுப்பினான் என்று அறிந்து என் உள்ளம் உற்சாகத்தால் துள்ளியது. ஏனெனில் இனி நான் தனியாயில்லை! எனக்கு உதவி செய்வதற்குச் சிறைக்கு வெளியே ஒருவன் இருக்கிறான்!

அதே சமயம் இன்னொரு வேதனையான செய்தியும் கிடைத்தது. பிகோஸி கிட்டத்தட்டப் பைத்தியம் பிடிக்கும் நிலையில் இருக்கிறான் என்பதே அது. அவனுடைய தோழன் காஸ்ஸியிடமிருந்து பிரித்து அவனை வேறிடத்துக்கு அனுப்பப் போகிறார்களாம்.

உணவு கொண்டு வந்து கொடுத்த வேலையாளிடம், "இது சகிக்கவில்லை. நீயே திருப்பி எடுத்துப் போ: டப்பாவில் உணவு அப்படியே இருக்கிறது. சந்தேகமாயிருந்தால் பார்த்துக்கொள்" என்றேன்.

www.t.me/tamilbooksworld



குறிப்பாக நான் சொல்லுவதை அந்த ஆள் புரிந்து கொண்டான் டப்பாவின் உள்ளே நான் இருபத்தைந்து பிராங்க் நோட்டு வைத்திருப்பதைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது.

அந்த ஆளின் மூலம் கார்லோட்டியுடன் நான் தினமும் தொடர்பு கொள்ள ஆரம்பித்தேன். பிகோஸியையும் நான் இருந்த கட்டிடத்துக்கே கொண்டு வரும்படி ஏற்பாடு செய்து விட்டேன் குளிக்கச் செல்லும் சமயங்களில் அவனுடன் பேசவும் முடிந்தது.

## 36

ஒரு நாள் பிகோஸியிடம் ரகசியமாகச் சொன்னேன்: "இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள். உனக்கு ஆறு மாதத் தண்டனை முடிந்துவிட்டது. பரோலில் வெளியே விட்டாலும் விடுவார்கள்."

அவன் பெருமூச்சு விட்டான். "மிலானி, உனக்கு மன உறுதி அதிகம். எதுவும் தாங்கிக் கொள்வாய். ஆனால் சிறை வாழ்வு என்னை நொறுக்கிவிட்டது. என் மண்டைக்குள் என்னென்னவோ எண்ணங்கள் குழம்பிக் கொண்டிருக் கின்றன அந்தக் குழப்பங்களை என்னால் உதற முடிய வில்லை" என்றான்.

"புத்தியை வேறு எதிலாவது செலுத்து. செலுத்தித்தான் ஆக வேண்டும். ஆமாம்" என்றேன்.

அவன் சோகமாய்ப் புன்னகை செய்தான். புத்தியை வேறெதிலாவது செலுத்து என்று நான் கூறுவது எப்படிப் பட்ட பைத்தியக்காரத்தனம்! தனிமைச் சிறையில் என்ன இருக்கிறது அப்படி!

www.t.me/tamilbooksworld



கடைசியில் ஒரு நாள் என் அறைக்குப் பக்கத்து அறை சாவி போட்டுத் திறக்கப்படும் சத்தம் கேட்டது. பிகோஸி அடுத்த அறைக்கே வரும்படி கார்லோட்டி ஏற்பாடு செய்து விட்டானா என்ன? என் உள்ளத்தில் உவகை பொங்கியது. 'பிகோஸி!' என்று கூப்பிட்டுப் பார்த்தேன். மிக மெதுவான குரல்தான். முதலில் எந்தவிதப் பதிலும் வரவில்லை. மீண்டும் கூப்பிட்டேன்.

பதில் வந்தது. "யாரது?"

"நான்தான்.....மிலானி."

"மிலானி..... நான் பிகோஸி... சந்தோஷம் என்றான் அவன்.

தனிமைச் சிறையில் மாமூலான வாழ்க்கை தொடர்ந்தது. நிசப்தம்-இஷ்டப்படி நடமாட முடியாமை. நான் நடந்து கொண்டேயிருந்தேன் காலடிகளைக் கணக்கிட்டேன். முதலில் நீளம், பிறகு அகலம், பிறகு ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு, குறுக்கு வாட்டில், காவலர் யாரும் அருகில் வராதபோது பிகோஸியைக் கூப்பிட்டு உற்சாகப்படுத்தி இரண்டொரு வார்த்தை சொல்வேன்.

ஆனால் அதிக நாளைக்கு அல்ல. மெல்ல மெல்ல பிகோஸி புத்தி சுவாதீனத்தை இழக்க ஆரம்பித்தான். உணவு கொடுக்கும் ஜன்னலை வேலையாள் திறக்கும்போது, 'ஒரே ஒரு நிமிஷம் என்னை வெளியே விடுங்களேன்?' என்று பரிதாபமாகக் கெஞ்ச ஆரம்பித்தான். என் பெயரைச் சொல்லித் திரும்பத் திரும்பக் கூப்பிடலானான். 'பிகோஸி!- அமைதியாயிரு. அமைதியாயிரு,' என்று சொன்னேன். பலன் எதுவும் கிடைக்கவில்லை.

அவனுக்காகக் கவலைப்படுபவர் எவருமில்லை. ஒரு நாள்

www.t.me/tamilbooksworld



*அவன் கத்தினானோ, கத்தினானோ, அப்படியொரு கத்தல்! மணிக்கணக்காக விசும்பி விசும்பி அழுதான் இரவில்லை, பகலில்லை, அழுகைதான்.*

*கூச்சல் போடாதே என்று அதட்டுவதை விட்டு விட்டார்கள். ரோந்து வரும் ஆள் இடுக்கு வழியே பார்ப்பான், பிகோஸி என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று. உயிரோடு இருந்தால் அதுவே போதும் என்று போய் விடுவான்.*

*"கத்திக் கொண்டே கிடக்கட்டும், யார் என்ன செய்ய முடியும்? தொண்டைத் தண்ணீர் வற்றினால் தானாகவே அழுகையை நிறுத்திவிடுவான்" என்றான் ரோந்துக்காரன்.*

*மறுநாள் பொழுது விடிந்த போதும் பிகோஸி கத்திக் கொண்டிருந்தான். "டேய், உங்கள் அத்தனை பேரையும் காட்டுக்கு அனுப்பிவிடுவேன்! உங்கள் பெண்சாதிகளை விபசார விடுதிக்கு அனுப்புவேன் கிட்டே வந்தீர்களோ தெரியும் சேதி! கொலை! கொலைதான்!" சிறைக் கம்பிகளைக் கைகளாலும் கால்களாலும் உதை உதையென்று உதைத்தான். உணவு டப்பாவினால் டங்டங்கென்று இடித்தான்.*

*அவ்வளவுதான் ஒரு காவலன் ஊதலை எடுத்து ஊதினான். முதல் கட்டிடத்திலிருந்தும் மூன்றாவது கட்டிடத்திலிருந்தும் காவலர்கள் ஓடிவந்தார்கள் பிகோஸியின் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பாய்ந்து அவனை ஒரே அமுக்காக அமுக்கினார்கள். அவனும் கத்துவதை நிறுத்திவிட்டான்.*

www.t.me/tamilbooksworld



## 37

அன்று குளிக்கச் செல்லும் வழியில் பைத்தியக்காரர்களுக்கான விடுதி வழியாகச் செல்ல நேர்ந்தது.

தலையைக் குனிந்து கொண்டு வெகு சாதுவாய்க் குந்தி அமர்ந்திருந்தது ஓர் உருவம். அவனை அமைதிப்படுத்தி வழிக்குக் கொண்டு வருவதற்காக என்ன ஊசி போட்டார்களோ!

வாசல் கேட்டுக்குப் பின்னால் இன்னும் இரண்டு பேருடன் ஒளிந்த மாதிரி உட்கார்ந்திருந்தான். சில கூழாங் கற்களை உடைத்துக் கொண்டு, பிறகு அவைகளை வரிசையாக அடுக்கி வைத்து, ஏதோ வைரக் கற்களைப் பயபக்தியுடன் பார்க்கிற மாதிரி ரசித்துக் கொண்டிருந்தான். இன்னும் இரண்டு பேர், கதவின் கம்பிகளை இறுகப் பிடித்துக் கொண்டு எங்களுடைய ஒவ்வோர் அசைவையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள் நடுநடுவே ஒருவன் தன் பாண்ட்டை அவிழ்த்துவிட்டு, எங்களுக்குப் புட்டத்தைக் காட்டினான். "பார்த்தீர்களா என் பின்னழகை? யாருக்கு வேண்டும் இது? தருகிறேன்" என்று கூச்சலிட்டான்.

எங்களுக்குக் காவலிருந்தவர்கள் எவ்வித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளவில்லை. அந்தச் சோகக் காட்சியை நாங்கள் அதிக நேரம் பார்க்காதபடி எங்களை விரட்டி அழைத்துச் சென்று விட்டார்கள் வேதனை என்னவென்றால், நாங்கள் பார்த்த அந்தச் சிலர்தான் இருப்பதற்குள் கொஞ்சம் தேவலாம்.

மோக்கோ என்று இன்னொரு பைத்தியம். கால்கள் இரண்டையும் தூக்கி வேலியின் மீது போட்டுக் கொண்டு

www.t.me/tamilbooksworld



கைகளைத் தரையில் ஊன்றித் தலைகீழாக நடந்து கொண்டிருந்தான். சிலந்திப் பூச்சி மாதிரி அப்படியே நடந்து நடந்து பழக்கிக் கொண்டபின் சிறைச் சுவரில் ஏறித் தப்பி ஓடப் போவதாகச் சொன்னான். அதுதான் அவனுடைய ஒரே பித்து. நாள் பூரா அப்படியே தலைகீழாக நடப்பான். கடைசியில் ரத்தமெல்லாம் தலைக்கேறி, மயக்கமடைந்து கீழே விழுவான். தனிமைச் சிறையில் இருபத்திரண்டு மாதம் அடைபட்டுக் கிடந்ததில் மூளைக் கோளாறு ஏற்பட்டு ஒரு காவலனை அடித்துவிட்டானாம். அதனால் அவனை இந்தப் பைத்திய விடுதியில் கொண்டு வந்து அடைத்து விட்டார்கள்.

இதையெல்லாம் பார்த்தபின் எப்படியாவது பிகோஸி யைச் சந்திக்க வேண்டுமென்று துடித்தேன். அவனுக்கு ஆறுதல் கூறவேண்டும். தனிமைச் சிறையில் அவன் பொறு மையுடன் இருக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் இந்தப் பைத்திய விடுதியில் அடைத்து விடுவார்கள் என்றும் அவனுக்கு எச்சரிக்க விரும்பினேன்.

ஒரு நாள் காலை எனக்கு ஏனோ உற்சாகமாக இருந்தது. என் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக உலாத்தினேன். இங்கு வந்தது முதல் இப்படி அறைக்குள் நடந்த தூரத்தைக் கணக்கிட்டால், பிரான்ஸ் நாட்டைப் பத்து தடவை சுற்றி வந்ததற்கு ஈடாகும் என்று தோன்றியது.

பொழுதைப் போக்குவதற்காக ஈ பிடிக்கும் விளை யாட்டில் ஈடுபட ஆரம்பித்தேன். தனிமைச் சிறையில் ஈ பிடிப்பது என்பது அப்படியொன்றும் லேசுபட்ட வேலை யல்ல. இந்தச் சிறையிலுள்ள எல்லா ஜந்துக்களுமே ரொம்பக் கெட்டிக்காரத்தனமுள்ளவை. மகா வேகமுள்ளவை.

கையை வலை மாதிரி குவித்து வைத்துக் கொள்வேன். ஈ பறக்கும்போது குபீரென்று ஒரு வீசு வீசி அதைப் பிடித்து

www.t.me/tamilbooksworld



விடுவேன். பிறகு ஒரு கையில் அந்த ஈயைப் பிடித்துக் கொண்டு மறு கையால் அதன் சிறகுகளை வெகு கவனமாகப் பிய்ப்பேன்.

அப்புறம் நினைத்துப் பார்க்கும் போது என் குரூரத்தை எண்ணி எனக்கு வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் அந்த மலத் தொட்டியைச் சுற்றிச் சுற்றிப் பறந்துவரும் அந்தப் பச்சை நிறப் பூச்சிகளையும் அவற்றின் ரோமம் அடர்ந்த பழுப்புக் கால்களையும் காணும்போது எனக்கு அருவருப்பாக இருந்தது. அவைகளுக்கு எதிராக என் எதிர்ப்பைத் தெரிவிக்க இந்தச் சித்திரவதை ஒன்றுதான் வழியென்று எண்ணினேன்.

இறகுகள் இல்லாத ஈயைப் பார்ப்பது விசித்திரமாக இருக்கும். சாவி கொடுத்த பொம்மை, போல் துள்ளித் துள்ளிக் குதிக்கும். இடது பக்கம் துள்ளும்; வலது பக்கம் குதிக்கும். பிறகு நிற்கும். திகைத்துப் போன மாதிரி நாலு பக்கமும் பார்க்கும். பிறகு மறுபடி குதிக்கும்.

என் பக்கத்து அறைக்காரனைக் கூப்பிடுவேன் “என்னப்பா, ஈ விளையாட்டு விளையாடலாம். வருகிறாயா?”

“ஓ” என்பான்.

ஈ விளையாட்டு ஆட வருகிறாயா என்று நான் கேட்டதும் பக்கத்து அறைக்காரனுக்கு ஒரே சந்தோஷம். “ஓ, வருகிறேனே! கொஞ்சம் இரு. நானும் ஒரு ஈ பிடித்து வைத்துக் கொள்கிறேன். சரி, பந்தயம் என்ன!”

தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும்போது கூட எங்களுடைய பந்தயம் கட்டும் பழக்கம் போவதில்லை. ஒரு துண்டு சிகரெட் பந்தயம் கட்டிக் கொண்டோம்.

“என்ன, ரெடியா?”

ஆட்டம் உடனே ஆரம்பிக்க முடியவில்லை. ஒரு காவலன் வரும் சத்தம் கேட்கிறது. ஆகவே கம்மென்றிருக்கி றோம். சிறைகளைப் பார்வையிட்டுவிட்டு அவன் திரும்பு கிறான். காலடியோசை மெல்ல மெல்லத் தேய்ந்து மறை

www.t.me/tamilbooksworld



கிறது. ஆட்டத்தைத் தொடங்குகிறோம்.

என் பாண்ட்டிலிருந்து பிய்த்தெடுத்த ஒரு நூல்தான் பந்தயக்கோடு. அதை இரண்டு அறைகளுக்கும் நடுவில் வைத்தேன். அதிலிருந்து ஆறு அங்குல தூரத்தில் என் ஈயை நான் வைக்கவேண்டும். அவனுடைய ஈயை அவன் வைப்பான். எந்த ஈ முதலில் நூலைத் தொடுகிறதோ அதுவே ஜெயித்தது. அதன் சொந்தக்காரனுக்கு மற்றவன் ஒரு சிகரெட் துண்டு தர வேண்டும். (ஆறு அங்குலம் என்பதைக் கச்சிதமாய்க் கணக்கிட முடியாது. ஒருவர் மீதொருவருக்கு நம்பிக்கைதான்.)

என் ஈயை 'ஸ்டார்ட்டிங்' இடத்தில் வைத்தேன். 'ரெடி! போகலாம்!' என்று குரல் கொடுத்தேன்.

என்னுடைய ஈ முதலில் தயங்கியது. பிறகு புறப்பட்டு இடது பக்கமாகச் சென்றதால் நூலை அடையத் தவறி விட்டது. பிறகு பின்நோக்கி நகரத் தொடங்கியது. "ரைட்! போ! மேலே போ!" என்று அதற்கு உற்சாகமூட்டிக் குரல் கொடுத்தேன். ஆ! இதோ மறுபடி போகிறது. சரியான திசையில் செல்கிறது. அதோ வந்தாயிற்று. அதோ, அதோ.

அதற்குள் என் தோழனின் குரல் கேட்டது. "நான் ஜெயித்து விட்டேன் என் ஈ அதோ நூல் கோட்டைக் கடந்துவிட்டது!"

## 38

**நா**னும் என் பக்கத்து அறைக் கைதியும் ஈ விளையாட்டை பல முறை விளையாடினோம். சில சமயங்களில் ஓட்டப் பந்தயத்தில் சில தடங்கல்கள் ஏற்படுத்துவோம். ஒரு பொட்டுத் தண்ணீர் தெளிப்போம். ஒரு தீக்குச்சி, கட்டை-இப்படி ஏதாவது வழியில் வைப்போம். அவற்றைத் தாண்டிக் கொண்டு எங்கள் ஈ செல்ல வேண்டும்.

www.t.me/tamilbooksworld



ஓரளவுக்குப் பொழுதை ஓட்ட இந்த விளையாட்டு உதவியது. ஆனால் கொஞ்ச நாள்தான். பிறகு எப்போது தப்பப் போகிறேன் என்ற நரக வேதனை என்னைப் பிடித்துக் கொண்டது.

ஒரு நாள் எனக்கு ரகசியச் செய்தி வந்தது. காஸ்ஸியும் கார்லோட்டியும் தங்கள் சிறைக்குள் ஒரு ரகசிய ஏற்பாடு அமைத்திருக்கிறார்களாம். எனக்கு உதவப் போகிறார்களாம்.

எனக்கு உணவு டப்பாக்கள் கொண்டு வரும் ஆள் மூலமாகப் புகையிலை, காகிதம் முதலியன ரகசியமாகக் கிடைத்து வந்தன. எல்லாம் ரொட்டிக்குள் ஒளித்து வைத்துக் கொண்டு வந்து கொடுத்தான் அவன்- காலத்தைக் கொல்லு வதற்காக. இல்லாவிட்டால் காலம் என்னைக் கொன்றுவிடும் போல் இருந்தது. நான் பலவிதமான சில்லறைப் பொழுது போக்குகளில் இறங்கினேன் மரத் துண்டும் கண்ணாடிக் கல்லும் திரியும் வைத்து ஒரு சிகரெட் லைட்டர் கூடத் தயாரித்தேன்.

என்ன செய்தாலும் வாழ்க்கை குத்துக் கல் போல அப்படியே நின்றது. ஒரு சமயம் நம்பிக்கை. மறு சமயம் நிராசை. நட. சாப்பிடு. குளி. நட. ஈ விளையாட்டு விளையாடு. தூங்கு. கிசுகிசு. ரகசியத் தொடர்பு கொள். புகை பிடி. நட. குளி. சாப்பிடு. நம்பிக்கை. நிராசை. துக்கம்...

தப்பியோடி விட வேண்டும் என்ற வெறி ஜன்னி போல மறுபடியும் என்னைப் பிடித்தாட்டத் தொடங்கியது. வேறு எந்த எண்ணத்திலும் மனம் செல்ல மறுத்தது. ஆனால் சிறையதிகாரி சொன்ன வார்த்தைகளும் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்தன. "இந்தத் தனிமைச் சிறையிலிருந்து எவருமே தப்பியோடியது கிடையாது."

ஏன் அப்படிச் சொன்னார்? காரணம் இருந்தது. இந்தக் கட்டிடத்தின் கதவுகளைத் தாண்ட முடியாது. எங்களை அடைத்து வைத்திருக்கும் கூண்டுகளின் கம்பிகளை

www.t.me/tamilbooksworld



எவராலும் உடைக்க முடியாது. வெளியே எப்போதும் எந்நேரமும் வார்டன்கள் காவலிருக்கிறார்கள்.

தப்புவதற்கு ஒரே ஒரு மார்க்கம் தான் உண்டு: கடல்!

ஒரு கட்டுமரம் எங்கிருந்தாவது திருடினால்?

ஆனால் நாங்கள் குளிக்கச் செல்லும் இடத்தில் எந்தப் படகும் கட்டுமரமும் காணப்படவில்லை. கடலில் குதித்து நீந்திப் போகலாமா? வார்டன்களுக்கும் முன்னதாகச் சுறா மீன்கள் என்னைத் தீர்த்துவிடும். ஏற்கனவே இரண்டு காவலர்கள் சுறா மீன்களுக்கு இரையானதை என் கண்ணால் பார்த்திருக்கிறேனே!

இருந்தாலும் கடல் ஒன்றுதான் தப்பிச் செல்லும் வழியாக எனக்குத் தோன்றியது.

இங்கிருந்து கூரு என்கிற இடத்துக்குப் போய்விட்டால் பிறகு எல்லாம் சுலபமாக இருக்கும் என்று கணக்கிட்டேன். நான் மாலுமி, ஒரு பரிசல் மட்டும் கிடைத்துவிட்டால் போதுமே. ஆம், பரிசல்! ஆனால் யார் அதைச் செய்து தருவார்கள்? செயின்ட் ஜோசப் தீவில் ஒரு கைதி இருந்தான். அவனும் தப்புவதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருக் கிறான் என்று தெரிய வந்தது. அவனுடன் எப்படித் தொடர்பு கொள்வது? காஸ்ஸி மூலமாகவா கார்லோட்டி மூலமாகவா? இந்த விசுவாசமான தோழர்களைத்தான் நான் நம்ப வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் அவர்களைச் சந்திப்பதே அரிதாகியிருந்தது.

மூன்று வாரம் சென்ற பின் தான் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. குளிக்கும்போது கார்லோட்டி என்னருகே வந்து பேசிக் கொண்டிருந்தான். உடுப்பை மாற்றிய வண்ணம் நான் என்ன மனசில் திட்டமிட்டிருக்கிறேன் என்பதை அவனிடம் சொன்னேன்

www.t.me/tamilbooksworld



அவனுக்கு விழிகள் வெளியே வந்து விட்டன அதிர்ச்சியில். "உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது, மிலானி. தனிமைச் சிறை உன் மூளையைக் குழப்பிவிட்டது" என்றான்.

"இல்லை, நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்" என்றேன். "எனக்குத் தேவையெல்லாம் ஒரு மிதப்புக் கட்டை தான். அதற்குச் சில பலகைகள் கிடைத்தால் போதும். நடுப் பகுதிக்கு ஒரு பெரிய பலகை. சுற்றிலும் ஆணி அடித்தோ, கட்டியோ இணைப்பதற்கு மூன்று சிறிய சிறிய பலகைகள். எப்படியாவது அவைகளைச் சேகரித்து விடு. பிறகு மூன்று காலியான கோணிப் பைகள் வேண்டும். சமையல் கூடத்தில் கிடைக்கும். உலர்ந்த தேங்காய்களை அவைகளில் போட்டு நிரப்பு. இந்தத் தீவில் தேங்காய்களுக்குப் பஞ்சமில்லை. நூற்றுக் கணக்கில் கிடைக்கின்றன. தேங்காய்கள் நிரப்பிய கோணி மூட்டைகளைப் பெரிய பலகையின் கீழ்ப் புறத்தில் கட்டி விடு. தெப்பம் மிதக்கிற மாதிரி செய்து விடலாம். இறைச்சி அல்லது மாவு வைக்கிற கோணிச் சாக்குகளைப் பிரித்துப் பாய் மரம் செய்துவிட்டால் பிரசினை தீர்ந்தது. ஒரு மரப் பலகையைத் துடுப்பாகச் செய்து கொண்டு படகை ஓட்டுவேன். யோசனை பண்ணிப் பார் காஸ்ஸியால் எனக்கு உதவ முடியுமா?"

"இப்போது அவன் ராயல் தீவில் இருக்கிறான். உனக்குப் பணம் கிடைக்க வேண்டுமானால் உதவி செய்வான். அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது என்று தோன்றுகிறது."

"நீ என்னுடன் வருவாயா?"

"மிலானி, நீ என் மீது கோபப்படக் கூடாது... என்னைத் துரோகி என்று நினைக்காதே..."

"புரிகிறது. புரிகிறது. நீ ஒரு கோழை! இந்த அடிமைத் தனத்தின் சுகபோகங்களே போதும் என்று நினைக்கிறாய். அதுதானே?"

"இல்லை. மிலானி. தனிமைச் சிறையில் நான் ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டேன். நரக வேதனை. நீ சொல்கிற மாதிரி

www.t.me/tamilbooksworld



யான வீரதீர சாகசங்களில் இறங்க எனக்கு உடம்பில் திராணி கிடையாது."

"சரி, நான் தனியாகவே போய்க் கொள்கிறேன்" என்றேன்.

"உனக்காக என்னால் முடிந்ததெல்லாம் செய்கிறேன், மிலானி. உனக்காகப் படகு தயாரிக்கும் வேலையை நானே செய்கிறேன். நான் திரட்டும் பொருள்களையெல்லாம் எங்கே ஒளித்து வைப்பது? அப்படி மறைத்து வைத்திருக்கக் கூடிய வன் எவனையேனும் உனக்குத் தெரியுமா? கடைசி நிமிஷத் தில்தான் வெளியே கொண்டு வர வேண்டும்."

"வார்டனின் பெண்டாட்டிக்கு ஒரு வேலையாள் இருக்கிறானே, அவனிடம் உதவி கேள் அவன் நம்பக மானவன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பதட்டப்படாமல் மெதுவாகச் செய். ஏதாவது தப்பாகப் போய் மாட்டிக் கொள்கிற மாதிரி நேர்ந்தால், எல்லாம் நானாகத்தான் செய்தேன் என்று சொல்கிறேன். உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். இது சத்தியம்."

இதன் பிறகு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கார் லோட்டி என்னைப் பார்த்து, எவ்வளவு தூரம் வேலை நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்து வந்தான், படகு கட்டு கிற ஆள், எறும்பு போன்ற சுறுசுறுப்புடன் தினம் வேலை செய்தான். ஒவ்வொரு நாளும் ஒரு பையனின் உதவியுடன் தேங்காய்கள் சேகரித்து, தோட்டத்தின் மூலை யில் ஒளித்து வந்தான். அந்தப் பையன் தனக்குத் தெரிந்த வரையில் ஒரு பாய் மரத் துணி தைத்து, ஒரு கம்பைக் கொடுத்து தைத்து வைத்தான். எல்லாப் பொருள்களும் தயாராகிவிட்டன.

பிறகு ஒரு மாத காலம் எனக்கு இடைவிடாத கவலை ஏற்பட்டு விட்டது. என் நண்பனிடமிருந்து எவ்விதத் தகவலும் காணோம். திடீரென்று ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்து சேர்ந்தான்.

"முடிந்து விட்டது. உன் பரிசல், வடக்குக் கோடியில்

www.t.me/tamilbooksworld



படகுத் துறையில் இருக்கிறது. அந்த இடத்தில் ஆள் நடமாட்டமே கிடையாது. இனி உன் பாடு மிலானி. அந்தப் பையன் மட்டும் உதவி செய்திராவிட்டால் எதுவும் நடந்திருக்காது. உன்னிடம் அவனுக்கு என்னவோ ஒரு தனிப் பிரியம்'' என்றான்.

கடைசியில் ஒரு நாள், குளிக்கப் போனபோது நான் வேலையில் இறங்கினேன். குளித்துவிட்டு எல்லாரும் போன பின்னர் நான் மட்டும் போகவில்லை. ஒரு பெரிய பாறையின் பின்னே ஒளிந்துகொண்டு விட்டேன்.

எனக்குச் சாதகமாக ஒரு நிலைமை இருந்தது.

திரும்பிப் போகும்போது, யார் யார் இருக்கிறார்கள், யார் யார் இல்லை என்று ஆஜர் பட்டியல் எடுப்பது கிடையாது. சிறைக்குப் போய்ச் சேரும்போது தான் நான் இல்லை என்பதைக் கவனிப்பார்கள்.

அதற்குள் அதற்குள் எப்படியேனும் பத்திரமான இடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும்

குளிப்பதற்காகக் கைதிகளை அழைத்து வந்தவர், "ஊம்...ஊம்...! எல்லாரும் புறப்படுங்கள்!" என்று சொல்வது கேட்டது. நான் தண்ணீரின் கீழாக நீந்தி இன்னொரு பாறையின் பின்னே சென்றேன். அவர்கள் போதுமான தூரம் சென்று விட்டார்கள் என்பது தோன்றியதும் தலை தெறிக்க நீந்த ஆரம்பித்தேன்.

## 39

**சு**றா மீன்கள் கடலைத் தாண்டி உள்ளே வராமலிருப்பதற்காக ஓரிடத்தில் வலைகள் கட்டியிருந்தார்கள் அந்த வலைகளையும், கடந்து நீந்தினேன். தண்ணீருக்கு அடியில் மறைந்து மறைந்து எப்போதாவது ஒரு தடவை மூச்சு விடுவதற்காக மட்டும் தலையை வெளியே நீட்டியபடி சென்றேன் இடைவிடாமல் கால்களை உதைத்துக்கொண்டே நீந்தினேன்.

www.t.me/tamilbooksworld



ஒரே இடத்தில் நிற்காமல் போய்க்கொண்டேயிருந்தால் சுறாமீன்கள் தாக்காது. ஆள் உஷாராக இருக்கிறான் என்று நினைக்கும். கொஞ்சம் நான் அசதி மறதியாக இருந்து விட்டால் போதும். காலின் ஒரு நுனியை ஒரு சுறாமீன் கடித்து விடும்-பிறகு நான் தொலைந்தேன் அந்த ரத்தமே மற்றச் சுறாக்களை என்பால் ஈர்க்கும். சில நிமிடங்களுக்குள் என்னைப் பிய்த்துத் தின்றுவிடும்.

தண்ணீருக்குக் கீழே சென்று, ஒரு நிமிடம் அமிழ்ந்த நிலையில் இருந்தேன் ஆபத்து எதுவுமில்லை என்று தோன்றியபோது தலையை மேலே நீட்டி மூச்சு இழுத்துக் கொண்டேன். பிறகு மூக்கை மட்டும் தண்ணீருக்கு மேலாக நீர்யானைபோல் நீட்டிக்கொண்டு நீந்தினேன். முடிந்த மட்டில் சுவாசத்தை இழுத்ததில் வயிறு பலூன் மாதிரி ஊதிவிட்டது.

பாறைகளின் மீதிருந்து குரல்கள் கேட்டன. ஆம். இரண்டு காவலர்கள்தான் ஒவ்வொரு பாறையாகப் பார்த்துக்கொண்டே சென்றார்கள்

"எங்கேதான் போயிருப்பான்? எல்லா இடங்களிலும் பார்த்தாயிற்றே?" என்றான் ஒருவன்.

"சுறாமீன்கள் தின்றிருக்கும்" என்றான் மற்றவன்.

"எதற்கும் ராயல் தீவுக்கு நாம் எச்சரிக்கை அனுப்ப வேண்டும்."

அவர்கள் போய்விட்டார்கள். நன்றாய் இருட்டட்டும் என்று வெகுநேரம் காத்திருந்தபின் படகுத் துறையை நோக்கி மின்னலாய் நீந்தினேன் என் பரிசல் தயாராயிருந்தது. சரசரவென்று கட்டை அவிழ்த்து, ஒரு காலை உள்ளே வைத்து இன்னொரு காலால் உந்தித் தள்ளினேன்.

கடலில் தன்னந்தனியே நான்! துடுப்பை வலித்தேன் காற்றுப் பற்பல திசைகளில் வீசிக் கொண்டிருந்தது. பாய்மரத்தை விரிக்க முயன்றேன் இதற்கான கம்புகளை

www.t.me/tamilbooksworld



நடவேண்டிய துவாரங்கள் சரியில்லாததால் முடியவில்லை. அதற்குள் ஒரு பெரிய அலை என்மீது வீசியது. அந்த வீச்சில் பாய்மரம் கடலோடு போய்விட்டது. நானே இடறி விழுந்து சமாளித்துப் பிடித்துக் கொண்டேன் ஒழியட்டும் அந்த உபயோகமற்ற பாய்மரம் என்று கைகழுவினேன்.

சைத்தான் தீவின் திசையிலிருந்து சின்னச் சின்ன அலைகளாகப் புறப்பட்டு, பிறகு பெரிதாகின. தண்ணீர் என் மார்பளவு வந்தபோதிலும் என் மிதவையை விடவில்லை. உயிரே போல அதைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தேன் நம்பிக்கையும் துணிச்சலும் எனக்குக் கை கொடுத்தன. கடலைக் கண்டு எனக்குப் பயம் ஏற்படவில்லை. மனிதர்கள்தான் கொடுமையானவர்கள். கடல் அல்ல.

திடீரென்று கடல் அமைதியடைந்து படகு நிதானமாக மிதக்கத் தொடங்கியது. நடுநடுவே சுறாமீன்களின் கீறிச் சொலி மட்டும் கேட்கும். ஆனால் படகு செல்லச் செல்ல அந்தச் சத்தங்கள் நின்றுவிட்டன.

இரவு பூரா இப்படியே பயணம் செய்தேன். துடுப்புப் போட்டுப் போட்டு என் கைகளில் ரத்தம் வடிந்தது. என் மிதவைக்கு அடியில், மிதவைக்காகக் கட்டியிருந்த தேங்காய்க் கோணிகள் அதுவரை பத்திரமாகத்தான் இருந்தன. ஆனால் இப்போது ஒரு மூட்டை பிய்த்துக் கொண்டு போவதைக் கண்டேன். பீதி என்னைப் பிடித்தாட்டியது. காரணம், அதிக முடிச்சுக்கள் போடக் கூடாதென்பதற்காகக் கார்லோட்டி ஒரே கயிற்றில்தான் எல்லாக் கோணிகளையும் கட்டியிருந்தான். ஒன்று அவிழ்ந்தால் வரிசையாக எல்லாம் அவிழ்ந்து என் பரிசல் முழுகிவிடுவது நிச்சயம்.

சிறிது நேரத்தில் சூரியோதயம் ஆகிவிடும். என் மிதவை இப்படியும் அப்படியுமாகத் தத்தளித்தது. பிரேஸில் நாட்டை நோக்கிச் சென்றுவிட வேண்டுமென்பது என் திட்டம். ஆனால் காற்றடிக்கும் திசையிலேயே பரிசலைச் செல்ல விட்டால், எங்களுடைய இன்னொரு சிறைத் துறைமுகத்தின்

www.t.me/tamilbooksworld



வழியே போகவேண்டியதிருக்கும். என்னைப் பிடித்துக் கொண்டு விடுவார்கள். பாய்மரமும் இல்லாமல், சுக்கானும் இல்லாமல் எப்படி என் இஷ்டத்துக்குப் பரிசலைத் திருப்ப முடியும்?

ஆனால் மீண்டும் சிறையில் சிக்குவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டேன். பரிசலிலிருந்து தண்ணீருக் குள் குதித்து, அதை முன்னால் தள்ளியபடியே நீந்தலானேன்- சீல் மீன்கள் தங்கள் மூக்கால் ரப்பர் பந்தைத் தள்ளி விளையாடுமே அதுபோல.

ஆனால் இப்படியே எத்தனை நாளைக்குத் தாக்கு பிடிக்க முடியும்? ஆறு நாள் ஏழு நாளல்லவா பிடிக்கும் பிரேசில் நாட்டை அடைய?

என் ஒவ்வோர் உறுப்பும் சோர்ந்துவிட்டன வலி காலோடு தலை உயிர் போயிற்று. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. என்னுடைய சிறைப் பகுதி இருக்கும் தீவுக்கே ஏதோ ஒரு மர்மக் கை என்னை இழுத்துச் செல்வது போலிருந்தது. ஏதாவது அதிசயம் நேர்ந்தால்தான் நாம் தப்ப முடியும் என்று எண்ணினேன்.

அதிசயம் நேரவில்லை. மாறாக, எதை எதிர் பார்த் தேனோ அதுவே நடந்துவிட்டது. சிறைச்சாலைக்குச் சொந்த மான விசைப்படகு வெகு வேகமாகத் துரத்திக் கொண்டு வந்தது. சில நிமிடங்களில் என்னைப் பிடித்துவிட்டது.

“மிலானி! மரியாதையோடு வந்து இந்தப் படகில் ஏறு!” என்று கட்டளையிட்டார்கள்.

நான் சவம் போலக் களைத்துப் போயிருந்தேன். அவர்களே என்னை இழுத்துப் போட்டுக் கொண்டார்கள் தங்கள் விசைப் படகில்.

செயின்ட் லாரண்ட் சிறைக்குத் திரும்பும்போது என்னை

www.t.me/tamilbooksworld



மதிப்பாகவே நடத்தினார்கள். இப்படி ஒருவன் தன்னந் தனியே ஒரு பரிசலைக் கட்டிக் கொண்டு புறப்பட்டானே என்பதில் அவர்களுக்குப் பெரும் பிரமிப்பு. சிகரெட்டும் மதுவும் கொடுத்து எப்படி நான் ஏற்பாடுகள் செய்தேன் என்று விசாரித்தார்கள் நான் கார்லோட்டியைக் காட்டிக் கொடுக்கவில்லை. பரிசலை நானேதான் தயாரித்ததாகச் சொன்னேன்.

என் நல்ல காலம், சிறையில் என்னை விசாரித்த நீதிமன்றமும் என்மீது கருணை காட்டியது. சிறையிலிருந்து தப்ப முயற்சி செய்ததாக மட்டும் குற்றம் சாட்டி, ஒரு மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை கொடுத்து அத்துடன் விட்டுவிட்டார்கள்.

ஆகக் கூடி, இருபத்து நாலு மணி நேரம் சுதந்திரமாகக் கடலில் மிதந்தேன் என்பதுதான் மிச்சம். செயின்ட் ஜோசப் சிறைக்குத் திருப்பியனுப்பப்பட்டேன். காஸ்ஸி, கார்லோட்டி இருவரும் அங்கேதான் இருந்தார்கள்.

எங்கே நான் சுதந்திரம் பற்றிக் கனவுகள் கண்டு மனக் கோட்டை கட்டினேனோ அதே இடத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தேனே என்பதை எண்ணுகையில் மனம் வெறுத்தது. அடுத்த முயற்சி-நிச்சயம் அது தற்கொலை முயற்சிதான் இருந்தாலும் நான் நம்பிக்கை இழக்கவில்லை.

மறுபடியும் ஆயத்தங்களை ஆரம்பி மிலானி என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். ஆனால் எப்படி? எப்படி?

இதற்கு நடுவே எப்படியும் மனத்தை உற்சாகமாக வைத்துக் கொள்வதற்கான வழிவகைகளை தேடினேன் கரப்பான் பூச்சிகள் அறை நிறைய ஓடிக்கொண்டிருந்ததால் அவைகளில் ஒன்றைப் பிடித்து வைத்துக் கொண்டேன் பக்கத்து அறைத் தோழனுக்குச் சிகரெட் கொடுத்தனுப்ப

www.t.me/tamilbooksworld



அதைப் பழக்கினேன்.

என் போர்வையிலிருந்து நூல்களைப் பிய்த்து, ஒரு நூலைக் கொண்டு கரப்பான் பூச்சியின் முதுகில் சிகரெட் துண்டைக் கட்டினேன். இன்னொரு நீளமான நூலை அதன் கால்கள் ஒன்றில் கட்டினேன்.

"இந்தாப்பா, சிகரெட் வருகிறது" என்று பக்கத்து அறைக்காரனுக்குக் குரல் கொடுத்து விட்டு, கரப்பானைக் கம்பி வழியே வெளியே விட்டேன். தன் அறையின் வாசலில் அதை வரவழைப்பதற்காக அவனும் ரொட்டித் தூள்களைத் தூவி வைத்தான்.

கரப்பான் பூச்சி வேறெங்கும் வழி தடுமாறினால் நான் பிடித்திருந்த நூலின் நுனியை இழுத்து செல்ல வேண்டிய வழியில் செலுத்தினேன்.

இப்படிப் பொழுது போய்க் கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று ஒரு நாள் விடிகாலை மூன்று மணிக்கு, வார்டன்களின் குடியிருப்பிலிருந்து ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

## 40

அன்று எனக்கு வயது முப்பத்திரண்டு. நான் சிறைச்சாலையில் இருந்த நாட்களை எண்ணிப் பார்த்தேன். நாற்பத்தாறு மாதங்கள் ஆகிவிட்டன தீவுச் சிறையிலும் தனிமைச் சிறையிலுமாகச் சேர்ந்து. என் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கிறது. உடற்பயிற்சி எதுவும் இல்லாத தாலும், மட்டமான சாப்பாட்டினாலும் பொதுவான பலவீனம் மட்டுமே இருந்தது.

ஒரு வழியாகத் தனிமைச் சிறைவாசம் முடிந்து ராயல் தீவுக்கு அனுப்பப்பட்டேன். மூன்று மைல் அகலமுள்ள பெரிய

www.t.me/tamilbooksworld



தீவு இது. காஸ்ஸி, கார்லோட்டி, பார்லாட்டி முதலிய பல தோழர்களை மீண்டும் சந்தித்தேன்.

ஜோ என்று ஒரு முரடன் இங்கே பல பேரைப் பயமுறுத்தி அடக்கியாண்டு கொண்டிருந்தான். எனக்குத் தெரிந்த ஒரு பையன் என்னிடம் ஒரு நாள் வந்து இந்த ஜோ தன் பணக்குப்பியைத் தன்னிடம் வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்துவதாயும் அதில் தனக்கு இஷ்டமில்லை என்றும் அழுதான்.

ஜோவை நான் கவனித்துக் கொள்கிறேன் என்று அவனுக்குத் தைரியம் கூறிவிட்டு, கடல் பாறைகளின்மீது ஜோ உட்கார்ந்திருந்தபோது சென்று மடக்கினேன். இன்னொருதரம் அந்தப் பையனின் வழிக்கு வந்தால் தெரியும் என்று நான் சொல்லிக் கொண்டிருந்தபோது, கொஞ்சமும் எதிர்பாராத சமயம் ஒரு கத்தியை உருவி என்னைக் குத்த வந்தான் சரேலென நான் வளைந்து அந்தக் குத்திலிருந்து தப்பிய தோடு, உடனே கடலிலும் குதித்துவிட்டேன். ஜோ நிலை குலைந்தவனாகத் தடுமாறிக் கடலில் விழுந்தான் ஆனால் அவனுக்கு நீந்தத் தெரியாது. "என்னைக் காப்பாற்று, காப்பாற்று!" என்று தலையைத் தண்ணீருக்குமேல் தூக்கித் தூக்கி அலறினான்.

அவன் முடியைப் பிடித்துத் தூக்கிக் கரைக்குக் கொண்டு வந்து, "இனிமேல் சின்னப் பையன்களிடம் வம்புக்குப் போகாதே" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினேன்.

ஒருநாள் சிறைச்சாலை பெரிய அதிகாரி கைதிகள் அனைவரையும் கூட்டினார். "நண்பர்களே! நம் நாட்டுக்கும் ஜெர்மனிக்கும் போர் மூண்டிருக்கிறது. தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்காக நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று அறிவித்தார்.

www.t.me/tamilbooksworld



எல்லாக் கைதிகளும் கடகடவென்று சிரித்து விட்டார்கள். தாய்நாடாம் தாய்நாடு! நிரபராதிகளை இந்தத் தீவாந்தரத்துக்கு அனுப்பிச் சித்திரவதைகள் செய்யும் நாட்டின்மீது கைதிகளான எங்களுக்கு என்ன பற்று ஏற்பட முடியும்!

ஒரு பன்றிப் பண்ணை கட்டுவதற்காகக் கற்களைத் தூக்கி வரும் வேலையை எனக்கும் கொடுத்திருந்தார்கள். ஒருமுறை ஒரு பெரிய கல் என் காலில் விழுந்து காயம் ஏற்படுத்தவே, கேயன் என்னும் தீவிலுள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். கால் குணமானதும் எனக்கு அங்கேயே வேறொரு வேலை தந்தார்கள் நான் ஏற்கெனவே கடற் படையில் மாலுமியாக இருந்தவன் என்றதால், சரக்குகள் கொண்டு செல்லும் படகில் ஒரு மாலுமியாக அமர்த்தப்பட்டேன்.

இம்முறை அந்தச் சரக்குப் படகின் மூலமாகவே நான், பிகோஸி, கார்லோட்டி, காஸ்ஸி, ஜீன் என்ற புதிய தோழன் ஐவரும் தப்புவதென்று தீர்மானித்தோம். சரக்கைக் கொண்டு போய் ஒரு விசைப் படகில் ஒப்படைதத பின் இன்னொரு சிறிய படகில் ரகசியமாக ஏறி இரவு முழுதும் துடுப்புப் போட்டு மரோனி ஆற்றில் மறைந்து மறைந்து சென்றோம். பிறகு கடலை அடைந்தோம். ஜீன் ஏற்கனவே எங்கள் உணவு, உடைகளுக்கு ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தான். அன்று இரவு திடீரென்று மழையும் புயலும் சீறிக்கொண்டு எங்களைத் தாக்கின. எங்கள் படகுக்குள் வந்து விழும் நீரைத் தகரக் குவளைகளால் மொண்டு மொண்டு கொட்டினோம்.

ஆனால் அந்தக் குளிரும் மழையும் ஜீனினால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. கடும் காய்ச்சல் ஏற்பட்டு, ஜன்னி கண்டு பிதற்றிக் கொண்டேயிருந்து எங்கள் கண்ணெதிரிலேயே இறந்துவிட்டான் அவன் பொருட்டு எங்களுக்குத் தெரிந்த ஏதோ சில பிரார்த்தனைகளைச் சொல்லிவிட்டுக்

www.t.me/tamilbooksworld



கடலிலேயே அவன் சவத்தை எறிந்தோம்.

.பதினாறு நாளா, பதினைந்து நாளா? எல்லாத் தேதிகளும் கிழமைகளும் மறந்துவிட்டன கையிலிருந்த உணவு தீர்ந்துவிட்டது. கடலில் மீன் பிடித்து, சமைத்து உயிரைப் பிடித்துக் கொண்டோம்.

பதினேழாம் நாள் இரவு, சில போலீஸ் விசைப் படகுகள் செல்வதைக் கண்ட பிறகே நம்பிக்கை பிறந்தது. எங்கள் துணிகளை உயர்த்தி வீசி வீசி அவர்கள் கவனத்தைக் கவர்ந்தோம். மொத்தம் முப்பத்தெட்டு போலீஸ் விசைப் படகுகள் வரிசையாகச் சென்றுகொண்டிருந்தன. அதன் தலைவர் எங்களைக் கண்டு, நடைபிணமாக இருந்த எங்களை ஏற்றிக் கொண்டார். எங்கள் படகையும் ஏற்றிக் கொள்ளும்படி கெஞ்சினோம். இணங்கினார்.

ஜார்ஜ் டவுனுக்கும் ட்ரினிடாடுக்கும் நடுவே, பிரிட்டிஷாருக்குச் சொந்தமான கடல் பகுதியில் இருக்கிறோம் என்று அவர் சொல்லித்தான் தெரிந்தது.

பிரிட்டிஷ்காரர்கள் எங்களைக் கண்ணியமாக நடத்தி, விசாரணை செய்தார்கள். கடைசியில் ஒரு நாள் எங்களுக்கு விடுதலை என்று கூறிவிட்டார்கள் எங்கே இஷ்டமோ அங்கே போகலாம் என்றார்கள்.

சுதந்திரம்! எங்கே வேண்டுமானாலும் போகலாம்!

ஆனால் உயிர் வாழ என்ன செய்வது? பணமோ வேலையோ எதுவுமே இல்லையே! கார்லோட்டியும் பிகோஸியும், காஸ்ஸியும் நானும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தோம்.

இருக்கிற காசுக்கு ஏதேனும் குடிக்கலாம் என்று ஒரு மதுபானக் கடைக்குள் நுழைந்தோம். அங்கு ஆர்ச்சிட் என்ற இளம் அழகியொருத்தி எனக்கு சிநேகமானாள் அவள்

www.t.me/tamilbooksworld



உதவியுடன் ஒரு குடிசைப் பகுதியில் எங்களுக்கு இடம் தேடிக் கொண்டோம்.

சில பிரெஞ்சுக்காரர்கள் எங்களை அணுகி, "ராணுவத்தில் சேர்ந்து நமது நாட்டுக்காகப் போரிடுங்கள். நல்ல சம்பளம் உண்டு" என்று அழைத்தார்கள் நாங்கள் போகத் தயாராயில்லை.

ஒரு சீனாக்காரனின் கடையில் போய் வேலை கேட்டபோது, அவன் சொன்னான்: "இங்கே வேலை எதுவும் கிடையாது. நான் சொந்தமாக ஸெண்ட் தயாரிக்கிறேன் நீங்கள் பழைய சீசாக்கள் விலைக்கு வாங்கி, அந்த ஸெண்ட்டை அடைத்துச் சென்று வியாபாரம் செய்யுங்கள் வியாபாரத்திற் கேற்ற கமிஷன் தருகிறேன்."

அதன்படி செய்து வந்ததில் கொஞ்சம் கொஞ்சம் வயிற்றுப்பாட்டைப் பார்த்துக் கொள்ள முடிந்தது. பழைய நண்பர்கள் மூலைக்கொருவராகப் பிரிந்து விட்டோம். எனக்கு ஜிம் என்ற சிநேகிதனொருவன் ஏற்பட்டான்.

பிரிட்டிஷ் கயானாவைச் சேர்ந்த ஜார்ஜ்டவுனில் ஒரு நகைக் கடையில் ஜிம் கொள்ளையடிக்கையில் நானும் அவன் கூட்டாளியாக இருந்தேன் இருவருமாக வெனிஸுவேலா நாட்டுக்கு ஓடி, அங்கே அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டோம்.

இப்படி அப்படியென்று சின்னக் குற்றங்களுக்காகவும். பெரிய குற்றங்களுக்காகவும் சிறைத் தண்டனை பெறுவதும் விடுதலையாவதுமாக ஐம்பது வயது ஆகிவிட்டது எனக்கு. தாய்நாட்டைக் காண வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. போலி பாஸ்போர்ட் தயார் செய்து கொண்டு, கப்பல்களில் திருட்டுத்தனமாகச் சேர்ந்துகொண்டு 1959'ம் ஆண்டு பிரான்சில் என் சொந்த ஊரான கால்வியை அடைந்தேன். தீவாந்தரக்

www.t.me/tamilbooksworld



கைதியாகப் பதினேழாண்டுக் காலம் சிறையில் இருந்து, ஆறு முறை தப்பியோட முயன்ற கிழவன் நான்.

பழைய சுற்றத்தாரும் உறவினர்களும் என்னைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்தார்கள் எல்லாருக்கும் என் கதையும் போராட்டங்களும் தெரியும்.

ஆனாலும் நான் இன்னும் சட்டப்படி கைதிதான் எனவே இரண்டு தினங்களுக்கெல்லாம் போலீஸ் என்னைத் தேடிவந்து பிடித்துக் கொண்டார்கள்.

இம்முறை விசாரணையில் எனக்குத் தண்டனை தரவில்லை. ஆனால் நான் போலீசுக்குத் தகவல் சொல்லாமல் ஊரை விட்டுப் போகக் கூடாதென்றும், கண்ணியமான வேலை தேடிக்கொள்ள வேண்டுமென்றும் நிபந்தனை விதித்து, ஜாமீனில் வெளியே விட்டார்கள்.

நண்பர்களின் உதவியால் ஓர் இஞ்சினியரிடம் உதவியாளனாகச் சேர்ந்தேன்

இன்னமும் நான் கைதிதான். ஆயுள் தண்டனை பெற்றவன்தான். ஆனாலும் எனக்கு எவ்வித மனக்குறையு மில்லை. வேறு யாருக்கும் கிடைத்திருக்க முடியாத அபூர்வ மான அனுபவங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. சொந்த முயற்சி என்ற தீப்பொறி என் மனத்தில் அணையாமல் இருந்திருக்கிறது. அதுவே எனக்குப் போதும்.

**நிறைந்தது**